மங்கையர் மலர்



MANGAYAR MALAR ஏப்ரல் 2001 விலை ரூ. 15


கைதேர்ந்த நெசவுக் கலைஞர்கள்
உருவாக்கும் கல்யாணப் பட்டு புடவைகள்
ஹம்சத்வனி கலெக்ஷன் -
உயர்தர தூய பட்டு இழை மற்றும்
அசல் வெள்ளி ஜரிகையில்,
பிரத்யேகமான முறையில் உருவாக்கப்படும்
எண்ணற்ற புதிய காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள்
போத்திஸ்
பட்டுச் சேலைகளின் ஆலயம்
உஸ்மான் ரோடு, பனகல் பார்க்,
சென்னை - 600 017 ✆ 4310901
Web : www.pothys.com
3, வடக்கு ரத வீதி,
திருநெல்வேலி டவுண் - 627006
✆ : 337093, 339189

மலர் : 21
இதழ் : 3

மங்கையர் மலர்

ஏப்ரல்
2001

சாதனை படைக்கும் பெண்கள்:

சட்டத்தின் பார்வையில்...

ஆனந்த சுற்றுலா

ஆன்மீகச் சுற்றுலா

இன்டர்நெட் முகவரி : http://www.mangayarmalarmonthly.com

தேர்தல் நேரத்தில் சிந்திக்க...

கொஞ்சம் யோசிக்கலாம்

மணப்பெண்ணே உனக்காக

வாங்க சிரிக்கலாம்


சிறுகதை

சுவையான சமையலுக்கு

தொடர்கள்

மஞ்சுளா ரமேஷின்...

முதலில் திருப்பிப் பார்க்க..



"சமச்சீரான சத்துணவிற்கு, வீட்டு உணவைத் தவிர, செரிலாக்கும் மிகவும் அவசியமானது என்று நான் கருதுகிறேன்."

'எனது செல்லக் குழந்தைக்கு 4 மாதங்கள் முடிந்தவுடனேயே, 'பருப்பு ரசம்', 'ரவைப் பாயசம்', 'குழைத்த வாழைப்பழம்', 'கூழ்' முதலியவற்றை, நான் கொடுக்கத் தொடங்கிவிட்டேன். எனது குழந்தையை ஆரோக்கியமாகவும், வலிமையாகவும் ஆக்கிடச் செய்வதற்கு, அத்தியாவசியமான சத்துணவை சமச்சீரான அளவில் தரவேண்டும் என்று மருத்துவர் கூறினார். அதனால்தான் நான் செரிலாக்கை பயன்படுத்தினேன்.

செரிலாக்-ஒவ்வொரு முறையும் சமச்சீரான சத்துணவு !



அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்களை, செரிலாக், சரியான அளவில் வழங்குகிறது.

இயற்கையாகவே புரதச்சத்து பெருமளவிற்கு அடங்கியுள்ள பால் மற்றும் கோதுமையினால் தயாரிக்கப்பட்ட செரிலாக்கில், கார்போஹைட்ரேட்டுகளும், கொழுப்புச் சத்துக்களும் கூட அடங்கியுள்ளன. அத்துடன், மிகவும் அத்தியாவசியமான விட்டமின்கள் மற்றும் தாதுப் பொருட்களும், இதில் விசேஷமாக அடங்கியுள்ளன; இதனால் உங்கள் குழந்தைக்கு ஒவ்வொரு முறையும், சமச்சீரான சத்துணவு கிடைக்கிறது.

ஜீரணிப்பது எளிது, பல்வேறு சுவையின் அனுகூலம் !

நெஸ்லேயின் அதிநவீன '2-லெவல் என்ஜைமேடிக் செய்முறை' கார்போஹைட்ரேட்டுகளை, ஜீரணிப்பதற்கான எளிய வடிவில் மாற்றுகிறது. இதன் மூலம், செரிலாக் மென்மையாகவும், லேசானதாகவும் ஆவதுடன் உங்கள் குழந்தை உணவை ஜீரணிப்பதும் வெகு சுலபமாகிறது.



செரிலாக்கின் ருசியை குழந்தைகள் மிகவும் விரும்புகிறார்கள். 4 மற்றும் 6 மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில், செரிலாக் வீட், மற்றும் செரிலாக் ரைஸிலிருந்து ஒன்றைத் தெரிந்தெடுத்திடுங்கள்; பிறகு உங்கள் குழந்தையின் மகிழ்ச்சிக் கும்மாளத்தை கேட்டு ரசியுங்கள்.

Mudra NES 1543 Tam (R) 1

உங்கள் குழந்தைக்கு செரிலாக் அனுகூலத்தை அளியுங்கள்

IMPORTANT NOTICE : MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY. INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.

महत्वपूर्ण सूचनाः माँ का दूध आपके बच्चे के लिए सर्वोत्तम है। ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें।



அலாவுதீனின் அற்புத விளக்கு!



ஒன்று பரீட்சைகள் ஜோராக நடந்து கொண்டிருக்கும் அல்லது பல குழந்தைகளுக்குத் தேர்வுகள் முடிந்திருக்கும். ஒரு வழியாக இந்தக் 'குதிரை ரேஸ்' போன்ற பந்தயங்கள் முடிந்தவுடனே 'ஹோ'வென கூச்சல் போடலாம். 'இனிமே ஜாலிதான்' எனப் புத்தகங்களை விட்டெறியலாம். ஷூக்கள் எல்லாம் மூலைக்கு ஒன்றாக பறக்கும். இரண்டு கைகளையும் உயரத் தூக்கி அஜீத் மாதிரியோ, மாதவன் மாதிரியோ குதிக்கலாம், என்னவும் செய்யலாம்.

ஆக, ஒரு கட்டுக் கோப்பிலிருந்து விடுபடும்போது எதையாவது தூக்கிப்போட்டு உடைத்து... விளையாட்டுக்களில் பார்த்திருக்கலாமே. பீர் பாட்டிலை உடைத்து அபிஷேகம் செய்து கொள்வார்கள். செய்யலாம்தான், ஜாலிதான்.

ஆனால் ஒன்று. அது அதற்கு ஒரு மரியாதை என்று இருக்கிறது அல்லவா! 'செருப்பு கெட்ட கேட்டுக்கு அதுக்கு என்ன மரியாதை?' என்று கேட்கலாம். இருக்கிறது. நாம் உயிருள்ளது, உயிரற்றது எனப் பாகுபாடு செய்கிறோம் "ஆனால் எல்லாவற்றிற்கும் உணர்வு என்ற ஒன்று இருக்கிறது. ஒன்றை நாம் எப்படிப் பாதுகாக்கிறோமோ, அது நம்மையும் பாதுகாக்கும். டேபிள், சேர், மேஜைக்கும் உணர்வுகள் உண்டு" என்கிறார் புதுவை அன்னை.

இதை நான் என்னுடைய அனுபவத்திலும் கண்டிருக்கிறேன். நாம் ஒன்றை - அது உயிரற்றது என்று நாம் நினைத்துக் கொண்டிருந்தால்கூட - அதை நல்ல படியாக வைத்திருந்தால் நிச்சயம் நமக்கு நன்றியுள்ளதாக இருக்கிறது.



இதை நீங்களும் சோதித்துப் பார்க்கலாம். புடவைகளை சாயங்காலம் வந்தவுடன் கழற்றிப் போடுவதும், அது காலை வரை அப்படியே கிடப்பதும், கயிறுகளில் 'கன்னாபின்னா'வென்று துணிகள் தொங்கிக் கொண்டிருப்பதையும் நிறைய இடங்களில் பார்க்கலாம். அதே புடவையை கழற்றியவுடன் உருவி வீசாமல் மடித்துக் காற்றாட கொடியில் போடுங்கள். கொஞ்சம் ஆறியவுடன் மடித்துப் பத்திரப்படுத்துங்கள். அல்லது துவைக்கப் போடுங்கள். ஆறே மாதத்தில் உங்களுக்கு எத்தனை புடவைகள் சேருகிறது என்று பாருங்கள்.

டூ-வீலர் இருக்கிறதா? அதை அன்போடு துடைத்து, அதற்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்து பரிவோடு பாதுகாத்துப் பாருங்கள், அது உங்களை எப்போதும் கைவிடாது. டயர் பஞ்சரானாலும், பக்கத்திலேயே கடை இருக்கும். பெட்ரோல் தீர்ந்து போனாலும், நடக்கும் தூரத்தில் பெட்ரோல் பங்க் இருக்கும். இது உண்மை.

இப்படி ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய மரியாதையோடு நாம் பார்த்து, பாதுகாத்து வந்தோமானால் நம் வாழ்வில் எதிர்மறை நிகழ்வுகள் இருக்காது. உங்களைச் சுற்றியுள்ள பஞ்ச பூதங்களுக்கு நீங்கள் எவ்வளவு மதிப்பு கொடுக்கிறீர்கள்? புகையால் காற்றை மாசு படுத்துகிறோம். பூமியை பாலிதீன் கவர்களால் மூச்சுத்திணற வைக்கிறோம். விண்ணிலே ஓசோன் ஓட்டைகளை ஏற்படுத்துகிறோம். நீரை அழுக்குப் பண்ணுவதற்கு அளவே கிடையாது. சென்னையில் குடிநீர்ப் பஞ்சம்தான். ஆனால் கிடைக்கும் தண்ணீரை எவ்வளவு வேஸ்ட் செய்கிறோம். புனித தீர்த்தம் என்று

மஞ்சுளா ரமேஷ்

கோயிலுக்கோ, நதிகளுக்கோ சென்றாலும் கூட அதைத்தான் நாம் எத்தனை மாசுபடுத்துகிறோம்.

இந்த உலகில் ஒவ்வொரு பொருளுக்கும் மாண்பு, மாட்சிமை உண்டு. அதனுடைய உயர்வை உணர்ந்து அதை மதிக்கிறோமோ என்று சொன்னால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எல்லாவற்றைப் பற்றியும் அலட்சியம், கிண்டல், கேலி... 'ஹே, ஹே இங்க பாருடா, செருப்பை எடுத்துக் கண்ணிலே ஒத்திக்கணுமாம்...' கேலி செய்யலாம்.

ஆனால் அதே செருப்பு மாட்சிமை மிக்க ஒரு மனிதனின் பிரதிநிதியாக பதினான்கு ஆண்டுகள் ஒரு நாட்டையே ஆண்டது! அன்பால் ஒருவருக்கொருவர் கட்டுண்டு வாழ்ந்த எத்தனை அற்புதமான சகோதரர்கள் அவர்கள். மிகச் சிறந்த ஒரு ராஜ்ஜியம் என்றால் அது இராம ராஜ்ஜியம் என்பார்கள். அப்படியானால் 'ஆயிரம் இராமரும் உன் ஒருவனுக்கு ஈடு ஆவாரா?' எனப் போற்றப்பட்ட பரதனின் இராஜ்ஜியம் எப்படி இருந்திருக்கும்! உடலை உருக்கி, உயிரை பாசத்தால் பிடித்து, அன்பால் அரசாண்ட அப்படிப்பட்ட ஆட்சி எத்தனை அற்புதமாக இருந்திருக்கும். அங்கே அண்ணனின் 'பாத அணிகளே' அரசாண்டது.

ஒவ்வொரு சின்ன விஷயத்திலும் எத்தனை அலட்சியத்தைக் காண்பிக்கிறோம் என்று நீங்கள் இந்த நிமிடத்தில் இருந்து கவனித்துப் பாருங்கள். டி.வி.யைப் போடுவதில் ரிமோட் கண்ட்ரோலை அழுத்துவதிலிருந்து, தண்ணீரைக் குடித்துவிட்டு 'டமால்' என டம்ளரை தூக்கிப் போட்டுவிட்டுப் போவது வரை... எல்லாமேதான். இதையேதான் நம் குழந்தைகளும் செய்கிறார்கள்.

எப்போதுமே பிறருக்கு அறிவுரை சொல்வது என்றால் நமக்கு ரொம்பப் பிடிக்கும். அது ரொம்ப சுலபமும்கூட. எனவே குழந்தைகளுக்கு அறிவுரை சொல்லலாம். "ஸ்கூல்ல இருந்து வந்தவுடன் ஷூவை கன்னாபின்னான்னு போடாதே. அதற்குரிய இடத்திலே வை." அப்புறம் "டேபிள் மேல புஸ்தகங்களை அடுக்கி வை. படிச்சுட்டு விரிச்சது விரிச்சபடி டி.வி. பார்க்க ஓடாதே.." அப்படியே நாமும் இந்தப் பழக்கங்களைக் கையாளலாம். கோபத்தோடு சமையலில் பாத்திரங்களைத் தடால் தடாலென வைப்பதும், சமையலில் சாமான்களை வீசிவீசிப் போடுவதும் தவிர்த்து, ஒவ்வொரு பொருளையும் உணர்ந்து செய்து பாருங்கள். நம் வீடும், குடும்ப உறவுகளும் அழகாக மாறிப்போவதை உணரலாம்.

இனி தேடுதல் இருக்காது, எந்தப் பொருளும் தொலைந்து போகாது. ஒவ்வொரு பொருளும் வைத்தது வைத்தபடி இருக்கும், சண்டை இல்லை. டைம் வேஸ்ட் இல்லை. இன்னமும் நிறைய வேலைகளைச் செய்யலாம்.

உயிரற்ற பொருட்களிலே மாட்சிமையைப் பார்த்த நாம், தானாகவே உயிருள்ள பொருள்களிலும் பார்ப்போம். கணவனோ, மனை

வியோ, பெரியவர்களோ, சிறியவர்களோ நிச்சயம் அவரவர்க்கென்று ஒரு கோணம் உண்டு. கருத்து உண்டு. நாம் சரியென்று நினைப்பது போல அவர்களும் ஒன்றை சரியென்று நினைக்கலாம். அதற்கு அடாவடியாக மறுக்க வேண்டும் என்பதில்லை. அவர்கள் கருத்து தவறாக இருக்கலாம். ஆனால் அந்த மனிதர் நமக்கு மதிப்பு வாய்ந்தவர். அவரை அலட்சியப்படுத்தலாமா? கூடாது. அவரை மதிப்போம். இன்சொல்லோடு (சொற்களையும் 'கன்னாபின்னா' வென்று பேசக்கூடாது. அதற்கும் மதிப்பு உண்டு. ஞாபகம் இருக்கிறது அல்லவா?) கருத்தை மறுத்துப் பாருங்கள். அவ்வளவுதான்.

இந்த முறையிலே முழு உணர்வோடு ஒரு நாள், ஒரே நாள் வாழ்ந்து பாருங்கள். உலகம் எப்படியோ, உங்கள் மனமும், சிந்தனைகளும் எத்தனை உயர்வானதாக ஆகி விடும் என்பதை உங்கள் அனுபவத்திலேயே உணர்ந்து கொள்ளலாம்.

இதைத்தான் நம் முன்னோர்கள் சிரத்தை, பக்தி என்றெல்லாம் வேறு வகையில் சொன்னார்கள். ஒரு புண்ணிய நதிக்குப் போனால் "தலையில் தண்ணீர் தெளித்துக் கொள்" என்றார்களே. அப்படி ஒரு பக்தி உணர்வு வந்து விட்டால் நாம் அதில் காறி துப்புவோமா? சிறுநீர் போவோமா? புத்தகமா அது சரஸ்வதி. பணமா அது லக்ஷ்மி. அதை கன்னாபின்னாவென கண்டதுக்கும் இறைக்காதே. வீரமா அது துர்க்கை. வீரத்தை கெட்டதுக்குப் பயன்படுத்தாதே. இப்படி ஒவ்வொன்றையும் பக்தியோடு பார்க்கச் சொன்னார்கள். யானையும், சிலந்தியும், எறும்பும்கூட தொழத்தக்கவை என்று சொன்னதன் காரணம் என்ன? அவற்றையெல்லாம் மதிக்க வேண்டும் என்பதால்தான். மாடுகளைக் கட்டி லாரியில் ஏற்றி வெட்டுவதற்கு அனுப்புகிறார்களே. அதன் கண்களைப் பாருங்கள் 'பாவிகளா' என நம்மைச் சபிக்கிறது. மாட்டினை கோமாதா எனப் போற்றிய தேசமிது.

மதிக்கக் கற்றுக் கொள்வோம். அப்போது உலகமே இங்கு இன்பமயமாகிவிடும். நம் வாழ்க்கையில் இந்த ஒரு குறிக்கோளையே இலட்சியமாக வைத்துக் கொண்டு விட்டாலே போதும் என்று தோன்றுகிறது. மாண்பு - இயற்கையிடம் மாண்பு, நண்பர்களிடம், உறவினர்கள், உயிரினங்களிடம், இந்த உலகில் இருக்கும் ஒவ்வொரு பொருளின் இடமும்.

அப்புறம் ஏது முதியோர் இல்லங்கள், அனாதை ஆச்ரமங்கள், வீடுகளில் சண்டை சச்சரவுகள், இன்னும் இன்று விரிந்து கிடக்கும் ஏராளமான பிரச்னைகள். நேரத்தைப் பொன்னான நேரமாக மதித்தால் குப்பைகளைப் பார்ப்பதையும், பேசுவதையும் செய்வோமா! இப்படி ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பாருங்களேன்.

இது தேய்க்கத் தேய்க்க
வேண்டியதைத் தரும்
அலாவுதீனின் அற்புத விளக்கு!



வசதிகள் நிறைந்த தனி வீடு, ப்ளாட் வாங்கும் விலையிலே.

என்னுடைய பட்ஜெட்டுக்கு ப்ளாட் தான் கிடைக்கும் என்று எண்ணியிருந்தேன், ஆனால் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவினால் வசதியான தனி வீடே கிடைத்தது.

ரூ. 600 மில்லியன் ஸ்ரீவத்ஸா குழுமத்தின் ஒரு ஒப்பற்ற படைப்புதான் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ. நகரத்தின் எல்லைக்குள் எழில் மிகுந்த சூழலில் அமைந்திருக்கும் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ என் குடும்பத்திற்கு அமைதியையும் ஆனந்தத்தையும் அளிக்கிறது.

ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவை தனித்தன்மை வாய்ந்த ஒரு வீடாக காட்டும் சிறப்பு அம்சங்கள்

ரூ. 7.5 லட்சம் விலையில் தொடங்கும் தனி வீடுகள்: ஆம். குறைந்த பட்ச நில அளவு 60x40 கொண்ட தனி வீடுகள் குறைந்த பட்ச விலையாக ரூ. 7.5 லட்சம் முதல் தொடங்கும் தனி வீடுகள். தனி வீடுகளுக்கு நீங்கள் கொடுக்கும் விலை இது மட்டுமே.

ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட்ஸ் (பி) லிட்.

தனியானதோர் வீடு வாங்கி வந்தேன்.

Sreevatsa Hill View
KOVAIPUDUR

ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ

750 சதுர அடி முதல் வீடுகள் தேர்ந்தெடுக்கலாம்: செலக்ட் செய்ய ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவில் 750 சதுர அடி முதல் 2000 சதுர அடி வரையில் உங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்ற வகையில் தேர்ந்தெடுத்து வடிவமைக்கப்பட்டது.

எண்ணற்ற டிசைன்கள்: ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவில் தனி வீடுகளுக்கு பல வகை வீட்டு டிசைன்கள். இத்தகைய டிசைன்கள் உங்கள் தேவைக்கேற்ப மாற்றியமைக்கும் வசதியுடன் உங்களுக்கு அளிக்கப்படுகின்றன.

நெரிசல் இல்லாத சொர்க்கம்: 12 ஏக்கரில் அமைந்துள்ள ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ 140 தனி வீடுகளை மட்டுமே கொண்டது. எனவே உங்கள் வீட்டை சுற்றி நிறைய காலியிடம். குறைந்த வீடுகள். அதிக காற்றோட்டம். அதிக வசதி. ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ உங்களுக்கே உரித்தான தனி சொர்க்கம்.

மிகச் சிறந்த பாதுகாப்பு: அதிக பாதுகாப்பு கொண்ட அரண்மனை போல ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ, கான்கிரீட் மதிற் சுவர் பாதுகாப்பு கொண்டது. ஒரு நுழைவாயில் மட்டுமே கொண்டதால் உங்களுக்கு கிடைப்பது அதிக நிம்மதி.

சரியான இட அமைப்பு: பாலக்காடு சாலையில் கோயமுத்தூர் ரயில் நிலையத்திலிருந்து 7 கி.மி. தூரத்தில் அமைந்துள்ளது ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ. மிகச் சிறந்த பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் வங்கிகள் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவிற்கு அருகில் அமைந்துள்ளது சிறப்பு அம்சம்.

24 மணி நேர குடிநீர் வசதி: ஆழ் கிணறுகள் மூலம் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவுக்கு 24 மணி நேர சுவையான குடிநீர் வசதி அளிக்கப்படுகிறது. இனிமையான சூழலுக்கு சுவையான குடிநீர் வசதி.

பொழுது போக்கு அம்சங்கள்: தினமும் மாலைகளில், விடுமுறை நாட்களில் இனிதாக பொழுதை கழிக்க வசதிகள் கொண்ட மினி க்ளப்பும், குழந்தைகளுக்காக அழகிய பூங்காவும் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவில் அமைக்கப்படவுள்ளன.

ஷாப்பிங் வசதி: ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ வளாகத்தினுள் மிக விரைவில் ஷாப்பிங் வசதிகள் நிறுவப்பட உள்ளது.

M/s. சங்கர் & அசோசியேட்ஸ் அவர்களால் திட்டமிட்டு டிசைன் செய்யப்பட்டது ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ. உங்கள் வீட்டுக்கு ஸ்ரீவத்ஸாவின் பயன்களைப் பெறுங்கள். ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவில் வாழும் வாய்ப்பு 140 பேருக்கு மட்டுமே கிடைக்கவுள்ளது.

இத்திட்டம் எல் ஐ சி ஹவுசிங் பைனான்ஸ், ஹெச் டி எஃப் சி, சுந்தரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட், எஸ் பி ஐ ஹவுசிங் பைனான்ஸ், கேன்பின் ஹோம்ஸ் லிமிடெட், மற்றும் பி ஓ பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட். ஆகிய நிறுவனங்களில் கடன் வசதி பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

SREEVATSA HILL VIEW-LOCATION PLAN



Anugrah 2890

Visit us at: www.sreevatsa.com

கோவை: 8/2, மேட்டுப்பாளையம் சாலை, கோவை 641 043, இந்தியா. போன்: 91-422-437422, 432184, 432574, 441481, 454817, 432042, பேக்ஸ்: 91-422-430899, கிராம்ஸ்: SRIVATSACO, Email: Sreevatsa@eth.net / Sreevatsacbe@vsnl.com
சென்னை: 7, காமராஜ் பார்க் தெரு, சென்னை 600 013, இந்தியா. போன்: 91-44-5953149, 5960270, 5957953, 5965401-05, 5961029-31 பேக்ஸ்: 91-44-5950055, 5965032, 5224087. Email:Sreevatsa@vsnl.com மும்பாய்: திரு. ஜி. ஜி. பரதன், ப்ளெஸ்ட் எக்ஸிம் (இந்தியா) லிமிடெட், ப்ளாட் எண் 37, 1 திவ்யா கமர்சியல் காம்ப்ளெக்ஸ், கீழ் தளம், 17வது சாலை, செம்பூர், மும்பாய் 400071, இந்தியா. போன்: 91-22-5287241, டெலிபாக்ஸ்: 91-22-5285716 (அ) 91-22-5570025 (வீடு).

நீங்கள் கொடுத்து வைத்தவர்!

உலகத்தின் ஜனத்தொகை 500 கோடிக்கும் மேல். அத்தனை நாட்டு மக்களையும் - இப்பொழுது உள்ள விகிதாசாரப்படி 100 பேர்கள் கொண்ட சிறிய காலனியாக கற்பனை செய்து பார்த்தால் அந்தக் காலனியில் -

51 நபர்கள் ஆசியா கண்டத்தினர்

21 நபர்கள் ஐரோப்பிய நாட்டினர்

14 நபர்கள் மேற்கு ஐரோப்பிய நாட்டினர்

30 நபர்கள் வெள்ளையர் 70 நபர்கள் மற்றவர்கள்

52 பெண்கள் 48 ஆண்கள்

30 கிறிஸ்துவ மதத்தினர் 70 மற்ற மதத்தினர்

● நீங்கள் மிக கோரமான யுத்தங்களையோ - போர்களையோ கண்டிருக்கவில்லையா? சிறையில் அடைப்பட்டு தனிமையை உணர்ந்ததில்லையா? பட்டினியின் பயங்கரத்தை அனுபவித்ததில்லையா? நீங்கள் உங்களுக்குப் பிடித்த வழிபாடுகளில் - மத சம்பந்தமான காரியங்களில் ஈடுபட முடியுமா? இப்படி நீங்கள் - பயமின்றி - தடங்கலின்றி - கொடுமையாக துன்புறுத்தப்படாமல் - ஏன் கொலை கூட செய்யப்படும் ஆபத்து இல்லாமல் மத சடங்குகள் செய்ய முடியுமா? அப்படியென்றால் நீங்கள் அதிர்ஷ்டம் மிக்கவர். சுமார் 300 கோடி மக்களுக்கு இது சாத்தியமில்லை.

● தங்க ஒரு இடம், அணிவதற்கு உடை, உண்ண உணவு, நாளையைப் பற்றி கவலை இன்றி தூங்குவதற்க்கு ஏற்ற சூழ்நிலை உடையவாரா? உலக ஜனத்தொகையில் 75 விழுக்காடு மக்களுக்கு இது முழுமையாக அமையவில்லை.

● நீங்கள் இன்று காலை ஆரோக்கியத்துடன் எழுந்து வேலையில் ஈடுபட்டிருக்கிறீர்களா? நீங்கள் அதிர்ஷ்டசாலிதான். இந்த வாரம் சுமார் 10 லட்சம் பேர்கள் சாவை சந்திப்பார்கள்.

● இந்த மாதிரி செய்திகளை உங்களால் படித்துத் தெரிந்து கொள்ள முடியுமா? நீங்கள் சந்தோஷம் கொள்ள வேண்டும். சுமார் 2 கோடி மக்களுக்கு படிக்கவே தெரியாது.

உங்களது வாழ்க்கை எவ்வளவு இனிமையானது. உங்களது கொடுப்பினைகளை எண்ணி நன்றியுடன் இருங்கள். மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். வாழ்க வளமுடன்.

- ஆர். வசந்தா



பில்ராத்

மருத்துவமனை

வயிறு சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும்
ஓர் முழுமையான தீர்வு.

**அல்ட்ராசானிக்
முறையுடன்
லேப்ராஸ் கோப்பி
சிகிச்சை**



**மூல நோய்க்கு
அறுவை
இல்லா**

☆ லேசர் சிகிச்சை,

☆ கிரையோ சிகிச்சை

மற்றும் கதிர்வீச்சு சிகிச்சை

Rx

சிறப்பு சிகிச்சைகள்:

- அல்சர்
- அபண்டிஸைடிஸ்
- கர்ப்பப்பை நோய்
- பித்தப்பை கற்கள்
- குடல் இறக்கம் (Hernia)
- ஓவரியில் கட்டி எடுத்தல்
- குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை

சிறப்பு அம்சங்கள்

- ரத்த இழப்பு இல்லை
- தழும்பு ஏற்படாது
- உடனே பழைய நிலைக்குத் திரும்பலாம்

B&H

BILLROTH HOSPITAL

2 4 HOURS SERVICE

43, லட்சுமி திரையரங்க சாலை, செனாய் நகர்,
சென்னை–600030. போன் : 6440020 / 6441777.

மங்கையர் மலர்
மே 2001



அனுராதா ரமணன் எழுதும்

மீண்டும் மீண்டும் (உற்சாகமாக) உயிர்த்தெழலாம்!

- இது ஒரு புதுமையான மருத்துவத் தொடர். சாதாரண தலைவலிக்கே மூன்று நாள் படுத்துக் கிடப்பவர்கள் உண்டு. இரண்டு கைகளிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு இருதய நோய், சர்க்கரை நோய் இன்னோரன்ன பல உடல் உபாதைகளோடும் உற்சாகமாக வளைய வரும் அனுராதா ரமணன் மருத்துவர்களை பேட்டி கண்டு எழுதப் போகிறார்.

- *நோய்க்கு என்ன காரணம், என்ன தீர்வு?*
- *நோயிருந்தாலும் உற்சாகமாக, தைரியமாக வாழுவது எப்படி?*

இரண்டும் இணைந்த ஒரு சுவாரஸ்யமான புதுமைத் தொடர்!

("நகைச்சுவையாகவும் எழுதப் போகிறேன்" என்கிறார் அனு!)

நம்மை நாமே அறிவது ஏன்?



• தயானந்த சரஸ்வதி ஸ்வாமிகள்

"ஒரு நடனமணி வருகிறார். நடனமாட மேடையில் ஏறுமுன் மேடையைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொள்கிறார். நிகழ்ச்சி முடிந்த பிறகு மீண்டும் வணக்கம் சொல்கிறார். ஒரு பாடகர் கணபதியோடு ஆரம்பித்து மங்களத்தோடு முடிக்கிறார். இதெல்லாம் என்ன? இவை தான் நம்முடைய பண்பாடு.

ஒவ்வொன்றுக்கும் ஓர் ஒழுங்குமுறை இருக்கிறது. இப்படித்தான் செய்ய வேண்டும் என்று வைத்தார்கள். அதற்குக் காரணம் இருந்தது. ஒரு பெண்ணுக்கு பொட்டு, திலகம் என்ற சொல்லுக்குள் எத்தனையோ அர்த்தங்களை வைத்தார்கள். ஒரு தங்கநகை என்றால் அது வெறும் உலோகம் மட்டுமில்லை. லட்சுமி! எவ்வளவு பெரிய பணக்காரனாக இருந்தாலும்



• கல்வித் திட்டப் பொறுப்பாளர்கள்

பண நோட்டின் மேல் ஒருத்தன் நிற்பானா? தவறி காலில் பட்டுவிட்டால்கூட கண்ணில் எடுத்து ஒற்றிக் கொள்வான். ஏனென்றால் அவனைப் பொறுத்தவரை அது தனலட்சுமி. வெறும் பேப்பர் துண்டு இல்லை. இதுதான் நம்முடைய கலாசாரம், பண்பாடு..."

என்று சொல்லி நிறுத்திய ஸ்வாமி தயானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் நம்மைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"ஏன் இதையெல்லாம் சொல்கிறேன் என்று பார்க்கிறீர்களா? இப்படிப்பட்ட பண்பையும், கலாசாரத்தையும் இன்று சொல்லிக் கொடுக்க வீட்டில் இருப்பவர்களுக்கு நேரமில்லை. அவர்களுக்கே அதிகம் தெரியவும் தெரியாது. பள்ளியிலே இவற்றை சொல்லித் தருவதற்கான வாய்ப்பே இல்லை. முன்பெல்லாம் 'நீதிபோதனை வகுப்பு' என வைத்திருந்தார்கள். இப்போது அதுவும் இல்லை... எனவேதான் நமது பண்பாட்டையும், கலாசாரத்தையும் பள்ளிச் சிறுவர்களிடையே

சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒரு மாபெரும் திட்டம் வகுத்திருக்கிறோம்..."

"ஸ்வாமிஜி, இதையெல்லாம் படிக்காமலே மாணவர்கள் இன்று புத்திசாலிகளாக, பல சாதனைகளை செய்பவர்களாகத்தானே இருக்கிறார்கள். இருக்கிற பாடங்கள் போதாதென்று இன்னொரு பாடமா?..."

''அம்மா, இது பாடங்கள் இல்லை, வாழ்க்கை. இன்றைய தினம் மிகச் சிறந்த சாதனையாளரும் வாழ்க்கை என்று வரும் போது தத்தளித்துப் போய் விடுகிறார்கள். என்ன காரணம்? முன்பு பெரிய குடும்பங்களில் அன்பு, ஆதரவு செலுத்தி பிரச்னை என வரும் போது தாங்கிப் பிடிக்க பெரியவர்கள் இருந்தார்கள். இன்று சிறிய குடும்பங்கள். எனவே நாம் யார், நம் வலிமை என்ன என்று தெரிந்து கொள்ள நம் கலாசாரம், பண்பாடு எத்தனை



பலம் வாய்ந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக நாம் பூஜை முடித்தவுடன் நம்மை நாமே மூன்று முறை பிரதட்சணமாக சுற்றுகிறோமே, என்ன அர்த்தம்? நம்முள் இருக்கும் கடவுளை நினைத்து, நம் உடம்பையே ஆலயமாக நினைத்து, நாமே பிரம்மம் என உணர்ந்து சுற்றுகின்ற தன்மையே அது. அத்தனை உயர்ந்த சுயமதிப்பை நமக்கு நம் பெரியவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். நாமே கடவுள் என்கின்ற அளவுக்கு உயர்ந்தவர்கள் ஆகிறோம்.

அதே சமயம் ஈகோ, கர்வம் வந்து நம் வாழ்வு பாழாகி விடக் கூடாது என்பதற்காக பெரியவர்களிடையே பக்தி, மாதா பிதா குரு தெய்வம் என்கின்ற உயர்ந்த உணர்வு, இயற்கையை வணங்குதல் என எத்தனையோ விஷயங்களை வைத்தார்கள்.

நாம் இந்த உலகில் தனித்து வாழ்பவர்கள் அல்ல, இந்த உலகின் ஒவ்வொன்றும் தொடர்புடையவை என்பதைப் பல இடங்களில் நம் பெரியவர்கள் உணர்த்தி இருக்கிறார்கள். இவை மனிதன் பிரச்னை என்று வரும்போது ஒடிந்து விடாமல் இருக்க உதவுகிறது. ஒரு மனிதனுக்குச் சுற்றம், நட்பு, செல்வம் எல்லாமே போனாலும் தனிமையில் மனவுறுதியோடு, மன சாந்தியோடு வாழ முடியும். இதைக் கொடுப்பதுதான் நமது பண்பாடு, நமது கலாசாரம். இப்போது சொல்லுங்கள் இது நமது குழந்தைகளுக்குப் போதிக்கப்பட வேண்டுமா, வேண்டாமா?"

"இந்தத் திட்டத்தை எப்படி மாணவர்களிடையே, பள்ளிகளிடையே போதிக்க இருக்கிறீர்கள்?"

''பத்தாண்டுகள் சிறு வகுப்பிலிருந்து குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் வகையில் பாடத் திட்டங்களை அமைத்துள்ளோம். கேசட்டுகளையும் தயாரித்துள்ளோம். பள்ளியின் பாடங்களோடு இதனையும் சேர்த்தே குழந்தைகளுக்குச் சொல்லித் தரலாம். ஆசிரியர்களுக்கும் பயிற்சி வகுப்புக்களை எடுக்கிறோம். இத்திட்டத்திற்கு 'வேத பாரம்பர்ய கல்வித் திட்டம்' என்று பெயர்'' என்றார்.

இதனை ஆனைக்கட்டி ஆஸ்ரமத்தைச் சார்ந்த ஸ்வாமி பரமானந்தா Vedic heritage teaching programme எனும் புத்தகமாக அமைத்துள்ளார். இதன் தமிழ் வடிவம் ஸ்வாமிகளின் மாணவியும், சிட்குமான ஜெயா ரமணியால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

சங்கம் வளர்த்த மதுரையில், தமிழ்ப் புத்தாண்டு அன்று மிகப்பெரிய அளவில் விழாவாக நடத்தி இத்தமிழ் வேத பாரம்பரிய கல்வித் திட்டத்தைத் துவக்க இருக்கிறார்கள்.

"நம் கலாசாரம், பண்பாடு என்பது ஏதோ இந்துமதத்தைச் சார்ந்தது என்று நினைக்கக் கூடாது. இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் தெரிந்து பின்பற்ற வேண்டிய ஒன்று. அப்போதுதான் நம்மையே நாம் யாரென்று தெரிந்து கொள்ள முடியும். சிறு குழந்தை முதலே இந்த விதையை விதைக்க வேண்டும். எதிர்கால சமுதாயத்தில் நம் இந்தியா மிக வுயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பது தான் என் கனவு..."

என அழுத்தமாகக் கூறினார் தயானந்த சரஸ்வதி ஸ்வாமிகள்.

- மஞ்சுளா ரமேஷ்

படங்கள் : **ஜி. சுரேஷ்**

ஏகப்பட்ட பாராட்டுக் கடிதங்கள். எல்லாம் மெகா பரிசுப் போட்டியில் பரிசு பெற்ற கட்டுரைகளைப் பற்றிதான். ஒன்றுகூட சோடை போகவில்லையாம். பின்னே மங்கையர் மலர் வாசகிகள் நடுவர்களாக இருந்தால் சும்மாவா? எல்லாப் புகழுரையும் வாசக நடுவர் குழுவிற்கே. அடுத்ததாக 'இந்தப் புன்னகை என்ன விலை' இந்தத் தலைப்புப் போட்டிக் கட்டுரைகளின் முடிவை, சென்னை வாசகிகளின் தேர்வை பக் - 84ல் காணலாம். இனி பரிசுப் போட்டியின் ஐந்தாம் தலைப்பு -

"கடவுள் மட்டும் எனக்கு இன்னொரு வாய்ப்பு கொடுத்தால்...!"

(அருமையாகக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை நழுவ விட்டிருக்கலாம் - நேசிப்பினைச் சொல்ல / சாதனை செய்வதற்கு / 'ஸாரி' சொல்ல / பாராட்டினைத் தெரிவிக்க... இப்படி எத்தனையோ. மீண்டும் ஒரு முறை அப்படி ஒரு வாய்ப்பு வந்தால் எத்தனை அற்புதமாக இருக்கும் என நினைத்து, எழுதி மகிழலாமே!)

இந்தத் தலைப்பினை நமக்குத் தந்திருப்பவர் செங்கல்பட்டு வாசகி திருமதி ப்ரியா பெண்னெட்.


• ப்ரியா பெண்னெட்



மங்கையர் மலர் வழங்கும் மெகா பரிசுப் போட்டி – 5

தலைப்புப் போட்டியில் ரூபாய் **1000/-** பரிசு பெறும் சகோதரிக்கு நமது வாழ்த்துக்கள்.

☆ **தேர்ந்தெடுக்கப்பட்ட இத் தலைப்பில் ஆண்கள், பெண்கள் இருவருமே கலந்து கொள்ளலாம்.**

☆ **கட்டுரை ஒரு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.**

☆ **தபால் உறையின் மீது 'மங்கையர் மலர் மெகா பரிசுப் போட்டி – 5' எனத் தவறாமல் குறிப்பிடவும்.**

❋ **கட்டுரைகள் அனுப்ப கடைசி தேதி : 15.4.2001**

முதல் பரிசு – ரூ. 10,000/-

இரண்டாம் பரிசு – ரூ. 5,000/-

மூன்றாம் பரிசு – ரூ. 3,000 /-

ஆறுதல் பரிசு – ரூ. 1,000/-

போட்டிக் கட்டுரைகள், அமைக்கப்படும் வாசகர் நடுவர் குழுவால் தேர்ந்தெடுக்கப் பட்டு, ஆசிரியரின் தீர்ப்போடு அறிவிக்கப் படும்.

வலி என்னவென்று உனக்குத்தான் தெரியும்..!

"என் அப்பாதான் என்னுள் தைரியத்தையும் உற்சாகத்தையும் ஊட்டி நீ ஏதேனும் செய்ய வேண்டும் சாதிக்க வேண்டும், சும்மா இருக்கக் கூடாது என்றெல்லாம் போதித்தவர். கடுமையான பயிற்சிகளை எனக்களித்தார். வீட்டுக்கெதிரேயே ஸ்கூல் வேன் வரும். ஆனால் அதில் என்னை அனுப்பாமல் சாதாரண பஸ்ஸில்தான் போக வேண்டுமென பிடிவாதமாக அனுப்புவார். நீ பெரியவளாகி மருத்துவத் துறையில் பணிபுரிய வேண்டும். வலி வலி என்று வேதனைப்படுபவர்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும். ஏனென்றால் அவர்களின் வலி என்னவென்று உனக்கு நன்றாகவே தெரியும். உன்னுடைய அனுபவங்களைச் சொல்லி அவர்களிடம் ஒரு தன்னம்பிக்கையை உண்டாக்க உன்னால்தான் முடியும் என்பார்" என்கிறார் பெங்களூரில் பிஸியோ தெரபிஸ்டாக பணிபுரியும் பி. என். ஹேமாவதி.



ஹேமாவதி மூன்று வயது சிறுமியாக இருந்த போது சாலை விபத்தில் ஒரு காலை இழந்தவர். மண் லாரி அவர் கால் மீது ஏறியதால் தலத்திலேயே முழங்காலுக்குக் கீழே கால் துண்டு பட்டு விட்டது.

"நான் அப்போது சிறுமியாக இருந்ததால் எனக்கு எதுவும் தெரியவில்லை. வலி, இழந்ததன் மதிப்பு இது பற்றியெல்லாம் நினைத்து அழத் தோன்றவில்லை. ஸ்கூலிலும் என் சிநேகிதிகள் என்னை ஊனமுற்றவளாக பாவிக்காமல், விளையாட்டில் சேர்த்துக் கொள்வார்கள். நான் என்னை ஒருபோதும் பலவீனமாக நினைக்கவில்லை. ஸ்கூல் ரன்னிங் ரேஸில் முதற்பரிசு கூட வாங்கியிருக்கிறேன்'' சொல்லிவிட்டு கலகலவென சிரிக்கிறார் ஹேமாவதி.



கறுகறுப்புக்கு மறுபெயராக விளங்குகிறார் ஹேமாவதி. ஜெயநகரில் அவர் வீட்டு குறுகலான மாடிப்படியில் நாம் தடுமாறி தடுமாறி ஏற அவரோ விருட்டென்று ஒரே நொடியில் இரண்டு மாடி தாவி ஏறி விட்டார். ஓட்டம்தான்.

செயற்கைக் கால் என்று சொன்னால் கூட யாரும் நம்ப மாட்டார்கள் என்பதே உண்மை. சர்வ அலட்சியமாக ஸ்கூட்டி ஓட்டி அசத்துகிறார்.

"பி.யு.ஸி. படித்த பிறகு ஃபிஸியோ தெரபிக்கான இரு வருட கோர்ஸை 91ல் முடித்தேன். கடந்த ஆறு வருடங்களாக பணிபுரிகிறேன். காலை ஷிஃப்ட் ஒரு ஆஸ்பத்திரியிலும் மாலை ஷிஃப்ட் வேறொரு ஆஸ்பத்திரியிலும் மதியம் ஊனமுற்ற குழந்தைகளுக்கென இருக்கும் விடுதிகளில் சென்று இலவசமாக சிகிச்சையும் அளிக்கிறேன்."

என தன் தினசரி பணியைப் பற்றிச் சொல்லும் ஹேமாவதி இந்திரா காந்தி திறந்தவெளி பல்கலைக் கழகத்தில் நியூட்ரிஷன் கோர்ஸும் படித்து முடித்துள்ளார்.

"என்னிடம் சிகிச்சைக்கென வரும் நோயாளிகளின் டயட்டும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. பொதுவாகவே காலிழந்தவர் செயற்கைக் கால் வைத்திருப்பவர்கள் வெயிட் போடாமல் இருப்பது நலம். அவர்கள் என்னென்ன சாப்பிட வேண்டும் எதை ஒதுக்க வேண்டும் என்று நானே அட்வைஸ் செய்தால் அவர்கள் டயட்டீஷியனை தேடி ஓட வேண்டாமே" என்கிறார் நிஜமான அக்கறையுடன் ஹேமாவதி.

ஹேமாவதியிடம் சிகிச்சைக்கு வருபவர்களுக்கு அவரே ஒரு நல்ல முன்னுதாரணம். "கை, கால் இழந்தவர்களுக்கு நான் பயிற்சி கொடுக்கும் போது வலியில் கதறுவார்கள். 'உனக்கு வந்தாத் தான் தெரியும் எவ்வளவு வலிக்கிறது. அப்படியும் விடாமல் பயிற்சிகளை செய்யச் சொல்கிறாயே' என திட்டுவார்கள். அப்போது என் செயற்கைக் காலை காண்பிப்பேன். அவ்வளவுதான். 'ஐயோ உங்களைப் போய் அப்படிச் சொல்லிட்டேனே மன்னிச்சுடுங்க' எனக்கூறி உற்சாகத்துடன் பயிற்சியை ஆரம்பித்து விடுவார்கள்" எனக் கூறி சிரிக்கிறார் ஹேமாவதி.

ஹேமாவதி அவருடைய அத்தை மகனையே திருமணம் செய்து கொண்டிருக்கிறார். கடந்த வருடம் தாய்மை அடைந்த ஹேமாவதிக்கு ஒன்பது மாதத்தில் கருச்சிதைவு ஏற்பட்டு விட்டது. டாக்டர்களாலும் சரிவர காரணங்களை கண்டுபிடிக்க முடியவில்லை எனக்கூறும் ஹேமாவதி ஒரு குழந்தையை தத்து எடுத்துக் கொள்ள முடிவெடுத்திருக்கிறார்.

தன்னம்பிக்கைக்கும் சாதுர்யத்துக்கும் சேவை மனப்பான்மைக்குமென பல பரிசுகளை வாங்கியிருக்கும் ஹேமாவதி, 'டியுக் ஆஃப் எடின்பரோ' விருதும் பெற்றது குறிப்பிடத்தக்கது.


— லதா சேகர்

ஒருநாள் எனக்குத் திடீரென்று வலது தோள் பட்டையிலும், வலது பக்க முதுகிலும் தாங்க முடியாத வலி ஏற்பட்டது. அப்போது ஊரிலிருந்து வந்திருந்த எனது மூத்த சகோதரர் (சித்த வைத்தியம் தெரிந்தவர்) வெள்ளைப் பூண்டை உரித்து, சிறிது நல்லெண்ணெய் சேர்த்துச் சாப்பிடச் சொன்னார். சாப்பிட்டவுடன் ஒரு தம்ளர் வெந்நீரும் குடிக்கச் சொன்னார். சாப்பிடும் போதே வலி படிப்படியாகக் குறைந்தது. இரண்டு வேளை சாப்பிட்டவுடன் சுத்தமாக வலியே இல்லை. இது வாய்வுப் பிடிப்பினால் ஏற்படுகிறது என்று சொன்னார். பூண்டு வதக்கிச் சாப்பிட்டவுடன் ஏப்பம் வரும்/வாய்வு வெளியேறும்.

– பிருந்தா இரமணி.









கோடைக்கு

ராஜஸ்தான் வெறும் பாலைவனம் என்றுதானே இதுவரை நினைச்சிக்கிட்டிருந்தீங்க? அது தான் கிடையாது!

இங்கே நிறைய பசுமை பூத்த இடங்கள் உண்டு. ஏன் 'மவுண்ட் அபு' என்கிற கோடை வாசஸ்தலம் கூட உண்டு!

என்ன என்று ஆச்சரியப்படாதீர்கள்!

குஜராத்தின் எல்லைக்கு வெகு அருகில் இது உள்ளதால் 'தேமதுர குஜராத்தி' மொழியை இங்கு சரளமாகக் கேட்கலாம்.

குறைவான செல

வில் ஓர் அழகான, இதிகாச, சரித்திர சிறப்புகள் அடங்கிய 'குருகுரு' மலை வாசஸ்தலத்தில் தங்கி, கோடையின் உக்கிரத்திலிருந்து தப்பி நிம்மதியாகக் கழிக்க விரும்புகிறவர்கள் இங்கே வரலாம்.

தேனிலவுக்கு வருகிறவர்களும் இந்த இடத்துக்கு வருவதைப் பற்றி யோசிக்கலாம்.

தென்னிந்தியாவிலிருந்து டில்லி வருகிறவர்கள் டில்லி - அகமதாபாத் வழியில் ரயிலில் பிரயாணித்து 'அபு ரோட்' என்கிற இடத்தில் இறங்கி விடுங்கள். அங்கிருந்து 'மவுண்ட் அபுவிற்கு' உங்களை குண்டுக் கட்டாகத் தூக்கி டாக்ஸியில் அடைத்துக் கொண்டு போக ஸ்டேஷனிலேயே ஓட்டு

னர்கள் காத் இருப்பார்கள்!

அவர்களிடம் மாட்டிக் கொள்ளாமல் பஸ் பிடித்து பிரயாணிப்பதில் உங்கள் சாமர்த்தியம் அடங்கி இருக்கிறது!

அடுத்து நீங்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அரைகுறை ஆங்கிலத்தில் உங்களைப் பதம்பார்க்கத் துடிக்கும் 'கைடுகள்' எனப்படும் வழி





காட்டிகளிடம். 'ஐ கேன் இஸ்பீக் சிக்(ஸ்) லாங்குவேஜ், இங்கிலீஷ் ஹிண்டி, மார்வாரி, குஜராத்தி, போஜ்புரி அண்ட் ப்ரிஜ் பாஷா' என்று விளக்கம் தந்து அவர்கள் எந்த மொழியில் பேசுகிறார்கள் என்று புரியாமல் திண்டாட வைப்பது அவர்களுக்குக் கைவந்த கலை. அதோ! அங்கே ஒரு டூரிஸ்ட் கும்பல் போகிறது அதோடு சேர்ந்து கொள்ளலாம் வாங்க.

'இதன் இதிகாசப் பெயர் அற்புத மலையாம். புராணக் காலத்தில் இது நைமிசாரண்யம் போல் ஒரு தபோ வனமாக இருந்ததாம். பஞ்சபாண்டவர்கள் கூட இங்கே வந்திருக்கிறார்களாம்.

"பத்ரஹரி யார் தெரியுமா?" திடீரென்று 'கோடீஸ்வரன் கேள்வி'யைப் போடுகிறார் கைட்.

இதற்குப் பதில், ஏ. தெரியாது, பி. தெரியும், சி. தெரிந்த மாதிரியும் இருக்கு, டி. தெரியாத மாதிரியும் இருக்கு. சரியான பதிலைச் சொன்னால் நீங்கள் புத்திசாலி என்கிற முத்திரை கிடைக்கும்! "தெரியாது" என்று கோரஸ்ஸில் பதில்



இங்கே போகலாமா?



சொல்லி டூரிஸ்டுகள் அத்தனை பேரும் புத்திசாலி முத்திரைக்கு தகுதியுள்ளவர்களாகிறார்கள்!

"பத்ரஹரி என்பவர் விக்கிரமாதித்தனின் மூத்த சகோதரர்."

"விக்கிரமாதித்தன் யார்?"

"இது தெரியாதா... பத்ரஹரியின் இளைய சகோதரர்!" கைட் சளைக்காமல் பதில் சொல்லுகிறார்.

அந்த பத்ரஹரி

இங்கே வந்து ஆசிரமம் அமைத்துக் கொண்டு தன் இறுதி நாட்களைக் கழித்தாராம்.

கோமுக் என்கிற இடத்தில் வசிஷ்டர் ஆசிரமத்துக்கு போகிறோம். இங்கே நடத்தப் பட்ட யக்ஞத்தின் போது அக்னி குண்டத்திலிருந்து உதித்த ராஜபுத்திரர்கள்தான் அக்னிகுல ராஜபுத்திரர்களாம். சௌஹான், பிரதிகார, சோளங்கி, பார்மர் பரம்பரையினர் இதில் அடக்கம்.

வசிஷ்டர் கோயிலைப் பார்க்க நூற்றுக்கணக்கான படிகளைக் கடக்க வேண்டும். வசிஷ்டர் இருந்திருந்தால் அவர் வாயால் நமக்கு ஏதாவது 'பட்டம்' கிடைத்திருக்கும்!

அடுத்து அற்புத தேவியின் கோயிலும் அப்படித்தான்.

'ஐயோ' என்று மலைப்பவர்கள் 'ஐயோடெக்ஸ்' ஸாரி அயோடக்ஸின் உதவியை நாடலாம்.

மலைவாசஸ்தலத்தில் படி ஏறி இறங்காமல் முடியுமா? அடுத்து கைட் ஏரிக்கரைப் பக்கம் விரைகிறார். ஊரின் மத்தியில், 'நக்கி' ஏரி உள்ளது. (நாக்குக்கும் இந்த நக்கிக்கும் சம்பந்தமில்லை!)



பாஸ்கலி என்கிற அசுரன் தேவர்களைப் படாதபாடுபடுத்தி வைத்தானாம். (அந்தக் கால வீரப்பன் போலும்!) அவனிடமிருந்து தப்புவதற்காக பிரம்மதேவன் அனுமதியுடன் (அவர் விஸா கொடுத்தால்தான் தேவலோகத்திலிருந்து பூலோகம் வர முடியுமாம்) தேவர்கள் அபு மலையை அடைந்து பூமியைக் கீறி நீரை வரவழைத்து ஏரியாக்கி அதற்கடியில் ஒளிந்து கொண்டார்களாம். (பாஸ்கலிக்கு நீந்தத் தெரியாது போலும்)

"நகத்தால் கீறி வந்த ஏரி நீர் ஆதலால் இதை நக்கி ஏரி என்கிறார்கள்'' என்கிறார் கைட்.

"யாருடைய நகம்?" டூரிஸ்ட் கேட்கிறார்.

"என்னை முறைக்காதீர்கள் நிச்சயம் என்னுடைய நகமல்ல!" கைட் சொல்ல அங்கே 'கொல்' சிரிப்பு. ஏரியில் பயணிக்க வாடகைப் படகுகள் கிடைக்கின்றன.

"அதோ நந்திராக் பாருங்கள்."

குறுக்கே போகும் மற்றொரு படகில் அகலமும் உயரமும் உள்ள வெளிநாட்டு டூரிஸ்ட் நின்றவண்ணம் மறைத்துக் கொண்டு புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருக்க,

ஒருவர் "நந்தி தெரிகிறது... ராக் எங்கே?" என்று கடிக்கிறார் ஒரு சகபிரயாணி.

தவளை வடிவில் இருப்பது 'டோடராக்' மூன் வடிவில் இருப்பது மூன்ராக்.

''அப்போ, 'ப' வடிவில் இருப்பது 'பராக்'ஆ சார்?"

தமிழர் ஒருவர் கேட்கிறார்.

"ரொம்ப அறுக்காதீங்க. நாம் இருப்பது படகு. கைட் கோபம் வந்து நம்மை ஏரியில் தள்ளிடப் போகிறார்'' என்று வாயை அடைக்கிறோம்.

படகுப் பிரயாணம் முடிந்து திரும்பியதும் கைட், "டைம் ஃபோர் ஷாப்பிங்" என்கிறார்.

டூரிஸ்டுகள் சிதறிப் போகிறார்கள்.

மூங்கில் பை, மரச்சாமான்கள், மணிமாலைகள், வெள்ளி நகைகள், இராஜஸ்தானி சுங்கடிப் புடவைகள்.... பெண்கள் ஆர்வத்துடன் வாங்கிக் குவிக்கிறார்கள்.

அங்கிருக்கும் மதராஸ் ஹோட்டலில் குடும்பத்துடன் உட்கார்ந்து தமிழ் மாமா "ஒரு பிளேட் இட்லி'' என்கிறார். வட இந்திய உணவு வகைகளையே அதிகம் விரும்பும் அவர் குழந்தைகள் "அபுமலைக்கு வந்தும் அப்பா இட்லியை விடவில்லை!" என்று புதுமொழி பகர்கிறார்கள்.

"கொஞ்சமா சாப்பிடுங்க. அப்புறம் நடக்க முடியாது கஷ்டப்படுவீங்க" கைட் எச்சரிக்கிறார்.

அடுத்து தில்வாடா ஜெயினர் கோயில்களைப் பார்க்கப் போகிறோம்.

"உங்களுக்கு பீமதேவரைத் தெரியுமா?"

"ஓ தெரியுமே அவர் பஞ்சபாண்டவர்களில் ஒருவர்!"

"சார்! காலண்டரில் நீங்க ரொம்பவே

பின்னாலே போயிட்டீங்க. இன்னும் நிறைய முன்னாலே வாங்க" இது கைட்.

எல்லாரும் முன்னால் நகரத்துவங்க.

அவர், "ஸ்டாப்... ஸ்டாப்... நான் சொன்னது இங்கல்ல. வருஷங்களைச் சொல்கிறேன். பீமதேவர் என்பவர் சோளங்கி பரம்பரையைச் சேர்ந்த அரசர். இவரது மந்திரியாக இருந்த விமல் ஷா கி.பி. 1032ல் ஜைன தீர்த்தங்கரரான ரிஷபநாதர் என்னும் ஆதி நாதருக்காக கட்டிய சலவைக் கல் கோயில் இது."

"அவர் தனியாகவா கட்டினார்?"

"இல்லை... கூட நிறைய மேசன்களும் வேலை செய்திருப்பார்கள் ஹீஹீ!"

சிற்பங்களைப் பார்த்து 'ஆஹா அற்புதம், பிரமாதம், எக்ஸலெண்ட்... எல்லாரும் பிரமிப்புடன் சிற்பங்களை ரசிக்கிறார்கள்.

மேல்கூரையிலும், தூண்களிலும் சலவைக் கல் சிற்பங்கள் பேசுகின்றன!

வித்யா தேவியின் பதினாறு ரூபங்கள், பூத்த தாமரைகள், நடன அப்சரஸ்கள், காளிங்களை அடக்கும் கண்ணன், சீற்றத்துடன் தோற்றம் தரும் நரசிம்மர் புராணக் காட்சிகள், விமல்ஷா வழிபட்ட அம்பிகா தேவியின் சன்னிதியும் உள்ளது. ஆதிநாதரை தரிசித்து விட்டுக் கிளம்புகிறோம். மவுண்ட் அபுவிலிருந்து பதினோரு கிலோமீட்டர் தொலைவில் அச்சல்கர் உள்ளது.

கும்பராணா கட்டிய கோட்டையின் இடிபாடுகள்; அசலேஸ்வரர் கோயிலில் கட்டை விரல் அளவே உள்ள லிங்கம், கோயிலின் முகப்பில் இருக்கும் பித்தளை நந்தி என்று எல்லாவற்றையும் பார்க்கிறோம்.

இன்னும் கொஞ்சம் பிரயாணித்தால் 'குரு சிகர்' என்கிற இடத்தை அடையலாம். கடல் மட்டத்திற்கு 5653 அடி உயரமுள்ள இந்த இடம் ஊட்டிக்கும் இமயமலைக்கும் மத்தியில் உள்ள சிகரங்கள் எல்லாவற்றிலும் மிக உயரமானதாம்.

அடிவாரத்தில் தத்தாத்ரேயர் கோயிலும் சிகர உச்சியில் அத்ரி மகரிஷி கோயிலும் உள்ளன.

சிகரத்தில் நின்றால் காற்று சின்னடைப் பிய்க்கிறது!

ஒல்லிப்பிச்சர்கள் கவனமில்லாமல் நின்றால் பறந்து போய் விடுவார்கள்!

வனவிலங்கு பிரியர்களுக்கு 'சஃபாரி' போக வசதிகள் உண்டு. இங்குள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் புலிகள் கூட உண்டாம். வன இலாக்காவினருக்கு முதலே கடிதம் எழுதினால் அவர்கள் 'புலி தரிசனத்துக்கு' வசதி செய்து தருவார்கள்.

மலை ஏறும் பயிற்சிப் பள்ளி உள்ளதால் மாணவ மாணவிகள் அங்கங்கே மலை மீது கயிற்றைப் பிடித்துக் கொண்டு தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

கோடைக் காலத்தில் ராஜஸ்தான் ஆளுனர் தற்காலிகமாக மவுண்ட் அபு வந்து தங்கி விடுவாராம். இதுபோன்ற துண்டுச் செய்திகளை அவ்வப்போது 'கைட்' தூவிக் கொண்டே போகிறார்.

இங்கே தங்குவதற்கு அரசு விடுதிகள், டூரிஸ்ட் கெஸ்ட் ஹவுஸ்கள், ஹோட்டல்கள் என்று ஏராளமான இடங்கள் உள்ளன. கோடைக்காலத்தில் கூட்டம் நெரிவதால் 'ராஜஸ்தான் மாநில அரசு சுற்றுலா' துறையுடன் தொடர்பு கொண்டு வசதியாக தங்க ஏற்பாடுகளுடன் போகலாம்.

— லக்ஷ்மி ரமணன்

****

இன்னுமொரு ஈஸியான பருப்புசிலி



கடலை மாவை பெரிய கரண்டி அளவு எடுத்துத் தோசை மாவு மாதிரி கரைத்துத் தோசைக் கல்லில் காய்ந்ததும் ஊற்றி வெந்ததும் ஆறவிடவும். அதற்குள் காய்கறி தாளித்து வதங்கியவுடன் ஆறின கடலை மாவு தோசை நன்றாக உதிர்த்து காய்கறிக் கலவையில், சேர்க்கவும். சூப்பர் உசிலி ரெடி.

- எஸ். கோமதி



ஒரு சின்னஞ்சிறு மீனவத் தீவு இன்று உலகமே வியக்கு மளவிற்கு தொழில்நுட்பத்திலும், வியாபாரத்திலும் முன்னோடியாக உருவாகியிருக்கிறது என்றால் அது சிங்கப்பூர்தான்.

'கிழக்கும் மேற்கும் சேர முடியாது' என்றார் மார்க்ட்வெயின் என்ற ஆங்கிலக் கவி. ஆனால் இந்த நவீன நகரத்தில் கிழக்கும் மேற்கும் இரண்டறக் கலந்திருப்பதோடு மட்டுமல்லாமல் பல்வேறு நாட்டிலிருந்து இங்கே வந்து குடியேறிய மக்கள் இங்கே அமைதியுடனும் ஒற்றுமையுடனும் வாழ்ந்து வருகிறார்கள்.

சீனா, மலோய் மற்றும் இந்திய நாட்டு மக்கள் தங்களது கட்டிட சாஸ்திரம், கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், மற்றும் பண்டிகைகளை வளர்த்து இந்நாட்டிற்கு ஒரு புதிய சர்வதேச கலாச்சாரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஊரெங்கிலும் பல மதத் தைச் சார்ந்த கோயில்களும் வரலாறு படைத்த கட்டிடங்களும், பொருட்காட்சி நிலையங்களும் உள்ளன. இப்படி பல்வேறு நாட்டினராக இருந்தாலும் மக்கள் முதலில் தங்களை சிங்கப்பூர்வாசிகளாகக் கருதி ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள்.

உலகின் மிகவும் விறுவிறுப்பாக இயங்கும் வியாபாரத்தலம் துறைமுகம் மற்றும் ஏர்போர்ட் உள்ள நகரமாக இன்று சிங்கப்பூர் விளங்குகிறது. உலக மஹா யுத்தத்தின் போது பெருமளவிற்கு பாதிக்கப்பட்ட இந்த சிறு தீவு இந்த அளவிற்கு எப்படி உயர்ந்தது?

'சிங்கப்பூர் தகவல் மற்றும் கலை' என்னும் மந்திரி இலாகாவின் சட்டபூர்வமானக் குழுவாக இருக்கும் சிங்கப்பூர் ப்ராட்காஸ்ட்டிங் அதாரிட்டியில் உதவி இயக்குனராக இருக்கும் சௌந்தர்யா சுகுமார் ரேடியோ மற்றும் டி.வி.யில் ஒலிபரப்பாகும் அந்நிய நாடுகளின் செய்திகளின் பொறுப்பாளராக இருக்கிறார். இவர் சிங்கப்பூரைப் பற்றிப் பேசுகிறார். தேர்தல் வந்து மீண்டும் புதிய அரசாங்கம் அமையப் போகும் இந்த நேரத்தில் நாம் இவருடைய கருத்துக்களை நிறைய சிந்திக்க வேண்டும்...

''1980ல் மே மாதம் எனக்குத் திருமணம்.

ஸ்திரமான அரசாங்க... நாட்டை

அன்றிலிருந்து இன்று வரையில் சிங்கப்பூரில்தான் வசித்து வருகிறேன். இங்கேதான் என் மகனும், மகளும் பிறந்தார்கள். மகன் விக்ரம் வெளிநாட்டில் படித்துக் கொண்டிருக்கிறான். மகள் கல்யாணி இங்கே ப்ளஸ்டு படித்துக் கொண்டிருக்கிறாள். கணவர் சார்ட்டட் அக்கவுண்டன்ட்." என்று தன்னுடைய குடும்பத்தை அறிமுகப்படுத்துகிறார் திருமதி சௌந்தர்யா. முதலில் ஒலிபரப்பு நிருபராக பணியில் சேர்ந்தவர் இன்று உயர் பதவிக்கு வந்திருக்கும் இருபது ஆண்டு பயணத்தை



முன்னேற்றம்!

விளக்குகிறார்.

"நாங்கள் சிங்கப்பூருக்கு வந்த பிறகு வேறு எந்த நாட்டிற்கும் போனது கிடையாது. மற்ற நாடுகளுக்கு ஒரு டூரிஸ்ட்டாக சென்று வந்திருக்கிறோமே தவிர வேறு எங்கும் போக வேண்டும் என்று எங்களுக்கு தோன்றியதே கிடையாது. ஏனென்றால் இங்கேயே எல்லா வசதிகளும் உள்ளன. கோயில், குளம், பூஜைகள், பண்டிகைகள், விசேஷ காரியங்கள் செய்வதற்கு வாத்தியார் கிடைப்பது குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத் தருவதற்கு போன்ற வசதிகள் இருக்கின்றன.

அமெரிக்காவிலும் அந்நிய ஐரோப்பா நாட்டில் வாழும் தமிழர்களும் எங்களைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள். இங்கே நம் பாஷை, நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாடு, கலாச்சாரத்தை நம் குழந்தைகளுக்குக் கற்றுத் தர முடிவதால் மற்ற வெளிநாட்டுக் குழந்தைகள் இரு வேறு கலாச்சாரக் குழப்பத்தில் உழன்று வரும் நிலை இவர்களுக்கு இல்லை.

இப்போது அமெரிக்காவையே எடுத்துக் கொள்ளுங்கள். வீட்டில் ஒரு சூழல், வெளியில் வேறு ஒரு சூழல். இங்கே வாழும் இந்தியர்களின் குழந்தைகளுக்கு அந்த மாதிரியான பிரச்னைகள் வருவதில்லை. இங்கே நிறைய கோயில்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட நாற்பது கோயில்கள் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இயங்குகின்றன. இங்கே நம் பண்டிகைகள் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன. தீபாவளியன்றைக்கு அரசு விடுமுறையே உண்டு. அதே மாதிரி தைப் பூசத்திற்கு லீவு எடுக்கலாம். நாள் கிழமைகளில் வீட்டிலோ, கோயிலிலோ வழிபட வசதிகள் உண்டு.

எந்த ஒரு நாட்டைச் சேர்ந்தவர்களையும் வித்தியாசம் காணுதல் இங்கே கிடையாது. இதை அரசாங்கமும் ஆதரிப்பதில்லை. சில பேர் வேற்றுமை உணர்ச்சியிருப்பதாக உணர்ந்தால் அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். "இந்தியாவிலிருந்து நாம் ஒரு புதிய நாட்டிற்கு வந்திருக்கிறோம். இங்கே

உள்ளவர்களுடைய பழக்க வழக்கத்திற்குத் தகுந்தாற்போல் நாம் சற்று அனுசரித்துக் கொண்டு போக வேண்டும்" என்கிற ஒரு பரந்த மனப்பான்மையுடன் வந்தால் அவர்களுக்கு ஒரு பிரச்னையும் இருக்காது. பொதுவாக 99 சதவிகிதம் மக்களுக்கு பிரச்னைகள் இருப்பதில்லை. ஒருசில பேருக்கு அப்படி ஏதேனும் வேற்றுமை இருப்பதாகத் தோன்றினால் அது அவரவர் கண்ணோட்டத்தையும் அனுபவத்தையும் பொறுத்திருக்கிறது.

உலகின் அந்நிய பல நாடுகளில் நடப்பதைப் போல் சிங்கப்பூரில் கலவரங்கள், கலகங்கள், குழப்பங்கள் ஏதும் நிகழ்வதில்லை. அமைதியை விரும்பும் மக்கள் கொண்ட நாடு சிங்கப்பூர் என்றாலும் இதற்கு மற்றும் ஒரு முக்கிய காரணம் ஸ்திரமான, அரசியலும் தான். ஆரம்பத்திலிருந்தே ஒரே அரசாங்கம்தான் ஆட்சியில் இருக்கிறது. அதே சமயம் அரசியல் ஸ்திரமாக இருக்க வேண்டும் என்பதில் அரசாங்கமும் உறுதியாக இருக்கிறது.

மேலும் ஸ்ட்ரைக் பண்ணும் அளவிற்கு இங்கே எந்த விஷயமும் இல்லை. அரசாங்கம் மக்களையும் தங்களுடைய கூட்டாளிகளாக பாவிக்கிறது. நாட்டின் முன்னேற்றத்தில் அனைவருக்கும் பங்கு உண்டு என்னும் எண்ணத்தை ஆரம்பத்திலிருந்தே ஒரு வேதாந்தமாக எடுத்துக் கொண்டு விட்டார்கள். புதியதாக ஏதேனும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தும் போது அதை கீழ்மட்டத்தில்தான் ஆரம்பிக்கிறார்கள். அது யூனியனாகவோ அல்லது பொது மக்களாகவோ இருக்கட்டும்.

முதலில் ஒரு விஷயததை எடுத்துக் கொண்டு அதை அலசி, அதைப் பற்றி கலந்தாலோசித்து மக்களை மனதளவில் தயார்ப்படுத்துகிறார்கள். அந்த விஷயத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்கள்.

இப்பொழுது குடும்பத்திற்கு இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்வதை அரசாங்கம் ஊக்குவிக்கிறது. இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன் இரண்டு குழந்தைகள் மட்டும் இருந்தால் போதும் என்ற எண்ணம் நிலவியது. இது விஷயமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் ஒவ்வொரு வாக்காளர் பகுதியிலும் சர்ச்சைகள் நடக்கும். இப்படியாக முதலில் அஸ்திவாரம் போடப்படுகிறது. அதன் பிறகு பாராளுமன்றத்தில் "இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொண்டால் ஊக்கத் தொகை கொடுக்கப்படும்" என்கிற மசோதாவை அறிமுகப்படுத்துவார்கள். இது ஒரு நல்ல டெக்னிக். திடீரென்று மக்களிடம் "இதுதான் எங்கள் திட்டம். இதை அமுல் படுத்தப் போகிறோம்" என்று அறிவிப்பதில்லை.

ஒரு திட்டம் என்று இருந்தால அதை ஆதரிக்க வேண்டும் என்கிற கட்டாயம் எவருக்கும் இல்லை. அதை எதிர்க்கிறவர்களும் இருப்பார்கள். ஆனால் பொதுவாக சமுதாயத்திற்கு நன்மையளிக்கும் எந்தத் திட்டமாக இருந்தாலும் தனி மனித அபிப்பிராயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாது. தேசம் தான் சமுதாயத்தை விட முக்கியம், சமுதாயம், தனிமனிதனை விட முக்கியம் என்பது தான் இந்த நாட்டின் கொள்கை. இதை மக்கள் புரிந்து கொண்டால் பிரச்னைகள் வராது.

இந்தியாவையே எடுத்துக் கொள்ளுங்கள். என்னதான் பொருளாதார ரீதியாக நிர்ப்பந்தங்கள் பல இருந்தாலும், வசதிகள் செய்யக்கூடிய சில விஷயங்களில் கூட, 'நான் ஏன் செய்ய வேண்டும்? அவன் பண்ணட்டுமே? எனக்கென்ன வந்தது! 'இது கவர்மெண்டோட வேலை' போன்ற எண்ணங்கள் தான் அதிகமாக நிலவுகின்றன.

இந்தியாவின் ஜனத்தொகை சிங்கப்பூரை விட பன்மடங்கு அதிகமென்றாலும் இந்த மாதிரியான திட்டங்களும் எண்ணங்களும் ஒன்றாக இருக்கலாமே? கிராமத்தில் குழாயைத் திறந்து வைத்து விட்டுப் போனால் 'உங்களுக்குத்தான் நஷ்டம். இன்னிக்கு உங்களுக்கு தண்ணீர் இருக்கலாம். நாளைக்கு இருக்காது' என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும்.



வருவது வேப்பம் பூ காலம். சுத்தம் செய்த வேப்பம் பூக்களை (ஒரு கைப்பிடி) ஒரு சிறு துண்டு வெல்லத்துடன் எண்ணெயிலிட்டு காய்ச்சி ஆறவைத்து தலைக்குத் தடவி வர, பொடுகு தொல்லை நீங்கும். பேனும் அண்டாது.

— எஸ். பட்டம்மா

கேசரி செய்வதற்கு ரவையைப் பொதுவாக எல்லோரும் பயன்படுத்துவார்கள். மாறுதலாக அவலை நன்கு மிக்ஸியில் பொடி செய்து பாருங்கள். ரவை போல் வரும். ரவையில் செய்த கேசரியை விட, அவலில் செய்த கேசரி சூப்பராக இருக்கும். கலர் பவுடர் கலந்து விடுங்கள். அத்துடன் சிறிதளவு நெய் சேர்த்தால் போதும். வெகு ருசியாக இருக்கும்.

– சி. விஜயலக்ஷ்மி.



இந்தியாவில் இந்த மாதிரி செய்ய வேண்டுமானால் அதற்குத் தொலைக் காட்சியை உபயோகிக்கலாமே? எத்தனை விளம்பரங்கள் வருகின்றன டீவி சானல்களில்? பொது மக்களுக்கான இந்த மாதிரி விஷயங்களையும் இடையிடையே ஒளிபரப்பலாமே? ஒவ்வொரு ஜனரஞ்சகமான நிகழ்ச்சியின் இடையேயும் ஐந்து நிமிடங்கள் விளம்பரம் என்றால் ஒரு நிமிடத்தை பப்ளிக் எஜுகேஷனிற்காகச் செலவிடலாமே?

"நாங்கள் பொது மக்களுக்கு சில விஷயங்களை கற்பிக்க முனைகிறோம். பொது கழிப்பிடங்களை எப்படிச் சுத்தமாக வைத்துக் கொள்வது, எப்படி சாலைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்வது, ஆபத்திலிருப்பவர்களுக்கு முன்வந்து உதவுகிறது போன்ற விஷயங்களை மக்களிடம் கொண்டு செல்ல விரும்புகிறோம். இதற்கு உதவுங்கள்" என்று சானல்களை தங்கள் பக்கம் அழைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அரசாங்கத்தினாலும் நிர்வாகம் செய்ய முடியும்.

இந்த மாதிரி விஷயங்களை மக்கள் விரும்பிப் பார்க்கும் விதத்தில் ஜனரஞ்சகமாக ஒளிபரப்ப வேண்டும். ஒரு பிரசாரத்தைப் போலச் செய்தால் மக்களுக்கு சீக்கிரமே அலுத்து விடும். இதெல்லாம் ஒரு டெக்னிக்தான். இதற்கெல்லாம் இந்தக் காலத்தில் பிரத்தியேகமான மீடியா நிறுவனங்கள் உள்ளன. அவர்களையும் சேர்த்துக் கொண்டு அரசாங்கம் மாற்றங்களைக் கொண்டு வரும் விதத்தில் "ப்ரோ ஆக்டிவ்வாக" செயல்பட வேண்டும்.

சிங்கப்பூரை எல்லோரும் வேடிக்கையாக ஆங்கிலத்தில் 'இட்ஸ் எ ஃபைன் சிட்டி' என்பார்கள். ஃபைன் என்றால் ஒரு அர்த்தத்தில் 'அருமையான' என்றாலும் மற்றொரு அர்த்தத்தில் 'அபராதம் விதிப்பது' என்றும் ஆகிறது. இங்கு எல்லா விஷயத்திற்குமே 'ஃபைன்'தான். துப்பினால் அபராதம். சாலையில் குடித்து விட்டு வண்டியோட்டினால் ஃபைன். பொதுக் கழிப்பறையில் ஃப்ளஷை இழுக்காவிட்டால் ஃபைன், சாலைகளில் குப்பையைப் போட்டால் அபராதம், வரியை நேரத்தில் கட்டாவிட்டால் ஃபைன் என்று எதற்கெடுத்தாலும் அபராதம் விதித்து விடுகிறார்கள்.

நம்மூரிலே பாருங்கள், வீட்டினுள் குப்பைத் தொட்டியிருந்தாலும் தலையை வாரினால் தலைமுடியைச் சுருட்டி ஜன்னல் வழியாக வெளியே எறிகிறார்கள் சிலர். "வேறு யார் வீட்டிற்குப் போனால் என்ன? நம்ப வீடு வரையில் சுத்தமாக இருந்தால் போதும் என்கிற எண்ணம். 'இந்த ரோடும் எனக்குச் சொந்தம். சுற்றுப்புறமும் எனக்குச் சொந்தம்' என்கிற உணர்வு இருந்தால் இப்படிச் செய்ய மாட்டோம். சிங்கப்பூர் மக்களுக்கு இந்த உணர்வு இருப்பதால்தான் தங்களது நாட்டைச் சுத்தமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கேயும் முதலில் விதிமுறைகளைக் கொண்டு வந்த போது எல்லோரும் பின்பற்றவில்லைதான். அதற்குக் கடினமான தண்டனைகள் வழங்கப்பட்டன. அவரை இவரைப் பார்த்து அபராதம் கட்டாமலிருப்பது போன்ற விஷயங்கள் நடக்கவே இல்லை. யாராக இருந்தாலும் அபராதம் கட்ட வேண்டும் என்றால் கட்டித்தானாக வேண்டும். சில பேருக்கு பிடிக்கவில்லைதான். ஆனால் எவராலும் அரசாங்க விதிமுறைகளை மீற முடியாது.

எதற்குமே முதலில் ஒரு எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். அது இல்லாமல் இருக்காது. அதையும் மீறி, 'நாங்கள் ஒரு நல்ல காரியத்தை ஆரம்பித்திருக்கிறோம். எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும். அப்படி ஏதாவது எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமானால் உங்களுடைய எண்ணங்களை எழுதித் தெரியப்படுத்துங்கள்' என்கிற ரீதியில்தான் இங்கே அரசாங்கம் நடக்கிறது. அதையும் மீறி எவராவது எதிர்ப்பு தெரிவித்தால், 'அரசாங்கத்தை கடமைகள் செய்வதிலிருந்து


‘‘இப்பல்லாம் கு
நடக்குறதுல்






யடிச் சண்டையே தெரியுமா?''



கலைஞர் ஆட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் படைத்துள்ள சாதனைகள் பல.

தெருவுக்குத்தெரு குழாய்கள் போட்டு, வீட்டின் அருகிலேயே தண்ணீர் கிடைக்கச் செய்துள்ளது கலைஞரின் அரசு. இந்த ஆட்சியில், சுட்டெரிக்கும் வெயிலாக இருந்தாலும் மக்களுக்கு தண்ணீர் இல்லை என்ற பிரச்சனையே வராமல் உள்ளது.

நிறைவான குடிநீர் வசதிபெற்ற நகரங்கள் – 249 • பகுதியளவு குடிநீர் வசதிபெற்ற நகரங்கள் – 252 • ரூ.562 கோடி மதிப்பீட்டில் 113 நகரங்களுக்குத் தொடர் திட்டங்கள்.

1.1.2000 வரை குடிநீர் தன்னிறைவு பெற்ற ஊரகங்களின் எண்ணிக்கை 61702 • 1996 முதல் இன்று வரை குடிநீருக்குச் செலவிடப்பட்ட தொகை ரூ.1352 கோடி.



DIPR.2001

தடுக்கிறீர்கள்' என்று உங்கள் மீது நாங்கள் நடவடிக்கைகள் எடுக்கலாம்' என்கிற ரீதியில் எடுத்துக் கொள்கிறார்கள்.

'மக்கள் வோட்டு போடாமல் இருந்து விடுவார்களோ' என்று ஒவ்வொருவரும் எதிர்ப்பைக் கண்டு பயந்தால் நாடு எப்படி முன்னேறும்? உங்களுடைய நல்ல வேலைகளின் பலனைக் கண்டு மக்கள் உங்களுக்கு வாக்களிக்க வர மாட்டார்களா?

சிங்கப்பூர் ஊழல் இல்லாத நாடு. அப்படி எங்கேயாவது ஊழல் நடக்கிறது என்று தெரிந்தால் அரசாங்கம் உடனே தக்க நடவடிக்கை எடுத்து விடுகிறார்கள்.

நம் நாட்டில் ஊழல் அதிகம் என்றால் அதற்கு அரசாங்கத்தை மட்டும் குறைகூற முடியாது. நம் நாட்டில் பொதுவான ஒரு எண்ணம் நிலவுகிறது. 'நீ ஊழலாக இல்லாவிட்டால் உனக்குப் பிழைக்க வழி தெரியவில்லை' என்றுதான் நினைக்கிறார்கள். ஒவ்வொரு தனிமனிதனும் நான் ஊழலாக இருக்கவும் மாட்டேன், ஊழலுக்கு இடம் கொடுக்கவும் மாட்டேன் என்று உறுதியாக நின்றால் நம்மால் ஊழலை ஏன் ஒழிக்க முடியாது?

அதை விட்டு விட்டு 'என்னய்யா இது? அஞ்சோ பத்தோ கொடுக்க மாட்டேங்கறியே? உனக்குப் பிழைக்கத் தெரியவில்லையா?' என்றோ, 'எனக்கு அவரை நன்றாகத் தெரியும். அவர் காதில் ஒரு வார்த்தை போட்டு விடுகிறேன். காரியம் நடந்த மாதிரிதான்' என்றோ 'என்னிடம் கொடுங்கள் ஒரே நிமிடத்தில் கையெழுத்தை வாங்கித் தந்து விடுகிறேன்' என்று இப்படியே ஒவ்வொருத்தரும் நடந்து கொள்வதால்தான் ஊழல் தொடர்கிறது. மக்கள்தான் ஊழலை வளர்க்கிறார்கள்.

சிங்கப்பூர் ஒரு சிறிய மீனவத் தீவிலிருந்து இன்று உலகிலேயே சிறந்த துறைமுகமாக வளர்ந்திருக்கிறது என்றால் இதற்குக் காரணம் அரசாங்கமும் மக்களும் நாட்டின் ஒற்றுமையை முதலில் நிறுத்தி கைகோர்த்துக் கொண்டு செயல்பட்டதனால்தான். பீப்பள்ஸ் ஆக்ஷன் பார்ட்டியின் பங்கும் அதனுடைய தலைமை பொறுப்பிலிருக்கும் இரு நிக்கோனியோவின் பங்கும் பெருமளவு இந் நாட்டின் முன்னேற்றத்தில் உள்ளது. இந் நாட்டின் நீண்ட காலமாக ஆளும் முதல்வர் இவர் தான். இவருடைய, மற்றும் மக்கள் செயல் பாட்டுக் கட்சியின் அந்நிய பிரமுகர்களுடைய தீர்க்கதரிசனம் மற்றும் தூர திருஷ்டியினால் இன்று சிங்கப்பூர் உலகிலேயே பிஸியான ஒரு துறைமுகமாக விளங்குகிறது. தொலை தொடர்பு, போக்குவரத்து, இணையம் என்று எல்லா நவீன தொழில்நுட்பத்திலும் முன்னோடியில் இருக்கிறது சிங்கப்பூர். ஒரு சிறிய கிராமம் உலகமே போற்றுமளவிற்கு ஒரு சிறந்த நகரமாக மாறியிருக்கிறது என்றால் எத்தனை பாராட்டிற்குரிய விஷயம்.

சிறிய நாடான சிங்கப்பூர் இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்றால் கோடானுகோடி மக்களின் சக்தியுள்ள இந்தியா ஏன் உலகமே போற்றும் நாடாக வர முடியாது? நம்மால் நிச்சயமாக முடியும். இந்த நூற்றாண்டிற்குள் இந்தியா முதல் சில நாடுகளில் ஒன்றாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்தியப் பெண்கள் இதற்குத் துணை நிற்பார்கள் என்கிற திடமான நம்பிக்கை எனக்கிருக்கிறது."

— நேர்காணல் : ஸ்வாதி

இந்தோனேஷியாவில் தமிழ் பேசினால்...!

புதியதாக இந்த நாட்டிற்கு (இந்தோனேஷியா) வந்த என் தோழி கடையில் ப்ரெட் வாங்கி விட்டு, ஜாம் எனக் கேட்க, கடைக்காரர் அவரது கை வாட்ச்சைப் பார்த்து ஜாம் 5:20 என்று சொல்ல தோழிக்கு ஒரே குழப்பம். பிறகுதான் புரிந்தது. ஜாம் என்றால் இந்த ஊர் மொழியில் மணி + நேரம் எனப் பொருள் என விளங்கியது. அந்த வரிசையில் மேலும் சில மாறுதலான வார்த்தை மாற்றங்கள் :

திடா உஷா என்றால் – வேண்டாம் என பொருள்
தோசை என்றால் – பாவம் என பொருள்
மாவு என்றால் – வேண்டும் என பொருள்
(தோசை மாவு என்றால் மிகவும் கோபமே வந்து விடும்) இவ்வூர் மக்களுக்கு.

தட்டாங் என்றால் – வா எனப் பொருள். இதுபோல் மற்ற நாடுகளில் வசிக்கும் மங்கையர் மலர் வாசகர்கள் மாறுதலான மொழி பற்றிய விளக்கங்களை எழுதினால் படித்து ரசித்து மகிழலாமே?

– ஆர். பாலா இராஜேந்திரன்.



இரு மாதங்களுக்கு முன், பள்ளி மாணவர்கள் சிலர் கதவைத் தட்டி, ஒரு சிறு உபந்நியாசம் செய்து, ஒரு நோட்டீஸ் தந்து, பிளாஸ்டிக் உபயோகிப்பதை குறையுங்கள் என்று கூறிச் சென்றனர். அரசு ஆணை, விளம்பரங்கள், இதுபோன்ற பிரசாரங்கள், இத்தனையும் பொருட்படுத்தாது, சாலையோர குப்பைத் தொட்டிகளுக்கு அருகில் பரவிக் கிடக்கும் பிளாஸ்டிக் பைகள், காற்றை நிரப்பிக் கொண்டு, இறக்கை முளைத்தாற்போல் பறந்து சாலையில் உலாவுவது நிற்கவில்லை.

ஒரு பிரமுகர் இல்ல, மஞ்சள் நீராட்டு விழா. ஏறக்குறைய ஆயிரம் பேருக்குக் குறைவில்லாத கூட்டம். உண வருந்த அமர்ந்த போது, மேஜையின் மீது போடப்பட்டிருந்த பிளாஸ்டிக் இலைகளைக் கண்டு திகைத்தேன். உணவில் மனம் செல்லவில்லை. சிந்தனை பதட்டமாகப் பறந்தது. இத்தனை இலைகளும் உருவாக்கும் அழியாத குப்பை; மண்ணிற்கு ஏற்படக்கூடிய தீமை, சங்கிலித் தொடராக எண்ண அலைகள்.

இந்த ஊடுருவல், கிராமம் வரை பரவி விட்டது இன்னொரு வேதனை. எங்கள் உறவினர், கிராமத்தில் வசிப்பவர், அவர் இல்லத்தில், வாழை இலைச் சருகு இருந்த இடத்தை பிளாஸ்டிக் இலை பிடித்து விட்டது. அதில் சூடான உணவை பரிமாறும் போது, உடல்நலம் பற்றிய சிந்தனை நம்மிடம் உள்ளதா எனத் தோன்றியது.

நகரத்தில் வாழும் சமுதாய மீன்களான பிளாஸ்டிக் பொறுக்குபவர்கள், இவற்றை அகற்றி, காசாக்கி, தம் பிழைப்பை ஓட்டி விடுவர். உண்மையில், அழுக்குக் கோணியைத் தோளில் சுமந்து கொண்டு, பரட்டைத் தலையுடன், அழுக்கு உடையில் பிளாஸ்டிக் பொருட்களை சேகரிக்கும் இவர்கள், பூமிக்குத் தொண்டு செய்பவர்கள்.

ஆனால் கிராமங்களில், அவரவர் வீட்டு குப்பைக் குழியை அடையும் இவை, பின்னர் வயலை அடைந்து, பயிர் விளையும் நிலத்தை அல்லவா பாதிக்கும். நீர் உள்ளது, நிலம் உள்ளது. வீட்டின் பின்புறம் வாழை வளர்த்தால் என்ன?

'உபயோகி, தூர வீசு' என்ற தத்துவம், பூமித் தாயை குமுற வைக்கின்றதே. 'வாயுப் பண்டமா, எனக்கு ஆகாது' என்று ஒதுக்கும் மனிதன், மண்ணால் செரிக்க முடியாததைத் திணிக்க என்ன உரிமை உள்ளது?

பிளாஸ்டிக் பயனாக்கம் பற்றி சாடுவதை விடுத்து, மாற்று வழிகளை தேடுவது தான் சரியான தீர்வு. நம் உடல் நலத்தை எடுத்துக் கொள்வோம். இன்றைய முதன்மையான ஆலோசனை என்ன? மருந்து, மாத்திரை, டானிக் என்று விழுங்குவதை விட, மருந்தாகும் உணவுகளை உண்போம். காய், கனிகள், கீரை வகைகள் என்று பரிந்துரைகளை ஏற்

கின்றோமே! காலம் காலமாக கூறிவந்த வைதானே. இவ்வழியில் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்திற்குச் சிந்திக்க லாமே.

ஆலயங்களில் கருவறை மாசுபடுதல் கூடாதென்பதற்காக 'நெய் தீபம்' ஏற்றும் முறை வந்துள்ளது. மண்ணை காக்க, பிர சாதத்தை, பிளாஸ்டிக் கிண்ணங்களை விடுத்து தொன்னைகளுக்கு மாறலாமே! இன் றும் இவை விற்பனை ஆகின்றன. ஊக்கம் தந்தால், வாழையுடன், தொன்னை தயாரிப் பும் வளரும். திருமண விழாக்களில் பிளாஸ்டிக் இலை உபயோகிப்பதை கண் டித்து ஆணையிடலாம். பஃபே முறைகளில், தட்டுகளில் தாமே பரிமாறிக் கொள்வதும், சிறு விருந்துகளில், காகிதத் தட்டுகளில் 'ஸ்நேக்'ஸைக் கொடுப்பதும் மிகவும் நன்று. ஆப்பக் கடை, இட்லி கடை வைத்துள்ள சாலையோர அம்மாக்கள், தையலிலை பயன்படுத்துகின்றனர்.

ஆவின் பாலின் 'பாட்டில் முறை' மீண் டும் அமல்படுத்தலாம். கவனமாகக் கையா ளும் நிதானம் மக்களிடம் வளரும். வெளி யில் செல்லும் போது, ஒரு துணிப் பையை எடுத்துச் சென்றால், வாழைப்பழம், பூ என்று வாங்கும் போது நுட்பமான அந்த பிளாஸ் டிக் பையை தவிர்க்க முடியும். எல்லாரும் இதைப் பின்பற்றினால், வியாபாரிக்கு வேண் டுதலா என்ன! பிளாஸ்டிக் பை அவருக்குத் தேவையில்லையே.

ஜவுளிக் கடைகளில் வண்ணமயமான பைகள், அதுவும் பிளாஸ்டிக் பொருள் உள்ளீ டாக உள்ளது. அரிசி, நல்ல வேளையாக துணிப்பைகளில் 'பேக்' செய்து விற்கின்றனர். மீண்டும் ஜவுளிக் கடைகளில் துணிப் பைகளையே அறிமுகப்படுத்தலாம். அல்லது, காகிதப் பைகளில் போட்டுத் தரலாம். நமக் குத்தான் ஒரு சின்ன மனமாற்றம் வேண்டும். கடைக்குச் செல்லும் போது பை எடுத்துச் செல்வது; பிளாஸ்டிக் வேண்டாம் என்று மறுப்பது. மருந்து கடைகளில், காகித கவர்கள்தான் மாத்திரைப் போட்டுத் தர உபயோகப்படுகின்றது. மற்ற கடைக்காரர் களும், இந்த முறையைப் பயன்படுத்தலாமே. இதுபோன்ற காகித உறைகள் தயாரிப்ப வர்களுக்கு (கைத்தொழில்) வேலை வாய்ப்பு கூடுமல்லவா!

இன்னும் பலவாறு பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். குடிநீருக்காக பாட்டில்களாக வாங்கி அடுக்காமல், நல்ல நீரை வடிகட்டி, கொதிக்க வைத்து மீண்டும் வடிகட்டி ஆறவைத்து, கேன்களில் நிரப்பி, நெடுந்தூர பயணங்களிலும், பிக்னிக் செல் லும் போதும் பயன்படுத்தலாம்.

தற்காலத்தில், எங்கும், எதிலும் பிளாஸ் டிக் என்ற நிலை மாறுவது நம் கையில்தான் உள்ளது. மறு சுழற்சிக்குப் பயனாகும் பிளாஸ் டிக் என்றாலும் தவிர்ப்பது நலம் தருமே. மீண்டும், மரம், காகிதம், துணி, இரும்பு போன்றவற்றின் பயன்பாடு அதிகமானால் நிலைமை மாறலாம். அதுமட்டுமல்ல, மரம் வளர்த்தல் போன்றவை ஊக்கம் பெறும்; பசுமையான சூழல் வளம் பெறும்.

— ஜெயசரஸ்



சர்க்கரைப் பொங்கல், ரவா கேசரி, காசி அல்வா, அவல் கேசரி, கேரட் அல்வா என்று எந்த ஸ்வீட் செய்வதாக இருந்தாலும், தயாரித்து இறக்குவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன்பு, நான்கு துண்டுகள் பைனாப்பிளை, மிக்ஸியில் ஜூஸ் எடுத்து, சர்க்கரைப் பொங்கல் அல்லது அல்வாவில் விட்டுக் கிளறி, இறக்கவும். அல்வா பைனாப்பிள் வாசனையுடன் சூப்பர் டேஸ்டுடன் இருக்கும்.

- கே. ராஜலக்ஷ்மி





ஆன்மீக நாட்டம் கொண்டவர்கள் இந்தக் கோடை விடுமுறைக்குப் போக ஓர் அருமையான இடத்தைச் சொல்கிறார் ரேவதி பாலு —

எத்தனையோ மகான்களை ஈன்றெடுத்த பெருமை இந்தப் புண்ணிய பாரத பூமிக்கு உண்டு. ஷிர்டி புண்ணிய ஸ்தலத்தில் வாழ்ந்து தன் வாழ்நாள் முழுவதும் பக்தர்கள் துயர் தீர்த்தருளிய ஸ்ரீ சாய்பாபா என்கிற தலைசிறந்த மகானின் 'சமாதி மந்திருக்கு'ச் செல்லும் பாக்கியம் இப் புத்தாயிரமாண்டின் துவக்க நாளான ஜனவரி முதல் தேதி எனக்குக் கிட்டியது.


அஹமத் நகர ஜில்லாவிலுள்ள கோபர்கான் தாலுக்காவில் ஷிர்டி அமைந்துள்ளது. அது ஒரு குக்கிராமம்தான். ஆனால் ஸ்ரீ சாய்பாபாவைப் போன்ற ஒரு மகான் வசித்த காரணத்தால் அது இன்று புனிதப் பயணத்திற்குரிய ஒரு புண்ணியஸ்தலமாக உருவெடுத்துள்ளது. சென்னையிலிருந்து ரயில் மார்க்கமாக புனே சென்று அங்கிருந்து ஐந்து மணி நேர பஸ் பயணத்தில் ஷிர்டியை அடையலாம்.

ஸ்ரீ சாயிபாபாவின் பிறப்பு, பெற்றோர் போன்ற விவரங்கள் இன்று வரை முழுமையாக அறியப்படவில்லை. உத்தேசமாக 1838ஆம் ஆண்டு அவர் பிறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

முதன் முதலில் பதினாறு வயது இளைஞனாக ஒரு வேப்பமரத்தடியில் தியானத்தில் அமர்ந்திருந்த ஒரு இளம்



என் எலும்புகளும் உங்கள் குறை தீர்க்கும்



பக்கிரியை ஷிர்டி மக்கள் கண்டனர். ஒரு சாதாரண பார்வையிலேயே அவன் மீது எல்லோரும் அன்பு கொள்ளும் அளவிற்கு அவனுடைய உருவாம்சங்களெல்லாம் அத்தகைய சுந்தரம் பொருந்தியதாக இருந்தது.

'இந்த இளைஞன் யார்?' என்ற வினாவிற்கு விடை காண ஷிர்டி மக்கள் 'தாங்கள் வழிபடும் 'காண்டோபா' என்ற கடவுளிடம் வேண்டினர்.

காண்டோபா தெய்வம் அவர்களை ஒரு மண் வெட்டி கொணரச் செய்து ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தோண்டச் சொல்லியது. அவ்வாறு செய்தபோது அங்கே ஒரு நிலவறை இருப்பதையும் அதனுள் நான்கு விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதையும் மக்கள் கண்டனர். அவ்விளைஞன் பன்னிரெண்டு ஆண்டுகளாக அங்கே தவம் செய்து கொண்டிருந்தான் என்று காண்டோபா கடவுள் கூறியது.

இவர்கள் இவ்வாறு ஆராய்ச்சி செய்வதை கவனித்த அவ்விளைஞன், அது தன்னுடைய குருவினுடைய இடம் என்றும் அதை பழையபடியே மூடி விடுமாறும் கேட்டுக் கொண்டான். பிறகு ஒருநாள் திடீரென்று ஷிர்டியிலிருந்து அந்த இளைஞன் மறைந்து விட்டான்.

சில வருடங்கள் கழித்து, 'டுப்' என்கிற கிராமத்தில் மறுபடி தோன்றிய அவ்விளம் பக்கிரி அங்கிருந்து கிளம்பிய ஒரு கல்யாண கோஷ்டியுடன் மறுபடி ஷிர்டிக்கு வந்தார்.

காண்டோபா கோயிலின் பரந்த வெளியில் வண்டியில் வந்திறங்கிய இளம் பக்கிரியைக் கண்ணுற்றதும் ஷிர்டியைச் சேர்ந்த பகத் மஹல் சாபதி என்பவர் "யா சாயி!" (சாயி வர வேண்டும்!) என்று கூவியழைத்தார். அன்றிலிருந்து அனைவரும் பக்கிரியை சாயி, சாயிபாபா என்றழைக்கலாயினர்.

முதன் முதலில் ஷிர்டியில் பாபா தவம் புரிந்த வேப்பமரம் இருக்கும் இடத்தைச் சுற்றி மேடை கட்டப்பட்டு அங்கு பாபாவின் பாதங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு, தற்போது அந்த இடம் 'குருஸ்தான்' என்று வணங்கப் பெறுகிறது. அதே போல் காண்டோபா கோவில் அருகே பாபா முதலில் கால் பதித்த இடத்தையும் பாதுகாத்து அங்கேயும் பாதம் பிரதிஷ்டை

தவறிலிருந்து காப்பாற்றிய சாயி!



நான் முதல் முறை ஷீர்டி போன போது ஒரு புதிய இடம் பார்க்கத்தான் சென்றேன். பாபாவை அதே நோக்கில்தான் தரிசித்தேன்.

ஆனால் ஒரு மகிழ்ச்சி (அமைதி) என் மனத்தில் தோன்றியது உண்மை. மனம் லேசாக இருந்தது. சந்தோஷமாக இருந்தது. இதுவே முதல் அனுபவம். இதன் பிறகு மூன்று முறை சென்றேன். எந்தக் குறையையும் இறக்கப் போகவில்லை. நாஸிக் போக வேண்டி வந்தபோதெல்லாம் செல்வது என்றாகி விட்டது.

இந்தத் தடவை பாபாவை பார்க்கச் சென்ற போது மதியம் ஒரு மணி. ஆரத்தியாகி கூட்டம் குறைவு. பகவானை தரிசிக்க நேரமாகாது என்று நினைத்துக் கொண்டு சிறிய கியூவில் நின்று க்ளோஸ் சர்கியூட் டீ.வி.யில் வரும் பூஜையை ரசித்துக் கொண்டிருந்தேன்.

முதல் முறை சென்ற போது கரடுமுரடான பாதை. இப்பொழுது ஒரு வருடத்திற்குள் என்ன மாற்றங்கள். பக்தர்கள் கியூவில் செல்ல அழகாக கட்டி டீ.வி.யில் பூசையை ரசித்தபடி நேரம் போவது தெரியாமல் இருக்க இப்படி பலப்பல சௌகரியங்கள்.

ஏதோ ஒரு கூட்டம் ஸ்வாமி சரணம் விளித்தபடி படபடவென்று வந்தனர். வந்தவர்கள் யாவரும் ஐயப்பப் பக்தர்கள். தலையில் இருமுடி தூக்கிக் கொண்டு ஓம் சாய் ஸ்ரீ சாய் ஜெய் ஜெய் சாய் என்று சொல்லியபடி நுழைந்தனர். அவர்கள் வந்த பிறகு அந்தச் சூழ்நிலையில் ஒரு மாற்றம். அவர்கள் நாமம் விளிப்பது நம்மைப் பரவசமாக்குகிறது.

நம் அதிர்ஷ்டம் பாபாவை நன்கு தரிசனம் செய்கிறோம். அதே சாந்த ஸ்வரூபியான கண்கள். ஒரு மகிழ்ச்சி, ஒரு நிம்மதி. இது நாம் பணத்தால் பெற முடியாத


செய்யப்பட்டு வழிபடும் இடமாக உள்ளது.

ஸ்ரீசாய்பாபாவின் வாழ்க்கை முறை மிக எளிமையானதாக இருந்தது. முதன் முதலில் ஷிர்டியில் அவர் வீட்டுக்கு வீடு சென்று உணவை யாசிப்பதே வழக்கமாக இருந்தது. அவர் அணியும் நீண்ட கஃப்னி என்கிற உடை, கையில் வைத்திருந்த 'சட்கா' என்ற தடி, அமர்ந்து கொள்ள ஒரு சாக்குத் துண்டு இவைகளே அவர் உடைமைகளாகும்.

முதலில் ஷிர்டியில் அலைந்து திரிந்து கொண்டிருந்த பாபா, அங்கேயுள்ள ஒரு பழைய மசூதியில் அமர்ந்து மக்களுக்கு தரிசனம் கொடுக்க ஆரம்பித்து, பிறகு அந்த மசூதியையே தன்னுடைய இருப்பிடமாக்கிக் கொண்டார். எல்லா தரப்பு மக்களும் ஷிர்டிக்கு அவர் தரிசனத்திற்காக வந்தனர்.

'துவாரதாமாயி' என்றழைக்கப்படும் அந்த மசூதியில் ஒருமுறை அமர்ந்தவர்களின் துன்பங்கள் அந்த நொடியிலேயே முடிவுக்கு வந்து விடுகின்றன என்பது ஸ்ரீ சாய்பாபாவின் அருளாசியாகும்.

பாபா ஷிர்டிக்கு வந்த பிறகு கொண்டாட்டங்களும் குதூகலங்களும் அங்கே அதிகரித்தன. ஸ்ரீராமநவமி தினத்தன்று ராமநவமி விழாவும், முகம்மதியர்களின் 'உருஸ்' என்கிற சந்தனத் திருவிழாவும் நடைபெற்றன. ஒரே நாளில் இந்துக்கள், முகம்மதியர்கள் இருதரப்பினரின் ஊர்வலங்களும் அருகருகே சென்றன. இன்றும் 'சமாதி மந்திருக்கு' அருகேயுள்ள இடத்தில் முகம்மதியர்கள் தங்கள் வழி



நிம்மதி. திரும்புகிறேன், ஐயப்பன் கூட்டத்தில் இருவர் சரியாக நடக்க முடியாதவர்கள் ஒருவர் தவழ்ந்து வருகிறார். அவரிடம் சென்று, "உங்களை ஒரு ஃபோட்டோ எடுக்கிறேன்" என்றேன். அவர் என்னைப் பார்த்து, சிநேக பாவமாக புன்னகை செய்வதின் அர்த்தம் 'உங்களுக்கு உதவு மானால் எடுக்கலாம்' என்ற 'பா'வம்.

சட்டென்று ஒரு பொறி தட்டுகிறது. நான் அவரிடம் மன்னிப்புக் கேட்கிறேன். "இல்லை சார், நான் கூட்டத்தை ஃபோட்டோ எடுத்து விட்டேன்" என்று. நானும் ஒரு சகோதரியாக சிரிக்கிறேன்.

ஒரு நிமிடம் அல்ல 'ஃப்ரேக்ஷன் ஆஃப் செகண்ட்' என்று கூறலாம். தவறு செய்ய இருந்த நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு விட்டேன். இல்லை, ஒரு சக்தி எனக்கு என்னுள் எடுத்துரைத்தது.

நான் ஒரு இரண்டு கை இரண்டு கால் உடைய சராசரி பெண்மணி. ஒருதரமாவது கல்லிலும் முள்ளிலும் நடந்து காடு மேடு ஏறும் தைரியம் என்னிடம் இருக்கிறதா நிச்சயமாக இல்லை. இவர் தவழ்ந்து கொண்டே ஆந்திரப் பிரதேசத்திலிருந்து இருமுடியுடன் சாயி பகவானை தரிசித்து அங்கிருந்து ஐயப்பனை தரிசித்து சபரி செல்லப் போகிறார். அவரிடம் உங்களை ஃபோட்டோ எடுக்கட்டுமா என்று கூறி அவரது உடல் குறையை ஒரு ஃபோட்டோவில் பிடிக்கப் பார்த்த என் அறியாமை... சாயிபகவான் என்னைத் தவறு செய்வதிலிருந்து காப்பாற்றினார். தவறை உணர வைத்தார். 'கடவுளே, எவ்வளவு பெரிய தவறு செய்ய இருந்தேன்' என்று கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

இதை எழுதும் போது கூட என் கண்கள் பனிக்கின்றன. என் சகோதரன் போன்ற ஐயப்ப பக்தனை நினைத்து மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

— இந்திரா கணபதி

பாட்டை செவ்வனே நடத்திக் கொண்டிருப்பதையும், மத வேறுபாடின்றி மக்கள் அங்கே சென்று வழிபாட்டில் கலந்து கொள்வதையும் காண முடிகிறது.

அவர் எப்போதும் 'கடவுள் ஒருவரே!' (ஸப்கா மாலிக் ஏக்) என்று உபதேசித்தார். வாழ்க்கைக்குத் தேவையான இரண்டு லட்சியங்களாக அவர் அருளியவை ஸ்ரத்தா (உறுதியான நம்பிக்கை) ஸபூரி (பொறுமை அல்லது விடா முயற்சி).

ஷிர்டியில் பாபா சுற்றித் திரிந்த காலத்தில் வெட்ட வெளியில் ஒரு கல்லில் அமர்ந்து பக்தர்களின் குறைகளைக் கேட்பது வழக்கம். அந்தக் கல்லையும் துவாரகாமாயி எனப்படும் மசூதியில் வழிபாட்டிற்காக வைத்திருக்கின்றனர். மக்கள் தங்கள் சிரத்தை அந்தக் கல்லில் வைத்து பிரார்த்தனை செய்கிறார்கள்.

அந்தி காலத்தில் ஷிர்டிக்கு தரிசனத்திற்கு வந்த மக்களுக்கு பாபா தன் கையாலேயே சமைத்துப் போட்ட 'ஹண்டி' என்ற பாத்திரம், அவர் உபயோகப்படுத்திய அடுப்பு முதலியவையும் பக்தர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

'தூனி' எனப்படும் அணையா நெருப்பை பாபா தன் வாழ்நாள் முழுவதும் எரித்து வந்தார். அவர் திருக்கரங்களால் ஏற்றப்பட்ட 'தூனி' இன்றும் ஷிர்டியில் எரிந்து கொண்டிருக்கிறது. 'உதி' என்ற அதன் சாம்பலை தன்னை அண்டி வந்த பக்தர்களுக்குப் பிரசாதமாக அளித்தார்.

பாபாவால் 'ஹேமத்பந்த்' என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு 'கோவிந்த ராவ் ரகுநாத் தபோல்கர்' என்ற மராட்டியர், பாபா வாழ்ந்த காலத்தில் அவர் கூடவேயிருந்து அவர் தம் லீலைகளைக் கண்ணுற்று 'சத் சரித்திரம்' என்ற நூலை பாபாவின் ஆசியோடு எழுதினார். அது திரு சொக்கலிங்கம் சுப்ரமண்யன் என்ற சாயி பக்தரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு 'ஸ்ரீ சாயி சத் சரித்திரம்' என்ற பெயரில் புத்தகமாகக் கிடைக்கிறது.

பாபா பக்தர்களுக்கு 'ஸ்ரீ சாயி சத் சரித்திரம்' பாகவதம், பைபிள், குரான் போன்ற புனித நூல்களையொத்தது. அகன்று ஆழ்ந்த எல்லையற்ற ஒரு பெருங்கடல் போன்ற சாயி பாபாவின் வரலாற்றில் ஆழ்ந்து மூழ்கி விலை மதிப்பற்ற அவரின் கதைகள், அறிவுரைகள் போன்றவற்றை முத்துக்களாக எடுத்துக் கொடுத்திருக்கிறார் 'ஹேமத்பந்த்'.

தாயுமானவர் தானே நேரில் சென்று பிரசவம் பார்த்ததாக வரலாறு. ஸ்ரீ சாயிபாபா, பிரசவ அவஸ்தையில் இருந்த பெண்களுக்கு (மருத்துவ வசதி இல்லாத அந்தக் காலத்தில்) 'உதி'ப் பிரசாதத்தைத் தகுந்த நபர் மூலம் தக்க நேரத்தில் அனுப்பி வைத்து, சுகப்பிரசவங்கள் நடந்த கதைகளை 'சத் சரித்திரத்தில்' காண முடிகிறது. 'உதி'யின் மூலம் தீராத வியாதிகளும் தீர்ந்திருக்கின்றன.

அகங்காரத்தைக் களைய வேண்டியதின் அவசியத்தை பாபா பலவிதமாக அறிவுறுத்தியுள்ளார். விவாதங்கள் அகங்காரத்தின் விளைவே என்று சுட்டிக்காட்டினார். அகங்காரம் பூரணமாக ஒழிக்கப்பட்டு விட்டால் 'தேலி' எனப்படும் வேற்றுமை சுவர் தகர்க்கப்பட்டு மனிதனும் இறைவனும் ஒன்றே என்பது அறியப்படும் என்பது பாபாவின் அருளுரை.

ஸ்ரீ சாய்பாபா தன் திருக்கரங்களால் தண்ணீர் இறைத்த கிணறும், நீர் பாய்ச்சி அவர் வளர்த்த 'லெண்டி' என்கிற தோட்டமும் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்கே ஏற்றியுள்ள 'நந்தா விளக்கு' என்ற தீப மேடையைச் சுற்றி வந்து செய்யும் பிரார்த்தனைகள் நிச்சயம் பலிக்கின்றன என்பது ஷிர்டிக்கு வருபவர்களின் அனுபவம்.

சாந்தத்தையும் எல்லையற்ற கருணையையும் முகத்தில் தேக்கி சிலா ரூபத்தில் சமாதி மேடைக்கருகிலேயே பக்தகோடிகளுக்கு பாபா தரிசனம் தருகிறார். சமாதியில் பக்தர்கள் தங்கள் சிரசை வைத்துப் பிரார்த்தனை செய்கிறார்கள்.

"நான் இறந்தாலும் எனது சமாதியிலுள்ள எலும்புகள் உங்களுடன் பேசும். உங்கள் நலனை விசாரித்துக் குறைகளைக் களையும்" என்று அருளுரைத்த மகானின் சமாதியல்லவா இது!

— ரேவதி பாலு


BOONS
KESHPRIYA
Cares Your Hair
Win GOLD
For details see coupon inside the Pack
அழகிய கூந்தல் வளர உதவும்
முடி உதிர்தலை தடுக்கும்
பொடுகு மற்றும் அரிப்பை நீக்கும்
இளநரையை தடுக்கும்
கூந்தலுக்கு பளபளப்பைச் சேர்க்கும்
BOONS
KESHPRIYA
Ayurvedic HAIR VITALISER
BOONS
கேஷ்ப்ரியா
ஆரோக்கியமான கூந்தலுக்கு
இப்போது தமிழ்நாட்டிலும் கிடைக்கிறது
Marketed by:
BOONS HERBAL REMEDIES (INDIA) LTD.
9, 'G' Block, 10th Street, Anna Nagar East, Chennai - 600 102


அங்கேதான் இருக்கும்



வர்ஷா

"அங்கேதான் இருக்கும் பாரு...": சொன்னவர், என்னவர்!

முப்பத்தியிரண்டு பற்களையும் நறநறக்க முடியாமல் (அதென்னவோ எனக்கு முப்பத்தியோரு பல்தான். - அறிவுள்ளவர்களுக்குத்தான் முளைக்கும் ஞானப்பல். அது உனக்கு மிஸ்ஸிங்' - என் முப்பதியிரண்டு மைனஸ் ஒன்று பற்களுக்கான என் கணவரின் கமெண்ட்) இருந்த பற்களை மட்டும் நறநறத்தேன்.

நறநறக்காமல் என்ன செய்வதாம்?

எதைக் கேளுங்கள்... "அங்கேதான் இருக்கும் பாரு"

எப்போது கேளுங்கள்... "அங்கேதான் இருக்கும் பாரு"

"ரிமோட் எங்கே? கண்ட இடத்தில் போட்டுட்டு தேடுறீங்கன்னுதானே, கண்ணுல படற மாதிரி டீ.வி. மேலேயே வச்சிருந்தேன். எங்கே காணோம்?" நான் கேட்பேன்.

மொகஞ்சதாரோ, ஹரப்பா மாதிரி அவரின் முகம் முழுக்க செய்தித்தாளுக்குள் புதைந்து போயிருக்கும். என் கேள்விக்குப் பதிலாக, "அங்கேதான் இருக்கும் பாரு" மூன்று வார்த்தைகள் மட்டும் கிணற்றுக்குள்ளிருந்து ஒலிப்பது போல் ஒலிக்கும்.

அந்த 'அங்கேதான்' என்பது 'எங்கேதான்' என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

வெள்ளிக்கிழமை மாலை அவர் உற்சாகமாயிருந்தாலே ஆபத்துதான். உற்சாகம் எப்படி ஆபத்தாகும்? சொல்கிறேன். உற்சாகமாயிருந்தால் ம்யூஸிக் சிஸ்டம் அவரிடம் பாடாய்ப் படும். இவையெல்லாம் அவரது உற்சாகத்தின் பக்கவிளைவுகள்தான். முக்கிய விளைவு, அடுத்த நாள் சனிக்கிழமை காலையில்தான் நடக்கும்.

எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களை நான் தேடோ தேடென்று தேடுவேன். அவரோ கிடைக்கவே மாட்டார்.

"சுப்ரபாதம் கேசட் எங்கே?" அவரைக் கேட்பேன். என்ன சொல்வார் தெரியுமா? அதேதான், "அங்கேதான் இருக்கும் பாரு."

காலங்காலையில் கடுப்பாக வரும். கட்டுப்படுத்திக் கொண்டு தேடினால் புத்தக அலமாரியில், பாரதியார் கவிதைகளுக்குப் பக்கத்தில் சாதுவாக இருக்கும் நான் விழுந்து விழுந்து தேடிய, "கௌசல்யா சுப்ரஜா..."

அவர் உற்சாகமாயிருந்தால் மட்டுமல்ல, உடம்புக்கு முடியாமல் இருந்தாலும் ஆபத்துதான். அவருக்குத்தான்



உடம்பு முடியவில்லையே, அசைய மாட்டாரே, அதனால் எந்தப் பொருளையும் கண்ட இடத்தில் தூக்கிப் போட முடியாதே. எனவே நானும், "எங்கே....?" (சமயத்திற்கு தகுந்தாற்போல் மூக்குக் கண்ணாடி, கைக் கடிகாரம், பீரோ சாவி, பைக் சாவி, பாஸ்புக் இவைகளில் ஏதாவது ஒன்றை நான் அந்தக் கோடிட்ட இடத்தில் நிரப்பிக் கொள்ள வேண்டி வரும்) கேள்வியைக் கேட்க வேண்டியிருக்காதே. பதிலாக, "அங்கேதான் இருக்கும் பாரு" என்கிற அவரின் முத்தான மூன்று வார்த்தைகள் என்னை வெறுப்பேற்றாதே என்றெல்லாம் நான் நினைத்து சந்தோஷப்பட்டுக் கொண்டு விட முடியாது.

அவர் அசையாமல் இருந்தாலும், அ.இ.பாவைச் சொல்லி என்னைப் படுத்தாமல் விடவே மாட்டார்.

நெற்றி நிறைய அமிர்தாஞ்சன். ஸ்ட்ராங் கைத் தடவிக் கொண்டு, ஆஸ்ப்ரினை அள்ளி விழுங்கி விட்டு, கம்பளியால் முழுக்கப் போர்த்திக் கொண்டு முகத்தை மட்டும் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பவருக்கு என்ன வேண்டிக் கிடக்கு 'ஆஃபீஸ் ஃபைல்?'

"அந்த ஷெல்ஃபில் ப்ளூ கலர் ஃபைல் ஒண்ணு இருக்கும். கொஞ்சம் எடுத்துத் தாயேன் ஷைலூ..."

"உடம்பை பாருங்கள் ஃபைலெல்லாம் உடம்பு சரியானதும் பார்த்துக்கலாம்" சொன்னால் கேட்க மாட்டார். அவர் கெஞ்சுகிற கெஞ்சலில், தொலைகிறது என்று ஃபைலை எடுப்பதற்காக ஷெல்ஃப் பக்கம் போய்விட்டால் போதும். நான் தொலைந்தேன்.

"ப்ளூ கலர் ஃபைலா?" நான் கேட்பேன்.

"ஆமாம்" என்பார்.

"இங்கே ஷெல்ஃபில் இல்லையே."

"அங்கேதான் இருக்கும் பாரு..."

எரிச்சல்படவே மாட்டேன். இந்த அ.இ.பாவுக்கு எரிச்சல்பட வேண்டுமென்றால் நான் ஆயுசு பூராவும் பட்டுக் கொண்டிருக்க வேண்டுமே? அதனால் அமைதியாகவே கேட்பேன்.

"அங்கேதான்னா எங்கேன்னா?"

"பச்சைக் கலர் ஃபைல் பக்கத்தில் இருக்கும் பார்."

பச்சைக் கலர் ஃபைலா? ஷெல்ஃப் முழுக்கத் துழாவித் துருவித் தேடி முடித்துவிட்டு,

"பச்சைக் கலர் ஃபைலும் இங்கே இல்லையே."

"அங்கேதான் இருக்கும் பாரு" பதில் வரும்.

வராத எரிச்சலும் எனக்கும் வந்து சேரும்.

வேர்க்க விறுவிறுக்க, எரிச்சலோடு வீடு முழுக்க அலசி ஆராய்ந்தால் ப்ளூவும், பச்சையும் ஏர்கூலர் மேல் தேமே என்று உட்கார்ந்து கொண்டிருக்கும். கட்டிலில் வாகாகப் படுத்துக் கொண்டே ஃபைல்களைப் பார்த்துவிட்டு, எழுந்திருக்க அலுத்துக் கொண்டு, அருகேயிருந்த ஏர்கூலர் தலையில் அந்தப் ஃபைல்களைக் கட்டிவிட்டு இந்த மனுஷர்... என்னிடம் ஒரே அ.இ.பா!

'இனி எந்தப் பொருளையாவது காணோம் என்றால், அவரைக் கேட்கவே கூடாது' என்று தீர்மானமெல்லாம் போடுவேன். ஆனால் மூன்றடுக்கு ஹாட்பேக் கேரியரில் ஒரு அடுக்கு மிஸ்ஸிங் என்றால் எப்படிக் கேட்காமல் இருக்க முடியும்? கேட்பேன். இவர் சொல்கிற அ.இ.பா பதிலைக் கேட்டு முட்டிக் கொள்வேன்.

கல்யாணம் ஆனதிலிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன், இவருடைய அ.இ.பாவை!

"எங்கே வச்சீங்கன்னு தெளிவா சொல்லாம, இதென்ன எதைக் கேட்டாலும் 'அங்கேதான் இருக்கும் பாரு'ன்னு எப்பவும் அதையே சொல்லிக்கிட்டு,...." எத்தனையோ தடவைகள் என்னவரிடம் நான் கடிந்து கொண்டாயிற்று. அப்போதைக்கு 'ம்' கொட்டிவிட்டு அடுத்தநாளே ஆபீஸிலிருந்து போன் செய்வார்.



காலையில் இரண்டாவது முறையாக குடிக்கும் காப்பிக்குப் பதிலாக ஒரு தம்ளர் கடைந்த மோரில் சிறிதளவு பெருங்காயத் தூள், சிறிது வறுத்த அரைத்த வெந்தயப் பொடி, சிறிது உப்பு போட்டுக் குடித்தால் வெயில், பிரஷர், சர்க்கரை வியாதி அனைத்திற்கும் மிகவும் நல்லது.

— திருமதி வாசுதேவன்.




டெடி உடன் ஒப்பிட்டால், வேறு எந்த டயாபரும் இப்படித்தான் தோன்றும்.
அறிமுகம் இந்தியாவின் டயாபர்களில் திரவத்தன்மையை அதிகமாய் உள் உறிஞ்சும் டயாபர் - டெடி
டெடி டயாபர் உள் உறிஞ்சுவதில் மிக அருமையானது. இது எல்லா திரவத் தன்மைகளையும் உள்உறிஞ்சி ஜெல் போன்ற பசைப் பொருளாக மாற்றிடும் ஒப்பற்ற பொருளால் ஆனது.
எனவே, இந்த சிறப்பு வாய்ந்த டயாபரை உங்கள் குழந்தை அணியும்போது உலர்வான தோற்றம் மட்டும் அல்லாது இதமான, உலர்வான உணர்வையும் உங்கள் குழந்தைக்கு அளிக்கிறது.
உங்கள் குழந்தைக்கு பரிசு வழங்குங்கள்.
இன்றே டெடிக்கு மாறிடுங்கள்.
Teddy



ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®
இனிப்பு புடவைகள், இனிப்பு வேஷ்டிகள்
பரிசளிக்க புதுமையானவை!
சீர்வரிசைக்கு சிறப்பானவை!
இரசிக்கலாம்! ருசிக்கலாம்!
ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®
5, டாக்டர் சிங்காரவேலு வீதி, பாண்டி பஜார், சென்னை-17. போன்: 4343605
4, காந்தி நகர் முதல் மெயின் ரோடு, அடையார், சென்னை-20. போன்: 4413805

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள் அவர்களின்
அருளாணைப்படி எழுதப்பெற்று அவர்களின் அருளாதரவில் வெளிவரும்
தேவார, திருவாசக, திருவிசைப்பா, திருப்பல்லாண்டுத் தலங்களுக்குரிய
தல விளக்க வழிகாட்டி நூல் !

திருமுறைத்தலங்கள்



ஆசிரியர் : "செஞ்சொல்மணி" புலவர்

பு.மா. ஜயசெந்தில்நாதன், எம். ஏ.

ஆஸ்தானத் தமிழ்ப் புலவர், ஸ்ரீ மடம், காஞ்சிபுரம்.

★ டெம்மி அளவில் 944 பக்கங்கள் கொண்ட இந்நூலானது உயர்தர மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டு, சர்வதேச தரம் வாய்ந்த கட்டமைப்பில் தயாரிக்கப்பட்டுள்ளது ★ தலங்களை இணைக்கும் சாலை களைப் பற்றிய வரை படங்களுடன் (MAP) கூடியது.

விலை ரூ. 375.00

ஜகத்குருவின் ஸ்ரீ முகம்
இந்நூலின் திலகம் எனத் திகழ்கிறது.

திருத்தப்பட்ட இப்புதிய (2001 ஆம் ஆண்டு) பதிப்பில் 275 தேவாரத் திருமுறைத் தலங்களுடன் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டுத்தலங்களும் சேர்க்கப் பட்டுள்ளன, வழுவூர் வீரட்டத் தல விளக்கமும் பிற குறிப்புகளும் கூடுதலாக இடம் பெற்றுள்ளன. எனவே திருமுறைத் தலங்கள் அனைத்திற்கும் சிறந்த முழுமையான தல விளக்க வழிகாட்டியாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் கையில் இருந்தால் போதும், திருத்தலங்கள் தோறும் யாத்திரை செய்து புண்ணியப் பயன் பெறலாம்.

தொண்டை மண்டல ஆதீனத்தின் ஆசியுரை இந்நூலின் சிறப்பினை மேலும் விளக்குகிறது. அதில் ஒரு பகுதி : இந்நூலின் ஆசிரியர், திருமுறைப் பாடல் பெற்ற தலங்கட்கு நேரில் சென்று புகைப்படம் எடுத்து- அங்கு நடைபெற்ற அற்புதச் செயல்கள் -வழங்கும் செவிவழிச் செய்திகள்- பேருந்து வழிகள்- அஞ்சல் முகவரி - திருக்கோயில்களைப் பராமரிக்கும் ஆதீனங்களின் பெயர்கள் -கல்வெட்டுச் செய்திகள்- தலபுராணப் பாடல்கள்- தனிப் பாடல்கள்- தலங்களுக்கு இன்றுள்ள பெயர்கள் ஆகியவற்றோடு, கோயில்கள் தோறும் கோபுரவாயில் விநாயகரிலிருந்து சண்டேசுரர் வரை சிவாலய வழி பாட்டு முறைப்படி நெறிப்படுத்தி விளக்கியிருப்பது, நேரில் சென்று வழிபடுவோர்க்கு உண்டாகும் உள்ளக் கிளர்ச்சியை, இதனைப் படிக்கும்போதே இந்நூல் உருவாக்குகிறது.

இந்நூலினைத் **தபாலில் பெற,** கடிதம் எழுதுக. நூலினை V.P.P. மூலம் உடனே அனுப்புகிறோம். நூலின் விலை ரூ. 375 + தபால் மற்றும் கட்டுச்செலவு ரூ.25 சேர்த்து ரூ.400 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூலினைப் பெற்றுக் கொள்ளலாம். **நேரில் பெற** விரும்புவோர்ரூ.375 செலுத்தி நூலினை உடனே பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 9.30 முதல் இரவு 7.30 வரை. (உணவு இடைவேளையின்றி). ஞாயிறு விடுமுறை.

வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர். ஆர். காம்ப்ளெக்ஸ், 141, வடக்கு உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை - 17 (பனகல்பார்க் அருகில்) ✆ : 8257995

கோவையில் : விஜயா பதிப்பகத்திலும் (✆ : 394614);
சேலத்தில் : அஜந்தா (✆ : 417755) / சந்திரா (✆ : 265635) புத்தகக்கடைகளிலும்
ரூ.375 செலுத்தி நூலினை உடனே பெற்றுக்கொள்ளலாம்

"டேபிள் மேல், டெலிபோன் டைரக்டரிக்குள் முக்கியமான லெட்டர்ஸ் வச்சிருக்கேன். அவன்கிட்டே கொடுத்தனுப்பிச்சுடு."

பரவாயில்லையே! வழக்கம் போல், 'அங்கேதான் இருக்கும் பாரு' என்று குழப்பமாக சொல்லாமல், மிகத் தெளிவாக டேபிள் மேல், டெலிபோன் டைரக்டரிக்குள் என்று சொல்கிறாரே... சந்தோஷமானேன். நிமிஷங்கூட நிலைக்கவில்லை என் சந்தோஷம்.

டேபிளிருந்தது. ஆனால் அதன் மேல் டெலிபோன் டைரக்டரியைதான் காணவில்லை. வீடு முழுக்கப் புரட்டிப் போட்டு தேடு தேடு என்று தேடினேன். டைரக்டரி கண்ணில் பட்ட பாடில்லை.

"எங்கே வச்சிருக்கீங்க டெலிபோன் டைரக்டரியை?" அவரைக் கேட்க போன் செய்யலாமா என்று நினைத்தேன்.

கேட்டால் மட்டும் என்னத்தை சொல்லி விடப் போகிறார். அதே அ.இ.பா.வைதான் சொல்வார். அதைக் கேட்பதற்காக வேலை மெனக்கெட்டு போன் செய்வதைக் காட்டிலும், பேசாமல் டெலிபோன் டைரக்டரியைத் தேடலாம்.

அப்படி, இப்படி, அங்கே, இங்கே என்று சல்லடை, முறம் எல்லாம் போட்டு தேடியதில், சோபாவுக்குக் கீழே படுத்துக் கொண்டிருந்தது டெலிபோன் டைரக்டரி.

நேற்று என்னவர்தான், சோபாவில் சாய்ந்து கொண்டே, டீ.வி.யைப் பார்த்துக் கொண்டே, "நம்ப எக்ஸ்சேஞ்ச் நம்பரென்ன? இன்டர்நெட் பத்தி விசாரிக்கணும்..." புலம்பியபடி டைரக்டரியைக்குடைந்து கொண்டிருந்தார்.

டெலிபோன் டைரக்டரியைக் கண்டு பிடித்ததும், கிருஷ்ணரைக் கண்ட ராதையைப் போல சந்தோஷித்த நான், உடனேயே சீதையைக் காணாத ராமரைப் போலப் பதறினேன். காரணம், டைரக்டரிக்குள் லெட்டர்ஸ் எதுவுமே, ஏன் ஒரு துண்டுப் பேப்பர் கூட இல்லை.

இல்லாத லெட்டர்ஸை வாங்கிக் கொண்டு போக, ஆபீஸ் ப்யூன் வேறு வந்து விட்டான். பேசாமல் ப்யூனை அனுப்பி, அடுத்த வீட்டு டெலிபோன் டைரக்டரியை வாங்கி வரச் சொல்லி அதற்குள் தேடலாமா என்று தோன்றியது, ஏகக் கடுப்பிலிருந்த எனக்கு.

"கொஞ்சம் இருப்பா, எடுத்துத் தரேன்" ப்யூனை நிறுத்தி விட்டு தேடலையுங்கூட நிறுத்தி விட்டு யோசித்தேன்.

எங்கே வைத்திருப்பார் மனிதர்? டெலிபோன் டைரக்டரியை சோபாவுக்கு அடியில் தள்ளியவர், டைரக்டரிக்குப் பதில் எதற்குள் கடிதங்களைத் திணித்திருப்பார்? சிந்தனையை ஃப்ளாஷ்பேக்குக்கு அனுப்பினேன்.

"எக்ஸ்சேஞ்ச் நம்பர் எங்கே?"

தேடிக் கொண்டிருந்த என் கணவர், தொடர்ந்து ஏதோ புலம்பிக் கொண்டிருந்தாரே...

"பிலெடெல்பியா என்சைக்ளோபீடியா ஃபோபியாலஜி... என்ன இழவு வார்த்தைடா இது, என்ன அர்த்தமோ?"

'பளிச்' என மூளைக்குள் பல்ப் எரிய ஓடிப் போய் டிக்ஷனரியை எடுத்துப் பார்த்தேன். கடிதங்கள் பத்திரமாக சமர்த்தாக இருந்தன.

டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் நம்பரையும், அந்த வாயில் நுழையாத நைல் நதி நீள வார்த்தையின் அர்த்தத்தையும் சேர்ந்து தேடிக் கொண்டிருந்தவர், டைரக்டரிக்குப் பதிலாக டிக்ஷனரிக்குள் வைத்துத் தொலைத்திருக்கிறார் அந்த அதிமுக்கியமான லெட்டர்ஸை.

தக்காளிச் சாதம் கிளறும் போது, ப. மிளகாய், தக்காளி, வெங்காயத்தை அரைத்து விட்டுச் செய்தால் படு டேஸ்டாக இருப்பதோடு, காய்கறிகள் வீணாவதைத் தடுக்கலாம். நெய் அல்லது டால்டாவில் முந்திரியை வறுத்துப் போட்டு விட்டால் தக்காளி சாதம் 'பிரியாணி' போல் வாசனையாக இருக்கும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பிச் சாப்பிடுவார்கள்.

- விசாலாட்சி



"லெட்டர்ஸ் கிடைக்கலைன்னு சாராண்ட சொல்லிக்கறேம்மா..." பரபரத்த ப்யூனிடம் கிடைத்த கடிதங்களைக் கொடுத் தனுப்பினேன்.

கடிதத் தேடலில் களேபரமாகியிருந்த வீட்டை ஒழுங்குபடுத்துகையில் ஆத்திரமாக வந்தது. இன்று இவர் வீட்டுக்கு வந்தவுடன் இரண்டில் ஒன்று கேட்டு விடுவது என்று முடிவெடுத்தேன்.

அன்று பெரிய ரகளையாகி இருக்கும். அதிலிருந்து அவரைக் காப்பாற்றினர், வீட்டுக்கு வந்து சேர்ந்த அவருடைய அண்ணனும், அண்ணனுடைய அஞ்சு வயசு மகன் ப்ரதீப்பும்.

"நாலு நாள் டிபார்ட்மெண்ட் ட்ரெயினிங். ப்ரதீப்பும் சித்தப்பா, சித்தியை பாக்கணும்னு சொன்னான். கூட்டிட்டு வந்துட்டேன். ஒண்ணும் பிரச்னையில்லையே..." இவரது அண்ணன் கேட்டார்.

எனக்கு எதுவும் பிரச்னையே இல்லை. இவர்தான் முணுமுணு என்று முணுமுணுத்துத் தள்ளி விட்டார்.

விஷயம் இதுதான். பொடியன் ப்ரதீப் இவரது சாமான்களை கலைத்து விடுகிறானாம். கண்டதை எடுத்து கண்ட இடத்தில் போட்டு விடுகிறானாம் (ஏதோ எதையோ ஓதுமாமே...) தொல்லையாக இருக்கிறதாம். புலம்பித் தள்ளி விட்டார் என்னிடம்.

அவர் சொல்வது போல் அந்தப் பொடியனும் ஏதாவது வால்தனம் செய்து கொண்டேதானிருந்தான். அப்படி வால்தனம் செய்தால்தானே பொடியன்.

"என் ப்ரவுன் கலர் பெல்ட் எங்கே?" என்னிடம் கேட்டார்.

வழக்கம் போல் தேடினேன். வழக்கம் போல் கிடைக்கவில்லை.

"ப்ளாக் கலர் பெல்ட் போட்டுக் குங்களேன்" என்றேன்.

"இன்னிக்கு போர்டு மீட்டிங். நான் முக்கியமான ப்ரசண்டேஷன் கொடுக்கிறேன். வாரம் பூரா யோசிச்சு கலர் காம்பினேஷன் பாத்து எடுத்து வச்சிருந்தேன். எங்கே போச்சு? பெல்ட் என்ன கால் முளைச்சு குதிச்சா ஓடிப் போயிடும்?" இவர் குதித்தார். எனக்கு ஞாபகம் வந்து விட்டது.

"காலையில் ப்ரதீப் உங்க பெல்ட்டை வச்சுதாங்க ஸ்கிப்பிங் ஆடிக்கிட்டிருந்தான்..."

நான் முடிக்கு முன், "ப்ரதீப்..." அலறினார்.

"என்ன சித்தப்பா?"

"என் பெல்ட்டை எடுத்தியாடா?"

"ஆமாம் சித்தப்பா. ஸ்கிப் பண்ணேன். பட் பத்திரமா திருப்பி வச்சுட்டேன் சித்தப்பா."

"எங்கேடா வச்சே?"

"அங்கேயேதான் வச்சேன் சித்தபபா."

"அங்கேயேன்னா.... எங்கேடா? இங்கே இல்லையே."

"அங்கேதான் இருக்கும் பாருங்க."

அஞ்சு வயசு ப்ரதீப் சொன்ன அ.இ.பாவைக் கேட்டு என்னவர் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே, எனக்கு ஏக சிரிப்பாக வந்தது.

அப்புறம் நான் ப்ரதீப்புக்கு சாக்லெட் கொடுத்து, தாஜா பண்ணி, 'அங்கேதான்' என்பதை 'எங்கேதான்' எனக் கண்டுபிடித்து, இவரும் போர்டு மீட்டிங் ப்ரசன்டேஷனை வெளுத்துக்கட்டி, ப்ரமோஷனும் வாங்கி விட்டார்.

ப்ரதீப்பிடமிருந்து பூமராங் போல தன்னையே திருப்பித் தாக்கிய அ.இ.பாவைக் கேட்டு கொஞ்ச நாளைக்கு அ.இ.பாவை சொல்லக் கூட இல்லை. எல்லாம் ப்ரதீப் ஊருக்குப் புறப்படுகிற வரையில்தானே.

இவர் அண்ணனுக்கு லெட்டர் போட்டு ப்ரதீப்பை எங்கள் வீட்டுக்கு மீண்டும் அனுப்பி வைக்கச் சொல்ல வேண்டும். அட போங்க, இவருடைய ரிஸ்ட் வாட்சை தேடப் போகணும் நான்!

வீட்டில் உள்ள பூண்டு, வெங்காயம் போன்றவை முளை வந்திருந்தால், அதை உங்கள் வீட்டில் மணலில் (தொட்டியில் (அ) டப்பாவில் மணல் வைத்து) புதைத்து வையுங்கள். விரைவில் அழகான மணமான பூண்டு, வெங்காயத் தாள் வீட்டிலேயே. புதியதாக பறித்துச் சமையலில் சேர்க்கலாம்.

– பாவா இராஜேந்திரன்.



மங்கல இசைக்கு நாதஸ்வரம்
மகிழ்ச்சியான வாழ்வுக்கு
சீட்டுத்திட்டங்கள்



பண்டைய தமிழர்கள் தங்கள் அன்றாட நாளை மங்கலகரமாக துவக்கப் பயன்படுத்திய இசைக்கருவிகளுள் தலையாயது நாதஸ்வரம். ரிக் வேதத்தின் "நின்றெழ நாதசுவரத்தின் தோற்றம்" என்ற பரத சாஸ்திர பாடலை முன்வைத்து நோக்கின் இது வேதகால கருவி என்பதை உணரலாம். வங்கியம் அல்லது பெருவங்கியம் என சங்க இலக்கியம் சுட்டிக்காட்டுவதும் இதையே. ஆலயம் என்ற ஒன்றை தமிழன் கட்டிய போதே நாதஸ்வரமும், டிண்டிமம் என்கிற தவிலும் தோன்றிவிட்டது என்பது ஆய்வறிஞர்கள் முடிவு.

T.N.ராஜரத்தினம், காரைக்குறிச்சி அருணாசலம் போன்ற சிறந்த இசை மேதைகள் கையாண்டு புகழ்பெற்ற வாத்தியம் இது. காலத்தால் பழையதாக இருப்பினும் இன்றும் மங்கல நிகழ்ச்சிகளில் கணீரென எதிரொலிக்கும் நாதஸ்வரம் தமிழர் பண்பாட்டின் பொக்கிஷம்.


எஸ். சரோஜா, சென்னை-05.


மின்னும் மில்லேனிய பரிசுகள்


தமிழ்ப் புத்தாண்டு ஒரு புதிய புத்தாயிரம் ஆண்டின் துவக்கமாக மலர உள்ளது. புதிய சபதங்கள், புதிய சந்தோஷங்கள் இவற்றுடன் புதிய பரிசுகளையும் நம் இல்லத்தில் சேர்ப்போம். ஆம், காலத்தை வென்று நிற்கும் சீட்டுத்திட்டங்களுடன் காலத்திற்கேற்ற பரிசுகளையும் வழங்கி நம் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்க உள்ளது ஸ்ரீராம் சிட்ஸ்.


திட்டம்	சீட்டு மதிப்பு	சந்தாதாரர் பரிசுகள்
ரூ.250 X 40 மாதங்கள்	ரூ.10,000	ஸ்ரீபெட் 5 கிலோ ஜார்
ரூ.500 X 30 மாதங்கள்	ரூ.15,000	ஃபினிக்ஸ் கடாய்
ரூ.625 X 40 மாதங்கள்	ரூ.25,000	செல்லோ சூப்பர் ஃப்ரெஷ் 3 செட்
ரூ.500 X 60 மாதங்கள்	ரூ.30,000	எஸ். எஸ். சி.பி. டீப் ஃப்ரை பேன்
ரூ.1,000 X 50 மாதங்கள்	ரூ.50,000	எஸ். எஸ். சி.பி. குக்கிங் பாட் மூடியுடன்
ரூ.2,500 X 30 மாதங்கள்	ரூ.75,000	காளி சாஸ் பேன்
ரூ.2,500 X 40 மாதங்கள்	ரூ.1,00,000	எஸ். எஸ். சி.பி. நான்ஸ்டிக் கேஸரோல்
ரூ.5,000 X 30 மாதங்கள்	ரூ.1,50,000	ஃபினிக்ஸ் டின்னர் செட் (20 தெ.)
ரூ.5,000 X 40 மாதங்கள்	ரூ.2,00,000	செல்லோ ஓட்டோ 9.5லிட்டர்
ரூ.10,000 X 30 மாதங்கள்	ரூ.3,00,000	திர்லெப் கிஃப்ட் செட் (தவா , கடாய்)
ரூ.12,500 X 40 மாதங்கள்	ரூ.5,00,000	வெள்ளி காஃபி செட்


◆ நுழைவுக் கட்டணம் தனி. ◆ முன் அனுமதி பெறப்பட்டது.
நேரடியாக சீட்டில் சேருவோருக்கும் சந்தாதாரர் பரிசு உண்டு.










சித்திரை
சீட்டுத்
திருவிழா
2 - 14 ஏப்ரல்
2001

ஸ்ரீராம் சிட்ஸ்: கடந்த 27 வருடங்களாக 30 லட்சம் குடும்பங்களுக்கு வளமை சேர்த்துள்ளது. 16 லட்சத்திற்கும் அதிகமானோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். சீட்டுப் பணமாக இது வரை ரூ.7,250 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.











சீட்டு மதிப்பு	அறிமுகப்படுத்துவோர் பரிசுகள்
ரூ.10,000	எஸ். எஸ். டம்ளர்
ரூ. 15,000	ஏர்-டைட் கன்டெய்னர்
ரூ. 25,000	எஸ். எஸ். டிசைன் பிளேட்
ரூ. 30,000	எஸ். எஸ். டிசைன் பிளேட்
ரூ. 50,000	கிச்சன் கன்டெய்னர்
ரூ. 75,000	சென்னை டிஷ் மூடியுடன்
ரூ. 1,00,000	பிரைம் கன்டெய்னர் 5 செட்
ரூ. 1,50,000	ஸ்வாகத் 2000மி.லி. கேஸரோல்
ரூ. 2,00,000	எஸ். எஸ். ரைஸ் பாட் மூடியுடன்
ரூ. 3,00,000	மில்டன் எஸ்பிரிட் பிளாஸ்க் 1000மி.லி.
ரூ. 5,00,000	வெள்ளி டிரே

அறிமுகப்படுத்துவோர் பரிசுகள் தற்போதைய சந்தாதாரர்களுக்கு மட்டுமே.

சீட்டுத் திட்டங்கள்.
3
மில்லேனிய இளமை!

இன்றைய தேவைக்கும் நாளைய வளமைக்கும்.

ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002. போன்: 8461833 - 39.



யாரோட அன்பையும் பெறமுடியாத அபலை

எனக்குத் திருமணமாகி 14 வருடங்கள் ஆகின்றன. நான் அவ்வளவு அழகாக இருக்க மாட்டேன். ஆனால் என் கணவர் அழகாக இருப்பார். நான் என் கணவரை விட எல்லா விதத்திலும் திறமைசாலியாக இருக்கிறேன். குடும்பத்தையும் திறமையாக நடத்துகிறேன். சிறிது நேரம் கூட வீணடிக்காமல் குடும்பத்திற்காக உழைக்கிறேன். எவ்வளவு திறமையும் படிப்பும் இருந்தும் என்னை எவரும் மதிப்பது இல்லை. ஆனால் என்னைவிட சிறியவள் என் மைத்துனர் மனைவி. படிக்காதவள். எந்த வேலையும் ஒழுங்காக செய்யத் தெரியாதவள். அவளுக்குக் கிடைக்கும் மரியாதைகூட எனக்குக் கிடைக்கவில்லை. ஏனென்றால் அவள் பார்ப்பதற்கு அழகாக இருப்பாள். வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் அவள் சொல்வதையும் செய்வதையும் பெருமையாக நினைப்பார்கள். அழகு ஒன்று தான் வாழ்க்கையா? அழகு இல்லாத பெண்கள் எதற்கும் பயன்படாதவர்களா?



உங்கள் கடிதமே உங்களுடைய மனநிலையை நன்கு காட்டுகிறது தோழியே. அழகில்லாதவர்களை உலகம் மதிப்பதில்லை என யார் சொன்னது? உதாரணமாக மிகப் பலரையும் காட்ட முடியும். நாம் எப்படி நடந்து கொள்கிறோமோ, நம் மனம் எப்படி இருக்கிறதோ அப்படித்தான் மற்றவர்கள் நடந்து கொள்வார்கள்.

பெண்மைக்கே உரிய கம்பீரத்தோடு, அன்பானவர்களாக, அனைவரையும் அணைத்துச் செல்பவர்களாக, மனம் முழுக்க பரிவு நிரம்பியவர்களாக இருந்தால் நிச்சயம் யாரும் நம்மை மதிப்பார்கள்.

உங்கள் கடிதத்தில் இருக்கும் பல பிழைகள், உங்கள் மைத்துனர் மனைவி படிக்காதவள் - ஆனால் அழகானவள் என்ற விமோசனம், கணவரைவிட நீங்கள் எல்லா விதத்திலும் திறமைசாலி என்ற நீங்களே சொல்லும் கணிப்பு இப்படி உங்கள் குணாதிசயங்களிலேயே பல குறைபாடுகள் உள்ளனவே. முதலில் நம்மை விமரிசனம் செய்து நாம் திருந்திக் கொள்ளுவோம். மனதைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தப்படுத்தி அழகாக வைத்துக் கொள்வோம். வெளியிலும் அழகு தானே பூக்கும்.

உங்களால் நல்ல முறையில் வாழ முடியும்.

செண்பகம், நெய்வேலி.

என் அன்பு அப்பா ஒரு நாள் திடீரென எங்களை விட்டுப் பிரிந்துவிட்டார். என் கடைசி தங்கை ஒரு மனநோயாளி. ஒரு சில நேரங்களில் மிகவும் வன்மையாக தாக்க கூடியவள். அப்பா கடைசியாக என் வீட்டிற்கு வந்தபோது, (நான் திருமணம் ஆனவள்) "எனக்குப் பின் உன் தங்கைக்கு எது தேவையானாலும் நீ செய்" என்று சொன்னார். ஆனால் அவர் இறந்த பின் நிலைமை வேறானது. அவள் அப்பாவின் இறப்பின் அதிர்ச்சியால் மிகவும் மோசமாய் பாதிக்கப்பட்டாள். பயந்துபோன என் இன்னொரு தங்கை, அவளை "மனநல மருத்துவமனையில் சேர்த்து விட்டாள். இதனால் என் உடன்பிறந்தோர் மீதும், என் அம்மா மீதும் கோபமாகவும், வெறுப்பாகவும்

நட

இருக்கிறது. உறவு களின்மீதே நம் பிக்கை போய்விட் டது. என் அப்பாவின் ஆத்மா என்னை மன் னிக்குமா?

மனநிலை மருத்துவ மனையில் நல்ல முறை யில் பார்த்துக் கொள்கிறார் கள் என்பதை நீங்கள் திச் சயப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் விவரித்துள்ள உங்கள் மற்ற சூழ்நிலைகளின்படி, உங் கள் தங்கை நன்றாக மருத்துவ மனையில் கவனிக்கப்படும் பட்சத் தில் கவலைப்படத் தேவை யில்லை. உங்கள் தந்தை தன் மகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி அன்பால் சொல்லியிருப்பார். அவரே

வட்டம்

இப்போது இருந்திருப்பாரானால், எதிர்காலத்தின் பல் வேறு சூழ்நிலைகளை உத்தேசித்து இந்த முடிவை எடுத்திருக்கலாம் இல்லையா? இதற்காக நாளும், நாளும் நொந்துபோகத் தேவையில்லை. இறைவனிடம் முழுமையாக பிரார்த்தித்துக் கொள் ளுங்கள். அன்னை கண்டிப்பாக ஒரு நல்ல வழியைக் காட்டுவார்.

சகோதரிகளுடன் கலந்துரையாடல்

மஞ்சுளா ரமேஷ்

ஆர். லலிதா, சென்னை - 94.

நான் மங்கையர் மலருக்கு இதுவரை தொடர்ந்து பல கட்டுரைகளை எழுதி வருகிறேன். ஒருமுறை என்னுடைய மாமியார் 'போட்டோ'வை யும் என்னுடைய போட்டோவையும் இணைத்து ஒரு பரிசுக் கட்டுரை எழுதினேன். இதுவரை ஒன்றும் பிரசுரமாகாத தால் போட்டோ இணைப்பைத் துண்டித்து (எதற்கு அனாவசிய செலவு என்றெண்ணி) கட்டுரை களை மட்டும் தொடர்ந்து எழுதி வருகிறேன். என்னுடைய சந்தேகங்கள் என்ன வென்றால்,

1. கட்டுரைகளைக் கண்டிப்பாக போட்டோவுடன் இணைத்து அனுப்ப வேண்டுமா? அவற்றிற்கு முன்னுரிமை உண்டா?

2. சொல்ல விரும்புகிறோம்; நட்பு வட்டம் பகுதிகளுக்கான கடிதங் களை 'இன்லண்ட்' கவரில் எழுத லாமா? அல்லது 3 ரூபாய் கவரில் வைத்து அனுப்ப வேண்டுமா?

பொதுவாக உங்கள் படைப்புக் களோடு புகைப்படங்களை வைத்து அனுப்பாமல் இருப்பதே நல்லது. புகைப் படத்தோடு வருகின்ற படைப்புகளுக்குத் தான் முன்னுரிமை என்பதெல்லாம் இல்லை. படைப்பு நன்றாக இருக்கிறதா என்பது தான் பார்க்கப்படுகிறது.

ஆனால் கட்டுரைகளோடு புகைப் படங்கள் வைத்து அனுப்பும்போது கட்டுரைகள் நன்றாக இருக்கும் பட்சத்தில் உடனடியாக பிரசுரிக்க சௌகர்யமாக இருக்கிறது.

இன்னொரு இரகசியம், இம் மாத இல்லத்தரசியில் வைத்து அனுப்பப்படும் புகைப்படங் களில் சில 'அட, நம்ம மங்கை யர் மலர் அட்டைப் படத் தி ற் கு



சென்ற இதழ் வாசகியின் பிரச்னையான கம்பளிப் புழுவுக்குச் சிறந்த மருந்து

முருங்கை மரத்தில் கம்பளிப் புழுக்கள் பெரிய சைசில், சில சமயம் மூட்டுப் பாகத்தில், அல்லது அதன் தடிப்பாகத்தில் கூட்டம் கூட்டமாக இருக்கும். அதனை அழிக்க துணி துவைக்க உதவும் ஏதாவது ஒரு சோப்பைத் தண்ணீரில் நன்கு குரு குரு எனக் கலக்கி அதனை கம்பளிப் புழுவின் மீது விட்டால் உடன் அவைகள் செத்துவிடும். சோப்பானது கம்பளிப்புழுவின் மேல் தோலை அரித்து உடன் அவைகள் இறந்துவிட உதவுகிறது.

சில சமயங்களில் சிறு, சிறு கிளைகள் (கொப்புகளில்) சிறு சிறு கம்பளிப் புழுக்கள் கூட்டம் கூட்டமாக இருக்கும். அந்த கிளைகளை அப்படியே ஒடித்துத் தீயில் இட்டு எரித்து விடவும்.

சாதாரணமாக கம்பளிப்புழுக்களை ஒழிக்க தீ வைத்துச் சுடுவது வழக்கம். தீ வைத்துச் சுட்டால் முக்கால் வாசி புழுக்கள் செத்து விடும். கால்வாசி எண்ணம் உடன் ஓடி பிழைத்துக் கொள்ளும்.

ஆகவே மிகச் சிறந்த மருந்து, கம்பளிப்புழுவை அழிக்க துணி துவைக்கும் சோப்பின் குருகுரு, கட்டியான கரைசலே. துணி துவைத்தபின் மீதி வரும் சோப்பு கலந்த நீர் உதவாது.

ஈ. தனசேகரன், வேளாண்மை
அலுவலர், நாகர்கோவில்.

முருங்கை மரத்தில் கம்பளிப் பூச்சி வராமல் இருக்க ஒரு சூப்பர் ஐடியா. ¼ கிலோ வெள்ளைப் பூண்டை மைய அரைத்து ½ வாளி தண்ணீரில் கரைத்து முருங்கை (பூண்டு வாசனைக்கு பாம்புகூட வராது) மரம், கிளை முழுக்க தெளிப்பானால் தெளித்துவிட பூச்சி புழு ஒன்றும் அண்டாது. மரத்தின் வேர்ப் பகுதியிலிருந்து 3 அடி தள்ளி வட்ட வளையம் வரைந்து பூண்டுக் கரைசலை பாத்தி கட்டி ஊற்ற சூப்பர் பாதுகாப்பு.

ஜி.அருள்ராணி, விருதுநகர்.

நன்றாக இருக்கும் போலிருக்கே' எனப் பார்த்து (எழுதிய சமையல் குறிப்பு பிரசுரிக்கத் தேர்ந்தெடுக்கப்படாமல் இருந்தாலும் கூட) அவர்களைத் தொடர்பு கொண்டு அனுமதி பெற்றுகூட போட்டிருக்கிறோம்.

இன்னொரு விஷயம், தொலைபேசி இருப்பவர்கள் மறக்காமல் தொலைபேசி எண்ணையும் முகவரியோடு எழுதி அனுப்பினீர்களானால் உடனே தொடர்பு கொள்ள சௌகர்யமாக இருக்கும்.

லட்சுமி சீனிவாசன், சென்னை-24

'நெய்யுருக்கி, மோர் பெருக்கி, நீர் சுருக்கி' இது Rhymeக்காக சொல்லப்பட்டதா. இல்லை. சென்னைவாசிகள் நீர் சுருக்கிதான் எல்லா காலங்களிலும் இருக்க வேண்டும் என்று Exclusive சென்னைவாசிகளுக்காக சொல்லப்பட்ட ஒன்றா?

இது உடல் ஆரோக்கியத்திற்காகச் சொல்லப்பட்ட அருமையான வாசகம். நெய்யை விழுதாக சாப்பாட்டில் போட்டுக் கொள்ளக் கூடாது. உருக்கிதான் கலந்து கொள்ள வேண்டும். மோரை நன்கு கடைந்து நீர் விட்டுப் பெருக்கி உபயோகிக்க வேண்டும். நீரைக் கொதிக்க வைத்துப் (அப்போது சுருங்குமல்லவா) பருக வேண்டும்.

(ஆனால் சென்னைவாசிகளுக்கு நீரைச் சிக்கனமாக உபயோகிக்கச் சொல்லும் பழமொழியாக எடுத்துக் கொள்ளலாம். சிக்கனமாகவா? சொட்டு சொட்டாகக் கூட ஏப்ரல், மேயில் தண்ணீர் கிடைக்குமா? பயமாக இருக்கிறது.)

புவனா நடராஜன், தூத்துக்குடி-4

எனக்கு வயது 22. 3 வயதிலும், 6 மாதத்திலும் உள்ள 2 பெண் குழந்தைகளுக்குத் தாய் நான். ஓரளவு அடிப்படை வசதிகளுடன் வாழ்ந்து வருகிறேன்.

எனது குழப்பம் என்னவென்றால் எனது பொருளாதார பிரச்னைகளை சமாளிக்க வேலைக்குச் செல்லலாமா வேண்டாமா என்பதுதான்.

வேலைக்குச் செல்வதால் அன்றாட இயந்திர வாழ்க்கையில் நுழைந்து தினமும் டென்ஷன், மன அழுத்தம், எதற்கெடுத்தாலும் கோபம், (2 மாதம் வேலைக்குச் சென்ற அனுபவம்) என துன்புற வேண்டுமா

அல்லது குழந்தைகளை அன்புடன் கவனித்து கணவரையும் நன்கு கவனித்து உள்ள பொருளாதாரத்தைக் கொண்டு, இன்றைய சூழ்நிலையில் திருப்தியுடன் வாழ முடியுமா?

வேலைக்குச் செல்வதால் டென்ஷன், வீட்டில் இருந்தால் மிகுந்த நிம்மதி என்பதெல்லாம ஒன்றுமில்லை. டென்ஷனே இல்லாமல் அழகாகத் திட்டமிட்டு வேலைக்கும் செல்ல முடியும். வீட்டில் இருந்து கொண்டே, எல்லாவற்றையும் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு எரிச்சலோடும் இருக்க முடியும்.

உங்களைப் பொறுத்தவரையில் வீட்டில் அழகாக, இருக்கும் பொருளாதாரத்தில் திட்டமிட்டு வாழலாமே. ஆறுமாத கைக் குழந்தை இருக்கும்போது புதியதாக வேலைக்குச் செல்லும் சூழ்நிலை சிரமமாகவே இருக்கும். எத்தனை பணம் வந்தாலும் அதற்கேற்ற செலவுகள்தான் இருக்கும். அன்பால் குடும்பப் பிரச்னைகளையும், சூழ்நிலைகளையும் நன்கு சமாளிக்கலாம்.

ஜீ.நீலா, மன்னார்குடி

சகோதரி! திண்டுக்கல் மாவட்டம் சேடப்பட்டியில் "கௌசல்யா" என்ற பெண்மணி பக்கத்து வீட்டுப் பெண்ணின் வேண்டுகோளுக்கிணங்க வீட்டைத் திறந்து கொடுத்ததற்காக, அபாண்டமாக பழி சுமத்தப்பட்டு, போலீசாரால் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போகப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறாள். அவள் கணவன் அவமானம் தாளாமல் தற்கொலை செய்து கொண்டிருப்பது மிகப் பெரிய கொடுமை. ஐந்து லட்ச ரூபாய் பணமும், அந்தப் பெண்மணிக்கு அரசு வேலையும் வாங்கிக் கொடுத்துவிட்டால் அந்தப் பெண்மணியின் அவமானமும் சோகமும் நீக்கப்பட்டுவிடுமா?

இன்னும் எத்தனை காலம் இப்படிப்பட்ட கொடுமைகள் நடக்கும் என வருத்தப்பட்டு இருக்கிறீர்கள். உண்மைதான், புராண காலத்தில் இருந்து பெண், உடம்பால் அவள் பெண் என்பதற்காகவே தானே அவமானப் படுத்தப்பட்டு இருக்கிறாள்? மனதால் எத்தனை உயர்ந்தவளாக, வலிமை வாய்ந்தவளாக, மாண்புமிக்கவளாக இருந்தாலும் பெண்ணாக இருக்கிறாள் என்பதற்காகவே தானே சீதையும், பாஞ்சாலியும் அவமானப்படுத்தப் பட்டார்கள்? இன்னும் எத்தனையோ கோடிக் கணக்கான பெயர் தெரியாத பெண்கள்.

இப்போது இன்னும் நிலைமை கொடூரமாக மாறியிருக்கிறது. வேதனையாக இருக்கிறது. பெண்ணின் உடம்பை எவ்வளவு வியாபாரத்தனமாக மக்கள் தொடர்பு சாதனங்களில் பயன்படுத்துகிறார்கள். அதற்கு சம்பந்தப்பட்ட பெண்களும் உடன்படுகிறார்கள். இதனால் சின்னஞ் சிறுவர்களின் மனமும் கூட வக்ரமடைகிறது.

இந்த மாதிரி சூழ்நிலையில் நீங்கள் சொன்ன விஷயங்கள் போல நிறைய நடக்கத்தான் செய்கின்றன. மாதர் அமைப்புக்களும், சமூக ஆர்வலர்களும் போராடிக் கொண்டுதான் வருகிறார்கள். நம்மால் முடிந்தது, நமக்கு அறிந்த, தெரிந்த வரையில் இத்தகைய கொடுமைகள் நடக்காமல் சூழ்நிலையை பார்த்துக் கொள்ளலாம்.

எனக்கு ஒரு வருடத்திற்கு முன்பு இடுப்பில் வலியும், அடிக்கடி சிறுநீர் போக வேண்டிய நிலையும், கட்டுப்படுத்த முடியாமல் உடனே செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டது. டாக்டரிடம் சென்று பரிசோதித்துக் கொண்டதில் எனக்கு சிறுநீரகத்தில் கல் (3 எம்.எம்.) இருப்பது தெரிய வந்தது.

அதற்காக, நான் ஹோமியோபதி மருந்து சாப்பிட ஆரம்பித்தேன். வேறு எந்த மருந்தும் சாப்பிடவில்லை. தற்போது ஸ்கேன் செய்ததில் எனக்கு மீண்டும் 2 கற்கள் உற்பத்தியாகி இருப்பது தெரிந்தது.

எனக்கு வயது 35 ஆகிறது. இவ்வாறு கற்கள் அடிக்கடி உண்டாவது நல்லதல்ல எனவும், இதைத் தடுக்க மருந்து எதுவும் இல்லை எனவும் டாக்டர் கூறுகிறார். இதனால் நான் மிகுந்த மனக்கவலை அடைந்துள்ளேன்.

வாசக சகோதரிகள் இது போன்ற பிரச்சனையை சந்தித்துள்ளார்களா? அதற்கு எவ்வாறு தீர்வு கண்டார்கள் என்பதை நட்பு வட்டத்தின் மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.

பெயர் வெளியிட விரும்பாத
கரூர் வாசகி.

சென்னை பரங்கிமலையில் உள்ள இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் 71-வது குறுகிய காலப் பயிற்சி நிறைவு நிகழ்ச்சி சமீபத்தில் நடந்தது. இதில் பயிற்சி முடிக்கும் 50 மகளிரும் இராணுவத்தில் அதிகாரிகளாக நியமனம் பெறுகிறார்கள்.

அணிவகுப்பை கண்டுகளிக்க நாமும் அங்கு சென்றோம். ஆபீசர்ஸ் டிரெயினிங் வளாகத்தில்



துப்பாக்கி எங்கும்

நுழைந்தவுடன் அந்த ராணுவ மிடுக்குத் தோரணையும், விறைப்பும் நமக்கும் பற்றிக்கொண்டது. எங்கு நோக்கினும் சீருடை அணிந்த ராணுவ வீரர்கள் கையில் துப்பாக்கியுடன். ஆனால் நம்மை பயமுறுத்தவில்லை. இதழ் ஓர மெல்லியப் புன்னகையுடன் வரவேற்றனர்.

நிகழ்ச்சி ஆரம்பம் முதல் முடிவு வரை சரியான நேரம் கடைபிடிக்கப்பட்டு 'கன்' டைம் என்று சொல்வார்கனே அதுபோல் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டிருந்தபடி அந்தந்த நேரத்தில் அந்தந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்த நேரம் தவறாமைதான் நமது இந்திய ராணுவ வீரர்களின் தனிச்சிறப்பு. அதே போல் அவர்கள் கடைப்பிடிக்கும் ஒழுங்குமுறை, அவர்களுடைய கடமையுணர்வு, நாட்டுப்பற்று இவர்களது வெற்றிக்கு வழிகோலுகிறது எனலாம்.

அணிவகுப்பு முடிந்தவுடன் இந்திய இராணுவத்தின் துணைத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் ஆர்.கே. சாஹனி விருதுகளை வழங்கினார்.







நியமனம் பெற இருப்பவர்களுக்கும், இராணுவ அதிகாரிகளாக நியமனம் பெறும் பெண்களுக்கும் இந்தியாவிலேயே இங்கு மட்டும்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது என்பது இந்தக் கல்லூரியின் தனிச்சிறப்பு. இந்தக் கல்லூரியில் சேர ஏதாவதொரு பட்டப் படிப்பும்,

கரங்கள்



இதில் பெண்கள் பிரிவில் ஆல்ரவுண்டராக வந்து தங்க மெடலைப் பெற்றார் சமீகா ஷிவரன். அதே போல் ஜூனியர் ஆபீஸர் பிரிவில் மெரிட்டில் முதல் இடத்தில் வந்து வெள்ளிப் பதக்கம் பெற்றவர் தில்லியைச் சேர்ந்த பாவ்னா மல்ஹோத்ரா.

1962ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ பயிற்சி மையம் 1988ல் ஆபீஸர் டிரெயினிங் அகாதமி (OTA) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது. குறுகிய கால இராணுவ அதிகாரிகளாக

திருமணமாகாதவராகவும் இருத்தல் வேண்டும். ஆறு மாத பயிற்சி முடிந்த பிறகு ஐந்து வருடம் இராணுவத்தில் அதிகாரிகளாக நியமனம் பெறுவர். இதில் பெண்கள் நான்-டெக்னிகல் லைனில் பணி செய்ய நியமிக்கப்படுகிறார்கள். என்ஜீனியரிங், மெக்கானிக்கல், ஆர்டினன்ஸ், ஆர்மி சப்ளை கோர் (ASC) என்று பல பிரிவுகள் இருக்கின்றன.

பயிற்சி காலத்தில் மலையேறுதல், பாரா ஜம்பிங், துப்பாக்கிச் சுடுதல், குண்டு எறிதல், ட்ரில், குதிரை ஏற்றம், நீச்சல் என்று பலவித பயிற்சிகள் காலை ஐந்து மணி முதல் இரவு பத்து மணி வரை அளிக்கப்படுகிறது. ஆண், பெண் இருவருக்கும் ஒரே மாதிரியாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தக் கல்லூரியில் பயிற்சி பெற்ற இராணுவ அதிகாரிகள் போரின் போதும், மற்ற காலங்களின் போதும் பல விருதுகளை தட்டிச் சென்று தங்களை பயிற்றுவித்த கல்லூரிக்குப் பெருமை சேர்த்திருக்கின்றனர். ஒரு பரம வீரச் சக்கரம், நான்கு அசோக



சக்கரம், ஒன்பது மஹாவீரச் சக்கரம், 5 கீர்த்தி சக்கரம், 161 சேனை பதக்கங்கள் என்ற அளவில் இவர்களின் விருதுப் பட்டியல்கள் உயர்ந்து கொண்டு செல்கின்றன.

இந்தியாவிலேயே பெண்களுக்காக இராணுவத்தில் பயிற்சி அளிக்கப்படும் இந்த மையத்தில் வடஇந்தியப் பெண்களே அதிகம் காணப்படுகின்றனர். தென்னிந்தியாவிலிருந்து ஒன்று, இரண்டு பேர் என்கிற கணக்கில்தான் உள்ளனர்.

இதைப் பற்றி பயிற்சி முடித்து வெளிவந்திருக்கும் எல்.ஸிக்களில் (லேடி கேடட்ஸ்) ஒருசிலரிடம் கேட்டோம். "எங்கள் குடும்பத்தில் தந்தை அல்லது சகோதரர் இந்திய இராணுவத்தில் இருப்பதால் நாங்களும் நாட்டுக்காகச் சேவை செய்ய வேண்டும் என்கிற உந்துதலினால் இங்கு வந்து சேர்ந்தோம்" என்றார்கள். நமது இந்திய இராணுவத்தில் பெரும்பாலும் வடஇந்தியர்களே அதிகம் இடம்பெற்றுள்ளனராம்.

இந்த நிலை மாற வேண்டும் என்று கூறுகிறார் தமிழ்நாட்டிலிருந்து இராணுவ அதிகாரியாகப் பயிற்சி பெற்றிருக்கும் ஸ்நேகா லக்ஷ்மண். பெண்கள் இராணுவத்தில் சேர பயப்படத் தேவையில்லை. ஐந்தாண்டு காலம் சேவை செய்து விட்டு அதன் பிறகு தொடருவது அவர்கள் விருப்பம். இதனால் அவர்கள் திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படப் போவது இல்லை. மேலும் பெண்களுக்கு தன்னம்பிக்கை வரும் என்கிறார்.

இந்தப் பயிற்சியினால் உற்சாகமும், தன்னம்பிக்கையும் வளர்ந்ததாகக் கூறும் எல்.ஸிக்கள் நாட்டுக்காகச் சேவை செய்யப் போகிறோம் என்கிற நினைப்பே தங்களுக்கு சந்தோஷம் அளிப்பதாகக் கூறுகிறார்கள்.

— ஷாந்தி

அட்டை வண்ணப்படம், படங்கள் :
ஜி. சுரேஷ்



கண் இமைகள் அடிக்கடி துடித்தால் ஏதோ சம்பவம் நேரப் போகிறது என் பார்கள். கண்களுக்கு ஓய்வு கொடுக்கா விட்டாலும் இப்படி ஏற்படும். அதனால் உள்ளங்கையால் கண்களைப் பொத்திக் கொண்டு ஓர் ஐந்து நிமிடம் இருங்கள். இது மாதிரி ஒரு நாளைக்கு நாலைந்து தடவை செய்யுங்கள். சரியாகிவிடும்.

– நெ. இராமன்

அறுபது ஆண்டுகளுக்கு முந்தைய டைரி + பயணக் கதை இது.



பெங்களூரில் வசிக்கும் சுலோச்சனா பகவானுடைய கொள்ளுப் பாட்டி கருடம்மா கைப்பட இந்த நாட்குறிப்பை, தேதிவாரியாக எழுதி வைத்திருக்கிறார்.

கருடம்மா பாட்டி ஹிமாலய பர்வதம் முதல் கன்யாகுமரி வரை ஆறரை மாதங்கள், பத்தாயிரம் மைல்கள் அதுவும், காரில் பயணித்துள்ளனர்!

அவர்கள் பயணத்தின் போது அவர்கள் சென்றவிடங்களையெல்லாம் கன்னடத்தில் அந்த மூதாட்டி தன் கைப்பட எழுதியிருக்கிறார். சுலோச்சனா அவற்றையெல்லாம் எனக்கு மொழிபெயர்த்துச் சொல்ல, நானும் குறித்துக் கொண்டேன்.

அந்தப் பாட்டி அவ்வளவு அழகாக, தெளிவாக, தேதி வாரியாக, தன் பயணக் கதையை எழுதி வைத்திருக்கிறார்!

பல்லைக் கழற்றி வைக்க

கருடம்மா பாட்டி, 'சென்னைப் பட்டிணா'வில் (பெங்களூருக்கும் மைசூருக்கும் இடைப்பட்டது.) வசித்து வந்தார்கள். ஆசாரமான வைணவப் பரம்பரை. 'ஹெப்பார் ஐயங்கார்' வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

பாட்டி, தாத்தா, ராஜம்மா என்கிற தோழி மூவரும் சுற்றுலா கிளம்பியுள்ளனர். பாட்டியின் வயது அப்போது நாற்பது.

பாட்டியின் மூத்த பெண் லட்சுமி திடுமென்று காலமாகி விட்டதால் அந்தத் துக்கத்தை ஆற்றிக் கொள்ள இவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

மேற்கண்டவை எல்லாமே அவர்கள் குறிப்பில் உள்ளன. இமேயும் சில சுவையான குறிப்புக்கள் –



10.8.1939 கார்த்தாலே 5 மணிக்கு எழுந்தோம். நல்ல மழை. அப்படியும் மடியா சமையல் செஞ்சுண்டு பத்து மணிக்கு ஆத்திலேருந்து கிளம்பினோம். அங்கேர்ந்து புறப்பட்டு அரை மைல் தூரம் கூட வந்திருக்க மாட்டோம். பாலுக்குப் பணம் கொடுக்க மறந்துட்டதாலே திரும்ப ஆத்துக்குப் போயி பாலுக்குப் பணம் கொடுத்துட்டு அங்கேர்ந்து கிளம்பி 'ஹாஸ் பேட்' வந்தோம்.

'ஹரிஹர்' போற வழியிலே ரோட்லே நிறைய தண்ணி தேங்கியிருந்தது எங்க கார் மாட்டிண்டுடுத்து. அப்புறம் ஒரு லாரிக்காரன் வந்து அவனோட சகாயத்துலே காரை வெளியே எடுத்தோம்.


11.8.'39 - 'ஔகுந்தி' என்ற ஊருக்கு வரும் போது மறுபடியும்

கார் மாட்டிண்டு கிளம்பலே. அந்த ஊரு 'படேல்' (தலைமை) வீட்டுல ராத்திரி 8.30 மணிக்குப் போய்த் தங்கினோம். ராத்திரி பால் மட்டும் குடிச்சிட்டுப் படுத்துண்டோம்.

மறுநா ஏகாதசி. காலங்கார்த்தாலே மடியா உப்புமா காபி பண்ணி எடுத்திண்டு 'சேவேன ஹள்ளி' ஆஞ்சநேயர் கோயி லுக்குப் போனோம். கோயி லைச் சுத்திட்டு, சாப்பிட்டு, பின் 'கதக்'க்குக் கிளம்பினோம். அங்கே போய்ச் சேரும் போது சாயங்காலம் மணி ஆறரை.

13.8.'39 – 'கதக்'கில் ரெண்டு நாள் தங்கினோம். 'வீரநாராயண சாமி கோயில்', 'நரசிம்மசாமி கோயில்' இதுக்கெல்லாம் போனோம்.

16.8.'39 - பின் 'கொல் ஹாபுரி'க்கு வந்தோம். அங்கேருக்



கோயிலில் அர்ச்சனை பண்ண தேங்கா கொடுத்தோம். உடச்சிக் கொடுக்காம அப்பிடியே முழுசாத் திரும்பக் கொடுத்தா.

'கொல்ஹாபுரி'யில் ஒரு அரண்மனை உண்டு; அங்க போனோம். அந்த அரண்மனைக்குள் 'அம்பா பவானி' கோயில் ஒன்றும் இருக்கு. 'கொல்ஹாபுரி'யின் ராஜா

வெள்ளி டப்பா வாங்கினார்!

கும் மனுஷாளில் நிறைய பேர் மராட்டிக்காரர்கள்தான். 'கொல் ஹாபுரி' மகாலட்சுமி தரிசனத்தில் மெய்மறந்து நின்னோம். அந்தக்



தினமும் மூன்று முறை கோயிலுக்கு வந்து பூஜை பண்ணுவாராம்.

தங்கமுலாம் பூசப்பட்ட ரதம் ஒன்று குதிரைகளால் அந்தக் கோயிலுக்காக இழுக்கப்படுகிறது. அந்தக் காலத்து 'வைஸ்ராய் ஆஃப் இந்தியா'வால் அந்தக் கோயிலுக்குப் பரிசாக் கொடுக்கப்பட்ட ரதம் அது. அந்த ரதத்தைப் பார்த்து மகிழ்ந்தோம்.

அப்புறம் 'சாட்மரி' பார்த்தோம். 'சாட்மரி' என்பது யானைகளை பயிற்சி பண்ணும் இடம். 'ரேஸ் கோர்ஸ்' பார்த்தோம். அங்கு ஒரு 'மராத்தி சினிமா ஷூட்டிங்' நடந்துண்டிருந்தது. அதையும் பார்த்தோம். 'வஸந்த பரசுராம பர்கே' என்கிற ஒரு 'கய்ட்' எங்களுக்குத் துணை வந்தார்.

22.8.'39 – பின் பிஜாப்பூர் வழியே பூனா வந்தோம். பண்டராபுரத்தில் ராத்திரி 12.30 மணி வரை கோயிலில் சாமி தரிசனம் செய்யலாம். யார் வேணா தரிசனம் பண்ணலாம். தலைக்கு மூணு காக.

27.8.'39 – பாம்பே வந்தோம். நச்சப்பா என்கிற சொந்தக்காரா வீட்ல தங்கினோம். எல்லோரும் சுத்தமா எண்ணெய் தேய்ச்சுக் குளிச்சு பூரி, பால் பாயசம் எல்லாம் சாப்பிட்டோம். அங்கேர்ந்து எஞ்சினியர்

ராமசாமி ஆத்துக்குப் போனோம். அவா வீடு எல்லாம் ஒண்ணு மேல ஒண்ணாக அடுக்கு மாடி வீடுகள். 'லிஃப்ட்' கூட உண்டு.

நச்சப்பா வேலை செய்யிற துறைமுகத்துக்குப் போயி 'ஸ்டீமர்' பார்த்தோம். 'ஒயர்லெஸ் ஸ்டுடியோ' பார்த்தோம்.

29.8.'39 நச்சப்பா வீட்டில் ஆவணி அவிட்டம் பண்ணினோம். தாத்தா பூணல் மாத்திண்டார். சாப்டுட்டு 4 மணிக்கு மார்க்கெட் போனோம். இரண்டரை ரூபாய்க்கு 2 கெஜம் ரப்பர் ஷீட் வாங்கினோம். தாத்தா தன்னோட பல்லைக் கழற்றி வைக்க ஆறரை ரூபா கொடுத்து வெள்ளி டப்பா ஒண்ணு வாங்கிண்டார்.

எஞ்ஜின் இல்லாத எலக்ட்ரிக் தந்தியில் போகும் எலக்ட்ரிக் ட்ரெயின் பார்த்தோம்.

1.9.'39 – அப்புறம் 'நாஸிக்' போனோம். ராவணனோட தங்கை சூர்ப்பணகையின் 'நாசி' (மூக்கு) அறுபட்ட இடமாததால் அந்தப் பெயர் வந்ததாம். அகல்யா ராமர் பாதம் பட்டு சாப விமோசனம் பெற்ற இடமும் அதே. 'நாஸிக்'கில் ஆஞ்சநேயர் கோயிலுக்குப் போனோம். கோயிலுக்குள்ளே 'சீதா குகை' உள்ளது. சீதை ஈசுவரனை பூஜை பண்ணின இடம்.

குகைக்குள்ளே இருட்டாயிருக்கும். லைட் உண்டு. இருந்தாலும் குகைக்குள்ளே அவ்வளவு சுலபமா நுழைய முடியாது. குனிஞ்சு, வளஞ்சு, படுத்துண்டு, உருண்டுதான் உள்ளே போக முடியும். அதுக்கு நாலணா. பாண்டவா வன வாசம் பண்ணிய இடமும் 'நாஸிக்' பக்கத்துலேயே. அங்கேயும் போனோம். கோதாவரி நதியில் ஆசை தீர முங்கிக் குளிச்சோம். அப்படியும் திருப்தியில்லை.

14.9.'39 – குவாலியர் போனோம். அங்கு கடையில் சாமான்கள் வாங்கினா தராசுல எடை போட்டுத்தான் கொடுப்பா. இன்னொரு முக்கியமான விஷயம், சிவாஜிக்கு 'அம்பா பவானி' தரிசனம் தந்து பிரத்யட்சமான இடமும் இதுவே.

18.9.'39 – டெல்லி பயணம். தாஜ்மகால் போனோம். முழுக்க முழுக்க வெள்ளை சலவைக் கல்லால் கட்டப்பட்டிருக்கு. ரொம்ப அழகான இடம். மெச்சிக்கவே வார்த்தைகள் கிடைக்கலை.

அதுக்கப்புறம் ஜெய்ப்பூர் வந்தோம். பின் மதுரா, ஓல்டு டெல்லி, குருக்ஷேத்ரா, ஹரித்வார் எல்லாம் சுத்தினோம். ரிஷிகேஷ் வந்தோம். நிறைய இடம் பார்த்தாகி விட்டது.

17.10.'39 – பனாரஸ் வந்தோம். எழுதவே இடமில்லாதபடிக்கு அவ்வளவு கோயில்கள் அங்கே. ஒரு கோயிலுக்குள்ளே பார்வதி தொடை மேல விநாயகர் ஒட்கார்ந்திருக்கார். ஈசுவரன், லட்சுமி நாராயணன், சனீஸ்வரன், பகீரதன், நந்தி, பரத சத்ருக்னன் எல்லா சாமிகளும் சலவைக் கல்லாலே இருக்கு.

'பனாரஸ் யூனிவர்ஸிடி' கிட்டே இந்தியா மேப் ஒண்ணு பார்த்தோம். மலைகள், நதிகள் எல்லாம் சேர்ந்த இந்தியா மேப் சலவைக் கல்லிலே இழைக்கப்பட்டிருக்கு.

23.10.'39 – அப்புறம் 'கயா' போனோம். கயாவில் 'ஹிரண்யச்ரார்தம்' பண்ணிண்டோம். பெண்ணுக்குப் பிண்டம் போடும்போது துக்கம் தாளாம நான் கதறிட்டேன். எனக்குப் புடிச்ச புடலங்கா, சீதாப்பழமும் விட்டுட்டேன். இதெல்லாம் பார்த்து முடிச்சுட்டு ஆந்திரா கௌம்பினோம்.



1.12.'39 – விசாகப்பட்டினம் வந்தோம். சிம்ஹாசலா, பத்ராசலா எல்லாம் போய்ப் பார்த்தோம்.

15.12.'39 – செகந்திராபாத், விஜயவாடா வந்தோம். நெல்லூர் போனோம்.

28.12.'39 – நெல்லூரிலிருந்து மத்ராஸுக்கு கிளம்பினோம். வழியில் ஸ்ரீகாளஹஸ்த்தியில் தங்கினோம். 'ராமானுஜ கூட' சத்திரத்தில் முதல்தர பொங்கல் 3 ரூவா, செகண்ட் க்ளாஸ் 2½ ரூவா. ஃபர்ஸ்ட் கிளாஸ் பொங்கல் (நிறைய மு. பருப்பு) பண்ணச் சொல்லி, சாப்டுட்டு கௌம்பினோம்.

'காளத்திநாதர்' கோயிலுக்கு வந்தோம். சிலந்தி, ஹஸ்தம், பாம்பு மூன்றுக்கும் சிவன் முக்தி கொடுத்த இடமாம்.

30.12.'39 – அப்புறம் காளஹஸ்திலேர்ந்து கௌம்பி ஸ்ரீபெரும்புதூர் எல்லாம் தாண்டி, பெருமாள் தரிசனம் முடிச்சுண்டு மெட்ரா

ஸுக்கு வந்தோம்.

1.1.1940 – சமுத்ரஸ்னானம் செஞ்சோம். மயிலாப்பூர் கபாலீச்வரா கோயிலுக்குப் போனோம். பார்த்தசாரதி கோயில் ஆண்டாள் சந்நிதியில் திவ்ய தரிசனம் கெடச்சது.

அக்வேரியம் போனோம். விதவிதமா மீன்கள் பார்த்தோம். குதிரை முகமீன பார்க்க வேடிக்கையாயிருந்தது.

மறுநா மகாபலிபுரம் போயி கோவர்தனகிரி, கிருஷ்ண மண்டபம், கல் மண்டபம் மேலும் எல்லா சிற்பங்களையும் பார்த்தோம். பிரமாதம்.

8.1.40 – திருக்கழுக்குன்றம் கோயிலுக்குப் போனோம். வேதபுரீஸ்வரர் ஆலயத்தில் பிரமாதமான சர்க்கரைப் பொங்கல் சாப்பிட்டோம். 2 கழுகு தினந்தோறும் சரியா மத்தியானம் 11.30க்கு சர்க்கரைப் பொங்கல் சாப்பிட எங்கேருந்தோ பறந்து வருமாம். ஆச்சர்யமாப் போச்சு.

9.1.'40 – திருவண்ணாமலை வந்தோம். பகவான் ரமணமகரிஷியை தரிசனம் பண்ணினோம். பழம் கொடுத்து நமஸ்காரம் பண்ணினப்போ ஆசீர்வாதம் பண்ணினார். திவ்ய தரிசனம். பெண்கள் ஆசிரமத்துக்கு வெளியேயும் தங்க முடியாதுங்கிறதாலே அங்கேர்ந்து கெளம்பிட்டோம்.

மத்தியானம் 4 மணிக்கு மதுராந்தகம் வந்தோம். ரெவின்யூ இன்ஸ்பெக்டர் திருவேங்கடாச்சாரி வீட்டில் தங்கினோம். ஸ்ரீமத் ராமானுஜருக்கு 'சமாஸ்ரணம்' பண்ணின இடம்தான் இது.

11.1.'40 – திருக்கோவிலூர் 'உலகளந்த பெருமாள்' கோவிலுக்கு வந்து 'கூடாரவல்லி' கொண்டாடினோம்.

13.1.'40 – கடலூர் வந்து எஞ்சினியர் வீட்டில் தங்கினோம். மறுநா பொங்கல். கனு பண்டிகையின் போது ஐயர் முறைப்படி 'கனுப் பிடி' வைத்திருந்தார்கள்.

16.1.40 – இன்று பாண்டிச்சேரி வந்தோம். திரும்பும் போது 'செக்கிங்' இருந்தது. பெண்களுக்கு பெண்களே செக்கிங். 5 ரூ பொருளுக்கு 5 ரூ. கஸ்டமஸ். பீச், கண்ணாடி வீடு, அரவிந்த ஆசிரமம் எல்லாம் பார்த்தோம். பாண்டியில் 'ரேடியோகிராம், லவுட் ஸ்பீக்கர்' எல்லாம் வாங்கி எடுத்துண்டு வரும்போது சரிசமமா கஸ்டம்ஸ் கொடுத்தோம்.

18.1.'40 – சிதம்பரம் வருகை. தங்க இடமேயில்லை. ஒருமுறை மைசூரில் எங்களைப் பார்த்த 'இம்பீரியல் பேங்க் மேனேஜர் வாசுதேவன்' யதேச்சையா எங்களைப் பார்த்தார். நல்லவேளை பெருமாள் கிருபை... அவாத்துக்குப் போனோம். அப்புறம் சிதம்பரம் நடராஜர் கோயிலுக்குப் போனோம். புண்டரீகவல்லித் தாயார், அர்ச்சுனனுக்கு 'பாசுபத அஸ்திரம்' உபதேசம் ஆன இடம் எல்லாமும் பார்த்தோம்.

21.1.'40 – கும்பகோணம் வந்தோம். கும்பேஸ்வரர், மங்களாம்பிகைத் தாயார் தரிசனம் செய்தோம். சுவாமி மலை போனோம். ஒப்பிலியப்பன் கோயிலைப் பார்த்து, அந்தக் கதையைக் கேட்டு மகிழ்ந்து போனோம்.

15.2.'40 – மதுரை மீனாட்சியம்மன் கோயில் தரிசனம். அப்பா, எவ்வளவு பெரிய கோவில்? ஆயிரங்கால் மண்டபமும், விதவிதமான லிங்கங்களும் விசேஷம்.

16.2.'40 – மேட்டூர் வந்து சேர்ந்தோம். 'மேட்டூர் டாம்' பார்த்தோம்.

இந்த ஆறு மாசத்துல நாங்க பத்தாயிரம் மைல், அதுவும் காரிலேயே சுத்தியாச்சு.

ஊருக்குத் திரும்ப ஆரம்பிச்சோம். வழியில் ஒரு விபத்து. ஆறு வயசுப் பையன் ஒருத்தன் காருக்குக் குறுக்கே வந்து மாட்டிண்டுட்டான். நல்லவேளை உயிருக்கொண்ணும் ஆபத்தில்லே. தப்பிச்சுட்டான்.

ஆறு மாசமா ஊர் ஊரா சுத்தி ஊருக்குத் திரும்பற வேளையில இப்பிடி அபசகுனமா ஆய்ப்போச்சேன்னு விசனப்பட்டேன்.

அப்புறம் யோசித்துப் பார்த்தேன். கௌம்பும் போதும் ஒரு அபசகுனம். கார் மழையிலே மாட்டிண்டு பள்ளத்துல சிக்கின்டுடுந்து. ஊருக்குத் திரும்பும் போதும் இப்படி ஒண்ணு. அதுனாலே ரெண்டு திருஷ்டியும் ஒண்ணுக்குள்ள ஒண்ணு சரியாப் போச்சுன்னு நெனச்சி மனசத் தேத்திண்டேன்.

17.2.40 – பயணமெல்லாம் முடிஞ்சி சாயங்காலம் 5 மணிக்கு 'சென்னப் பட்ணா' வந்து சேர்ந்தோம்.

தொகுப்பு : **பாக்யலட்சுமி ஸ்ரீநிவாஸன்**

சீச்சீ! புளிப்பு...

புளிப்பு ஆப்பிள்களை நறுக்கி காய்கறிகளுடன் குருமாவில் போடுங்கள். அட்டகாசமாக இருக்கும்.

– உஷா





நீண்ட அடர்த்தியான மற்றும் அழகு மிளிரும் கூந்தலுக்கு
உபயோகிப்பீர் குணா கூந்தல் தைலம்
குணா கூந்தல் தைலம் தொடர்ந்து உபயோகிப்பதால்
குணா
கூந்தல் தைலம்
விபரங்களுக்கு :
Agasthiar Pharmaceuticals
Post Box No: 588, Salem - 636 005
Bangalore Branch: No. 37, South End Road, Basavanagudi, Bangalore - 560 004 Ph : (080) 6767882
இப்பொழுது 100ml / 200ml Packing-களில் கிடைக்கின்றது
என்றும் இளமையோடு மிளிர, உபயோகிப்பீர் குணா கூந்தல் தைலம்

நியூஸ் சாலட்



• ஜார்ஜ் பெர்னாண்டஸ்

ஆப்கானிஸ்தானில் பாமியன் மாநிலத்தில்தான் உலகத்திலேயே நின்று கொண்டிருக்கும் உயரமான பழம்பெரும் புத்தர் சிலை உள்ளது. 53 மீட்டர் உயரமுள்ள இந்தப் பழம்பெரும் புத்தர் சிலையை மாபெரும் நினைவுச் சின்னமாக உலகம் கருதுகிறது. 2000 வருடத்திற்கு முற்பட்டது. 1968ல் இந்திராகாந்தி ஆட்சியின்போது ஆப்கானிஸ்தான் அரசு கேட்டுக் கொண்டதன் பேரில் சிலைகள் பாதுகாக்கும் துறையில் தேர்ச்சி பெற்ற டாக்டர் சென்குப்தா குழு இந்தியாவிலிருந்து சென்று அழிந்து கொண்டிருந்த அந்தச் சிலையையும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள பழங்கால ஓவியங்களையும் புனர் நிர்மாணம் செய்துவிட்டு வந்தது.

இன்று அதே புத்தர் சிலையையும் மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள எல்லா புத்தர் சிலைகளையும் இடித்துத் தள்ளுமாறு "தாலிபன்" அரசின் தலைவர் "முல்லா முகமட் ஓமர்" உத்தரவிட்டிருக்கிறார். பீரங்கிகளாலும், எவுகணைகளாலும் இடித்துத் தள்ளிவிட்டது.

உலகெங்கிலுமிருந்து வந்து கொண்டிருந்த கண்டனக் கூக்குரலை அவர்கள் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. இந்தியா இந்த அக்கிரமச் செயலைக் கண்டித்து புத்தர் சிலைகளை இடிப்பதற்குப் பதில் இந்தியாவிடம் சேர்த்துவிடுங்கள் என்று கோரிக்கை விட்டிருந்தார்கள். காபூலில் உள்ள 'தேசிய அருங்காட்சி'யகத்தில் உள்ள உலோகச் சிலைகளையும் அதன்மேல் உள்ள விலையுயர்ந்த கற்களையும் அழித்து நகைகளாகவும், உலோகத் தகடுகளாகவும் உபயோகித்தால் உரிமையாளர்களுக்குப் பயன்படும் என்று கேலி செய்கிறார்கள். இஸ்லாமைத் தவிர வேறு எந்த மதத்தையும் வளரவிடவோ இல்லை தலை வணங்கவோ மாட்டேன் என்று சூளுரைத்திருக்கிறார் முகமட் ஓமர்.



• பிராட்மேன்

இந்த வருட மத்திய பட்ஜெட்டில் அரசாங்கச் செலவுகளை குறைக்க பல பொதுத் துறை கம்பெனிகளை தனியார் துறைக்கு விற்க முன் வந்திருக்கிறது இந்திய அரசு. நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கும் எட்டு பொதுத் துறை நிறுவனங்களை மூட உத்தரவிட்டிருக்கிறது.



• ஜெயா ஜேட்லி

இதில் விசேஷமாக "பாரத் அலுமினிய கம்பெனி" (BALCO)என்ற அரசு பொதுத் துறை கம்பெனியில் உள்ள 51 முதலீட்டுப் பங்குகளை "ஸ்டெர்லைட்" என்ற தனியார் கம்பெனியிடம் 551.5 கோடி ரூபாய்க்கு விற்க அரசு முன்வந்த போது பல கட்சிகளின் எதிர்ப்பு ஏற்பட்டு "லோக்சபா"வில் சர்ச்சை நடந்தது. சர்ச்சையின் முடிவு அரசுக்கு சாதகமாகி ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டு பேரத்தை முடித்துக் கொண்டுவிட்டது அரசு.

அந்தக் கம்பெனியில் இதுவரை வேலை செய்து கொண்டிருந்த அரசு ஊழியர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று சொன்னதின் பேரில் பல கட்சிகள் இந்த ஏற்பாட்டிற்கு சம்மதித்தன. இதுபோல தனியார் துறைக்கு விற்று கிடைக்கும் பணத்தை கிராம வளர்ச்சிக்கு உபயோகப்படுத்தப் போவதாக நிதிமந்திரி யஷ்வந்த சின்ஹா கூறியிருக்கிறார். மிக முக்கியமான அரசுத்துறைகளை தனியார் துறைக்கு அரசு மாற்றாது என்று தீர்மானமாகக் கூறியிருக்கிறார்.

உலக தீவிரவாதத்தைத் தடுக்க இங்கிலாந்து பல பயங்கர தீவிரவாத இயக்கங்களுக்கு முற்றிலும் தடை விதித்துள்ளது. "லக்ஷர்-இ-தோய்பா", "ஜெயிஷ்-இ-முகமட்", "ஹர்கட்-உல்-முஜாய்ஹிதின்" "தமிழ் விடுதலைப் புலிகள்" போன்ற அமைப்புகளுக்கு முழுத் தடை விதித்திருக்கிறது. லண்டனைத்தான் அடித்தளமாக வைத்துக் கொண்டு தங்களுடைய நடவடிக்கைகளை செயல்படுத்திக் கொண்டு வந்தன இந்த இயக்கங்கள்.

கடந்த 17 மாதங்களில் மாதத்திற்கு ஒரு டெஸ்ட் என்ற கணக்கில் 16 முறை தொடர்ச்சியாக வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள். கடந்த மார்ச்




• கோபிசந்த்

1ம் தேதி மும்பையில் ஆடிய முதல் டெஸ்ட் இன்னிங்ஸில் மூன்று நாட்களுக்குள் பத்து விக்கெட் இழப்பில் இந்தியாவை தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளனர். இது ஒரு "ரிக்கார்ட் பிரேக்" என்று குதூகலித்துக் கூறுகிறது ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம்.

உலகப் புகழ்பெற்ற ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் "சர்டோனால்ட் பிராட்மேன்" தூக்கத்தில் உயிர் நீத்தார். இவருக்கு வயது 92. 1908ல் பிறந்த இவர் தன்னுடைய 19ம் வயதிலிருந்து கிரிக்கெட் விளையாடத் தொடங்கி தொடர்ச்சியாக 21 வருடங்கள் ஆஸ்திரேலியாவிற்குப் பெருமை சேர்த்துத் தந்திருக்கிறார். 1948ல் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று, கிரிக்கெட் வாரிய நிர்வாகியாகவும், தேர்வாளராகவும், பாதுகாவலராகவும் தொடர்ந்து 40 வருடங்கள் உழைத்திருக்கிறார். இவரை கிரிக்கெட் "டான்" என்று உலகம் அழைக்கிறது.

வடக்கு ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியான டெஜகிஸ்தான் மற்றும் ஹிந்துகுஷ் பகுதியில் பிப்ரவரி மாதம் 25ம் தேதி 6.7 அளவு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் பாதிப்பாக காபூலிலிருந்து வட இந்தியாவின் பஞ்சாப், ஹரியானா, ஜம்முகாஷ்மீர், ராஜஸ்தான், சண்டிகர், டெல்லி பகுதிகளில் ஒருநிமிடம் தொடர்ச்சியாக நடுக்கம் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறினார்கள். 1000 கிலோ மீட்டர் தூரத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் அதிர்ச்சியாக இதை எடுத்துக் கொள்ளலாம் என்கிறார்கள்.




• வி.வி.எஸ். லக்ஷ்மன்

குஜராத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் மையப்புள்ளி பூமியின் மேற்பரப்பிலிருந்து உள்ளே 25 கிலோமீட்டரில் ஏற்பட்டதால் அதிக இழப்பு இருந்ததாகவும் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கம் 150 கிலோ மீட்டர் உள்ளே ஏற்பட்டிருப்பதால் மேற்பரப்பில் அத்தனை பாதிப்பு இருக்காது என்றும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். மார்ச் ஒன்றாம் தேதி கனடா அருகில் உள்ள சியாட்டல் நகரத்தில் 6.8 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டு 250 பேர்கள் காயமடைந்திருக்கிறார்கள். அங்குள்ள கட்டிடங்கள் பயங்கர நிலநடுக்கத்தையும் தாங்கும் சக்தியுடன் கட்டப்பட்டவை யானதால் உயிரிழப்பு இல்லை.



• பங்காரு லக்ஷ்மன்

டெல்லியில் உள்ள உயரமான கட்டிடங்களின் பாதுகாப்பை ஆராய்ச்சி செய்த 'கட்டிட தேர்ச்சியாளர்கள்' ராஷ்டிரபதி பவன், வடக்கு மற்றும் தெற்கு அரசு அலுவலகக் கட்டிடங்கள் (south & north block) பயங்கர நில நடுக்கத்தைத் தாங்கும் சக்தி குறைந்தவை என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். 1930ல் கட்டப்பட்ட இந்தக் கட்டிடங்கள் ஒரு பெரிய பாறைக் குன்றின்மீது கட்டப்பட்டிருப்பதால் நிலநடுக்க பாதிப்பை தாங்காது என்கிறார்கள்.




• ஆஸ்திரேலியா டீம்

பொது இடங்களில் சிகரெட் புகைப்பதையும், புகையிலை பொருட்களை விற்பதையும் மற்றும் புகையிலை சம்பந்தமான விளம்பரங்களையும் தடை செய்திருக்கிறது மத்திய அரசு. 18 வயதிற்குக் கீழே உள்ளவர்கள் சிகரெட் போன்ற புகையிலைப் பொருட்களை உபயோகப்படுத்தினாலும் இல்லை அப்படிப்பட்ட பொருட்களை விற்றாலும் சட்டப்படி குற்றம் சாட்டப்பட்டு உடனடியாக 100 ரூபாய் அபராதம் வசூலிக்கப்படும். புகையிலை சம்பந்தப்பட்ட மற்ற பொருட்களை பெருவாரியாக



• ஹர்பஜன் சிங்



ப்ரீதி
மாற்றுதல் சலுகை
உங்களது பழைய மிக்ஸியை,
(எந்த தயாரிப்பானாலும், எந்த நிலையில் இருப்பினும்)
மாற்றி புதிய ப்ரீதி மிக்ஸி வாங்கி
ரூ 654/-* வரை சேமியுங்கள்.
Preethi®
CHEFPRO
Heavy Duty Mixer Grinder
Preethi
விற்பனை மற்றும் சேவை மையங்கள்: டி.ஏ.டெய்லர் பி. லிட், 2, போட் கிளப் ரோடு, முதல் அவின்யூ, சென்னை 600 028. ☎4347963, 4341512.
கிளைகள்: சென்னை ☎4360608, வேலூர் ☎215916, திருச்சி ☎704465, சேலம் ☎443578, கோயம்புத்தூர் ☎232687, மதுரை ☎621376, திருநெல்வேலி 335353 (P.P.) பாண்டிச்சேரி ☎346383, பெங்களூர் ☎2222583, விஜயவாடா ☎566637, ஹைதராபாத் ☎7519516, விசாகப்பட்டினம் ☎541915, கொச்சி ☎370781, திருவனந்தபுரம் ☎289807, கண்ணனூர் ☎765948, கோழிக்கோடு ☎367443.

விற்று பிடிபடுபவர்களுக்கு மூன்று வருடம் கடுங்காவல் தண்டனை அல்லது ஒரு லட்சம் ரூபாய் அபராதம் வசூலிக்கப்படும்.

கற்பனை அல்ல நிஜத்திலும் நிஜம். ஒலிஒளியை டிவி/போன் மூலம் அனுப்புவது போல வாசனையை ஓரிடத்திலிருந்து அனுப்பி அதே வாசனையை மற்றொரு இடத்தில் நுகர வகை செய்திருக்கிறார் "சந்தீப் ஜெயிட்கா" என்ற சமையற்காரர். இவர் கண்டுபிடித்துள்ள இந்த விஞ்ஞான முறைக்கு அமெரிக்கா காப்புரிமை வழங்கியிருக்கிறது. இவரது கண்டு பிடிப்பு மூலம் காதலர் தினத்தில் அமெரிக் காவிலிருந்து ரோஜா பூக்களை அள்ளித் தெளித் தால் ஈ-மெயில் மூலம் உங்கள் வீட்டு 'கம்ப்யூட்டர்'ரில் உணரலாம்.

லண்டனில் உள்ள பொய்யான ராணுவ தளவாடங்கள் செய்யும் கம்பெனியிடமிருந்து "ராணுவ ஒப்பந்தம்" மூலம் பாரதீய ஜனதா கட்சித் தலைவர் பங்காரு லக்ஷ்மண், சமதா கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் மற்றும் ஜெயா ஜெய்ட்லி பணம் வாங்கியதாக நிரு பித்து வீடியோ காட்சியுடன் காட்டிவிட்டது "டெகல்கா.காம்". பாராளுமன்றத்தில் எதிர் கட்சிகளின் தாக்குதல் கண்டனத்தின் அடிப் படையில் பங்காரு லக்ஷ்மண் ஜார்ஜ் பெர் னாண்டஸ் மற்றும் ஜெயா ஜெயிட்லி ராஜி னாமா செய்திருக்கிறார்கள். போஃபர்ஸ் ராணுவ ஒப்பந்தத்தில் மாட்டிக் கொண்டிருக் கும் காங்கிரஸ் தலைவர்களுக்கு தப்பிக்க அவல் கிடைத்துவிட்டது.

2001ம் ஆண்டு "பெண்கள் உரிமை" ஆண்டாகக் கொண்டாடுகிறோம். மார்ச் 8ம் தேதி உலகப் பெண்கள் தினத்தன்று பாராளு மன்றத்தில் பெண்கள் ஒதுக்கீடு (33%) மசோ தாவை விரைவில் மசோதாவாக்க கோரிக்கை எழுப்பிய பெண் உறுப்பினர்களிடம் உடனடி யாக எல்லா கட்சிகளுடன் பேசி நல்ல முடிவு எடுப்பதாக நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் பிரதம மந்திரி. இதைத் தொடர்ந்து சில தினங்களிலேயே சிக்கிமைச் சேர்ந்த திருமதி 'சோகிலா ஐயர்' என்ற பெண்மணி முதல் இந்தியப் பெண் வெளிநாட்டுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். "என்னுடைய இந்தப் பதவி இன்று கடினமாக உழைக்கும் பல பெண் ஐ.ஏ.எஸ். கலெக்டர்களை ஊக்கு விப்பதாக இருக்கும்" என்று பெருமையாகக் கூறியிருக்கிறார் அவர்.

ஐரோப்பிய சுற்று துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் 6 தங்கம் 2 வெள்ளி ஒரு

வெங்கலம் என்று 9 பதக்கங்களை வென்று சாம்பியனாக திரும்பி வந்திருக்கிறார் 'அபினவ் பிந்தரா'. அவரை வரவேற்று வாழ்த்திய மத்திய விளையாட்டு அமைச்சர் உமா பாரதி அபினவ் பிந்திராவிற்கு வெளிநாட்டுப் பயிற்சியாளர் வைத்து, ஏதென்ஸில் 2004ல் நடக்கவிருக்கும் ஒலிம்பிக்ஸில் துப்பாக்கிச் சுடுதலில் தங்கப் பதக்கம் பெற பயிற்சி செய்ய ஏற்பாடு செய்து தருவதாக நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

இருபத்தி ஏழு வயதான 'கோபி சந்த்' "ஆல் இங்கிலாந்து பாட்மின்டன்" ஆட்டத்தில் முதலாவதாக வென்று மகுடம் சூட்டப் பெற திருக்கிறார். 'பிரகாஷ் படுகோனே'க்கு அடுத்த படியாக இரண்டாவது இந்தியராக வென்று நமக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்.

கோல்கட்டா ஈடன் கார்டனில் நடை பெற்ற இந்தியா, ஆஸ்திரேலியா இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் மாட்சில் இந்திய கிரிக் கெட் ஆட்டக்காரர் வி.வி.எஸ்.லக்ஷ்மன் அதிக மாக ரன்கள் எடுத்த முதல் இந்தியராக இந்திய கிரிக்கெட் சகாப்தத்தில் கால் பதித்திருக்கிறார். இவர் எடுத்த ஓட்டங்கள் 281. இந்த மாட்சில் ஹர்பஜன் சிங் தொடர்ச்சியாக மூன்று விக் கெட்கள் எடுத்து டெஸ்ட் மாட்சில் முதல் இந்தியராக இடம் பெற்றிருக்கிறார். தொடர்ச்சி யாக 16 முறை வென்ற ஆஸ்திரேலியா அணி இந்த மாட்சில் இந்தியாவிடம் தோற்று விட்டது.

சென்னையிலும் இந்திய அணி அமர்க் களப்படுத்தி விட்டது. மூன்று போட்டிகளைக் கொண்ட இத் தொடரை இந்தியா 2 - 1 என்ற கணக்கில் வென்றது. மூன்றாவது டெஸ்டின் சிறந்த ஆட்டக்காரராக ஹர்பஜன்சிங் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். இவர் இந்தத் தொடரில் மொத்தம் 32 விக்கெட்டுகளை வீழ்த்தி ஒரே தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய சுழல் பந்து வீச்சாளர் என்று தேசிய சாதனை படைத்துள்ளார்.

தொகுப்பு : **சியாமளா சுவாமிநாதன்**

டீ.வி.யில் கேட்டறிந்தது : வெங்காயம் நறுக்கினால் காட்டராக்ட் வருவது குறை கிறதாம். நறுக்கும்போது கண்ணிலிருந்து வரும் கண்ணீர் இந்தக் குறைபாடு ஏற்படு வதைத் தவிர்க்கிறதாம். தினம் ஒரு வெங் காயம் நறுக்கலாமா?

- மாலா ராஜன்

மகிழம் பூ



சென்னை விமான நிலையத்திலிருந்து வெளியே வந்தவன் அப்பாவைத் தேடினேன். அவர் என் கண்ணில் படவில்லை. தமிழில் என் பெயரைக் கொண்ட அட்டையைக் கையில் வைத்துக் கொண்டு வெளியில் வருகிற ஒவ்வொருவரையும் கவனித்துக் கொண்டிருந்தான் ஒருவன். அவனிடம் சென்றேன். "நான்தான் பாலாஜி பார்த்தசாரதி. உங்களை யார் அனுப்பியது?" என்றேன்.

"உங்கப்பா நாராயணன் ஐயாதான் அனுப்பிச்சார். நான் சாமானைத் தூக்கறேன்..." என்றவன் என் அனுமதியை எதிர்பார்க்காமல் என் சூட்கேஸை சட்டென்று தூக்கிக் கொண்டு நடந்தான். நான் பின்தொடர்ந்து அவன் பார்க்கிங்கில் நிறுத்தியிருந்த காரில் ஏறிக் கொண்டேன். காரைக் கிளப்பிய போது "ஏன் அப்பா வரலை? அம்மாவுக்கு உடம்பு சரியாக இல்லைன்னு அப்பா ஃபோன்லே சொன்னார். ஏதாவது ப்ராப்ளமா?" என்றேன். நான் அப்பா அம்மாவிடம் அவசரமாக ஜெயந்தியைப் பற்றி உடனடியாகப் பேச வேண்டுமே!

அந்த டிரைவர், "எனக்குத் தெரியாதுங்க... உங்கப்பா இன்னிக்கு வர முடியலைன்னு எங்க டிராவல் ஏஜென்ஸியிலே சொல்லி வாடகைக் கார் ஏற்பாடு பண்ணியிருக்கிறாரு. அவ்வளவுதான் தெரியும்..." என்றான். நான் அதன்பின் அவனிடம் வேறு என்ன கேட்க முடியும்?

கடந்த எட்டு வருடங்களில் நான் கலிஃபோர்னியாவிலிருந்து சென்னைக்கு வருவது இது இரண்டாவது தடவை. முதல் முறை வந்த போது என் கூட ஜெயந்தியும் வந்திருந்தாள். ஜெயு அமெரிக்காவிலேயே பிறந்து வளர்ந்த பெண். இரண்டாவது தலைமுறை இந்தியன். அவளை ஒரு ஹிந்துஸ்தானி கச்சேரியில் முதன் முதலாக பார்த்தேன்.

முழங்கால் வரை தொங்கிய கருங்கூந்தலைப் பட்டு மாதிரி வாரி அப்படியே விட்டிருந்தாள். கிளிப் பச்சை சுரிதாரில் எனக்கு முன்னே வரிசையில் நின்றபோது அவளது கொலுஸு போட்ட பாதத்தின் அழகையே கண் எடுக்காமல் பார்த்த அதே சமயத்தில் நான் தலைகுப்புற விழுந்து விட்டேன்.

ஜெயூவை அப்பா அம்மாவிடம், "நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற பெண்..." என்று அறிமுகப்படுத்திய கையோடு அவர்கள் சம்மதத்தோடு விமரிசையாக கல்யாணமும் நடந்து விட்டது. அதற்குப் பின் இப்போதுதான் வருகிறேன். எங்களுடைய மூன்று வயதுப் பெண் சுருதியைக் கூட இன்னும் இங்கே அழைத்து வரவில்லை.

விமான நிலையத்திலிருந்து வீடு போகிற வழியிலேயே அப்பாவுடன் பேச வேண்டும் என்று நான் நினைத்தது நடக்கவில்லை. கல்யாணத்துக்கு முன் நான் அமெரிக்கா போன போது கூட அம்மா என்னை வழி அனுப்பவோ அழைத்து வந்ததோ இல்லை. பாகற்காய் பிட்லை, வேப்பம்பூ ரசம், தயிர் சாதத்திற்கு பக்கவாத்தியமாக மாகாளிக் கிழங்கு ஊறுகாய் என எனக்கு மிகப் பிடித்த சமையலாக பக்காவாக செய்து வழி மேல் விழி வைத்துக் காத்திருப்பாள்.

இன்றைக்கும் வீட்டிற்குள் நுழைந்த போது எனக்குப் பிடித்த அதே சமையல் வாசனை. அப்பா மட்டும் வாசலிலேயே நின்றிருந்தார். "வா... வா... கஸ்தூரி இப்பத்தான் தூங்கப் போனா. தூக்கத்துக்கு ஊசி போட்டிருக்கு..." என்றவர் என் கையை ஆதரவாகப் பிடித்துக் கொண்டார்.



கீதா பென்னெட்

அவருடைய குரலில் எப்போதும் இருக்கும் உற்சாகம் இல்லை போல் தோன்றிற்று. நான் அம்மா படுத்திருக்கும் அறைக்குள் போனேன். மிகவும் அசந்து தூங்குபவளை எழுப்ப மனம் வரவில்லை. அதனால் சாப்பிட உட்கார்ந்தேன். நான் வேண்டாம் என்று தடுத்தும் அப்பாவே எனக்குப் பரிமாறினார். எனக்கு சமையலின் சுவையில் வித்தியாசம் இருந்தது.

"சமையல் அம்மா பண்ணினது போலவே இல்லையே" என்று மட்டும் சொன்னேன்.

அப்பா லேசாக முறுவலித்தார். "யூ ஆர் ரைட்... நான்தான் சமைச்சேன்."

"அம்மா ஏன்..." என்று நான் சொல்லி முடிப்பதற்குள் அவரே முந்திக் கொண்டார். "எனக்கு இப்ப ரொம்பவே களைப்பா இருக்கு


பாலா. நாளைக்கு விவரமா எல்லாம் சொல்றேன். குட் நைட்..."

அப்பாவிடம் ஜெயந்தியை, நான் காதலித்து கைப்பிடித்த மனைவியை விவாகரத்துப் பண்ணப் போகிறேன் என்ற விஷயத்தைச் சொல்லிவிட வேண்டும். எப்போது? அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தவன் நீண்ட விமான பயணத்தால் ஏற்பட்ட களைப்பினாலும், கலிஃபோர்னியாவுக்கும் சென்னைக்கும் இடையே பதிமூன்றரை மணி நேர வித்தியாசத்தால் வந்த ஜெட்லாக்கினாலும் கண் விழிக்கும் போது காலை ஒன்பது ஆகி விட்டது.

மாடியில் அப்பா குரல் கேட்க அங்கே சென்றேன். லேசாக ஆள்காட்டி விரலால் மெல்லியதாக கதவைத் தட்டிவிட்டு உள்ளே போன எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. அப்பா, அம்மாவுக்குப் புடவை உடுத்திக் கொண்டிருந்தார். சலனம் கேட்டு அம்மா என்னைப் பார்த்தாள். ஆனால் கண்களில் என்னைத் தெரிந்து கொண்ட மாதிரியே இல்லை. எந்தவித முகபாவமும் இல்லாமல் அவளுடைய பார்வை சூன்யத்தை வெறிக்க ஆரம்பித்தது.

அப்பா என் காலடி ஓசை கேட்டுத் திரும்பினார். நான் வெளியே போக நினைத்ததைப் புரிந்து கொண்டவர் போல "போகாதே பாலா! ஒரு நிமிஷம் காத்திரு. இதோ இவளுக்குத் தலை வாரி விட்டு உனக்குக் காப்பி கலந்து தருகிறேன்..." என்றார்.

நான், "அப்பா... அம்மாவுக்கு என்ன?" என்று ஆரம்பித்தவன் அவர் கண்களில் நீரைக் கண்டவுடன் சட்டென்று நிறுத்தி விட்டேன். அவர் தன் வேலையை முடித்துக் கொண்டு கீழே வந்தவர் என்னிடம் சொன்னார். "உன் அம்மா கஸ்தூரிக்கு உன்னை அடையாளம் தெரியலையேன்னு வருத்தப்படாதே. அவ



பகாளாபாத் தயாரிக்க சாதம் வேக வைக்கும் போது ஒரு ஆழாக்கு அரிசிக்கு ஒரு டேபிள் ஸ்பூன் அவல் கலந்தால் குழைவாயிருப்பதோடு, ருசியும் பிரமாதமாக இருக்கும். புதுவித சுவையுடன் இருக்கும். — விசாலாட்சி

கூடவே எத்தனை வருஷமா இருக்கேன்? என்னையே அவளுக்கு அடையாளம் தெரியலையேடா! பாழாப் போன ஆல்ஸைமர் நோய். எதுவுமே அவளுக்கு ஞாபகம் இல்லை. மகாலட்சுமி மாதிரி தினம் பளிச்சுன்னு தானும் டிரஸ் பண்ணிக்கிட்டு வீட்டையும் எப்படி வச்சிருப்பா? அவளுக்கு இப்பப் புடவை கட்டக்கூட மறந்து போயிடுத்துடா பாலா..."

அப்பா இப்படி விக்கி அழுது நான் பார்த்ததேயில்லை. என் கண்களிலும் நீர். நான் அவரருகே போய், அவர் தோளை ஆதரவாக தடவிக் கொடுத்தேன். அம்மா எங்கள் இருவரையும் பார்த்தாள். ஆனால் அவள் கண்கள் உணர்ச்சியற்றே இருந்தன.

நான் எவ்வளவு கெஞ்சியும் அப்பா தானே அம்மாவைக் குளிப்பாட்டுவதிலிருந்து சாதம் ஊட்டி தூங்க வைப்பது வரை செய்தார். நான் அப்பாவிடம் என்னுடைய விவாகரத்துப் பற்றிய விஷயம் பேச தகுந்த நேரத்திற்காகக் காத்திருந்தேன். ஊருக்குக் கிளம்ப இன்னும் நான்கு நாட்களே இருந்தபோதுதான் எனக்கு அவரிடம் விஷயத்தைச் சொல்ல தைரியம் வந்தது.

அன்றிரவு அம்மா தூங்கிய பிறகு அப்பாவும் நானும் சாப்பாட்டை முடித்தோம். "அப்பா... நான் உங்ககிட்ட கொஞ்சம் பெர்ஸனல் விஷயங்கள் பேசணும்..." என்றேன். அப்பா பாத்திரங்களை எடுத்து வைத்து விட்டு மேசையைத் துடைத்து சுத்தம் செய்தார். அதே சமயம் என்ன விஷயமாக இருக்கும் என்றும் யோசிப்பவர் போல என்னிடம் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தார்.

என் எதிரே வந்து உட்கார்ந்தபோது நான் தயங்கியபடியே ஆரம்பித்தேன். "அப்பா... அம்மாவுக்கு ஆல்ஸைமர் வியாதியினால் நாளுக்கு நாள் மறதி அதிகமாகுமே தவிர இனிமே தேறவே முடியாது. சீக்கிரமே வெஜிடபிள் மாதிரி ஆகிவிடுகிற சான்ஸஸ் இருக்கு. இன்னி தேதி வரைக்கும் இதுக்கு மருந்து கண்டுபிடிக்கலை."

"அதற்காக என்னை என்ன செய்யச் சொல்றே?"

"நீயும் என் கூட கலிஃபோர்னியாவுக்கு வந்து விடுகிறாயா? எனக்கும் துணையாயிருக்கும்... சுருதியையும் பார்த்துக்கிட்டா மாதிரி இருக்கும்."

அப்பா சந்தேகக் கண்களோடு என்னைப் பார்த்தார். "அப்ப கஸ்தூரியை என்ன பண்ணச் சொல்றே பாலா?"

"அப்பா... நான் பாசமில்லாம பேசலை. ப்ராக்டிகலா சொல்றேன். அம்மாவை ஏதாவது நல்ல ப்ரைவேட் நர்ஸிங்ஹோம்லே சேர்த்துடலாம். உங்களை விட அவங்க இன்னும் நல்லாவே கவனிச்சுப்பாங்க."

அப்பா என் கண்களையே நேராகச் சில கணங்கள் பார்த்தார். "உனக்குத் துணையா தான் ஜெயந்தி இருக்கிறாளே..." என்றார்.

"அப்பா..." நான் தயங்கியபடியே சொன்னேன். "உங்க மருமகளுக்கும் எனக்கும் கொஞ்ச நாளா ஒத்து வரலை. நாங்க விவாகரத்து பண்ணிக்கலாம்னு இருக்கோம்."

அப்பா நான் சொன்ன விஷயத்தை ஜீரணிக்க முயல்பவர் போல் இருந்தார். பின், "ஏன்? என்ன விஷயம்? காதலிச்சுத்தானே கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க... ஏழு வருஷம் தானே ஆகிறது?... என்றார். பின் அவராகவே, "ஓ... இப்பப் புரிகிறது. ஸெவன் இயர் இட்ச் என்று சொல்வார்களே, அதுவா?" என்றார்.

"இல்லைப்பா. என்னளவு படிச்ச பொண்டாட்டி. எனக்குச் சமமா அவளும் சம்பாதிக்கிறவ. ஜெயந்தியிடம் ஒன்னும் சொல்ல முடியலை. அது மட்டுமில்லை. கல்யாணம் ஆன புதுசுலே இருந்த ஒரு த்ரில் இப்ப இல்லை. ஏதோ வாழ்க்கை இயந்திரம் மாதிரி போய்க்கிட்டிருக்கு!"

"கல்யாணத்துக்கு அப்புறம் எப்பவுமே த்ரில் இருக்கும்னு நினைக்கிறாயா?"

"அது மட்டும் இல்லை. ஆபீஸிலிருந்து வந்த பிறகு கொஞ்ச நேரம் அமைதியா உட்கார்ந்து பேப்பர் படிக்க முடியலை. தூங்கப் போகிற வரைக்கும் ஏதாவது வேலை கொடுத்துக்கிட்டே இருக்கா. நானும் சமையலில் இருந்து குழந்தையைத் தூங்கப் பண்றவரைக்கும் அல்லாட வேண்டியிருக்கு. கேட்டா நானும் தானே வேலைக்குப் போறேன். எனக்கு மட்டும் உன்னைப் போலவே கொஞ்ச நேரமாவது குடும்பப் பொறுப்பு எதுவும் இல்லாமல் இருக்க ஆசையில்லையா என்று எதிர்க் கேள்வி கேட்கிறாள்..." நான் சொல்வதைக் கேட்க எதிரே ஆள் இருக்கிற தைரியத்தில் என் மனத்தில் இத்தனை நாள் மூடி வைத்திருந்ததைக் கொட்டி விட்டேன்.

அப்பா சிறிது நேரம் பேசாமல் இருந்து விட்டுக் கேட்டார். "உங்கம்மாவுக்கும் எனக்கும் கல்யாணம் ஆகி எத்தனை வருஷம் ஆகிறது தெரியுமா?"

"ஊம்.... நாப்பத்தி மூணு. சரியா?"

"நாப்பத்தி ஆறு. ஒன்னு தெரியுமா உனக்கு? கல்யாணம் ஆன புதுசுலே நான் ரொம்பவே கோபக்காரனா இருந்தேன். என் அம்மாவும் கூட இருந்தாள். உன்னை மாதிரியே நானும் ஒரே பிள்ளைதானே! என்னை உங்கம்மா பகல் வேளையிலே கண்ணாலே பார்த்தாலே அவளுக்கு மண்டகப்படி விழும். ராத்திரி கூட எனக்குக் கால் பிடிச்சு விடு, தைலம் தேச்சு விடு'ன்னு ஏதாவது சாக்குச் சொல்லி உங்கம்மாவைத் தன் கூடவே வச்சிருப்பாள். வாயில்லாத பூச்சியா எல்லாத்தையும் செஞ்சுட்டு ரெங்க



பாத்ரூமில் கொக்கி உள்ள ஹேங்கர் இருந்தால் ஈரத்துணிகளைப் போட முடியாது. எங்கள் வீட்டில் பழைய கேஸ்கட்களை இரண்டு கொக்கிக்கு ஒரு கேஸ்கட் விதம் மாட்டி விட்டேன். இப்போது துணிகளை நிறைய போட முடிகிறது.

- கனகா வீரராகவன்.

அறைக்கு வரும் போது எனக்குக் கோபம் பொத்துண்டு வரும், அவளை கைநீட்டி எத்தனை ராத்திரி அடிச்சிருக்கேன் தெரியுமா? ஆனா அவ அழ மாட்டா. எங்கம்மாவைப் பத்தி ஒரு வார்த்தை குறை சொல்ல மாட்டா..."

அப்பாவின் கண்களில் இப்போது நீர். அத்துடன் எதையோ நினைவுபடுத்திக் கொண்டவர் வாய்விட்டுச் சிரித்தார். சடாரென்று அடிக்கும் மழைக்கு நடுவே திடீரென்று வெயில் வருமே அது மாதிரி! "ஒரு தடவை எங்கம்மா, நாங்க ரெண்டு பேர், இன்னும் சில உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து காசிக்குப் போகிறதா ப்ளான். ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போகிறதுக்கு எல்லோரும் வேன்லே ஏறிட்டோம். உங்கம்மாவை மாத்திரம் காணோம். கதவுக்கு அந்தப் பக்கத்திலிருந்து, "நான் வர முடியாதும்மா" அப்படீன்னு சொல்றா. எங்கம்மாவுக்கு ஒரே கோபம். என்னைப் பார்த்து, "நான் போகக் கூடாதுன்னு உன் பொண்டாட்டிக்கு எண்ணம். ஏன்னா இந்த மூணு நாள் நான்தானே அவளுக்குச் சமையல் பண்ணிப் போடணும்?" என்றாள்.

"இல்லம்மா.... அவர் பார்த்துப்பார்!" என்று உன் அம்மா கொஞ்சம் வெட்கத்தோடு என்னைப் பார்த்துக் கொண்டே சொன்னபோது நான்தான் கீழே இறங்க வேண்டியிருந்தது. எனக்கும் கோபமான கோபம். வேன் அங்கிருந்து கிளம்பிப் போயிற்று. நான் வீட்டிற்குள் போனதும் உங்கம்மா என் கழுத்தை அப்படியே கட்டிக் கொண்டாள்...

"என்னை மன்னிச்சுடுங்க. உங்களோட தனியா இருக்கணும்னுதான் அப்படி ஒரு பொய் சொன்னேன். என்னைத் தப்பா நினைச்சுக்காதீங்க..." என்றாள். எனக்குச் சிரிக்கிறதா

பெண்களின் முன்னேற்றத்திற்காகவே சிறந்த அழகுகலை நிபுணராக சாதனை படைத்ததை பாராட்டி மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் சான்றிதழ் மற்றும் தங்கப் பதக்கம் பெற்ற



மீனா'ஸ் ப்யூட்டி கிளினிக்கின் கோடைகால இலவச * அழகுகலை பயிற்சி

* இச்சலுகை ஏப்ரல், மே, மாதம் மட்டுமே

* A to Z கற்றுத் தரப்பட்டு சிறந்த அழகு கலை நிபுணராகலாம்.
* ட்ராயிங், பெயிண்டிங், ஸ்போக்கன் இங்கிலீஷ், சமையல் கலைகளில் பயிற்சி அளிக்கப்படும்.
* விதவிதமான கொண்டை அலங்காரம், வண்ண வண்ண முத்துகளால் மருதாணி வரைதல் மற்றும் பல்விதமான டிசைன்களில் மருதாணி இடுதல்.
* நெய்ல் பாலிஷில் 'ஆர்ட்' வரைதல், விதவிதமான சாரி மாடல்ஸ் கற்றுத் தரப்படும். இங்கு பயிலும் மாணவிகளுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு, சான்றிதழும் பரிசுகளும் வழங்கப்படும்.

விருப்பமுள்ளவர்கள் ஏப்ரல் 15ஆம் தேதிக்குள் எங்கள் அழகு நிலையத்திற்கு வந்து Application பெற்றுக் கொள்ளவும்.

Meena's Beauty Clinic

Shop No. 23, Rams Bazaar, 3, Prakasam Road, (Opp. Panagal Park) T. Nagar, Chennai - 17. ☎: 8215018

HOSTEL FACILITY AVAILABLE

காபி, டிபன், சைவ உணவு, தங்குமிடம், ஊர்கள் சுற்றிப் பார்க்கும் பஸ் கட்டணம் உள்பட 3TIER ரயில் சுற்றுலாக்கள்

சரவணபவ

காசி – கல்கத்தா – டெல்லி – ஹரித்துவார்

* பூரி-கோனார்க்-புவனேஸ்வர்-கல்கத்தா-கயா-காசி-சாரனாத்-வியாசகாசி- அலகாபாத்-திரிவேணி-ஹரித்வார்-ரிஷிகேஷ்-டெல்லி-ஆக்ரா-மதுரா-பிருந்தாவன். 20.4.2001 மற்றும் 4.5.2001 முதல் 15 நாட்கள் 3TIER ரயில் ரூ.4990

காசி – பத்ரிநாத் – கேதார்நாத் – நேப்பாள்

மதுரா-பிருந்தாவன்-ஆக்ரா-ஜெய்ப்பூர்-டெல்லி-அமிர்தசரஸ்-ஹரித்துவார்-ரிஷிகேஷ்-தேவபிரயாகை-ருத்ரபிரயாகை-கௌரி குண்ட்-கேதார்நாத்-ஜோஷிமட்-பத்ரிநாத்-டேராடூன்-காசி-(கயா)-திரிவேணி. 4.5.2001 மற்றும் 20.7.2001 முதல் 20 நாட்கள் 3TIER ரயில் & பஸ் ரூ.6990. இத்துடன் 5 நாட்கள் சேர்த்து(நேப்பாள்)காட்மாண்டு, போக்ரா,(முக்திநாத்)-அயோத்யா பார்த்துவர(மொத்தம் 25 நாட்கள்) ரூ.8990.

* **BOMBAY-GOA.** ஹைதராபாத்-அவுரங்காபாத்-அஜந்தா-எல்லோரா-ஷீரடி-நாசிக்-சனி சிங்கனாப்பூர்-முக்திதாம்-தபோவனம்-பம்பாய்-கோவா. 18.5.2001 முதல் 12 நாட்கள் ரயில் ரூ. 3690
* **AMARNATH-KASHMIR-VAISHNAVI-SIMLA-NAVASAKTHI-KRUSHETHRA- 20.7.2001.** முதல் 20 நாட்கள் ரூ. 7990
* **KARNATAKA**-தென்பண்டரிபுரம்-மைசூர்-சுப்ரமண்யா-உடுப்பி-தர்மஸ்தலம்-ஸ்ரீமூகாம்பிகை-சிருங்கேரி-பேலூர்-ஹலபேடு-சரவணபெலகுலா-12.4.2001 முதல் 6 நாட்கள் டீலக்ஸ் பஸ் ரூ.1350 (மதுரை To மதுரை)
* **KERALA**-மலைநாட்டு திருப்பதிகள்-நம்மாழ்வார் நவதிருப்பதிகள்-குருவாயூர்-காலடி-சோட்டானிக்கரை-தென்பண்டரிபுரம்-வர்க்கலா- 25.4.2001 முதல் 6 நாட்கள் டீலக்ஸ் பஸ் ரூ. 1350. (மதுரை To மதுரை)
* **ANDHRA**- கருட்டபள்ளி-ஸ்ரீகாளஹஸ்தி-திருப்பதி-தண்டாருண்யம்-அகோபிலம்-ஸ்ரீசைலம்-மந்த்ராலயம்-புட்டபர்த்தி-4.5.2001 முதல் 6 நாட்கள் டீலக்ஸ் பஸ் ரூ. 1350. (சென்னை To சென்னை) (மதுரைTo மதுரை 7 நாட்கள் ரூ. 1590)

குமரன் டிராவல்ஸ்

20, வடக்கு சித்திரை வீதி, மதுரை - 625001. போன்: 621519

கிளை: P.V.T.ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், 22, ரெங்கநாதன் தெரு, (முருகன் டெக்ஸ்டைல்ஸ் எதிரில்) தி. நகர், சென்னை – 600 017. போன்: 4323105 & 4342789

அழுறதான்னு புரியலை. ஆனா ஒன்னு மட்டும் நிச்சயம். அந்த மூணு வாரம் எங்களுக்கு சொர்க்கம்தான். அப்பத்தான் எனக்குப் புரிஞ்சுது பொண்டாட்டியை எப்படி நடத்தணும்னு! இன்னிக்கு என்னை நீ அவளை விட்டு விட்டு அமெரிக்காவுக்கு வரச் சொல்றே. என்னாலே முடியவே முடியாது பாலாஜி! எங்க ஜெனரேஷன்லே உங்க அமெரிக்கா மாதிரி ஏழு வருஷத்து அரிப்பு கிடையாது..."

நான் இப்போது அப்பாவின் பேச்சை கையசைத்து நிறுத்தினேன்.

"அப்பா... நீங்க சொல்ற மாதிரியெல்லாம் எங்க வாழ்க்கையிலே நடக்க சான்ஸே இல்லை. அம்மா மாதிரி படிக்காதவ இல்லை என் பொண்டாட்டி. கணவனே கண் கண்ட தெய்வம்னு நினைக்கிற ஜாதி இல்லை ஜெயூ. அதனாலே நீங்க சொல்றது எதுவும் நடக்காது..."

அப்பா ஒரே ஒரு நிமிடம்தான் யோசித்தார். பின்பு கேட்டார். "என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லு. எந்தத் தலைமுறையானாலும் இதுக்குச் சரியான பதில் சொன்னா நிச்சயம் என்ன ப்ராப்ளம்னு புரியும். நீ உன் பொண்டாட்டி வேலையிலிருந்து வருவதற்கு முன்னாடியே வீட்டிற்கு வந்து சமைச்சு வச்சு ஒரு நாளாவது அவளுக்காகக் காத்துக் கொண்டு இருந்திருக்கிறாயா?"

நான் "இல்லை" என்று தலையாட்டினேன்.

"எந்த ஒரு ஞாயிற்றுக்கிழமையாவது உன் பெண்ணை நீயாக வெளியே கூட்டிக் கொண்டு போய் விட்டு, ஜயந்தி! உனக்கு இன்று விடுமுறை. நான் குழந்தையைப் பார்த்துக் கொள்கிறேன். நீ உன் நேரத்தை எப்படி வேண்டுமானாலும் செலவழி என்று சொல்லியிருக்கிறாயா?"

நான் "இல்லை" என்று தலையாட்டினேன்.

"என்னங்கடா! பொண்டாட்டி படிச்சிருக்கணும். வேலை செஞ்சு பணம் கொண்டு வரணும். குழந்தை பெத்துத் தரணும். வீட்டுக்கு வந்தும் சமைச்சு வைச்சு உங்களைக் கவனிக்கணும். ஒரு நிமிஷம் நிற்காம வேலை செய்யணும். ஆனா நீங்க ஆம்பிளைங்க மட்டும் சௌகரியமா இருக்கணும். இது என்ன நியாயம்? யோசிச்சு பார்த்திருக்கியா?"

நான் மௌனமானேன்.

அப்பா தொடர்ந்தார். "என் பொண்டாட்டி தன் நினைவு இருக்கிறவரைக்கும் எனக்காகத்தான் வாழ்ந்தாள். என்னைக் கண்ணின் மணியாக கவனித்துக் கொண்டாள். ஆனா இப்ப அவ ஒரு கைக் குழந்தை மாதிரி. அவளுக்கு நான்தான் அவளைக் கவனிச்சுக்கிறேன்னு கூடத் தெரியாது. ஆனாலும் இப்ப அவளைப் பார்த்துக் கொள்ள எனக்கு ஒரு சந்தர்ப்பம். நீ படிச்சவன். நான் உனக்கு என்ன அட்வைஸ் பண்ண முடியும்? ஆனா ஒன்னு மட்டும் சொல்லுவேன். மகிழம்பூ கேள்விப்பட்டிருக்கியா? மகிழம்பூ முதல்லே அவ்வளவா மணக்காது. நாள் ஆக ஆக அதனோட வாசனைக்கு ஈடே கிடையாது. தாம்பத்தியம்கிறது அப்படித்தான் இருக்கணும். உங்க அமெரிக்க பாஷையிலே சொல்லணும்னா நாள்பட்ட 'ஒயின்'னு வச்சுக்கோயேன்... மகிழம்பூ மாதிரி தாம்பத்யம் மணக்க நீங்க ரெண்டு பேருமே உழைக்கணும்."

அப்பா சொன்னபோது எனக்கு வாழ்க்கையின் இரகசியம் புரிந்தது. நான் காதலித்து மணந்த ஜயந்தியை நினைத்துக் கொண்டே எழுந்தேன். ஒன்றும் பேசாமல் அவர் தோளைத் தொட்டேன். "அப்பா... நீங்க அம்மாவை விட்டு விட்டு வர வேண்டாம். அடுத்த மாசமே நாங்க மூணு பேருமா இங்க வந்து உங்களோட ரெண்டு வாரம் இருக்கிறோம்..." என்றேன்.

அவரும் என் கை மேல் தன் கையை வைத்த போது இருவருக்குமே இனம்புரியாத ஆறுதல் ஏற்பட்டது.

சொல்ல விரும்புகிறோம்

தாயை நினைவு படுத்திய தோழி!

✉ மெகா பரிசுப் போட்டியில், தோராணி எழுதிய முதல் பரிசுக் கட்டுரை என் உள்ளத்தை உருக்கியது உண்மை. 61 வயதான மகனைக் காலனுக்கு வாரிக் கொடுத்து வருந்தும் 80 வயதான என் தாயாரின் நினைவு வந்து நானும் வருந்தினேன். உடனே கோவையிலுள்ள என் தாயாருடன் தொலைபேசி மூலம் பேசி அவருடைய ஆசியைப் பெற்று ஆறுதலடைந்தேன். கட்டுரை எழுதிய என் தோழியே நீ எங்கிருந்தாலும் என் வாழ்த்துக்கள்.

லலிதா ராஜப்பா, சென்னை-94

✉ முதல் பரிசுக் கட்டுரையால் நெகிழ்ந்தேன். 63 வயதாகும் எனக்கு என் சிறு வயதில் நள்ளிரவில் பாயைவிட்டு எங்கோ குளிரில் சுருண்டு படுத்திருக்கும்பொழுது கதகதப்பாக போர்வையால் போர்த்திவிடும் என் அன்னையை, விஷ ஜுரம் வந்து ஊரே என்னை ஒதுக்கி வைத்த காலத்தில் 40 நாட்கள் என் அருகிலேயே இருந்து மணி தவறாமல் மருந்து கொடுத்து பசிக்குக் கஞ்சி கொடுத்து என்னைக் காப்பாற்றிய என் தாயை, காலை காய்ச்சின பாலை விட்டு ஒரிரு உப்புக்கல் போட்டு நன்கு பிசைந்த சாதத்தைக் கொடுத்து நான் படிக்கும் பள்ளியில் இடைவேளையின் பொழுது புளிப்பில்லாமலும் மணத்துடன் கூடிய தயிர் சாதம் கொடுத்த நான் குடியிருந்த கோயிலை நினைவு படுத்தி குலுங்கக் குலுங்க அழவைத்த என் பிரிய தோழியே, அன்பு மகளே நீ எங்கிருந்தாலும் உனக்கு என் ஆசிகள்.

மயிலாடுதுறை, டி.ஆர்.தியாகராஜன்

✉ நடுவர்கள் அனைவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட மிகச் சிரமமான பணியை நடுநிலை தவறாமல் மிகச் சிறப்பாக செய்துள்ளார்கள். எங்கள் குடும்பத்தாரது பாராட்டுகளை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கே. ஜெயலக்ஷ்மி, சென்னை-78.

✉ மஞ்சுளா ரமேஷ் அவர்களின் 'வெளியில் மட்டுமா பூகம்பம்' படித்தேன். வள்ளுவனும்கூட 'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை யென்னும் பெருமை இவ்வுலகிற்கு உண்டு' என்று தனி மனிதனைப் பற்றித்தான் பகர்ந்தான். ஆனால் குஜராத்திலோ ஊர், ஊர் மக்கள் எனக் கூட்டம் கூட்டமாக மண்ணுக்கு இரையானது மிகவும் கொடுமை. ஏன் இப்படி? காரணத்தை, அவ்வளவு எளிதாக நம்மால் அறிய இயலுமா என்ன? ராமகிருஷ்ண பரமஹம்ஸர் உபதேசித்த, 'உப்பினால் செய்யப்பட்ட பதுமை ஒன்று, கடலின் ஆழம் காண முயன்று, கடலினுள் இறங்கி, கரைந்து போன கதைதான் நினைவிற்கு வருகிறது.

சீதா கிருஷ்ணன், சென்னை - 49.

✉ 'அங்க போய்ட்டு வந்தா ஞானி ஆயிடுவாங்க' - ப்ரியாவின் பேட்டியைப் படித்துக் கண் கலங்கிவிட்டது. இளம் டாக்டர்கள் குழு குஜராத் போய் சேவை செய்தது மகத்தானது. அவ்வப்போது பூமி குலுங்கி பயமுறுத்தும் நிலையிலும் சென்றவர்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை.

மீனாட்சி சீனிவாசன், திருத்துறைப்பூண்டி

✉ சரியான உணவு முறையில் பரீட்சையில் தூள் கிளப்பலாம். கட்டுரை, சரியான தருணத்தில் வெளியாகியுள்ளது. மார்ச் மாதம் பரீட்சைகள் நடக்கும் மாதமாயிற்றே. சாக்லேட், மில்க் ஷேக், ஐஸ் கிரீம் இவைகள் டென்ஷனைக் குறைத்து, சக்தி தருபவை என்பதைப் படித்தால் குழந்தைகள் குதியாட்டம் போடுவார்களே.

ராஜலட்சுமி, கரூர்.

✉ 'ஒரு சீரியல் கடிதம்' நெத்தியடி விமர்சனம் என்பதில் சந்தேகமில்லை. சொல்ல விட்டுப்போன கீழ்கண்ட விஷயங்கள் என்ன ஆவது?

1. மெகா சீரியல் எவ்வளவு நாள் இடை வெளிவிட்டு பின்பு பார்த்தாலும் கதையில் எந்த மாற்றமும் இன்றி எளிதாகப் புரிந்து விடும். எனவே தினமும் பார்த்தால்தான் தொடர்ச்சி என்ற பிரச்னையே கிடையாது.

2) இத்தனை நாளும் மனைவியைக் கொடுமைப்படுத்துதல் பார்க்கில் உட்கார்ந்து பீச்சில் ஓடி காதல் செய்து கல்யாணம் ஆன பின் தலையில் துண்டை கட்டிக் கொண்டு (தலைக்குக் குளித்ததற்கு அடையாளமாக) அடக்கமான மருமகள் சென்ற சீசன்போய் இப்போது எல்லா சீரியலிலும் குழந்தை இல்லாதவர்களை கொடுமைப்படுத்தும் காலகட்டம் (உ.ம். சித்தி, குலவிளக்கு..) தேவைதானா? நிஜ வாழ்க்கையில் குழந்தை இல்லாதவர்கள் இதை எல்லாம் பார்த்து வருந்தணுமா?

இன்றைய கால கட்டத்தில், குழந்தைகள், குடும்ப விசேஷங்களில் யாரும் இவ்வளவு கேவலமாக அவமானப் படுத்துவதில்லை. இதே போல் விதவைகளை சித்தரிக்கும் போது வெள்ளைப்புடவை பாழ் நெற்றி அல்லது விபூதி என்று காட்டுகிறார்கள். எவ்வளவோ இடத்தில், மகன் இறந்தாலும், மருமகளுக்கு மறுமணம் செய்து வைக்கும் பெரிய மனதும் பொட்டு வைத்துக் கொள்ளச் சொல்லி வற்புறுத்தும் அன்பான புகுந்த வீட்டாரும் இருக்கிறார்கள். நமது டி.வி. சீரியல்காரர்கள் குரூரமான கற்பனை காட்சிகளில் தான் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

விசேஷ நாள் கிழமைகளில் இந்த சீரியல்களை தப்பித் தவறிக்கூட போடக்கூடாது. அதிகபட்சம் அமங்கலமான பேச்சு, கதறிக்கதறி அழுகை, பார்வையால் கட்டெரித்தல். ஆரோக்கியமான அணுகுமுறை இல்லை என்ற வருத்தம்.

சந்திரா ஜானகிராமன், சென்னை - 4

✉ எங்கள் பிள்ளைகளின் நலன் கருதி 'சரியான உணவு முறையால் பரீட்சையில் தூள் கிளப்பலாம்.' என்ற அரிய கட்டுரையை சரியான நேரத்தில் பயனுள்ளதாக கொடுத்து விட்டீர்கள்.

ஆர். வேலம்மாள், மதுரை-16

இன்டர்நெட்டால நமக்கு நேரடியா ஏதாவது பிரயோசனம் உண்டா?

உண்டு. சாதாரணமாகவே பெண்கள் 4 கடை ஏறி இறங்கி, 2 பேரை விசாரிச்சு அப்புறம்தான் எதையும் வாங்குவாங்க. அது பட்டுப்புடவையானாலும் சரி, குழந்தைங்களுக்கு dress ஆனாலும் சரி, நல்ல பொருளை நல்ல விலையில வாங்கணும்னுதான் நாம விரும்பறோம்.

அந்த வகையில இன்டர்நெட்ல freebeezindia.comங்கிற சைட் ரொம்ப யூஸ்ஃபுல்ஆ இருக்கு. சென்னையில இருக்கிற ஒரு 80 – 90 கடைகள் இதுல விளம்பரம் பண்ணியிருக்காங்க. இதுல முக்கியமான விஷயம் என்னன்னா அத்தனை கடைகள்ளையும் ஏதாவது freeயா தராங்க– free கிஃப்ட், அல்லது தள்ளுபடி, இரண்டு வாங்கினா ஒண்ணு free– இந்த மாதிரி. freebeezindia.comல இது ஒரு தனி அட்வான்டேஜ். இது விளம்பரங்களுக்குன்னே ஒரு சைட். ஆனா விளம்பரத்துல ஏதாவது freeயா தரலைனா இந்த சைட்ல எடுத்துக்கவே மாட்டாங்க! அதனால நாம எது வாங்கிறதுனாலும் முதல்ல freebeezindia.comல அந்த பொருள் எங்க நல்ல விலையில கிடைக்கும்னு தெரிஞ்சுகிட்டு வாங்கலாம்.



freebeezindia.comமை எப்படி பார்க்கிறது?

எந்த இன்டர்நெட் சென்டர்லயும் பத்தே ரூபாய் செலவுல பார்க்கலாம். ரொம்ப சுலபம். உங்க பேரு, e-mail id எதுவும் கொடுக்க வேண்டாம். போனோமா, பார்த்தோமான்னு வந்துடலாம். அதான் ஆயிரக்கணக்கில மக்கள் வந்து பார்க்கிறாங்க. எந்த கடை பிடிச்சிருக்கோ அங்க போய் வாங்கறாங்க. வெய்யில்ல ஏறி இறங்கற சிரமமும் இல்லை. நல்லா விசாரிச்சு வாங்கினோம்ங்கிற திருப்தியும் உண்டு.

நீங்களும் freebeezindia.com போய் பாருங்களேன். இன்டெர்நெட்டால நமக்கு என்ன லாபம்னு தெரிஞ்சுடும்!

FREEBEEZ india

Ph: 8230308 / 09

Visit us @

www.freebeezindia.com


The 'ads only' portal with nothing but deals!

அக்ஷர புத்ரி!



வடக்கு கேரளத்தின் மல்லப்புரம் ஜில்லாவில் உள்ள துருணங்காடி என்ற எளிதில் தொடர்புகொள்ள முடியாத கிராமத்தில், மூசக்குட்டி பியாகுட்டி என்ற முஸ்லீம் தம்பதிகளுக்கு ஆறு பெண்களில் இரண்டாவது பெண்ணாக பிறந்தவர் திருமதி. ரபையா.

இந்த வருடம் இந்திய அரசாங்கத்தின் மதிப்பிற்குரிய "கண்ணகி ஸ்திரீ சக்தி புரஸ்கார்' பட்டத்தால் கௌரவிக்கப்



பட்டிருக்கிறார்.

கேரள மாநில மக்களால் "அக்ஷர புத்ரியாக" (எழுத்துக்களின் மகள்) மதிக்கப்படுபவர் ரபையா.

இரண்டு காலும் நடக்க முடியாத ஊனத்துடனும் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு சக்கர நாற்காலியில் வளையவந்து கொண்டிருக்கும் இவர் சாதித்தது என்ன?

1990ம் ஆண்டு முதன் முதலாக கல்வியறிவு இயக்கத்தைக் கொண்டு

வந்தபோது ரபையா தன்னுடைய கிராமத்தையே தத்து எடுத்துக் கொண்டு படிப்பறிவு இல்லாத கிராமப் பெண்களைத் திரட்டி கல்வி அறிவின் முக்கியத்துவத்தைப் புகட்ட ஆரம்பித்தார். அவருடைய கிராமத்தில் முக்கால்வாசி மக்கள் முஸ்லீம் இனத்தினர் மற்றும் வறுமை கோட்டிற்கு மிகவும் கீழே உள்ளவர்கள்.

இவருடைய கல்வியறிவு இயக்கத்தின் முதல் உறுப்பினர்கள் இவருடைய

[redacted]



[redacted]

அம்மாவும் இரண்டு பாட்டிகளும்தான். முதலில் படிப்பதற்கு மறுத்த இவருடைய பாட்டி தன் பிள்ளைக்குக் கடிதம் எழுதச் சொல்லி வற்புறுத்தியபோது, தன்னிடம் படித்தால்தான் எழுதித்தருவேன் என்று கண்டிப்பாக மறுத்துவிட்டாராம் ரபையா. இன்று தானே தன் பிள்ளைக்குக் கடிதம் எழுதும் அளவிற்குத் தேறிவிட்டார் பாட்டி. ஏழு உறுப்பினர்களுடன் ஆரம்பித்த இவருடைய இயக்கத்தால் இன்று நூற்றுக் கணக்கான பெண்கள் பயன் அடைந்து வருகிறார்கள்.

உடல் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்கள், மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள், பெண்கள் மற்றும் கீழ் நிலையில் வாழவே தத்தளித்துக் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு இவருடைய இயக்கம் ஒரு வரப்பிரசாதமாக உதவி வருகிறது. இவருடைய சேவைக்காக UNDP என்ற அகில உலக "UNஅவார்ட்" மற்றும் "ஜெய்ஸீ" அவார்ட் கிடைத்திருக்கிறது.

இவருக்குக் கிடைத்த பல பட்டங்களால் தோழிகளும், சுற்றத்தினரும், குடும்பத்தாரும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்க, இவரோ "நம்முடைய எந்தச் செயலும் புகழ், பட்டங்கள் பெறும் நோக்கத்துடன் துவங்கப்படக் கூடாது" என்கிறார். "நடைமுறையில் பெண்களுக்குச் சில கட்டுப்பாடுகள் அல்லது தடைகள் இருந்தாலும் நம்முடைய தோல்விகளுக்கு எப்பொழுதும் ஆண்களைக் குற்றம் சாட்டுவது தவறு" என்கிறார்.

"ரபையாவின் தன்னம்பிக்கையையும், மன உறுதியையும் பார்த்துத்தான் நாங்களே வாழக் கற்றுக் கொண்டோம்" என்கிறார்கள் இவருடைய பெற்றோர்.

— சியாமளா சுவாமிநாதன்

தாய் - தந்தை
மகனுக்கு வீட்டிற்குள்
சொல்லிக் கொடுப்பது
வெளி உலகம்
கேட்கமாயிருக்கலாம்.
ஆனால் அதனுடைய
விளைவுகள் பின்
வரும் சந்ததியினரால்
உணரப்படும்.
- ஆர். வசந்தா



இந்தப் புன்னகை

மெகா பரிசுப் போட்டியின் மூன்றாவது தலைப்பான, 'இந்தப் புன்னகை என்ன விலை?' பரிசுக் கட்டுரைகளைப் பரிசிலிக்க நடுவர் குழுவை இம்முறை சென்னையிலேயே தேர்வு செய்தோம். சென்னையிலிருந்து நிறைய வாசகிகள் நடுவராக இருக்க விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருந்தார்கள். இதில் ஐந்து பேரை தேர்வு செய்தோம். மைதிலி வேணுகோபால், சரஸ்வதி, லக்ஷ்மி ரகுகுமார், மோ. முத்துலட்சுமி மற்றும் காமாட்சி சுந்தரி. இவர்கள் ஐந்து பேரையும் இரண்டு குழுக்களாகப் பிரித்து நமது ம. மலர் அலுவலக வளாகத்திலேயே கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்க அழைத்திருந்தோம்.

நூற்றுக்கணக்கில் குவிந்திருந்த போட்டிக் கட்டுரைகள் அனைத்தையும் ஐந்து நடுவர்களும் ஒவ்வொரு குழுவும் முறையே இரண்டு நாட்கள் எடுத்துக் கொண்டு ஒன்று விடாமல் (மூச்சு விடாமலும்தான்) எடுத்துப் படித்து மனமளவென்று மதிப்பெண்கள் போட்டு முடித்து நம்மை அசரவைத்து விட்டார்கள்.

இம்முறை நடுவர் குழுவில் அனைவரும் எழுத்துத் துறையில் பரிச்சயம் பெற்றவர்களாக இருந்தனர். இராமகிருஷ்ணா பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற செல்வி சரஸ்வதி பல ஆன்மீகக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அதே போல் ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்ற மற்றொரு நடுவர் காமாட்சி சுந்தரி சிறுவர் மாத இதழ்களிலும் வானொலியிலும் தனது படைப்புகளைத் தந்துள்ளார்.

மாதர் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, கவிதை, கட்டுரைப் போட்டி என்று பல பரிசுகளைத் தட்டிச் செல்லும் மோ. முத்துலட்சுமியோ பத்திரிகைகளில்



பல போட்டிகளில் பங்கேற்ற அனுபவம் பெற்றவர். சைக்காலஜியில் பட்டம் பெற்றிருக்கும் மைதிலி வேணுகோபால் ஆன்மீகப் புத்தகங்களை எழுதி வெளியிட்டு வருகிறார். மற்றொரு நீனம்

• சரஸ்வதி, மைதிலி வேணுகோபால்



• முத்துலட்சுமி, காமாட்சி சுந்தரி, லக்ஷ்மி ரகுகுமார்



எழுத்தாளரான லக்ஷ்மி ரகுகுமார் பத்திரிகைகளில் சிறுகதைகளை எழுதி வருகிறார். மொத்தத்தில் இந்த நடுவர் குழு 'எழுத்தாளர்கள் நடுவர் குழுவாக' அமைந்திருந்தது.

இறுதி நாளில் ஐந்து நடுவர்களும் ஒன்றுசேர, ஆசிரியர் குழுவுடன் இணைந்து பரிசுக் கட்டுரைகள் தேர்வு செய்யப்பட்டன. பரிசுக் கட்டுரைகள் வாசக நடுவர் குழுவால் அலசப்பட்டபோது நிறைய விஷயங்களை நம்முடன் பகிர்ந்து கொண்டனர். கீழே விழுந்து அடிபட்ட போது புன்னகைத்தது, கிண்டல் என மற்றவர்களின் துன்பம் கண்டு புன்னகைத்ததை நிறைய பேர் எழுதியிருந்தார்கள், இது தவறான மனப்போக்கு என்றார்கள். 'நாம் எழுதும் போது நல்லா இருக்கேன்னு நினைக்கிறோம். ஆனால் இப்படிப் படிக்கும் போதுதான் எப்படி எழுதினால் சுவையாக இருக்கும், எப்படி எழுதக் கூடாது என்பதெல்லாம் தெரிகிறது' என்றார்கள். இதில் சிறுகதை எழுத்தாளரான லக்ஷ்மி ரகுகுமார் இந்தப் போட்டிக் கட்டுரைகளைப் படித்த பொழுது நிறைய கதைகளுக்கான 'கரு' கிடைத்ததாக தெரிவித்தார். மொத்தத்தில் மறக்க முடியாத அனுபவமாக அமைந்து விட்ட இந்த நிகழ்ச்சி மீண்டும் தொடர வேண்டும் என்கிற விண்ணப்பத்துடன் நம்மிடம் விடைபெற்றனர் வாசக நடுவர்கள்.

'இந்தப் புன்னகை என்ன விலை?'



என்ன விலை?

கட்டுரைகளில் பொதுவாக கல்யாணம் ஆன புதிதில் நிகழ்ந்த இக்கட்டான சூழ்நிலையைச் சமாளித்த விதம் பற்றி அநேகம் பேர் எழுதியிருந்தனர். அதே போல் குஜராத் பூகம்பம் சம்பவம் பற்றியும் நிறைய வாசகிகள் எழுதியிருந்தனர். அலுவலகத்தில், பயணத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் என்று நிறைய சுவாரஸ்யமான விஷயங்களும் இடம்பெற்றிருந்தன. இதில் பரிசுக்குரிய கட்டுரைகளைச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்துத் தந்து இந்த மூன்றாவது போட்டி முடிவை புன்னகையுடன் முடித்துத் தந்த பெருமை நமது சென்னை வாசக நடுவர்கள் குழுவையே சாரும். இனி பரிசுக் கட்டுரைகள் –

புகைப்படங்கள் : **ஜி. சுரேஷ்**





கோவை மத்திய சிறைச்சாலையில் இரண்டு மாதங்கள் டெபுடேஷனில் மருத்துவ அதிகாரியாக நான் பணியாற்றிய நாட்கள் அவை. 1945 என்று நினைக்கிறேன். பல குற்றங்களுக்காக சிறைக் கைதிகளாக இருக்கும் பலதரப் பட்டவர்களுக்கிடையில் நானும் ஒரு கைதியாக உணர்ந்த நாட்கள் அவை.

பிக்பாக்கெட், கொலை, கொள்ளை...

ஒரு பிரகாசமான காலைப் பொழுது. என் இளம் மனைவியுடன் கடைத் தெருவுக்குச் சென்றேன். முதல் தேதி - நோட்டுக் கற்றைகளால் உப்பியிருந்தது என் சட்டைப் பை. திடீரென்று ஒரு குரல் : "வணக்கம் டாக்டரய்யா..." பதில் வணக்கம் சொன்னேன். ஆள் யாரென்று அடையாளம் தெரியாமலே. அடுத்து அவன் சொன்னது என்னை திடுக்கிட வைத்தது. "ஐயா... ஜேப்பியிலிருக்கும் ரூபாய் நோட்டை பத்திரமாக உள்ளே தள்ளுங்கய்யா..."

அவனுக்கு நன்றி சொல்லிவிட்டு அவசரமாக நோட்டுக் கற்றையை உள்ளே தள்ளினேன்.

"தாங்க்ஸ்ப்பா... நீ?"

அவன் முகத்தில் அர்த்தம் நிறைந்த புன்னகை.

"என்னைத் தெரியலீங்களா டாக்டரய்யா?



கோவை ஜெயிலில் ஜேப்படிக்கேஸில் பலமுறை கைதியாக இருந்திருக்கேன். உங்களை மறக்க முடியுமா? இப்போது கூட இன்னொரு முறை உங்களை 'இதுமாதிரி' பார்த்தால் எனக்கே கை துறுதுறுக்கும் போல இருக்குங்க. ஆனா அடுத்தவாட்டி ஜெயிலுக்குப் போனா எங்களை ஆதரவா கவனிச்சுக்க உங்களை மாதிரி டாக்டர் இருக்க மாட்டாருங்களே..."

சட்டென்று என் கண்களும் மனசும் நிறைந்தது. உதட்டில் புன்னகை மலர்ந்தது. விலைமதிக்க முடியாத புன்னகை.

இதன் பிறகு இரண்டு மாதங்களில் என் வேலையை நிரந்தரமாக்க, நான் ஒரு இன்டர்வ்யூவுக்காக சென்னை வர நேர்ந்தது. மேல் அதிகாரிகளின் வழக்கமான கேள்விகளுக்குப் பிறகு என் சான்றிதழ்களைப் பார்வையிட்ட அதிகாரி ஒருவர் கிண்டலாக ஒரு கேள்வி கேட்டார்.

''ஜெயிலில் வேலை பார்த்தீர்கள். நற்சான்றிதழ் ஏதாவது... யார் தந்திருக்கப் போகிறார்கள்? எந்தக் கைதியாவது...''

சட்டைப் பையை மிக நிதானமாகத் தடவி அன்று காலை எனக்கு வந்திருந்த இரண்டு அஞ்சலட்டைகளை அவரிடம் நீட்டினேன்.

கடிதங்களைப் படித்த அவர் முகம் சடாரென்று மாறியது. ''ஐ'யம் ஸாரி.. இப்படி ஒரு கேள்வியை உங்களிடம் நான் கேட்டிருக்கக் கூடாதுதான். டாக்டர் நாராயணன்! உங்கள் பணியை உடனே நிரந்தரமாக்கும்படி சிபாரிசு செய்கிறேன்.''

அந்தக் கடிதங்களில் அப்படி என்னதான் இருந்தது? ஒரு கைதிக்கு மாதமொன்றுக்கு ஒரே ஒரு போஸ்ட் கார்டு தரப்படும் ஜெயிலில்.



இரண்டு ஆயுள் தண்டனைக் கைதிகள் எனக்கு அப்படி எழுதிய அன்புமடல்கள் அவை. நான் ஜெயிலில் பணியாற்றியபோது அவர்களுக்குக் கிடைத்த அந்த அன்பும் ஆதரவும் அரவணைப்பும், எனக்குப் பிறகு எவரிடமிருந்தும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று உருக்கமாக எழுதியிருந்த கடிதங்கள் அவை. ஒவ்வொரு கார்டிலும் சுமார் பதினைந்துக்குக் குறையாத கைதிகளின் கையொப்பம்.

கடிதங்களைப் படித்த மற்ற அதிகாரிகளின் முகங்களும் புன்னகையால் விகசித்தன. விடைபெற்று எழுந்து அவர்களுடன் கைகுலுக்கிய என் முகத்திலும், விலைமதிக்கவொண்ணாத அதே புன்னகை.

– டாக்டர். எம்.ஆர். நாராயணன்,
சென்னை – 41.





நான் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

லயன் சங்கம் எங்கள் ஊரின் அனைத்துப் பள்ளிகளுக்கும் பேச்சுப் போட்டி ஒன்றை அறிவித்தது. ஒரு பள்ளியிலிருந்து ஒருவர் மட்டுமே பங்குகொள்ள முடியும். எங்கள் பள்ளியின் சார்பாக எப்போதும் போட்டிகளில் பரிசு பெறும் நான் பங்குபெற அனைவரும் ஒப்புதல் அளித்தனர். மிகுந்த கவனத்துடன் நான் என்னைத் தயாரித்துக் கொண்டிருந்தேன்.

போட்டிகள் இனிதே நடந்து முடிந்தன. அறிவிப்பாளர் முடிவுகளை அறிவிக்க

மேடைக்கு வந்தார். அனைவரின் முகத்திலும் எதிர்பார்ப்பு. அறிவிப்பாளர் "ஷீலா" என்று என்னுடைய பெயரைக் கூறியதும் வெற்றிக் களிப்போடு மேடை ஏறினேன். நடுவர் அவர்கள் என்னைப் பாராட்டி பரிசளித்தார். வெற்றிப் புன்னகையோடு அனைவருக்கும் நன்றி தெரிவித்து இறங்கும் வேளையில் அறிவிப்பாளர் என்னை நிறுத்தி,

"மன்னிக்கவும், ஒரு சிறு தவறு நடந்து விட்டது. இந்தப் போட்டியில் பரிசு பெற்றது வேறொரு பள்ளியைச் சேர்ந்த மாணவி" என்று தெரிவித்தார்.

என் இதயத் துடிப்பு அப்படியே ஒரு வினாடி நின்று விட்டது. அனைவரின் கண்களும், மேடையிலிருந்த என் கண்களைப் பார்த்தன. கண்ணீர் பெருக்கெடுக்கும் முன் என்னை



நான் சமாதானப்படுத்த வேண்டும். துக்கம் தொண்டையை அடைக்கிறது. கஷ்டப்பட்டு சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, ஏதும் பேச முடியாமல் விழிக்கிறேன். கண்ணைச் சிமிட்டாமல், அகல விரித்துக் கொண்டேன். ஒரு முறை சிமிட்டினாலும், கண்களே அருவியாக மாறிவிடும்.

(போட்டியில் பங்குபெற்ற மாணவ, மாணவியர்களின் பட்டியலில் நான் முதல் இடத்தில் இருந்தேன். அந்தத் தாளை தெரியாமல் அறிவிப்பாளர் பயன்படுத்தி விட்டார்.) "இந்தத் தவறுக்காக நான் மிகவும் வருந்துகிறேன்" என்று சபையில் மன்னிப்புக் கோரினார்.

பிறகு நடுவர் அவர்கள் என்னையே பரிசு பெற்ற என் சக தோழிக்கு பரிசளிக்குமாறு கூறினார். அப்போது கூட்டத்தில் என் தமிழ் ஆசிரியையைப் பார்க்க நேர்ந்தது. எனக்கு மிகவும் பிடித்தவர்.

"வெற்றியும் தோல்வியும் சகஜம். அதுமட்டுமில்லாமல் உன்னுடைய வெற்றியை உன் சகதோழிக்கு, சகோதரிக்கு விட்டுக் கொடுக்கிறாய், அது உனக்குப் பெருமை யல்லவா?"

தமிழ் ஆசிரியர், மேடையில் இருக்கும் என்னைப் பார்த்துச் சிரிக்கும் போது, அவருடைய கண்கள் இப்படிச் சொன்னது. என்னுடைய துன்பங்கள் பனிபோல மறைந்தன. என்னையும் அறியாமல் புன்னகைத்து, என் தோழிக்குப் பரிசளித்தேன். நான் வெற்றி பெற்றிருந்தாலும் இந்த அளவு பாராட்டையும், புகழையும் பெற்றிருக்க மாட்டேன். நான் ஒரு நிமிடம் கலங்கினாலும், மறுநிமிடம் என் முகத்தில் பூத்த அந்தப் புன்னகையே அனைவரின் பாராட்டுகளுக்கும் உள்ளாகியது. பிறகு மேடையிலும் அதையே மீண்டும் மீண்டும் சொல்லிப் பாராட்டினார்கள். அந்த நேரத்தில் எனக்குத் தோல்வியை ஏற்கும் மனப்பக்குவம் வந்து விட்டது.

இந்த ஒரு நிமிட புன்னகை விலைமதிப்பற்ற பாராட்டுக்களோடு நற்பண்புகளையும் கற்றுக் கொடுத்தது.

1. தோல்வியே வெற்றிக்கு முதற் படி.

2. எத்துன்பத்திலும் மலர்ந்த முகத்துடன் இருக்கும் ஒருவர், வாழ்க்கையில் மேலும் மேலும் உயர்வார்கள்.

3. வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் முன்மாதிரியாகவும், முன்னெச்சரிக்கையாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

– ஷீலா, ஆரணி.



புரட்சியின் ஆரம்பம்!
நம் நாட்டில் முதன் முறையாக..
உட்புற வெளிப்புற
எமல்ஷன் பெயிண்ட்
Agsar
Ranger
INSIDE OUTSIDE EMULSION
EXTRA ENDURANCE
வழங்குபவர்கள்
Agsar
PAINTS PVT. LTD.
ஒரு லிட்டர் விலை
ரூ.99/-
மட்டுமே!



கண்ணீரோடு ஒரு புன்னகை





நான் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் கணக்கராக வேலை பார்த்து வந்தேன். ஒரு சமயம் எங்கள் வங்கியைப் பற்றி 'நாட்டுடமையாக்கப்பட்ட வங்கி என்றாலும் நஷ்டத்தில் இயங்கியதால் மூடிவிடுவார்கள்' என்ற வதந்திகள்.

அது சமயம், என் கௌண்டருக்கு நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த பெண் வந்தாள். அவள் அதிகம் படிக்காத பெண். என் அறிவுறுத்தல் காரணமாகச் சிறுகச் சிறுக சேமித்துத் தன் பெண் கல்யாணத்திற்காக, தன் வீட்டுக்குக் கூடத்தெரியாமல் நிரந்தர வைப்பு நிதியில் (பிக்ஸட் டெப்பாஸிட்) பணம் போட்டு வைத்திருந்தார். என்னிடம் மிகவும் நம்பிக்கையும், என்னால்தான் தனக்குச் சேமிக்கும் பழக்கம் வந்தது என்றும் சொல்லுவாள்.

அன்று வந்தவள் தன்னுடைய எஃப்டியை மெசூர் ஆகும் முன்பே முடித்துத் தரும்படியும் தன் மகளுக்குத் திருமணம் கூடும் போல இருப்பதாகவும் சொன்னாள். அவள் என்னை



நேருக்கு நேர் பார்க்காமல் பணத்தைக் கேட்டது, அவளுடைய எண்ணத்தை வெளிக்காட்டியது. எனக்கு அவளுடைய பயம் புரிந்தது.

நான் அவளிடம், ''எங்கள் வங்கி அரசு வங்கி. உனக்குத் தேவையெனில் உடன் கணக்கை முடித்துத் தருகிறேன். இன்னும் 2 மாதங்களில் முதிர்வடையுமுன் எடுத்தால் வட்டி நஷ்டம். நீ ஒவ்வொரு முறை வரும் போதும் எனக்கு நன்றி கூறுவாய். உன் தோழியான என் பணம், மற்றும் என் வாழ்க்கையே இந்த வங்கியுடன் பிணைந் துள்ளது'' என்று கூறினேன். ஆனால் வற்புறுத்தவில்லை. என்ன தோன்றியதோ, ''சரிங்க, நாளை வந்து வாங்கிக் கொள்கிறேன்''

என்று கூறிச் சென்று விட்டாள்.

மறுநாள் அவளைக் கண்டதும், அவளுடைய கணக்கை ப்ரீகுளோஸ் பண்ண ஏற்பாடு செய்தேன். என் அருகில் வந்த அவள், "அம்மா, இப்ப எனக்குப் பணம் தேவையில்லை. இந்தப் பணத்தைத் தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் போட்டால் பணம் கூட வரும், உங்கள் வங்கியும் நட்டத்தில் இருப்பதால் பணம் கிடைக்காமல் போய்விடும் என்று அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என்னை பயம் காட்டினார்கள். அதனால் உங்களிடம் பொய் சொன்னேன், பணத் தேவை என்று. வீட்டுக்குச் சென்று யோசித்த பொழுது நீங்கள் நம்பிக்கையானவர். உங்கள் வார்த்தை உண்மையானது என்று உணர்ந்து விட்டேன். அதனால் பெண் கல்யாணத்தின்போதே எடுத்துக் கொள்கிறேன்... எனக்கு மற்றுமொரு மாதம் 200 ரூ. போடும்படியான கணக்கை துவக்கிக் கொடுங்கள்" என்றாள். எனக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

இது நடந்து பத்து நாள் இருக்கும். அன்று கடைத் தெருவில் என் கையைப் பற்றிய அந்தப் பெண்ணின் முகத்தில் புன்னகை, கண்களில் கண்ணீர். புரியாமல் விழித்தேன்.

"அம்மா, உங்கள் வார்த்தையைக் கேட்காமல் கஷ்டப்பட்டு சேர்ந்த அந்தப் பணத்தை எடுத்து அந்த நிதி நிறுவனத்தில் போட இருந்தேனே. போட்டிருந்தால் அடுத்த மாதம் வைத்துள்ள என் பெண் கல்யாணம் நின்று போயிருக்கும். அந்த நிதி நிறுவனம் மூடப்பட்டு, என் அக்கம் பக்கம் உள்ளவர்கள் பணத்தை இழந்து தவிக்கிறார்கள். இந்தச் செய்தி வந்துள்ள அதே நாளிதழில் உங்கள் வங்கி இல்லை இல்லை நம் வங்கி லாபம் ஈட்டத் தொடங்கி வளர்ச்சி காணத் தொடங்கியுள்ளது என்று என் மகள் படித்துச் சொன்னாள். உங்களுக்குத்தான் நான் நன்றி கூற வேண்டும்" என்றாள்.

கண்ணீருடன் கூடிய அந்தப் புன்னகை என் சேவைக்குக் கிடைத்த பரிசாக என்னை இன்றும் மகிழ்விக்கிறது.

— சபரி கண்ணன்,
சென்னை — 20.

அவன் வகுப்புத் தேர்வுகளில் நல்ல மதிப் பெண்கள் வாங்கும்போதெல்லாம் அவனை உற்சாகப்படுத்துவதற்காக ஒரு தொகையை அவனுக்குக் கொடுப்பார்.

அவனுடைய ஓய்வு நேரங்களில் விளை யாட்டை முடித்துக் கொண்டு உண்டியலில் அவன் சேர்த்து வைத்திருக்கும் தொகையை எண்ணிப் பார்த்து 100 ரூபாய் சேர்ந்தால் அதை உடனே அம்மாவிடம் கொடுத்து காந்தித் தாத்தா படம் போட்ட ரூபாய் நோட்டை வாங்கிப் பெருமையாக உண் டியலில் சேர்த்து விடுவான். உண்டியலில் சேர்த்த பணத்தில் அவனுக்குப் பிடித்த பொருட்கள் வாங்கிக் கொள்வான். இந்த வருடம் அவனுடைய குறிக்கோள் சைக்கிள் வாங்குவது. சென்ற மாதத்தில் அவனுடைய உண்டியலில் இருந்த தொகையை எண் ணிப் பார்த்ததில் ரூ. 1000/- இருந்தது. எனவே இந்த மாதத்தில் சைக்கிள் வாங்கு வதாகத் திட்டம் போட்டு வைத்திருந்தான்.

கடந்த 26ம் தேதியன்று அவனுடைய பள்ளியில் குடியரசு தின விழாவில் கலந்து கொண்டு வீடு திரும்பியவன் குஜராத் பூகம் பத்தைப் பற்றி தொலைக்காட்சியிலும், செய்தித்தாள்களிலும் பார்த்தும், படித்தும் தெரிந்து கொண்டான். அவனுடைய பிஞ்சு உள்ளத்தில் மகாத்மா காந்தி பிறந்த மண்ணுக்கு ஏற்பட்ட இயற்கையின் கொடுமை ஆழமாகப் பதிந்து விட்டது. தன் னுடைய உண்டியலில் அவன் ஆசை ஆசையாகச் சிறுகச் சேர்த்து வைத்த ஆயிரம் ரூபாயை அப்படியே எங்கள் அம்மா விடம் கொடுத்து, "அம்மா, காந்தித் தாத்தா ரூபாயெல்லாம், காந்தித் தாத்தா ஊருக்கே போகட்டும்" என்று சந்தோஷமாகக் கொடுத்த போது எங்களுக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கும், பெருமிதத்திற்கும் அளவே இல்லை.



அவன் கொடுத்த நூறு ரூபாய் நோட்டு களில் கள்ளமில்லாமல் புன்னகை புரிந்த மகாத்மா காந்தியடிகள் மானசீகமாக எங் களை வாழ்த்தியது போல உணர்ந்து மெய் சிலிர்த்துப் போனோம். இதுபோல இன்னும் எத்தனையோ குழந்தைகள் தங்கள் சேமிப்பை மனமார நிவாரண நிதிக்குக் கொடுத்திருப்பார்கள். அத்தகைய பிஞ்சு உள்ளங்களில் மலர்ந்த மனிதநேயம் நம் அனைவரின் இதயங்களிலும் புன்னகையை பரப்பட்டும்.

– ஆர். நித்யா, நாமக்கல்.

ஒரு குழந்தை

"எனக்கு எப்போ ரிடையர்மெண்ட்?" சிரித்தபடிதான் கேட்டாள் பாகிரதி. ஆனால் எனக்குத்தான் திடுக்கிட்டது.

கீழே பர்த்தில் உறங்கிக் கொண்டிருக்கும் மனைவியின் முகத்தைக் குனிந்து ஒரு தடவை உற்றுப் பார்த்தேன்.

ஒரே தாள லயத்தில் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தது அந்த அதிவேக எக்ஸ்பிரஸ். நெற்றியில் பளிச்சிட்ட குங்குமம், ரயில் பெட்டியின் மங்கிய நீல ஒளியில் லேசாக மின்னியது.



ஜெயந்தி பத்மநாபன்



ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த அந்த எளிய முகத்தில், அமைதியையும் மீறி ஒரு சோர்வு தென்பட்டது.

'என்ன வயசிருக்கும் இவளுக்கு? ம்... ஒரு நிமிஷம்... நைன்டீன் ஃபிப்டி ஃபோர்ல எனக்குக் கல்யாணம் ஆகும் பொழுது இவளுக்குப் பதினெட்டு! இருபத்தியோரு வயசு எனக்கு! அதுவும் ஆச்சே இப்போ நாப்பத்தாறு வருஷம்! அப்படியென்றால் இவளுக்கு அறுபத்து நாலு ஆகிறதோ இப்ப? ஆமா! வயசாகி விட்டதுதான் இவளுக்கு!' மெல்லிய புன்னகை ஒன்று என்னையும் மீறி என் முகத்தில் நிறைந்தது.

மறுபடியும் கழுத்தைக் கஷ்டப்பட்டு வாகாகத் திருப்பி, பாகீரதியின் தலைக்கருகில் இருந்த ஜன்னல் தாழ்ப்பாள் சரியாகப் போட்டிருக்கிறதா என்று கூர்ந்து பார்த்தேன். 'சரியாகத்தான் இருக்கிறது. குளிர்க் காற்று அடிக்கவில்லை பாவம்!' என்று திருப்தியுடன் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு திரும்பிப் படுத்துக் கொண்டேன்.

'சின்னப் பெண் என்ன அழகாக இருந்தாள் அப்போ. பெரிய கண்களும், நீள முடியுமாக! இப்பொழுதெல்லாம் முடியெல்லாம் கொட்டிப் போய் எப்போதும் ஒரு கோடலி முடிச்சு! ஒரு கின்னு பூவை அவசரமாக சொருகிக் கொள்கிறாள், அவ்வளவுதான்.

என் அம்மா, அப்பா, என்

நீங்கள் நல்
உங்கள் மு
உலகத்தரத்திற்கு இல

கிளாசிக

சென்னையின் மிகசு





சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் (CMDA) அங்கீகாரம் பெற்ற வீட்டு மனைகள், 800 சதுர அடி முதல் விற்பனைக்கு உள்ளன.

உங்கள் மனை வாங்கவும் மற்றும் வீடு கட்டவும் **CITI Bank, HDFC** மற்றும் இதர நிதி நிறுவனங்களில் தங்கள் தகுதிக்கு ஏற்றபடி கடன் வசதி பெறலாம்.

இடம்

சென்னை அடையார் பழைய மகாபலிபுரம் சாலையில் சோழிங்கநல்லூர் என்னும் புறநகர் பகுதியில் பசுமையான இயற்கை சூழலில் அமைந்து வளர்ந்து வரும் மாபெரும் குடியிருப்பு. புதிய 4 வழி 'IT HIGHWAY' யும் முடியும் தருவாயில் உள்ளது.

வசதிகள்

அகலமான சாலைகள், தண்ணீர், மின்சாரம், தொலைபேசி, கேபிள் டிவி, சாலை விளக்குகள், நிழல் தரும் மரங்கள், சுற்றிலும் மதிர்சுவர், மற்றும் வழிபாட்டு மையமும் உள்ளன.

சுற்றுச் சூழல்

பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், வங்கிகள், வணிகத் தளங்கள், தொழில் நுட்ப நிறுவனங்கள் சென்னைக்கு அருகில் அதி விரைவாக வளர்ந்து வரும் புறநகர் பகுதி.

பொழுதுபோக்கு மையம்

சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் 50,000 சதுர அடியில் கட்டப்பட்டு இயங்கி வரும் கிளப்பில் இலவச அங்கத்தினராகலாம். நீச்சல் குளம், அழகு மையம், உடற் பயிற்சி மையம், விளையாட்டு அரங்கம், தியேட்டர், உணவகம், பெர்மிட் ரூம், விருந்தினர் அறைகள் மற்றும் பல வசதிகள் உள்ளன.



றாக வாழ
நலீடு வளர
ணையானதோர் இடம்

ரிட்ரீட்

சிறந்த குடியிருப்பு



முதலீட்டின் சிறப்பம்சம்

கடந்த நான்கு வருடங்களில் சென்னை சோழிங்கநல்லூர் மட்டுமே மிக பிரம்மாண்டமாக வளர்ந்து வருகிறது. இதன் வளர்ச்சியும் மற்றும் எங்களது உலகத்தரம் வாய்ந்த குடியிருப்பும் உங்கள் முதலீட்டையும் வாழ்க்கை தரத்தையும் நிச்சயம் வளர்க்கும்.

எதிர்காலம்

சிப்காட்டில் 1000 ஏக்கர் தகவல் தொழில்நுட்ப மையம் மற்றும் TCS, Polaris, Wipro, Infosys மற்றும் பல நிறுவனங்கள் இங்கு வருவது உங்கள் முதலீட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு உத்தரவாதம்.





இந்த விளம்பரத்தில் பார்க்கும் படம் மற்றும் விவரங்களை நேரில் காண இன்றே தொடர்பு கொள்ளவும்.

Clasic Farms (Chennai) Ltd.

New No.7, Second Trust Link Street, Mandaveli,
Chennai 600 028, India.Tel: 4616456, 4614999,4614997
Cell: 9841097963 / 97964, Tele-fax: 4616694
website: **www.clasic.com & clasic.co.in**
Email: clasic@vsnl.com

தம்பி இரண்டு பேர், அக்கா ஒருத்தி, தங்கை ஒருத்தி! என்னோட பாட்டியும் இருந்தாளே இவள் என் வீட்டுக்கு வரும் போது! அக்காவைத் தவிர மற்ற எல்லோரையும் நாங்கள் இருவர்தான் கவனிக்க வேண்டி வந்தது.

பாட்டிக்கு இவள் பேரில் எப்போதும் ஒரு பிரியம், சின்னப் பெண் வீட்டு வேலை எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறாளே என்று!

என் அம்மா என்னிக்குமே வாய் திறக்க மாட்டாள். மாட்டுப் பெண்ணுக்கேற்ற மாமியார்தான் என் அம்மாவும்! இவர்கள் இரண்டு பேரும் முணங்கிக் கொண்டோ, முகத்தை ஒருவருக்கொருவர் திருப்பிக் கொண்டோ நான் பார்த்ததேயில்லையே! அந்த மட்டில் நான் அதிர்ஷ்டக்காரன்தான்!

மஹாலட்சுமி மாதிரியான மாமியாருக்கு, கௌரி தேவி மாதிரி மாட்டுப் பெண்! பண்டிகை விசேஷ நாட்களில் ஒன்னு போல ரெண்டு பேரும் சேர்ந்தாற்போல எழுந்து, வாசலில் கோலம் போடுவதிலிருந்து, அந்தப் பெரிய குடும்பத்திற்கு சமைத்துப் போட்டு, சமையல் ரூமை ராத்திரி கழுவி விடுவது வரை, என்ன அழகாக புரிந்து கொண்டு தோதாக செய்வார்கள்!

அப்பாதான் கொஞ்சம் கறார்! முணுக்கென்றால் மூக்குக்கு மேல் கோவம் ஏறி உட்கார்ந்து கொள்ளுமே! கடைசி வரைக்கும் அவர் வெச்சதுதான் சட்டம் அப்போ! ராமாயண பாராயணம் பண்ணி விட்டு எழுந்தவர், "ஏய்... கொஞ்சம் தீர்த்தம் கொண்டு வா..."ன்னு சொன்னவர்தான், ராமாயணப் புத்தகமும், கையுமாகவே போய்ச் சேர்ந்து விட்டார்!

அப்பாவின் முகத்தைப் பார்த்தே ஒன்றொன்றும் செய்து பழக்கப்பட்டவள் அம்மா! ரொம்பவே ஒடுங்கித்தான் போய் விட்டாள்! அவளுடைய ஜரூர் வேலையெல்லாம் கனவாய்ப் போய் விட்டதே! ஏனோ தானோன்னு வாழ்க்கையை ஒப்பேத்திக் கொண்டிருந்த அம்மாவை தூக்கி நிறுத்தியது இவள்தானே!

இருபத்தெட்டு வயதில், மூணாவது கைக் குழந்தையுடன், வீட்டின் அத்தனை பிரச்னைகளுக்கும், எனக்குச் சமமாகத் தோள் கொடுத்துத் தூக்கிக் கொண்டாளே! ரெண்டு தம்பிகளுக்குப் படிப்பு, அவர்கள் கல்யாணம், தங்கை கல்யாணம், இதெல்லாம் சாமான்யமா என்ன? ஒவ்வொன்றிற்கும், வயலை விற்று வந்த பணம் பத்தாமல் போய், இவளுடைய நகைகள்தானே, அடகுக் கடைக்குப் போய் விட்டு, போய்விட்டு வந்தது!

ஒருவழியாக அவர்கள் எல்லோருக்கும் ஒரு வழி பண்ணிக் கொடுத்து விட்டோம் என்று திருப்திப்பட்டுக் கொள்ள முடியாத படி, எங்களுடைய குழந்தைகள் எங்களுக்கும் தெரியாமலேயே வளர்ந்து நிற்கிறார்கள். மூத்தவன், பிள்ளை! மற்றது ரெண்டும் பெண்கள்! ஆயிற்று! அவர்களுக்கும் ஓடி ஓடி, பார்த்துப் பார்த்து, கல்யாணத்தை செய்து வைத்தவள் இவள். இப்பொழுது எல்லோரும் செட்டிலாகி விட்டார்கள்!

மூத்தவன் டெல்லியில் வேலையாக இருப்பதனால், நாங்கள் அங்கு அவனுடன் தான் இருக்கிறோம்! அவன் மனைவி சவிதாவும் வேலைக்குப் போகும் பெண் இப்பொழுதெல்லாம் இவள், சாம்பார், ரசம் எல்லாம் போய், சப்பாத்தி, சப்ஜி, குருமா என்று நன்றாக வைக்கக் கற்றுக் கொண்டு விட்டாளே!

அப்பொழுதெல்லாம் எங்கம்மாவுடனே காலையில் எழுந்தது மாதிரி, இப்பொழுது மருமகள் எழுந்திருக்கும் வேளையில், கையோடு இவளும் எழுந்து விடுகிறாள்! இவள் குளித்து விட்டு வருவதற்குள், சவிதா, பால் குக்கர் வைத்து, காய்கறி கட் பண்ணித் தயாராக வைத்திருப்பாள்! மற்றபடிக்கு எல்லா வேலைகளும், இவள்தான் பரபரவென்று ஓடி ஓடி செய்வாள்!

பேரன் கௌசிக்குக்கு வேண்டியதையும் இவள்தான் செய்ய வேண்டியிருக்கும். மகனும், மாட்டுப் பெண்ணும், ஏழு மணிக்கு




தட்டையை எண்ணெயில் போடும் முன், குட்டி குச்சியால் சிறு சிறு துளைகள் போட்டு பிறகு எடுத்தால் தட்டையில் எண்ணெய் ஒட்டாது. நடுபாகமும் நன்கு வெந்து கரகரவென இருக்கும்!

— போரூர். ஆர். சீதா

பைனாப்பிள் சாலட்

பைனாப்பிள் துண்டுகள் மீது சிறிது எலுமிச்சை சாறைத் தெளித்து உப்பு, மிளகுத் தூள், ச்சாட் மசாலாத் தூள் தூவி சாப்பிட்டுப் பாருங்கள். இந்தப் பைனாப்பிள் சாலட் செம ஜோராக இருக்கும்.

- உஷா



வீட்டை விட்டுக் கிளம்பினால்தான் ஆபீஸுக்குக் கரெக்ட் டயத்துக்குப் போக முடியும்! பேரனிடமிருந்தே மேகி, பாஸ்டா, மாகரோனி, அது இதுன்னு எல்லாத்தையும் பண்ணக் கற்றுக் கொண்டு விட்டாள். சும்மா சொல்லக் கூடாது, இந்தப் பெண்கள், எல்லா வயதிலும், எல்லா இடங்களிலும் அட்ஜஸ்ட் செய்து கொண்டு விடுகிறார்கள்!

ஒன்பது வருஷத்துக்கு முன்பு வரை நாங்கள் மெட்ராஸில்தான் இருந்தோம். நான் ரிடையராகி, ஒருநாள், சந்தன மாலையும், கழுத்துமாய், கையில், ஆஃபீஸில் கொடுத்த அழகான வால்கிளாக், பென் செட் சகிதமாக வீட்டுக்கு வந்தது, நேற்று நடந்தது போல் இருக்கிறது.

''ரிடையராகிட்டீங்களா? நல்லதாப் போச்சு! ஒரு மனுஷன் எத்தனை நாளைக்குத்தான் உழைக்க முடியும்? ஆபீஸ் டென்ஷன் எல்லாத்தையும் மூட்டைக் கட்டி வச்சுட்டு நிம்மதியா இருக்கற வழியப் பாருங்க'' என்று சொல்லிவிட்டு, உள்ளே போய் காபி கலந்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

''பாகி... நாளைலேர்ந்து காலைல கரெக்டா வாக்கிங் ஒரு மணி நேரம், மத்தியானம் மூன்று மணிக்கு, டென்னிஸ் கிளப் சேர்ந்து, அங்க வெளையாடப் போறேன்! ராத்திரி ஆறு மணியானா ஏதான ஒரு கோவில்! அக்கடான்னு இருக்கப் போறேன்! என்ன சொல்றே?''

பிள்ளை பெற்று ஆயாசத்துடன் உள்ளே படுத்திருந்த எங்கள் கடைசி பெண்ணின் கைக் குழந்தை அழத் தொடங்கவே அதை எடுத்துக் கொண்டு, மெள்ள அறையை விட்டு வெளியே வந்து, ''ஜோ... ஜோ.... ஜோ... என்னடீம்மா... ஏன் என் ராணி அழறா இப்போ... ஆ... ஆ... அழப்படாது...'' என்று கைகளையே தொட்டிலாக்கி, அதைத் தாலாட்டிய பாகிரதி, சிரித்தபடி குழந்தையின் முகத்தருகில் தன் முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாளே,

''எனக்கு எப்போ ரிட்டயர்மெண்ட்?''

அப்பவே இருந்து எனக்குள் ஒரு தவிப்புதான்! அவள் விளையாட்டாக சொன்னாளோ, இல்லை அடி மனசில் இருந்த இயலாமை, ஆசைகள் வெளியே வந்ததோ! ஆகக்கூடி அப்போதே ஒரு தீர்மானம் என் மனத்தில்!

எங்கயுமே ஜாஸ்தி இவளை நான் வெளியே அழைத்துக் கொண்டு போனதேயில்லை! கொஞ்சம் ஃப்ரீ பண்ணிக் கொண்டு இவளை நாலு இடம், கோவில், குளம் என்று கூட்டிக் கொண்டு டூர் போகணும்! ஆனால், எங்கே முடிகிறது?

பெரியவனுக்கு டெல்லிக்கு மாற்றலாக, அடித்துப் பிடித்து, மாட்டுப் பெண்ணும் கம்பெனியில் சொல்லி அங்கேயே தன் வேலையை மாற்றிக் கொண்டு விட்டாள்! அப்போ குழந்தை கௌசிக் சின்னது பாவம்! அவனுக்குத் துணை வேணும் என்று எல்லோருமாய் சேர்ந்து முடிவு பண்ணி, எங்களுடைய மெட்ராஸ் ஃபிளாட்டை வாடகைக்கு விட்டு விட்டு டெல்லிக்கு வந்து சேர்ந்தோம்!

அன்றிலிருந்து இன்று வரை இவள் ஒரே ஓட்டம்தான்! சின்னவளாய் இருந்த போது இவள் இருந்த நிதானம் கூட இப்ப முடியாமல், பரபரக்கத்தான் வேண்டியிருக்கு வயது காலத்தில்!

அதுதான் ஒரு முடிவு பண்ணினேன்! பிள்ளையும், அவன் குடும்பமும் எல்.டி.சி. லீவில் கோவா போவதாக பிளான் போட்டார்கள்! நானும் இதே சாக்கென்று இவளை அழைத்துக் கொண்டு, அலகாபாத், அயோத்யா, காசி என்று கிளம்பி விட்டேன். ஆயிற்று! இன்னும் சிறிது நேரத்தில் வாரணாசி வந்து விடும்.

கிறீச்சென்ற பெரும் சப்தத்துடன் ஆயாசமாக வண்டி நிற்க, இரவு முழுவதும்

தொடர்ந்த என் சிந்தனைகள் தடைபட்டன. வெளியே எட்டிப் பார்த்தேன். காசிக்கே உரிய கூட்டம் கசகசத்தது. சாயும், சாமியாரும், இனிப்புகளும், கைடுகளும், ஒருசேர பரபரப்புடன் அலைந்து கொண்டிருந்தார்கள்!

பாகீரதியுடன் வெளியே வந்து, நண்பர் உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, சங்கரமடத்து அறை ஒன்றில் தங்கி சிரம பரிகாரம் செய்து கொண்டோம்.

"வாங்க, போய் கங்கைல குளிச்சுட்டு, அன்னபூரணியை தரிசனம் பண்ணிட்டு வரலாம்" குழந்தையைப் போல மகிழ்ந்த மனைவியைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

சின்னச் சின்ன சந்து பொந்துகளில் நுழைந்து, கங்கை ஓடிக் கொண்டிருக்கும் 'காட்'டிற்கு வந்தோம். கூட வந்த சாஸ்திரிகள் சங்கல்பம் செய்து வைக்க, "கங்கா மயீக்கு ஜே..." என்று எல்லோருடனும் சேர்ந்து குரல் எழுப்பி விட்டு இரண்டு பேரும் முங்கிக் குளித்தோம்.

மறுபடி மேலேறி, ஈரத்துணியைக் களைந்து விட்டு, வேறு உடுத்திக் கொண்டு வந்து, சற்று நேரம் நின்று, ஓடிக் கொண்டிருந்த கங்கையையே வாய் பேசாது பார்த்துக் கொண்டிருந்தோம்.

"பாகீ... நா ஒரு முடிவுக்கு வந்துட்டேன்! நாம்ப ரெண்டு பேரும் இங்கேயே ஒரு சின்ன வீட்டை வாடகைக்கு எடுத்துட்டுத் தங்கிடலாம். சதா அன்னபூரணி தரிசனம், கங்கை குளியல், அமைதியான வாழ்க்கை... மிச்ச காலத்தை இப்படியே ஓட்டிட்டா என்ன?"

திகைப்புடன் என் பக்கம் திரும்பினாள் பாகீரதி.

"அப்படீன்னா, கௌசிக்? சவிதா?"

"அதெல்லாம் கௌசிக் வளர்ந்த குழந்தை... அவனே பார்த்துக்குவான்! சவிதா வேலைக்குப் போறது அவனோட சாய்ஸ்! அதனால அவதான் அதை மானேஜ் பண்ணணும்!"

பாகீரதி பதில் ஒன்றும் சொல்லாமல் சும்மாயிருந்தாள்.

வேகமாக நரைத்து விட்ட அவளுடைய முடியைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே, "உனக்கு ரிடையர்மெண்ட் வேண்டாமா பாகீ...?" என்றேன் மெள்ள.

ஆச்சரியத்துடன் நிமிர்ந்து என்னைப் பார்த்தவள், "ரிடையர்மெண்டா? எனக்கா...? எப்போ கேட்டேன் நான்...?" என்றபடி முகத்தைத் திருப்பி, ஓடிக் கொண்டிருந்த கங்கையையும், அதில் மிதந்து சென்ற படகுகளையும், கரையில் நடந்து கொண்டிருந்த பூஜை, புனஸ்காரங்களையும் ஆழ்ந்து பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தாள்.

"கௌசிக் வளர்ந்து விட்டான் என்றால் கூட, காலையிலிருந்து ராத்திரி வரை படித்துக் கொண்டேயிருக்கும் குழந்தையை கவனிக்க வீட்டில் ஒருத்தர் வேண்டாமா? ஹரியும் சவிதாவும் நாம் இல்லாவிட்டால் திண்டாடிப் போவார்கள்" என்று சொல்லி விட்டு நிறுத்தினாள்.

பிறகு புன்னகையுடன், "இதோ, இந்த கங்கை ரிடையர்மெண்ட் வேண்டும் என்று வேறு எங்காவது ஓடிவிட்டால் மனிதகுலம் என்னாவது? அது போலத்தான் பெண்ணும்! அதனால்தான் காலம் காலமாக இயங்கிக் கொண்டிருக்கும் பூமி, நதி எல்லாத்தையும் பெண்ணாகச் சொல்கிறார்கள்!"

மோனத்தில் பேசுவது போல் மெல்லப் பேசிக் கொண்டிருந்த பாகீரதி, சட்டென்று கலைந்து,

"ஏங்க, நல்ல காசி பட்டுப் புடவை ஒண்ணு சவிதாவுக்கும், கங்கைச் சொம்பு ஒரு பத்தும் வாங்கணுமே! டயத்தை வேஸ்ட் பண்ணாம சட்டுன்னு கௌம்புங்க!" என்று உத்தரவிட்டபடி திரும்பி நடந்தாள்.

மௌனமாகப் பின்தொடர்ந்தேன் நான்!

வெளிநாட்டிலிருந்து வந்த தோழி
கொஞ்சம் பிஸ்தா, பாதம் பருப்புகள் கொடுத்தாள்.
பாதாம் பருப்பு சீக்கிரம் செலவானது. பிஸ்தா சிறு
கசப்பாக இருந்ததால் குழந்தைகள்
சாப்பிடவில்லை. எனவே அதை உப்புப் போட்டு
வறுத்து எடுத்ததும் நல்ல டேஸ்டாக இருந்தது.
சீக்கிரமே காலியானது.

– லக்ஷ்மி ரங்கநாதன்.



மூன்று நாளில் தியானம் முழுமையாகத் கை கூடும்!





மாதவிலக்கைத் தீட்டு என்று கருதி தனிமைப்படுத்தும் பழக்கத்தைக் கண்டித் தும் ஆதரித்தும் வந்த கட்டுரைகளைப் படித்தேன். அதற்கு ஆதாரமாகக் கூறப் படும் விருத்ராசுரனைக் கொன்றதால் இந்திரன் அடைந்த 'பிரும்ம ஹத்தி' தோஷப் பங்குதான் மாதவிலக்கு என்ற ஒரு பழங்கதை பற்றியும் எழுதியிருந் தார்கள்.

விருத்ராசுரன் விஷயம் ரிக் வேதத்தில் 1.2.36 முதல் 1.2.38 வரை சித்தரிக்கப்படுகிறது. அதில் தோஷம் பற்றிய விஷயங்கள் எதுவும் இல்லை. பாகவதம் முத லிய சில புராணங்களில் தோஷம் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவைகள் வேதத் திற்கு மிகவும் பிற்காலத்தைச் சேர்ந்தவை. அதனால் இடைச்செருகல்களோ அர்த்தபேத விளக்கங் களோ ஏற்பட சாத்தியக் கூறுகள் அதிகம் என் பதை நினைவில் கொள்ள வேண்டும்.

விருத்ராசுரன் என்ற ஒருவன் கொல்லப்பட்ட பிறகுதான், அந்த பிரம்மஹத்தி தோஷத்தால்தான் பெண்களுக்கு

'ரஜஸ்' அதாவது மாதவிலக்கு உண்டாயிற்று என்றால், அதற்கு முன் பெண்கள் ருதுவை அடையவே இல்லை என்றல்லவா பொருள் படுகிறது! அது சரியில்லை அல்லவா!

அவ்வாறாயின் உலகத்தில் சிருஷ்டி எவ்வாறு தொடர்ந்தது? 'வ்ருத்ர' என்றால் அறியாமை என்ற இருட்டின் மொத்த உருவம் என்று பொருள். வேத கால இந்திரன் ஞான ஒளியின் உருவம். (embodiment of consciousness). இந்தப் பொருளில் பார்த்தால், கதையின் உட்கரு தெளிவாக விளங்குகிறது அல்லவா!

'ப்ரம்ம ஹத்யா' என்பதில் வரும் ஹத என்ற சொல்லுக்கு 'சலவை செய்யப்பட்ட' 'மாறுதல் அடைந்த பொருள்' என்று அர்த்தம் கொண்டால், ப்ரம்மம் ஸ்ருஷ்டியின் பொருட்டு ஸ்வரூப மாறுதலை அடைந்து ரஜஸ் ரூபமாக பரிணமிக்கிறது என்ற பொருள் படும். இப்படி உணர்வதை விட்டு ரஜஸ்ஸையே தோஷமாகக் கருதுவது தவறல்லவா? பரமேச்வரனையே வேதம் 'ரஜஸ்யன்' என்று துதிக்கிறதே!

தேவி பாகவதம் 7-38ல் தேவியும் ரஜஸ்வலையாக இருந்தாள் எனக் கூறப்படுகிறது. அல்லாமல் நடைமுறையில் இது காமாக்யாவில் உணரப்படுகிறது. அங்கு ப்ரஸாதமே தேவியின் சக்தி அடங்கிய இந்தத் துணிதான். தேவியிடம் இருந்து அண்ட சராசரங்களின் உத்பத்தியும் அதில் வருகிறது.

ருது சக்தி என்றால் என்ன? விதை முளைவிட்டு தளிர் விட்டுக் கிளைகளாகப் பிரிந்து வளர்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து, தன் ஸ்ருஷ்டி சக்தியை பழத்தின் விதையில் அடக்கிக் கொள்வது வரையில் எல்லாம் காலத்தின் சக்தியாலேயே நடக்கிறது. மாரியில் பெய்யும் மழையும் கோடையில் வற்றும் குளமும் கால சக்தியாலேயே. அந்தக் கால சக்தியும் ருது சக்தியே. இந்த ருது சக்தி வேதத்தில் வர்ணிக்கப்படும் ப்ரம்ம க்ஷத்ர என்ற இரு சக்திகளால் ஆனது. அதுவே சிவசக்தி தத்துவம்.

ருதுசக்தி ப்ரவேசித்த பிறகே தேகத்தில் விசேஷ கவர்ச்சி ஏற்படுகிறது. இந்தக் கவர்ச்சி இல்லையேல், ஆண் பெண் நடுவே ஈர்ப்பு இல்லை. சிருஷ்டி தொடரவும் முடியாது.

மாதவிலக்கு பற்றிய நம்முடைய தற்கால அபிப்பிராயம் வேதங்களால் விதிக்கப்பட்ட தர்மத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. வேதம் மாதவிலக்கான மங்கையை "ரஜஸ்வலா" என்று அழைக்கிறது. தன்னுள் ரஜஸ்ஸைப் பூரணமாகக் கொண்டவள் என்று பொதுவாகப் பொருள் கொள்ளலாம்.

ரஜஸ் என்றால் என்ன? ஸத்வ ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்களில் நடுவில் வரும் ரஜோ குணம் படைப்பில் எல்லா ஜீவராசிகளுக்கும் மூலகாரணமாக அவர்களுடைய செயல்பாடுகளுக்கு ஆதாரமாக விளங்குகிறது.

ரஜஸ் என்றால், "மலர்களின் மகரந்தம்" என்றும் அர்த்தம் உண்டு. எவ்வாறு மலர்களின் மகரந்த வெளிப்பாடு பின்னால் வரப் போகும் பழங்களுக்கும் விதைகளுக்கும் முன் அறிவிப்போ அதாவது மரம் இனப் பெருக்கத்திற்குத் தயாரான நிலையில் இருப்பதைக் காட்டுகிறதோ, அவ்வாறே ரஜஸ்ஸை அடையும் பெண் இயற்கையின் அடிப்படை விதியான இனப்பெருக்கத்திற்குத் தயாராகிறாள் என்றே பொருள்.

இன்றும் பெண்கள், 'புஷ்பவதி' ஆகி விட்டார்கள் என்றோ, 'ருது'வாகி விட்டார்கள் என்றோதானே கூறுகிறோம்? முதல் முறை ருது அடையும் பெண்ணை தேவியின் அம்சமாகத் தானே கொண்டாடுகிறோம்? மாதங்கி தேவிக்கே "ப்ரதம புஷ்பிணி" என்ற பெயர் உண்டே! கிராமங்களில் பெண்கள் ருது அடைவதை மஞ்சள் நீராட்டு விழாவாக இன்றும் கொண்டாடுகிறார்கள்.

வேதம் ரஜஸ்வலை ஆன பெண்ணை 3 நாட்கள் விரதம் அனுஷ்டிக்க வேண்டும் எனக் கூறுகிறது. "த்ரிஸ்ரோ ராத்ரீ : வ்ரதம் சரேத்" என்பது வேதவாக்கியம். விரதம் என்று வேதம் எதைச் சொல்லுகிறது?

1. தனிமையில் இருத்தல்.
2. அதிகமாகப் பிறருடன் பேசுதலோ நெருங்குதலோ இல்லாமை.
3. சாப்பாடு ஒரு அளவோடு – விருந்தும் அல்ல, முழுப் பட்டினியும் அல்ல.
4. படுக்கை பஞ்சணையில் அல்ல.

மற்றவை இஷ்டப்படி. வேதங்களில் கூறப்படும் எந்தவித விரத அனுஷ்டானத்துக்கும் மேற்கூறியவைகளே விதிகள். மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அதுவே "கடவுள் சிந்தனை – த்யானம்" முதலியவை. எந்தத் தேவதைக்காக விரதம் அனுஷ்டிக்கப்படுகிறதோ, முடிந்தவரை அந்தத் தேவதையின் பால் மனதை ஒருமுகப்படுத்த வேண்டும் என்



வழக்கமாக கட்லெட்களை ரொட்டித் தூளில் புரட்டிச் சுடுகிறோம். மாறாக – ஓட்ஸை கரகரப்பாகப் பொடித்து அதில் கட்லட்களைப் புரட்டிப் பொரித்தெடுங்கள். பார்ப்பதற்கும், ருசியிலும் மனதைக் கவரும்.

– எஸ். பட்டம்மா

பதே விரதங்களின் முக்கியக் குறிக்கோள் ஆகும்.

ரஜஸ்வலை ஆன பெண் வீட்டில் தனிமையில் இருக்க வேண்டும் என்பது, தன்னிடம் அந்தத் தருணத்தில் ஆவிர்பவித்திருக்கும் சக்தியை உணரவும், அதைத் தியானிக்கவும் அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கவே.

அபரிமிதமான சாப்பாடு தூக்கத்தைத் தரும். முழுப் பட்டினியோ, தெய்வ சிந்தனைக்குப் பதில் சாப்பாட்டுச் சிந்தனையைக் கொடுக்கும். குறைந்த சாப்பாட்டில் இந்த இரு பிரச்னைகளையும் தவிர்க்கலாம். பஞ்சணையில் படுக்கக் கூடாது என்பதற்கும் இதுவே காரணம்.

இம்மாதிரி புரிந்து கொண்டு விரதம் அனுஷ்டிப்பது தற்காலம் எந்த விரத அனுஷ்டானத்திலும் இல்லை. "உபவாஸம்" என்பது கடவுளுக்கு அருகில், அதாவது அவருடைய சிந்தனையிலேயே வசிப்பது, இருப்பது எனப் பொருள்படும். இது "உபநயனம்" "உபவீதம்" "உபதேசம்" போலவே ஒரு சங்கேத வார்த்தையாகும். ஆனால் நாம் தற்பொழுது, உபவாஸம் என்றால் முழுப் பட்டினி என்று புரிந்து கொண்டு, பட்டினி கிடக்கிறோம். உடம்பு இளைப்பது தவிர அதில் வேறு என்ன லாபம்?

தற்காலத்தில் பெண்களுக்குச் சூழ்நிலை, பழக்க வழக்கங்கள், தன் ஸ்வரூபத்தைப் பற்றிய ஞானம் இல்லாமை இவற்றினால் அந்தச் சமயத்தில் அவர்களுக்கு இருக்க வேண்டிய பக்குவ மனநிலை இல்லை. அந்தச் சமயத்தின் உடல் உபாதைகளும் வேலைக்குப் போக வேண்டிய கட்டாயங்களும் வேறு கூடுதல் தொந்திரவுகள்.

கூட்டுக் குடும்ப அமைப்பு குறைந்து வருவதால் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், முடிந்தாலும் முடியாவிட்டாலும் மேற்சொன்ன விதிகளைத் தொடர முடியாத கட்டாய சூழ்நிலை. மேலும் இந்த விரதத்திற்காக மாதம் மூன்று நாட்கள் விடுப்பு எடுப்பது முடியாத காரியம். ஆனாலும் பெண்களாகிய நம் கையில் ஒன்று இருக்கிறதே! அதுதான் முயற்சி -

விரதத்தின் எஸன்ஸ் என்ன என்பதுதான் நமக்குத் தெரிந்து விட்டதே. அதைப் புரிந்து கொண்ட பிறகு என்ன கஷ்டம்? ஒரு அரை மணி நேரம் சக்தியைக் குறித்து தியானம் செய்யலாமே! அந்த மூன்று நாட்களிலும் கூடிய வரை தெய்வ சிந்தனையில் இருக்கலாமே.

என் அனுபவத்தில், அந்த மூன்று நாட்களில் எந்தவிதப் பிரார்த்தனைகள் செய்து கொண்டும் ஜபம் செய்தால் கை மேல் பலன் கட்டாயம் உண்டு. மனது மிகச் சுலபமாக ஒருமைப்படுவது கண்கூடாகத் தெரியும்.

மீதி எல்லாவற்றிற்கும் நமக்கு நேரம் இருக்கும் பொழுது, மகரிஷிகளால் சொல்லப்பட்ட இந்த 3 நாட்களை ஏன் தெய்வ சிந்தனையுடன் கழிக்கக் கூடாது? நடுவில் ஏற்பட்ட பௌராணிக் பழக்க வழக்கங்களால் அந்தத் தனிமையை 'தீட்டு' என்று புரிந்து கொண்டு அந்த நிலைமையை கௌரவ புத்தியுடன் நோக்காமல் இழிவுபடுத்தி உணவும் சரியாக இல்லாமல் போனதால்தானே யுவதிகள் இதை இந்தத் தனிமையை எதிர்க்கிறார்கள்?

ஆழ்ந்து நோக்கினால் இந்த அனுஷ்டானம் நம் சந்ததிகளையும் அவர்கள் நலனையும் மனத்தில் கொண்டு ஏற்படுத்தப்பட்டது என்பது புரியும். தற்காலம் குழந்தைகள் இயற்கையிலேயே நிறைய எதிர்மறை குணங்கள் உள்ளவர்களாக இருக்கின்றனர். இதற்கு டீ.வியும் இன்டர்நெட்டும், அயல்நாட்டு மோஹமும் தான் காரணமா?

இதில் தாய்மார்களான நம் பங்கு என்ன? நாம் விளைநிலத்தைப் பக்குவப்படுத்தத் தவறி விட்டோம். நிலம் நன்றாக இல்லாவிட்டால், செடி முளையிலேயே கருகி விடாதா? இதே கொள்கைதான் ரஜஸ்வலை ஆன பெண் விரத அனுஷ்டானம் செய்ய வேண்டும் என்பதிலும். மேலைநாடுகள் நம் வேதங்களை ஆராய்ந்து அவற்றில் உள்ள ஆழ்ந்த மகத்துவத்தைப் புரிந்து கொண்டாடுகிறது. நாமோ, நம்முடைய முன்னோர்கள் தேடி வைத்த சொத்துக்களை அறியாமையால் வீணடிக்கிறோம்.

நம் மாணவிகளும் யுவதிகளும் அதிபுத்தி சாலிகள். எந்த விஷயத்தையும் அவர்கள் கண்ணோட்டத்தில் நியாயம் என்று புரியும்படி எடுத்துச் சொன்னால் அவர்கள் நம்மை விட சிரத்தையாகவே செய்வார்கள். நம் பழக்க வழக்கங்கள் பண்டிகை தினங்கள் இவையெல்லாம் வெறும் அர்த்தமற்ற சடங்குகள் அல்ல, பெரிய தத்துவங்களையும் குறிக்கோள்களையும் உள்ளடக்கியவை என்று அவர்கள் உணர்ந்தாலே போதும், நம்முடைய கலாசாரம் மறைந்து விடும் என்று பயப்படாமல் நாம் நிம்மதியாக இருக்கலாம். அதனால் முதலில் நாம் புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

— நாராயணி

வெங்காய பச்சடியுடன் முள்ளங்கியும் கேரட் துருவியில் நீளவாக்கில் துருவி மிதமான நெய்யில் வதக்கிச் சேர்த்தால் நல்ல சுவை. வெய்யிலுக்கு மிக நல்லது.

— கி. அன்னு




என்றென்றும்
நம்பர் 1 பானம்
இதுதானே!
கலப்பில்லை, உடற்கேடில்லை, விலை

மக்கள் நலன் கருதி
வெளியிடுவோர்:
தமிழக அரசு



இளநீர்

இயற்கை தரும்
இன்சுவை பானம்.
இயற்கை நமக்கு
அளிக்கும் முழுக்க
முழுக்கத் தூய்மையான
பானம். எல்லாக்
காலங்களிலும்
கிடைக்கும்; தாகத்தைத்
தீர்க்கும்; களைப்பைப்
போக்கும்; உடற்சூட்டைத்
தணிக்கும்; உடலுக்கு
ஆரோக்கியத்தையும்
தரும்.

இதன் மருத்துவ
குணங்களோ
மகத்தானவை.

இப்பொழுது
சொல்லுங்கள்.
இளநீருக்கு இணையான
பானம் வேறு உண்டா?

யா மலிவு – இயற்கை தரும் இளநீர்

பெற்றோர்களே,

"நல்ல மகன் குலத்தின் ஒளிவிளக்கு! நல்ல குணமுடைய மகன் தனக்கு மட்டுமல்ல, தான் சேர்ந்த குலத்துக்கும் பெருமை சேர்ப்பான்! அடர்ந்த காட்டில் ஒரு மல்லிகை மலர்ந்தால் காடு முழுவதுமே மணக்குமே அது போல! ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு மகன் நல்ல சீலமும், ஒழுக்கமும், குணமும் நிறைந்தவனாக இருந்தால், உலகமே நன்மையடையும்..."

– பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா.





இது விஞ்ஞான யுகம். விஞ்ஞானம் வளர்ந்து கொண்டே போகிறது. நமக்கு விஞ்ஞானத்தின் பயன்கள் தேவையாக இருக்கிறது. இன்டர்நெட் வந்துள்ளது. இதன் பயன்கள் பலப்பல. அதே சமயம் இந்த இன்டர்நெட்டை தவறாகப் பயன்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

டீன்ஏஜ் குழந்தைகள் உள்ள பெற்றோர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய சூழ்நிலை.

இன்டர்நெட்டில் பல வெப்சைட்கள் உள்ளன. குழந்தைகள் பார்க்கக் கூடாத, பெரியவர்களுக்கு மட்டும் அனுமதி என்ற எக்ஸ்-ரேட்டட் வெப்சைட்கள் பல உள்ளன. என்ன பரிதாபம் என்றால் பெரியவர்களை விட இந்த சைட்களை டீன் ஏஜ் குழந்தைகளே அதிகம் பார்க்கின்றனர்.

மேலும் ஒருவருக்கு ஒருவர் ஈமெயில் அனுப்பும் வசதி உள்ளது. ஒன்பதாவது வகுப்பிற்கு மேல் பயிலும் குழந்தைகள், ஆண், பெண் நண்பிகளுக்கும் பெண், ஆண் நண்பர்களுக்கும் கிளுகிளுப்பான மெயில் அனுப்புகின்றனர்.

"வாலன்டைன்ஸ் டே" என்ற இது வரை நம் நாட்டில் இல்லாத பழக்கம் கடந்த இரண்டு/மூன்று வருடங்களாக தலைவிரித்தாடுகிறது. அன்று ப்ரௌசிங் சென்டர்களை மொய்த்த பள்ளி/கல்லூரி சிறுவர் சிறுமியர்கள் தான் எத்தனை! மேலும் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்ளும் சாட் வசதியும் தவறாகப் பயன்படுத்தப் படுகிறது.

டீன் ஏஜ் பருவத்தில் மனது அலைபாயும்.

முக்கியமாக, "செக்ஸ்" விஷயங்களை அறி யத் துடிக்கும். இதற்குக் காரணம் அவர்களுக் குள்ளே ஏற்படும் ஹார் மோன் மாற்றம்தான். செக்ஸ் அறிவு ஆரோக் கியமாக வர வேண்டும். 13/14 வய திலே இந்த சைட் களை பார்ப்பதின் மூலம் மனம் வக்கிர மாகி விடும். இப் பொழுது படிப்பதில் பெரிய ஓட்டப்பந்தயமே நடக்கிறது. எத்தனை மார்க்குகள் வாங்கினா லும் காலேஜ் அட்மிஷன் என வரும் போது திண்டாடுகிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலை யில் இன்டர்நெட்டின் தீய வழிக்குக் குழந்தை கள் அடிமையானால் அவர்கள் படிப்பு என் னாவது?



பெற்றோர்களே! உஷார்!

1. உங்கள் வீட்டில் இன்டர்நெட் இருந்தால் அதன் உள்ளே போவதற்குரிய பாஸ்வேர்டை முடிந்தால் குழந்தைகளுக்குச் சொல்லாதீர்கள். குழந்தைகள் இன்டர்நெட் போக விரும்பினால் நீங்கள் ஓபன் செய்து கொடுத்துக் கண்காணி யுங்கள்.

2. குழந்தைகளுக்குப் பாக்கெட் மணி கொடுத்துப் பழக்காதீர்கள். கொடுத்த பணத்திற் குக் கணக்கு கேளுங்கள். மேலும் அவர்கள் கையில் பணப்புழக்கத்தைக் குறையுங்கள்.

3. பள்ளி முடிந்தவுடன் குழந்தைகள் எங்கு போகிறார்கள் என விசாரியுங்கள். எப்போ தும் அவர்கள் அறியாமல் கண்காணி யுங்கள்.

இன்டர்நெட்டில் பல நல்ல விஷ யங்கள் உள்ளன. Yahooligans என்ற சைட் குழந்தைகளுக்கு மிகவும் உபயோகமான சைட்.

ஒரு குழந்தை ஏதாவது கட் டுரை தயார் செய்ய வேண் டும் என்றால் இன்டர்நெட் உதவுகிறது. உதாரணமாக நேருஜி என்ற தலைப்பில் கட்டுரை வேண்டும் என்றால் சர்ச்சில் போய்ப் பார்த்து கட்டுரை தயாரிக்கலாம். இப்படிப் பல உபயோகமான நல்ல விஷ யங்கள் உள்ளன. ஆனால் அலைபாயும் மனித மனது நல்லதை விடுத்து தீயதை தானே நாடும்!

பிரசவ வலி எடுத் துக் கஷ்டப்பட்டு குழந் தையைப் பெறும் தாய் மகனைப் பார்த்தவுடன் பெரும் மகிழ்ச்சி அடைகிறாள். அதைவிட அவள் மகிழ்ச்சி அடையும் நாள் என்று? தன் மகன் "சான்றோன்" என பலர் சொல்லும் நாள்தான் அவள் அதைவிட மிகவும் மகிழ்ச்சி அடையும் நாள். இப்படிக் குழந்தைகளை "சான்றோன்" ஆக்க விடாமல், ஆக்கபூர்வமாக அவர்களை வளர விடாமல் சமீபத்தில் விஸ்வரூபம் எடுத்திருக்கும் "இன்டர் நெட்"டை நினைத்தால் மனது கலங்குகிறது.

— பொள்ளாச்சி கீதா பரமசிவம்

ஆண் இல்லாத இந்து கூட்டுக்

“ எப்போது ஷா பானு வழக்கில் மரபையும் மீறி பெண்களுடைய அடிப்படை உரிமையை உச்சநீதிமன்றம் நிலைநாட்டி யிருக்கிறதோ, அதே கண்ணோட் டத்தில் பார்த்தால் இந்த வழக்கில் மரபு வழிக்கு ஏற்றவாறு தீர்ப்பு அளித்திருப்பது சரியா? ”

புதிய நம்பிக்கைகளுட னும் புதிய எதிர் பார்ப்புகளு டனும் பெண்களுக்கு ஒரு புதிய சகாப்தம் தொடங்கியிருக்கும் சமயத்தில் நம் நாட்டின் உச்ச நீதிமன்றம் ஓர் அதிரடி தீர்ப்பை வழங்கி இருக்கிறது.

குறைந்தபட்சம் ஒரு ஆண் உறுப்பினர் கூட இல்லாத, பெண்களை மட்டுமே உறுப்பி னர்களாகக் கொண்ட இந்துக் குடும்பத்தை 'இந்து கூட்டுக் குடும்பமாக அங்கீகரிக்க முடி யாது' என்ற தீர்ப்பை மார்ச் ஒன்றாந் தேதியன்று உச்சநீதி மன்றம் வழங்கியிருக்கிறது!

பீகார் மாநிலத்தில் இந்து குடும்பத்தைச் சேர்ந்த ஹர்கோ பிந்த் தத்தாவின் அகால மரணம் ஒரு புதிய பிரச்னை யைக் கிளப்பியிருக்கிறது. இவர் உயில் ஏதும் எழுதி வைக்கா மல் இறந்து விட்டதால் இவரது மனைவியும் இரண்டு மகள் களும் சொத்துக்களை மூன்று சம பாகங்களாக முதலில் பிரித்துக் கொண்டனர். பிறகு மூவருக்கும் தனித்தனியாக வருமான வரி கட்ட வேண்டியிருக்கும் என் பதை அறிந்து தாங்கள் ஒரே கூட்டுக் குடும்பமாக வசிப்பதால் தங்களு டைய சொத்துக்களை இணைத்துக் கொண்டு, 'இந்து அன் டிவைடட் ஃபேமிலி' (இந்துக் கூட்டுக் குடும்பம்) என்கிற அந்தஸ்த்திலிருக்கிறது. அதன் படி தங்களுடைய மொத்த சொத்து இந்துக் கூட்டுக் குடும்ப வருமான வரிச் சலுகை உச்ச வரம்பிற்குள் அடங்கி விட்டதால் வருமான வரி கட்டத் தேவையில்லை என்று மறுப்பு தெரிவித்தனர்.

வருமான வரித்துறை இவர்களின் கூற்றை ஏற்கவில்லை. இதை எதிர்த்து பட்னா உயர்நீதி மன்றத்தில் இவர்கள் வழக்கு தொடர, தீர்ப்பு இப்பெண் களுக்குச் சாதகமாக அமைந்தது. இதை எதிர்த்து வருமான வரித்துறை உச்ச நீதி மன்றத்தில் மறு விசாரணை மனு தாக்கல் செய்தனர். பட்னா உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்து விட்டு மேற்கூறிய தீர்ப்பை உச்சநீதி மன்றம் வழங்கியுள்ளது.

இந்தத் தீர்ப்பின் போது தெரிவிக் கப் பட்டது என்னவென்றால் இந்துக் கூட்டுக் குடும்பத்திற்கான அடிப்படை வரையறைபடி அந்தக் குடும்பத்தில் குறைந்தபட்சம் ஓர் ஆணாவது இருந் தாக வேண்டும். பெண்கள் மட்டுமே கொண்ட ஓர் இந்துக் குடும்பத்திற்கு 'இந்துக் கூட்டுக் குடும்பம்' என்கிற சட்டரீதியான அங்கீகாரிப்பு கிடை யாது. இதற்கு முன்பு ஒரு வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பையும் உச்சநீதி மன்ற நீதிபதிகள் மேற்கோளாகக் கூறியிருக்கிறார்கள். அதன்படி யாரா வது ஒரு ஆணை சட்டரீதியாக தத் தெடுத்து குடும்பத்துடன் சேர்த்துக் கொண்டால் அந்தக் குடும்பத்திற்கு எச்.யு.எஃப் (Hindu Undivided Family) என்கிற அங்கீகாரிப்பு கிடைக்குமாம்!

இந்தியாவின் மாட்சிமை வாய்ந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பை விமரிசிப்பது



• நளினி சிதம்பரம்

‘பெண்கள் குடும்பம்’ குடும்பம் அல்ல!

• மோஹன் பராசரன்



அல்ல இங்கு நமது நோக்கம். பெண்களின் வாழ்வுமுறை மாறியிருக்கும் இந்த 21-ம் நூற்றாண்டில் இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு சமுதாயத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும்? இக்கண்ணோட்டத்திலேயே இத்துறை சம்பந்தப்பட்ட மூன்று வல்லுநர்களின் கருத்துக்களை வெளியிட்டுள்ளோம்..)

திருமதி நளினி சிதம்பரம் : *(மூத்த வழக்கறிஞர், உயர்நீதிமன்றம், சென்னை)*

மரபு வழிப்படி மூன்று பெண்கள் சேர்ந்து கூட்டுக் குடும்பம் அமைக்க முடியாது என்கிற உச்சநீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பு சரியானதல்ல.

முன்பு ‘ஷா பானு’ வழக்கில் மரபுப்படி பெண்களுக்கு ஜீவனாம்சம் கிடையாது என்றிருந்தபோது ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்த வழக்கில் பெண்களுக்கு, எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஜீவனாம்சத்திற்கான உரிமையிருக்கிறது என்றும் மரபுப்படி எல்லாம் பார்க்க முடியாது என்கிற கருத்தைதான் உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

எப்போது ஷா பானு வழக்கில் மரபையும் மீறி பெண்களுடைய அடிப்படை உரிமையை உச்சநீதி மன்றம் நிலைநாட்டியிருக்கிறதோ, அதே கண்ணோட்டத்தில் பார்த்தால் இந்த வழக்கில் மரபு வழிக்கு ஏற்றவாறு தீர்ப்பு அளித்திருப்பது சரியா?

எப்போது இந்திய சாசனத்தின் படி ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமையிருக்கிறது என்று நிறுவப்பட்டதோ அப்போது பெண்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் என்றால் உச்சநீதிமன்றம் மரபுப்படி தீர்ப்பு கூறியிருக்கக் கூடாது.

தமிழ்நாட்டிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் ‘இந்து சக்ஸஷன் ஆக்ட்’ (Hindu Succession Act) அதாவது, இந்து வாரிகரிமைச் சட்டம் 1989ல் மாற்றப்பட்டிருக்கிறது. இந்த சட்டத் திருத்தத்தின்படி பெண்களும் ஆண்களுடைய ‘கோ பார்சனர்’ ஆவார்கள். அதாவது சரிநிகர்சமம் என்று அர்த்தம். உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு எப்படியும் இந்த இரண்டு மாநிலங்களுக்கும் பொருந்தாது. இங்கு பெண்களும் கூட்டுக் குடும்பம் அமைக்கலாம்.

மேலும் மரபுவழி சட்டங்கள் அரசியல் சாசனத்தை விட மேற்பட்டவை அல்ல. அதனால் நம் சாசனத்தில் பெண்களும் ஆண்களுக்கு சரிநிகர் சமம் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கும்போது மரபு வழியை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட இந்தத் தீர்ப்பு சரியானதல்ல.

ஷா பானு வழக்கில் மரபு வழியை மீறிய உச்சநீதிமன்றம் இந்த வழக்கில் ஏன் மீற

“இவற்றையெல்லாம் நீதிமன்றங்களினால் மாற்ற முடியாது. சட்டங்களை ஆராய்ந்து தீர்ப்பு சொல்வது மட்டும்தான் நீதிமன்றங்களின் பணி. சட்டத்தையே மாற்ற வேண்டுமானால் அதற்கான தொடக்கம் நாடாளுமன்றத்திலிருந்துதான் வர வேண்டும்.”

வில்லை? எப்போது மூன்று ஆண்கள் சேர்ந்து கூட்டுக் குடும்பம் அமைக்கலாம் என்றிருக்கிறதோ அப்போது மூன்று பெண்கள் சேர்ந்து ஏன் கூட்டுக் குடும்பம் அமைக்கக் கூடாது? இதுதான் என்னுடைய கேள்வி. இதற்கெல்லாம் உச்சநீதிமன்றம்தான் பதில் கூற வேண்டும்.

திரு மோஹன் பராசரன் : *வழக்கறிஞர் (சாசனம் மற்றும் வர்த்தக சட்டம்) உச்சநீதி மன்றம், உயர்நீதி மன்றம், சென்னை.*

உச்சநீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பு இந்துக் கூட்டுக் குடும்ப சட்டத்தை மரபுரீதியாக ஆதரித்திருக்கிறது. மரபுரீதியாகப் பார்த்தால் இந்து சட்டத்தின்படி பிதுரார்ஜித சொத்தில் ஆண்களுக்குச் சரிநிகர் சமமாக எந்தவிதமான பங்குமே பெண்களுக்குக் கிடையாது.

ஆண் வாரிசில்லாத, பெண்களை மட்டுமே கொண்ட குடும்பத்தின் தலைவன் இறந்து விட்டால் பிதுரார்ஜித சொத்து அவனுடைய மனைவிக்குத்தான் போய்ச் சேரும்.

தமிழ்நாட்டில் 1988-89ல் ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறது. மாநில அரசு கூட்டுக் குடும்பச் சொத்தில் பெண்களுக்கு எந்த விதமான பங்கும் கிடையாது என்பதை மாற்றியமைத்து பெண்களுக்கும் ஆண்களுக்குச் சமமாக சொத்தில் உரிமையுண்டு என்கிற சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன்படி 1989 வருடத்திற்கு முன்பு திருமணமாகாமலிருக்கும் மகள்களுக்கும் பிதுரார்ஜித சொத்தில் மகன்களுக்குச் சமமாக பங்குண்டு.

நமது அரசியல் சட்டத் திட்டத்தின்படி ஷரத்து 15ல் கூறப்பட்டிருப்பது என்னவென்றால் நம் நாட்டின் குடிமக்கள் எல்லோரும் நம் தேசத்தின் சட்டங்களினால் சமமாகப் பாதுகாக்கப்படுவார்கள். தேசம் எந்த ஒரு குடிமகனையும் இனம், ஜாதி, மதம், பிறப்பு ஆண் பெண் பாகுபாடு போன்ற காரணத்தினால் வித்தியாசம் காண முடியாது. இதற்கு ஒரே விதிவிலக்கு தேசம் பெண்கள், குழந்தைகள் மற்றும் பின்தங்கிய ஜாதிகளுக்காக பிரத்தியேகமான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தலாம் என்பதுதான்.

நானே மேற்கூறிய ஷரத்தின் கீழ் ரிட் பெட்டிஷன்கள் போட்டிருக்கிறேன். காலம் மாறி வருகிறது. அதற்குத் தகுந்தவாறு மரபு வழியாக குடிமக்களிடையே வித்தியாசம் காணும் சட்டங்களை நாடாளுமன்றம்தான் மாற்றியமைக்க வேண்டும். தமிழ்நாட்டில் பெண்களுக்குச் சட்டரீதியாக முழு பாதுகாப்பும் சம உரிமையும் கிடைத்திருப்பது நல்ல விஷயம். கூட்டுக் குடும்பத்தில் இப்போது மகள்களும் பிதுரார்ஜித சொத்தில் சம பங்கை உரிமையுடன் கேட்கலாம்.

இந்து மரபு வழி சட்டப்படி பெண்கள் எப்போதுமே ஆண்களுக்குச் சமமாக இருக்க முடியாது. அதே மாதிரி அந்நிய மதங்களிலும் மரபு வழி சட்டங்களில் பல பாகுபாடுகள் உள்ளன. இவற்றையெல்லாம் நீதிமன்றங்களினால் மாற்ற முடியாது. சட்டங்களை ஆராய்ந்து தீர்ப்பு சொல்வது மட்டும்தான் நீதிமன்றங்களின் பணி. சட் டத்தையே மாற்ற வேண்டுமானால் அதற்கான தொடக்கம் நாடாளுமன்றத்திலிருந்துதான் வர வேண்டும்.

சட்டரீதியாக நாட்டின் குடிமக்கள் எல்லோரும் சமமாக இருக்க வேண்டும் என்றால் நாடு முழுவதிற்கும் ஒரே சட்டம் கொண்டு வர வேண்டும். 'யூனிஃபார்ம் சிவில் கோட்' கொண்டு வரப்பட்டால் இதைப் போன்ற பிரச்னைகள் வராது. ஆனால் நம் நாட்டில் பல மதங்கள் உள்ளதாலும் பல மதங்களைச் சார்ந்த மக்கள் மரபுரீதியான சட்டங்களில் மாற்றங்கள் கொண்டு வரக்கூடாது என்று நம்புவதாலும் யூனிஃபார்ம் சிவில் கோட் அமல் படுத்த முடியாத சூழல்தான் இன்று உள்ளது. தேசமும் மரபுரீதியான தனிப்பட்ட சட்டங்களில் தலையிடத் தயங்குகிறது.

இதற்கெல்லாம் விடை தேடி மக்கள் எல்லோருக்கும் சம உரிமைகளையும் கண்ணியமாக வாழக்கூடிய சூழலையும் நம் நாடாளுமன்றம்தான் ஏற்படுத்த வேண்டும்."

திரு. பாலசுப்ரமணியம் சாஸ்திரிகள் (சம்ஸ்கிருதக் கல்லூரிப் பேராசிரியர் - ரிடையர்ட்)

நம் தர்ம சாஸ்திரப்படி பெண்கள் திருமணத்திற்குப் பிறகு தந்தையின் குடும்பத்தை விட்டுப் பிரிந்து வேறு குடும்பத்திற்குப் போய் விடுகிறார்கள். கணவனின் சொத்தில் தான் மனைவிக்கு பங்குண்டு. இதனால்தான் பெண்களுக்கு ஒவ்வொரு விசேஷத்திற்கும் சீர் கொடுக்கும் வழக்கம் இருந்தது.

சீர் என்பது தற்காலத்தில் புழங்கும் டௌரி அல்ல. டௌரி என்பது கேட்டு வாங்கும் பழக்கம். நம் தர்ம சாஸ்திரங்களில் டௌரியைப் பற்றி எங்கும் கூறப்படவில்லை. ஆண்களுக்கு மட்டுமே குடும்பச் சொத்து பிரிக்கப்பட்டு பங்கிடப்பட்டு வந்ததால் பெண் குழந்தைகளுக்குத் தந்தைமார்கள், திருமணம் மற்றும் அந்நிய விசேஷங்களுக்கு தன்னிச்சையாக சீர் கொடுத்து வரும் பழக்கம் நிலவி வந்தது.

சொந்தமாக சம்பாதித்த சொத்தை குடும்பத் தலைவன் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். தானம் கூட செய்யலாம். திருமணமாகாத பெண்களுக்கும் ஒரு சிறு சதவிகிதம் தந்தையின் சொத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டும் என்றுதான் நம் சாஸ்திரம் கூறுகிறது.

இந்துக் கூட்டுக் குடும்பம் என்னும் இந்து அன்டிவைடட் ஃபேமிலியை நம் சாஸ்திரம்

'அவிபக்தக் குடும்பம்' என்கிறது. 'அவிபாகம்' அதாவது பிரிக்கப்படாத குடும்பம் என்றால் தந்தை தான் அந்தக் குடும்பத்தின் தலைவன். அவருக்குப் பிறகு மூத்த மகன் தலைவனாவான். குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் குடும்பத் தலைவருடன் ஒத்துழைத்து இயங்க வேண்டும்.

இப்படிப்பட்ட குடும்பத்திற்கு ஒரே கணக்கு வழக்குதான் இருக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் வேறு வேறு அறையானாலும், ஒரே மனையிலோ சுற்றுப் புறத்திலோ ஒன்றாக வசித்து, ஒன்றாக சாப்பிட்டு இயங்குவார்கள். எல்லோருடைய வருமானமும் ஒருமித்து இணைக்கப்பட்டு மொத்த வருமானத்திலிருந்துதான் செலவுகள் செய்யப்படும்.

நம் சாஸ்திரங்கள் இயற்கையின் இன வேறுபாட்டைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஆண் பெண்களுடைய கடமைகளைப் பிரித்துக் கொடுத்திருக்கின்றன. அதன்படி பெண்களின் உடல்வாகையும், மனோநிலைமையும் வைத்து குடும்பத்தையும் குழந்தைகளையும் பராமரிக்கும் கடமை அவர்களுடையது என்றிருக்கிறது. பெண்களினால் எளிதாக வெளியில் சென்று வர முடியாது. சமுதாய ரீதியாக எத்தனையோ தடங்கல்கள் அவர்களுக்கு. ஆண்களுக்கு வெளியில் சென்று சம்பாத்தியம் கொண்டு வரும் பொறுப்பு உள்ளது.

ஒரு அலுவலகத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். பொறுப்புகள் பிரிக்கப்பட்டு வேறு வேறு பதவிகள் இல்லையா? அதே மாதிரிதான் குடும்பப் பொறுப்புகளும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆண்கள் இல்லாத குடும்பங்களில் குடும்பத் தலைவன் மறைந்து விட்டால் தாய்க்கு தான் சொத்தில் உரிமையிருக்கிறது. அப்போது தலைமை ஸ்தானத்திற்குத் தாய்தான் வந்து விடுகிறாள்.

நம் சாஸ்திரங்கள், திருமணமாகாத பெண்களைப் பற்றி ஒன்றும் கூறாததற்குக் காரணம் பெண்கள் எல்லோருக்கும் திருமணமாக வேண்டும் என்றும் ஆண்கள் எல்லோருக்கும் உபநயனமாக வேண்டும் என்றும் நம் தர்ம சாஸ்திரம் கூறுகிறது. திருமணமாகாமலிருப்பது பெண்களுக்குப் பாதுகாப்பில்லை என்கிற



• பாலசுப்ரமணியம்

நம்பிக்கையினால் இந்த மாதிரியான ஒரு நிலை ஏற்பட்டிருக்கலாம்.

சமுதாயத்தில் இன்று எத்தனையோ மாற்றங்கள். பலவிதமான மாற்றங்களை எதிர்பார்த்து அவற்றிற்குத் தகுந்த சட்டங்களை நம் முன்னோர்கள் எழுதி வைத்து விட்டுத்தான் போயிருக்கிறார்கள். ஆனால் இந்த வழக்கில் உள்ளதைப் போல் திருமணமாகாத பெண்கள் (அப்படிதான் என்று நான் எடுத்துக் கொண்டு கூறுகிறேன்) தாயுடன் கூடி ஒரே கூட்டுக் குடும்பமாக வாழும் சூழலை நம் தர்ம சாஸ்திரங்கள் எதிர்நோக்கவில்லை.

நம் தர்ம சாஸ்திரங்களை விளக்குவதுதான் இன்றுள்ளவர்களுடைய கடமை. அவற்றை மாற்றியமைக்க முடியாது.

சமுதாயத்தின் மாற்றத்திற்கு ஏற்றவாறு குடும்பத்தின் உறுப்பினர்களே ஒற்றுமையாக ஓர் உடன்பாட்டிற்கு வரலாம். தர்ம சாஸ்திர சட்டங்கள் பெரும்பான்மையோர் அனுஷ்டானம் செய்வதற்காக ஏற்பட்டவை. தனிப்பட்ட சிலருக்காக ஏற்பட்டவை அல்ல.

— ஸ்வாதி

“ சமுதாயத்தின் மாற்றத்திற்கு ஏற்றவாறு குடும்பத்தின் உறுப்பினர்களே ஒற்றுமையாக ஓர் உடன்பாட்டிற்கு வரலாம். தர்ம சாஸ்திர சட்டங்கள் பெரும்பான்மையோர் அனுஷ்டானம் செய்வதற்காக ஏற்பட்டவை. தனிப்பட்ட சிலருக்காக ஏற்பட்டவை அல்ல. ”

க்
ஷெல்ஃப்

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி ஆசாரியார் மடத்து பாரத் கணித பஞ்சாங்கம்

விஷு வருஷம் 2001 - 2002 (சுத்த திருக் கணிதப)-க்கான பஞ்சாங்கம் கணித்திருப்பவர் ஜோதிடப் பேராசிரியர் எல்.வி.எஸ். மணி. அந்தந்த நாட்டு நேரப்படி எப்படி பஞ்சாங்கப் பலன் பார்ப்பது என்கிற குறிப்புடன்



சுபயோக சுபதினங்கள் மற்றும் விவாகப் பொருத் தங்கள் என்று பல விஷயங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

பக். - 60,
விலை ரூ.20.00

(வெளியீடு - வெங்கட்ராமன் அண்ட் பிரதர்ஸ், சங்கர கிருபா, 183, யாதவான் தெரு, ஆதம் பாக்கம், சென்னை - 600 088)

திருக்குறள் உயிர் தமிழ்

ஒவ்வொரு குறளுக்கும் தமிழில் எளிய நடையில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் கிள்நாமக்காரர் கிரீடாதி. கையடக் கப் பதிப்பு.

பக். - 308, விலை ரூ.15.00

(கிரீடம் பதிப்பகம், 35/30, ராணி அண்ணா நகர், கே.கே.நகர், சென்னை - 78)

தலைவனும் தொண்டனும் மற்றும் அம்பிகை அருள்மாலை

இவ்விரு புத்தகங்களும் புது கும்மிடிப் பூண்டியின் உள்ள ஏகவல்லி அம்மன் ஆலய குடமுழுக்கு விழா நினைவு மலராக வெளி யிடப்பட்டுள்ளது. திருமால், இராகவன், அனுமன் மற்றும் அம்பிகை மேல் கவிஞர் பிரபாகரன், தமிழ்ச்சுடர், விசயரங்கன் ஆகிய மூன்று கவிஞர்கள் இயற்றிய பாடல் கள் இடம் பெற்றுள்ளன.

விலை ரூ.3.00

(பதிப்பாசிரியர், புலவர் முத்து, ஆடபந்சகாயம், புதுக்கும்மிடிப்பூண்டி)

யுக சந்தி

ஜாதிக் கலவரம், மதக் கலவரம், அண்டை நாட்டு சண்டைச் சச்சரவுகள் - இப் படி பிரச்னைகள் நிறைந்த இந்த உலகில், குடும்பத்திற்குள் உள்ள உறவுகளின் உணர்வுகளை, சமுதாயத்தில் பெண்களின் நிலையை படம்பிடித்துக் காட்டி ஒரு அற்புதமான நாவலாகப் படைத்துள்ளார் வாசந்தி.

பக். - 304, விலை ரூ. 60.0

(திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 17)

சித்தர்களின் அஷ்டமாசித்திகள்

சித்தர் பாடல்களில், அவர்கள் சொல்லிச் சென்ற கருத்துகள் புரியும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் பல சித்தர் களின் சித்து விளையாடல்களும் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர் சி.எஸ். முருகேசன்.

பக். - 224, விலை ரூ. 55.00

(அழகு பதிப்பகம், 20, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 600 049)

நவகிரக ஆராதனை

நவகிரக வழிபாடு பற்றிய பல முனிவர்கள் இயற்றிய பாடல்களிலிருந்து விளக்கங்கள், சாந்தி ஹோமங்கள் செய்யும் முறை, மந்திரங்கள் தமிழில் - சமஸ்கிருதத்தில் என்று சகலமும் அடங்கியுள்ளது. ஆசிரியர் - பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள், தொகுப்பாசிரியர் - கே.என்.சரஸ்வதி.

பக். - 158, விலை ரூ. 40.00

(கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், 38, நடேச அய்யர் தெரு, தி.நகர், சென்னை - 600 017.)

நீங்களும் கோர்ட்டில் வாதாடலாம்!

நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றியும், சட்டத்துறையின் தெளிவான விளக்கமும் எல்லாரும் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் உள்ளது இந்நூலில். ஆசிரியர் அருப்புக்கோட்டை செந்தமிழ்க்கிழார்.

பக். - 176, விலை ரூ.10.00

(புது மலர் புத்தக ஆலயம், புதிய எண்.5, பெரியார் பாதை, குளைமேடு, சென்னை - 600 094.)

சமையலறைக் குறிப்புகள்

சுவையான சமையலுக்கு உபயோகமான பல யோசனைகள் தரப்பட்டுள்ளது. தொகுப்பு அநுராகம்.

பக். - 32, விலை ரூ.6.00

(அநுராகம், 10, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 600 017.)

நையாண்டி மேளம்

மனித இயல்புகளை தனது கவிதை வரிகளில் வடித்துக் கூடவே கொஞ்சம் கிண்டலுடன் மனதில் படியும்படி படைத்திருக்கிறார் கவிஞர் டாக்டர் ஆ.ச. கந்தன்.

பக். - 144, விலை ரூ.30.00

(சிவகாமி புத்தகாலயம், 5-C, சின்ன மேட்டுப்பாளையம், 2வது தெரு, சூலைப் பேட்டை, சென்னை - 600 019.)

சின்மயானந்தரின் சிறு கதைகள்

சின்மயானந்தர் தனது ஆன்மீக சொற்பொழிவில் பல வேதாந்த கருத்துக்கள் நிரம்பிய சிறு சிறு கதைகளை தனது அன்பர்களுக்கு ஆங்கிலத்தில் எடுத்துச் சொல்லியதை அனைவரும் படித்துப் பயன்பெறும் நோக்குடன் தமிழில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார் எஸ். லட்சுமி சுப்பிரமணியம்.

பக். - 158, விலை ரூ. 35.00

(இந்திரா பதிப்பகம், 60, முதல் தெரு, தீனதயாளு நகர், திருவெறும்பூர், திருச்சி - 620 013.)

உறுதிகொண்ட நெஞ்சினாய் வா! வா! வா!

'தேவதாசி' எனும் பட்டத்துடன் பிறந்த ஒரு பெண் வாழ்க்கையில் படித்து முன்னேறி தன்னை துச்சமாக மதித்தவர்களின் முன் வெற்றி நடை போடுவதை மையக் கருத்தாக வைத்துப் பல சுவையான சம்பவங்களுடன் படைக்கப்பட்டிருக்கிறது இந்த நாவல். ஆசிரியர் உமா கல்யாணி.

பக். - 240, விலை ரூ.45.00

(மணிமேகலைப் பிரசுரம், த.பெ. எண். 1447, 4, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 600 017.)

பேச்சுக் கலைப் பயிற்சி

திரு. குமரி அனந்தன் தனது பேச்சுக் கலைப் பயிற்சி முகாமில் பங்கு கொண்டவர்கள் பேசிய உரையாடல்களை தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். இதில் வளரும்



சப்பாத்தி மாவில் வெந்தயக் கீரை போட்டுப் பிசைவது போல, புதினாவையும் பொடிப் பொடியாக நறுக்கிப் போட்டுப் பிசைந்து சப்பாத்தி செய்தால் மிகவும் மணமாகவும், சுவையாகவும் இருக்கும்.

— லக்ஷ்மி ரங்கநாதன்.



குழந்தை பாக்கியம் இன்மை, வெள்ளைப்படுதல், மாதவிடாய் கோளாறு, மலட்டுத்தன்மை போன்றவைகளுக்கு தெய்வீக மூலிகை மருத்துவம்



குழந்தை பாக்கியம் இன்மை, வெள்ளைப்படுதல், மாதவிடாய் கோளாறு மலட்டுத்தன்மை போன்றவைகளுக்கு முக்கிய காரணம் நாம் உண்ணும் உணவுகளில் அதிகமாக ரசாயனப் பொருட்கள் கலந்திருப்பதாலும், பலவித நோய்களுக்காக அவ்வப்போது வீரியமிக்க ரசாயன மாத்திரைகளை உட்கொள்வதாலும், அடிக்கடி மாமிச உணவுகள் உண்பதாலும், அதிகமான கவலை கொள்ளுதல், பலருடன் உடலுறவு கொள்ளுதல் போன்றவைகளால் கர்ப்பப்பையில் புண் ஏற்படுகின்றது. இதனால் கர்ப்பபையில் உள்ள கரப்பிகள் நன்றாக இயங்காது. மேலும் அதன் சுரப்பு நீரும் இயல்பிக்கதாக இருக்காது. தவிர கர்ப்பபையும் நன்றாக சுருங்கி விரியும் தன்மையினை இழந்துவிட்டால் முறையான மாதவிடாய் இருக்காது. வெள்ளைப்படுதலும் தோன்றும். வெள்ளைப்படுதல், மாதவிடாய் கோளாறுகள், மலட்டுத்தன்மை உள்ள தாய்க்கு கருத்தரிக்கும் வாய்ப்பு மிகவும் கடினம்.

கருத்தரிக்காமைக்கு காரணம்

பெண்களுக்கு உற்பத்தியாகும் கரு முட்டைகள் சரியான முதிர்ச்சியும், வளர்ச்சியும் இல்லாதிருத்தல், கருப்பையின் குழாய்கள் அடைப்பு அல்லது சுருங்கி இருத்தல், முட்டையகத்தில் (ஓவரி) குறைபாடு, கருப்பை வளர்ச்சியின்மை, கர்ப்பப்பை புண் ஆண்களின் விந்தணு எண்ணிக்கையில் குறைவாகவும், தருந்த உயிரூட்டத்துடன் இல்லாமல் இருத்தல், அடிக்கடி உடலுறவு கொள்ளுவதால் முதிர்ச்சி இல்லாத விந்தணு வெளியாகி உயிர்ப்பிக்கும் சக்தி இல்லாதிருத்தல் ஆகியன கருத்தரிக்காமைக்கு காரணம் ஆகும்.


தெய்வீக மூலிகை வைத்தியம்

விநாயகருக்குரிய அருகம்புல், சக்திக்குரிய வேப்பிலை, சிவனுக்குரிய வில்வம், பிரம்மாவுக்குரிய அத்தி, கங்கைக்குரிய மாவிலை மற்றும் அற்புத மூலிகை மருத்துவ குணம் கொண்ட அரசிலை, ஆலஇலை, நாவல் இலை, முருங்கையிலை, ஓரிதழ் தாமரை, கீழாநெல்லி ஆகியவைகளைப் பறித்து எடுத்து வெய்யிலில் உலர்த்தி பொடி செய்து சலித்து பின் சம அளவில் ஒன்றாக கலந்து ஒரு பாட்டிலில் கலந்து வைத்துக்கொள்ளவும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு முன் தினமும் காலை இரவு ஆகிய இரண்டு வேளையும் உட்கொள்ளவும் இதனை சுமார் ஆறுமாதம் வரை பின்பற்றவும். இளம் தம்பதிகளுக்கு மிக விரைவிலும், மற்றவர்களுக்கு சற்றுத் தாமதமாகவும் கண்டிப்பாக பலன் தெரியும். இத்தகைய மூலிகைகளினால் வெள்ளைப்படுதல், மாதவிடாய் கோளாறு, மலட்டுத்தன்மை நீங்கி கர்ப்பபை நன்கு வளர்ச்சி அடையும் விந்தணு சினை முட்டைகள் நன்கு முதிர்ச்சி அடைந்ததாகவும், வளர்ந்ததாகவும் இருக்கும். மேலும் எலும்புகள், நரம்புகள் பலம் பெற்று ஆண்மைக் குறைவும் மறையும். வேப்பிலை, வில்வம், கீழாநெல்லி போன்றவை எதிர்ப்பு சக்தியையும், ரத்தம் சுத்தம் அடையவும், அத்தியிலை, நாவல், முருங்கை, ஓரிதழ், தாமரை, போன்றவை நரம்பு மண்டலம் நன்கு இயங்கவும், அரசன், ஆலயிலை, மாவிலை போன்றவை கருத்தரிக்க உதவும். உயிர் அணுக்கள், கருமுட்டை ஆகியவற்றின் எண்ணிக்கை அளவு, வீரியம் ஆகியவற்றை அதிகப்படுத்தவும் உதவும். இத்தகைய மகிமையின் காரணமாகவே திருமண சடங்குகளின் போது இதன் குச்சிகளை ஓமம் வளர்ப்பார்கள். அப்போது அதன் புகைகளை தம்பதிகள் இருவரும் சுவாசிப்பதன் மூலம் வேண்டிய பலனை அடைவார்கள் என்பது உண்மை.

உணவு முறைகள்

தம்பதிகள் இருவரும் தினம் ஏதேனும் ஒருவேளை வேகவைக்காத பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்கள், பழரசங்கள், சாலட்கள் போன்றவற்றையே உணவாக உட்கொள்ள வேண்டும். கேரட், வெண்டை, வெள்ளரிக்காய், பீர்க்காய், வாழை, கொய்யா, ஆப்பிள், பேரீட்சை, திராட்சை, மாதுளை, தர்பூசணி, பாதாம், முந்திரி இஞ்சி, கரும்புச்சாறு, தேங்காய், வெங்காயம் கறிவேப்பிலை, கொத்தமல்லி போன்றவற்றிலும் இருந்து ஏதேனும் இரண்டு (அ) மூன்று வகைகளை தேவையான அளவு உட்கொள்ளலாம். பின்னர் மற்ற இரண்டு நேரம் சாதாரண சமைத்த சைவ உணவுகளை உட்கொள்ள வேண்டும். இதில் கேழ்வரகு, கோதுமை, கம்பு, மக்காச்சோளம் போன்ற தானியங்களையும் அடிக்கடி சேர்த்துக்கொள்வது நல்லது. நிலக்கடலை, மூக்கடலை, கொள்ளு போன்றவற்றையும் மாலை வேளைகளில் சுண்டல் செய்து உட்கொள்ளலாம். கிடைத்தால் வெள்ளாட்டுப்பால் சேர்த்து தண்ணீர் கலந்தும் தம்பதிகள் குடிக்கலாம்.

தவிர்க்க வேண்டியது - புகைத்தல், மதுவகைகள், மாமிச உணவுகள், சர்க்கரை கலந்த இனிப்புகள், ரசாயனம் கலந்த உணவுகள், குளிர்பானங்கள், எண்ணெயில் செய்த பலகாரம், அசுத்திக்கீரை, பாகற்காய், பப்பாளி முதலியவை தவிர்க்கவும். இரவில் வாரம் ஒரு நாள் பகல் ஒரு வேளை சமைத்த உணவை தவிர்க்கவும். இரவு உணவை 7 மணிக்குள் முடித்தல் வேண்டும். உடற்பயிற்சிகள் - நடத்தல், குனிந்து நிமிர்தல், உட்கார்ந்து எழுதல், நின்ற இடத்தில் ஓடுதல், குதித்தல், கயிறாட்டம், கைகால் விரல்களை நீட்டி மடக்குதல் மூச்சுப்பயிற்சி தியானம் போன்றவற்றை தினம் 20 நிமிடம் காலை மாலை செய்தல் நல்லது.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : **Dr. M.குருபரன் & Dr. M. சபாபதி, Dr. M.சிவசக்தி S/O. Dr. C.K.மாணிக்கவாசகம்**

P.B. NO. 30, No. 3, திருநாத முதலி நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் DT 635601 ✆:04179-20469, 22769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 600 010. ✆ : 044-6424285, 6427638.

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் காலை 10.00-1.00 P.M. மாலை 5.00-7.00 P.M.

குறிப்பு : சென்னை,வேலூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் - விபரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

அறிவிப்பு : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 27 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய "**சகல நோய்களின் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்**" என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ. 70/- ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய "**என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்**" என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ. 60/- தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

7 & 8 ந் தேதி – மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை "The South Indian Concerns Ltd." 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011689

9 ந் தேதி – பெங்களூர் : காலை 11 to 1 ஹோட்டல் பிராட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பே கவுடா ரோட் ✆ : 2266374

18 & 19-ந் தேதி-புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை, South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, ✆.5717126,5723651

பேச்சாளர்களுக்குப் பல சிறந்த யோசனைகளும், குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.

பக். - 184, விலை ரூ. 35.00

(வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17)

சுந்தர காண்டம் – இராமாயணம்

இராமாயணத்தின் முழு கதையும் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. சுந்தர காண்டம் மட்டும் சமஸ்க்ருத ஸ்லோகங்கள் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளது. இதை பக்தியுடன் பாராயணம் செய்தால் துன்பம் விலகி இன்பம் நிலைக்கும். இவற்றை தொகுத்திருப்பவர் ஜெயசிங்.

பக். - 64, விலை ரூ. 25.00

(ஆனந்த நிலையம், 29, ரங்கனாதன் தெரு, தி.நகர், சென்னை - 17)

மருந்தின்றி மருத்துவரின்றி உடல் நலம் காப்பது எப்படி?

சத்தான உணவு முறையினாலும், ஆரோக்கியமான சூழ்நிலையினாலும் பல நோய்களை அண்டவிடாமல் காப்பது எப்படி என்று யோசனைகள் பலவற்றை வழங்குகிறார் டாக்டர். இரத்தின சண்முகனார்.

பக். - 152, விலை ரூ. 35.00

(அருள்மிகு அம்மன் பதிப்பகம், 8, கங்கை அம்மன் கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014)

ஸ்ரீ ஐயப்பன் வரலாறும் வழிபாடுகளும்

சபரிமலை ஐயப்பன் குறித்த முழு விவரங்கள் மற்றும் ஸ்ரீ ஐயப்பன அஷ்டோத்ர சக நாமாவளி, பஜனைப் பாடல்கள் என்று சுதம்பச் சுவையுடன் உள்ளது. ஆசிரியர் வேங்கடவன்.

பக். - 120, விலை ரூ.26.00

(சுகமதி பிரசுரம், 17/2, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 17)

அழகுக்கு அழகு சேர்க்க...

கூந்தல் பராமரிப்பு, சருமப் பாதுகாப்பு மற்றும் சில எளிய உடற்பயிற்சிகள் என்று பலவித அழகுக் குறிப்புகளை தந்து பெண்கள் தங்கள் அழகை மேம்படுத்தும் வழி சொல்கிறார் உஷா ஸ்ரீகுமார்.

பக். - 104, விலை ரூ. 30.00

(குமரன் பதிப்பகம், 2, முத்து கிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை - 17)

சுயம் பேசும் கிளி

ஆண்டாள் ப்ரியதர்ஷினியின் உயிரோட்டமுள்ள எழுத்துக்களால் மனதைத் தொடும் வார்த்தைகளால் சமூகத்தின் அவலங்களை, பெண்மையின் உயர்வை சுட்டிக்காட்டிய கவிதைகள் பலவற்றின் தொகுப்பு இந்நூல்.

பக். - 188, விலை ரூ. 55.00

(ராகவேந்திரா வெளியீடு, 163/2, பொன்விழா அடுக்ககம், பாடிக்குப்பம் சாலை, அண்ணா நகர், சென்னை - 40)

காஸெட்

அமுதகீதம்

ஸ்ரீராமகிருஷ்ணர் காளி, கண்ணன் மேல் இயற்றிய பாட்டுக்கள். பாரதியார் பாடல்களும் இடம்பெற்றிருக்கின்றன. பனிரெண்டு பாடல்களுக்கு மனதை நெகிழ வைக்கும் வகையில் இசையமைக்கப்பட்டுள்ளது.

விலை ரூ. 40.00

Siva Smaranam

சிவன் மேல் பாடப்பட்டுள்ள பஜன் பாடல்கள். தமிழ், ஹிந்தி, சமஸ்கிருதம் என்று வெவ்வேறு மொழிகளில் உள்ள சிவன் பாடல்கள். பதிமூன்று பாடல்கள் உள்ளன.

விலை ரூ. 40.00

Divya Geetam

கண்ணன் பாட்டு, துர்கா தேவி பாட்டு என்று பதிமூன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

விலை ரூ. 40.00

மேற்கூறிய மூன்று காஸெட்டுகளும் மயிலை ஸ்ரீ ராமகிருஷ்ணா மடத்தைச் சேர்ந்த ஸ்வாமி ஞானதானந்தா அவர்கள் மற்றும் குழுவினரால் பாடப்பட்டுள்ளன. தனது கணீரென்ற குரல்வளத்தால் பாடி, கேட்பவர்களையும் பாட வைத்து விடுகிறார் ஸ்வாமிஜி. இனிமையான இசையில் பாடப்பட்டிருக்கும் இந்த பஜன் பாடல்கள் மனதுக்கு அமைதியை ஏற்படுத்துகிறது நிதர்சனம். ஒவ்வொரு காஸெட்டிலும் அனைத்துப் பாடல்களையும் அச்சிட்டு குட்டி இணைப்புப் புத்தக வடிவில் தந்துள்ளனர்.

(Sri Ramakrishna Math, Mylapore, Chennai - 4. Tel : 494 1231 Email : srkmath@vsnl.com)

நோய் ஒன்று; நிவாரணம் மூன்று!

நாம் அன்றாட வாழ்க்கையை சுவாரசியத்துடன் நடத்த நல்ல ஆரோக்கியம் மிகவும் அவசியம். அதில் உடலில் வலியில்லாமலும், சகஜமாக உட்கார்ந்து, எழுந்து, நடந்து யதார்த்தமாக இருப்பது மிகவும் முக்கியம். இவ்வாறு இருக்க முடியாமல் நம்மில் பலரின் வாழ்க்கையை, குறிப்பாக ஐம்பது வயதுக்கு மேற்பட்டோரை பாதித்து வரும் நோய் மூட்டு வலி. முட்டியில், இடுப்பில் வலி ஏற்பட்டு நடை குறைந்து கொஞ்சம் கொஞ்சமாக உலகம் சுருங்கி வீட்டோடு முடக்கிப் போகும் இந் நிலையைப் பற்றி மருத்துவர்கள் மூன்று வகையில் விளக்குவதைப் பார்ப்போம்....

அலோபதி முறையில் விளக்குகிறார் டாக்டர். எம். பார்த்தசாரதி. (முடக்கு இயல் நீக்கு அறுவை சிகிச்சை நிபுணர் - மெட்ராஸ் ஆர்த்தோ பீடிக்ஸ்)

மூட்டு வலி என்பது தலைவலியைப் போல் ஒரு பொதுவான வார்த்தை. முழங்காலில் உள்ள மூட்டில் வலி ஏற்படும் போது மூட்டு வலி என்றழைக்கிறோம். இந்த நிலைக்குப் பல விதமான காரணங்கள் இருக்கலாம். எவ்வாறு கண் பாதிப்பு, மூளையில் பாதிப்பு, உடல் இளைப்பு, மைக்ரேன், சைனஸ் என பல நோய்களின் வெளிப்பாடாகத் தலைவலி விளங்குகிறதோ, அதைப் போல மூட்டுவலியின் பின்னணியில் பலவித பாதிப்புகள் அடிப்படைக் காரணமாக இருக்கலாம்.

முதலாவதாக மூட்டில் தேய்மானம் ஏற்படுவதால் வலி உண்டாகும். மூட்டுகளில் எலும்புகள் ஒன்றோடு ஒன்று இணையும் போது, உராய்வு ஏற்படாமல் அசைவதற்காக வழுவழுப்பான சவ்வும், திடமான குருத்தெலும்பும் உதவுகிறது. இவற்றின் வழவழப்புத் தன்மை குறைந்து மூட்டை அசைக்கும் போது சோர்வும், வலியும் ஏற்படும். இவ்வாறு கால் மூட்டில் வலி பெண்மணிகளுக்கு அதிகம் ஏற்படக்கூடும்.

அடுத்ததாக முதுகெலும்பு பாதிக்கப்பட்ட காரணத்தினால் கால்களில் மூட்டு வலி ஏற்படலாம். முதுகெலும்பில் மேலே கீழே நழுவிய நிலை இருந்தால் சிறிது தூரம் நடந்த உடனேயே தொடை,





• அசோக்குமார்



• பார்த்தசாரதி

கால் முதலியவற்றில் வலி பரவி கால் மரத்துப் போய் விடும். முதுகெலும்பிற்கு வைத்தியம் பார்க்காமல் கால் தொடையை எண்ணெயும், ஆயின்ட்மெண்ட்டும் கொண்டு தடவி உருவுவதில் பலனில்லை.

இன்னும் சிலருக்கு முதுகுத் தண்டுவடக் குழாய் சுருங்கி விடுவதால் கால் கை தளர்ந்து மூட்டு வலி ஏற்படும். முதுகு சவ்வு தளர்ந்து போனாலும் வலி உண்டாகும். இவற்றை

மூட்டு வலியினால் முடங்காமல் வாழ்வதற்கு

உடனடியாக கவனித்துச் சிறிய அறுவை சிகிச்சை செய்து குணப்படுத்தலாம். கவனிக்காமல், சிலர் மூங்கில் கட்டைகளை முதுகில் வைத்து கட்டிக் கொள்கின்றனர். இப்படியே தொடர்ந்து சிகிச்சையளிக்காதிருந்தால், பக்கவாத நோய் ஏற்படக்கூடும். முதுகெலும்பில் புற்றுநோய் அல்லது காச நோய் ஏற்பட்டிருந்தாலும் மூட்டு வலி ஏற்படும்.

நம்மில் பலருக்குக் கால் மூட்டு லேசாக உள் பக்கம் வளைந்திருக்கும். தொடை எலும்பின் தலைப்பாகம் இடுப்பு மூட்டு தேய்ந்திருந்தால் உள் தொடையில் வலி வரும். சிறு வயதில் ஏற்பட்ட அடியினால் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டும் கூட இந் நிலை ஏற்படலாம். இந் நிலை Aevascular Necrosis of Head of Femur எனப்படும். உட்புறமாக வளைந்த காலை நேர் செய்து, அதே சமயத்தில் சரியான நிலையில் வைத்து மேலும் மூட்டு தேயாமலிருக்க எங்கள் மருத்துவமனையில் MPS corrective Osteotomy என்ற அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. கால் மூட்டு வளைந்து, தேய்ந்து போனால் மூட்டினை செயற்கை முறையில் செய்து மாற்றும் சிகிச்சை Knee Joint Replacement Surgery செய்யப்படும். இச் சிகிச்சைக்கு மிகவும் செலவு செய்ய வேண்டியிருக்கும்.



• சேஷாத்திரி

மூட்டுவலி ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் :

• வலியுடன் கால் இழுக்கும், கால் கனத்துப் போகும்.

• சிறிது தூரம் நடந்தால் கால் மரத்துப் போகும்.

• இடுப்பில் வலி ஏற்பட்டு வலி பரவி கால் இழுக்கும்.

• இருமினாலோ, தும்மினாலோ கால் இழுக்கும்.

• படுக்கும் போது முதுகை புரட்டிப் படுக்க முடியாது.

மேற்கூறிய அறிகுறிகள் ஏதேனும் ஏற்பட்டு ஜுரமும் ஏற்பட்டால் உடனே முடக்கவியல் நிபுணர் டாக்டரை அணுக வேண்டும்.

பரிசோதனைகளில் எக்ஸ்ரே, இரத்தப் பரிசோதனை, தேவைப்பட்டால் ஸ்கான் செய்து காரணம் ஆராய்ந்து மருத்துவம் அளிக்கப்படும். ஆரம்ப நிலையில் கவனித்துக் கொண்டால் மருந்து, பிஸியோதெரபி பயிற்சிகள் மூலம் குணப்படுத்தலாம். நோயை முற்ற விட்டு விட்டால் அறுவை சிகிச்சை ஒன்றே வழியாகும்.


மூட்டுவலியைப் பற்றியும் ஆயுர்வேத முறை மருத்துவ வழிமுறை பற்றியும் விளக்குகிறார் டாக்டர் சேஷாத்திரி. (செகரெட்டரி அண்ட் சூப்பிரண்டென்டன்ட் - இம்ப்காப்ஸ் மருத்துவமனை)

ஆயுர்வேத முறையில் அனைத்து வியாதியுடையவர்களையும் மூன்று தோஷங்களுடையவர்களாக பிரிக்கிறோம். அதாவது வாதம், பித்தம், கபம் என்ற மூன்று தோஷங்கள் உடலில் உள்ளன. இவற்றில் ஏதேனும் அள

வில் உடலில் அதிகரிக்கும் போது வியாதிகள் உண்டாகின்றன. அவ்வகையில் உடலில் வாதம் அதிகரிக்கும்போது வலிகள் உண்டாகின்றன.

மூட்டு வலியிலேயே மூன்று வகை வாதங்கள் உள்ளன. உடல் பருமனினால் கால் மூட்டு வலி ஏற்பட்டாலும், மூட்டுச் சில்லுப் பகுதி தேய்ந்து வலி ஏற்பட்டாலும், ஆர்தரைட்டிஸ், பெரிஆர்த்தரைடிஸ் போன்ற நிலைகள் ஏற்பட்டாலும் அவை சந்தி வாதம் எனப்படும். 'ருமடைட்டிஸ்' என்ற நோய் உணவு ஜீரணமாகாத நிலையானது ஆமவாதம் எனப்படும். விபத்துக்களினாலும், விழுந்து அடிபட்டுக் கொள்வதாலும் மூட்டுவலி ஏற்பட்டால் அது அபிகாதஜன்ய சந்திவாதம் எனப்படும். இவ்வாறு முட்டுவலிகள் ஏற்படும் போது மூட்டுகளின் தசைகளில் உள்ள 'ஸ்லேஷககஃபா' என்ற திரவம் குறைந்து விடுகிறது. அதனால் எலும்புகள் ஒன்றோடொன்று உராய்ந்து தாங்க முடியாத வலியை உண்டாக்குகிறது.

இவ்வாறு மூட்டுவலியுடன் வரும் நோயாளிகளிடம் அவர்களின் வயது, உடல்வாகு, வலியின் தீவிரம், அவர்கள் செய்யும் வேலை. நோயால் அதிகம் சிரமப்படும் பருவ காலம் முதலியவற்றை ஆராய்ந்து அறிந்து கொள்வோம். அதன் பிறகு ஒவ்வொருவருடைய தேவைக்கேற்ப மருத்துவம் அளிக்கப்படுகிறது.



• பரத்வஜாசனம்

மூட்டுவலிக்கு அனுலோமனம், ஸ்நேஹனம், ஸ்வேதனம் என்று மூன்று வகை சிகிச்சைகள் தரப்படுகிறது. உடலில் வாதம் அதிகம் ஏற்பட மிக முக்கியக் காரணம், வாதம் வெளியேற முடியாமல் மலச்சிக்கல் ஏற்படுவதே. அதைச் சரிசெய்ய மலச்சிக்கல் தீர உள்ளுக்கு மருந்தளிக்கப்படும். இதுவே அனுலோமனம் எனப்படும். ஸ்நேஹனம் என்பது எண்ணெய் தடவுவது. ஒவ்வொரு நோயாளியின் வலியின் தீவிரத்திற்கேற்ப தகுந்த எண்ணெய்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, முறையாக, இதமாக தடவப்படுகிறது. இஷ்டம் போல் முரட்டுத்தனமாக உருவக் கூடாது. அதன் பிறகு செய்யக்கூடிய சில உடற்பயிற்சிகள் வலி அதிகரிக்காத வகையில் சொல்லித் தரப்படும்.

ஆமணக்கு வேர், நொச்சி இலை, புளி இலை, எருக்க இலை போன்ற இலைகள் அவரவர் தேவைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்டு, பொடிப் பொடியாக நறுக்கப்பட்டு மருந்துகள் சேர்த்து மூட்டையாகக் கட்டப்படுகிறது. இந்த மூட்டையால் வலி ஏற்பட்டுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுக்கப்படும். இதுவே ஸ்வேதனம் எனப்படும்.

உணவிலும், வாழ்க்கை முறையிலும் சில கட்டுப்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்.

• உணவில் புளிப்பைக் குறைக்க வேண்டும். கிழங்குகளையும், எண்ணெயில் பொரித்த உணவையும் ஒதுக்கிவிட வேண்டும்.

• குளிர்சாதனப் பெட்டியிலிருந்து நேராக எடுத்து பால், தயிர், பழம் முதலிய எந்த உணவையும் சில்லென்று சாப்பிடக் கூடாது.

• வெந்நீரில் மட்டுமே குளிக்க வேண்டும்.

• ஏர்கண்டிஷனிங் செய்யப்பட்ட அறையில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

• மூட்டிகளில் வலி ஏற்படக்கூடிய வேலைகளான சைக்கிள் ஓட்டுதல், தையல் மிஷினில் காலை மிதித்து பெடல் செய்வது போன்றவற்றை நிறுத்த வேண்டும்.

• உடல் பருமனைக் குறைக்கக்கூடிய உணவுகளை உட்கொண்டு ஆரோக்கியமாக வாழ வேண்டும்.

மூட்டுவலி ஏற்பட்டுள்ளதான அறிகுறிகள் முட்டி நீட்டி மடக்க முடியாமல் இறுகிப் போவது; கால் நடக்க முடியாமல் வலி ஏற்படுவது; முட்டிப் பகுதி வீக்கமடைந்து அந்த இடம் லேசாகச் சூடாவது. இந்த அறிகுறிகள் ஏற்பட்ட உடனேயே மேற்கூறிய மருத்துவங்களை செய்து கொண்டு கட்டுப்பாடுகளையும் பின்பற்றினால் அறுவை சிகிச்சையைத் தவிர்த்து விடலாம். முட்டி வலி குறைய முட்டியில் knee cap அணிந்து கொண்டு நடப்பது நல்லது.

மூட்டுவலி குறைய யோகாசனப் பயிற்சி முறை எவ்வாறு உதவுகிறது என்று விளக்குகிறார் டாக்டர் ஏ.எஸ். அஷோக்குமார். (டைரக்டர் – இந்தியன் ஸ்கூல் ஆஃப் யோகா)

இந்தியாவில் ஏறத்தாழ ஐம்பது லட்சம் பேர் பல்வேறு வகையான மூட்டு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். சாதாரணமாக நாற்பத்தி ஐந்து வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பெண்கள் இருவருக்கும் இந்நோய் ஏற்படும். உடற்பருமனால் பாதிக்கப்பட்டவர்களுக்கும்,

இக்கனைத் தனிமையில் காதல் வசப்படுமே உங்கள் மனம்...

...எங்கள் தங்க, வைர நகைகள் மேல்



ஆம், உங்கள் முழுகவனமும் சிதறா வண்ணம் நகைகளைத் தேர்வு செய்ய உதவும் வகையில் அமைக்கப்பட்ட வாடிக்கையாளருக்கான தனி ஒதுக்கிடம், மற்றும் முதல் மாடியில் ப்ரத்யேக அறையிலேயே நகைகளைத் தேர்வு செய்யும் வசதி. கனிவான மற்றும் நகைகள் பற்றி நன்கறிந்த எங்கள் பணியாளர்கள் உங்களுக்கு உதவிட, வேறென்ன வேண்டும் இதைவிட!




திரு. அ. சுகுமாரனது வியாபாரப் புதுமைகளில் மற்றுமொரு மைல்கல்



S

SWARNALAYA JEWELLERY P LTD.,

#5, Bazulla Road (Near Vani Mahal & Hotel Residency)
T.Nagar, Chennai - 600 017. Tel : 8231986, 8231987.
e-mail : asukumaran@eth.net



அதிர்ஷ்ட விநாயகர்



உயர்தர கண்ணாடியில் கைகளால் உருவாக்கப்பட்டது. இந்த அதிர்ஷ்ட விநாயகர் உருவாகுவதை நீங்கள் எங்களிடம் மட்டுமே நேரில் காண முடியும்.

காஞ்சி மகா பெரியவாள் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டது. உங்கள் கைகளுக்கு வந்த 15 நாட்களுக்குள் கண்டிப்பாக நல்லது நடக்கும். நம் இல்லத்திற்கு வருகின்ற நம் உறவினர்களுக்கும் மற்றும் சுமங்கலிகளுக்கும் இந்த அதிர்ஷ்ட விநாயகரை அவர்களுக்கு தருவதினால் மேலும் நன்மைகள் பல பெறுவீர்கள். மூன்று அளவுகளில் கிடைக்கும்.விலை ரூ. 30.00, 60.00 மற்றும் 90.00 ரூபாய். கூரியர் சர்வீஸ் மூலம் பெற விரும்புகிறவர்கள் தமிழ் நாட்டிற்குள் ரூ. 15.00 பிற மாநிலங்கள் ரூ. 30.00 சேர்த்து அனுப்பவும். எங்களிடம் காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை நேரில் பெற்றுக் கொள்ளலாம். விடுமுறை கிடையாது.

நான் புஷ்பவனம் வசந்தகுமாரி, கருவூல கணக்கு இயக்கத்தில் கணக்கராக பணிபுரிந்து வருகிறேன். நான் நெ.15, பசார் சாலை, சைதாப்பேட்டையில் இருந்து அதிர்ஷ்ட விநாயகர் வாங்கி பூஜையில் மற்ற சுவாமிகளுடன் வைத்து தினமும் புஷ்பம் வைத்து ஆராதித்து வந்தேன். கடவுளுடைய அனுக்கிரஹத்தால் என் மகன் சுந்தரம் பிரசாத்துக்கு சன் தொலைக்காட்சி கோடீஸ்வரன் நிகழ்ச்சியில் பங்குகொண்டு ரூ. 2 லட்சம் வெற்றி பெற்று கடவுளுடைய அனுக்கிரஹத்தாலும் பெரியவர்களுடைய ஆசீர்வாதத்தாலும் கிடைக்கப்பெற்றான் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பு. வசந்தகுமாரி W/o. V. Sundaram ப்ளாட் நெ.3, கதவு எண்: 104, செந்தில் நகர் இணைப்பு, ராம்பிரசாத் இல்லம் சின்னபோரூர், சென்னை – 600 116. போன்: 4767531

உங்கள் தேவைகளுக்கு எங்களுக்கு Money order அல்லது Demand Draft Payable at Chennai in favour of. B. vinoba. (உங்கள் விலாசத்தை தெளிவாக எழுதவும்.)

உருவாகும் இடம்: ப. வினோபா

புதிய எண்.15, பஜார் சாலை, சைதாப்பேட்டை, சென்னை – 15. (பிரேம்ஸ் கண் மருத்துவமனை அருகில்) Ph: 91-44-4333011, E.mail:vinoba_aakash@yahoo.com

எல்லா ஊர்களுக்கும் விநியோகஸ்தர்கள் தேவை

அருள்வழிகாண! ஓம் நமசிவாய! திருஅருணாசலத்தை நாடு!

நினைத்தாலே முக்தியும், வாழ்வில் வெற்றியும் தரும் திருஅண்ணாமலையில் பௌர்ணமி கிரிவலத்தில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

பேரன்புடையீர்! வணக்கம். தங்களின் எல்லா விருப்பங்களும் நிறைவேறவும், மங்கலம் உண்டாகவும் அருள்மிகு ஸ்ரீ அருணாசலேஸ்வரரிடம் பிரார்த்தனை செய்கிறோம்.

● எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய சிவபெருமான் தானே தன் திருவடி பதித்து அருட்கரம் நீட்டி திருவருள் புரிந்துவரும் திருஅண்ணாமலையில் பௌர்ணமி அன்று சந்திர பகவான் பதினாறு கலைகளுடன் பரிபூரணமாகப் பிரகாசிக்கிறான். அந்த அபூர்வ சக்திவாய்ந்த கிரணங்களைத் தங்களின் உடலில் ஏற்று கிரிவலம் வரும் இறை அடியார்களுக்கும், பக்தர்களுக்கும் மேலும் அங்குள்ள ஆதரவற்ற முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், கண்பார்வையற்றோர்கள் ஆகிய அனைவருக்கும் பௌர்ணமி அன்று இரவு அன்னதானம் சிறப்பான முறையில் செய்யப்படுகிறது. இந்தப்புனித இறைபணியில் பங்குகொண்டு தாங்களும், தங்கள் சந்ததியினரும் எல்லாம்வல்ல ஸ்ரீ உண்ணாமுலை சமேத அண்ணாமலையாரின் அரும்பெரும் தெய்வீக அருளைப்பெற வேண்டுகிறோம்.

தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தெரிவித்தால் அதன்படி நாங்கள் பௌர்ணமி அன்று அன்னதானம் செய்து பிரசாதத்துடன் ஸ்ரீ அருணாசலேஸ்வரர், ஸ்ரீ உண்ணாமுலையம்மன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.


❖ பிறந்தநாள் ❖ திருமணநாள் ❖ முன்னோர்கள் திதி நாள் ❖ வாழ்க்கையில் உயர்வு ❖ தொழிலில் முன்னேற்றம் பெற ❖ நிரந்தர வேலை பெற ❖ கல்யாண பாக்கியம் பெற, நல்ல வரன் அமைய ❖ புத்திர/பிள்ளை பாக்கியம் பெற ❖ கணவன் - மனைவி இடையே ஒற்றுமை நிலவ ❖ கஷ்டங்களும், கடன்களும் எதிர்ப்பு இடையூறுகளும் நீங்க ❖ புதிய முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாக ❖ புதிதாக தொழில் தொடங்க ❖ புதிதாக வீடு / மனை பெற ❖ வாகன யோகம் பெற ❖ நல்ல சிந்தனை பெற ❖ சிந்தனை வளம் பெருக ❖ உடல் ஆரோக்கியம் பெற ❖ நீண்ட ஆயுள் பெற ❖ தெய்வசக்தியுடன் திகழ ❖ குடும்ப ஒற்றுமை பெற ❖ உலக ஒற்றுமை பெற ❖ சமுதாய ஒற்றுமை பெற ❖ தேச ஒற்றுமைபெற ❖ எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்.

- தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.2000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் நான்கு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இருபது ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

*ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று திருஅண்ணாமலையில் அன்னதானம் செய்து தொடர்ந்து இருபது ஆண்டுகளுக்கு பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெற வேண்டும் என்ற இறைசிந்தனையோடு ரூ.5000 செலுத்து பவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள **ஸ்ரீமத் பகவத்கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.**

● நன்கொடை அனுப்பும் சிவநேசச்செல்வர்கள் (Aanmeeka Annadhana Charitable Trust Chennai - 4) என்ற பெயரில் Cheque /D.D/ M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம்தரும் இறைபணி சேவைகளாக 'ஆன்மீக அன்னதான அறக்கட்டளை' ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.



ஸ்ரீ அருணாசலேஸ்வரர்


Cheque / D.D / M .O அனுப்ப வேண்டிய முகவரி :

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

AANMEEGA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)

68, Nadu Street, Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax: (044) 4616311 E - Mail: siva siva @vsnl.net



ஸ்ரீ உண்ணாமுலையம்மன்

அண்ணாமலையாரை சரண் அடைந்தால் அகிலம் முழுவதும் நம் வசமே!

மாதவிடாய் நின்ற சில பெண்களுக்கும் இந் நோய் அதிக சிரமத்தைத் தரும்.

வயிற்றில் ஏற்படும் அமிலம் அதிக அளவில் சுரந்து அஜீரணத்தை ஏற்படுத்தும்போது மலச்சிக்கல் ஏற்படும். இந் நிலையில் உடலில் உள்ள எல்லாத் திசுக்களிலும் அமில சுரப்பு அதிகமாகி அதனால் மிகையான 'யூரிக்' அமிலம் உடலில் சேர்ந்து வாய்வுத் தொல்லை ஏற்படுத்துகிறது. இதில் ஒன்றுதான் மூட்டுவாதம் எனப்படும்.

காரம், துவர்ப்பு, கசப்பு ஆகியவற்றை அளவுக்கு மீறி சாப்பிடுவதாலும், ஆறிப்போன உணவைச் சாப்பிடுவதாலும், அதிகப் பட்டினி கிடப்பதாலும் அதிகமான பளுவைச் சுமப்பதாலும் பகலில் படுத்து உறங்குவதாலும், இரவில் கண் விழித்து வேலை செய்வதாலும் வாத நோய்கள் ஏற்படும்.

யோகாசனப் பயிற்சிகளை பின்வரும் முறையில் செய்ய வேண்டும் –

1. பரத்வ்ஜாசனம்
2. பத்மாசனம்
3. ஜானுசிர்ஹாசனம்
4. சக்ராசனம்
5. அர்த்த கடி சக்ராசனம்
6. த்ரகோணாசனம்
7. விபரீத கரணி
8. புஜங்காசனம்
9. சலபாசனம்
10. வஜ்ராசனம்

இவற்றில் பரத்வஜாசனமும், விபரீதகரணி ஆகிய இரண்டும் மிக முக்கியமானவை. விபரீதகரணியைப் பற்றிச் சென்ற இதழ்களில் விளக்கியுள்ளதால், பரத்வஜாசனம் செய்முறையைப் பார்ப்போம்.

1. விரிப்பின் மீது கால்களை நீட்டி அமரவும்.

2. வலது காலை பக்கவாட்டில் மடித்து புட்டத்திற்கு சற்றுத் தள்ளி வைக்கவும்.

3. இடதுகாலை மடித்து பத்மாசனம் செய்வது போல் பாதத்தை வலது தொடை மீது வயிற்றை ஒட்டியவாறு வைக்கவும்.

4. வலது கையால் இடது கால் முட்டியைப் பற்றி அழுத்தி முட்டி தரையைத் தொடும்படி வைக்கவும்.

5. இடதுகையை முதுகுக்குப் பின்புறம் கொண்டு வந்து தலையை இடதுபுறம் திருப்பவும். முடிந்தால் இடது கை விரல்களால் இடது கால் கட்டை விரலை பிடிக்கவும்.

6. கண்களை மூடிச் சாதாரண மூச்சில் 30 எண்ணிக்கை இருக்கவும்.

7. தலையைத் திருப்பி இடதுகையை முன்னால் கொண்டு வந்து வலது கையை முட்டியிலிருந்து எடுத்து கைகளைப் பிரித்து நீட்டி அமர்ந்து சிறிது ஓய்வு எடுக்கவும்.

8. மாற்று ஆசனமாக இடது காலை மடித்து முன்பு சொன்னது போல் செய்யவும். இரண்டு முறை வலது இடது என செய்து முடிக்கவும்.

குறிப்புகள் :

1. பின்னால் விரலைப் பிடிக்க முடியாதவர்கள் சாதாரணமாகக் கையை முதுகுக்குப் பின்னால் வைத்துச் செய்யவும்.

2. கையைப் பின்னால் கொண்டு வர முடியாதவர்கள் கையைத் தரையில் ஊன்றி செய்யலாம்.

3. இவ்வாசனம் பத்மாசனம், வஜ்ஜிராசனம், அர்த்த மத்ச்யேந்திராசனம் ஆகிய மூன்று ஆசனங்களின் பலனைக் கொண்டிருப்பதால் இதை 3-இன் 1 ஆசனம் எனலாம்.


மூட்டுவலி குறைய நாடி சுத்தி பிராணாயாமமும், வாமன தௌதி கிரியையும் செய்ய வேண்டும். இவற்றை நல்ல யோகாசனம் பயிற்சி ஆசிரியரிடம் கற்றுக் கொண்டு செய்யவும். மூட்டு வலி குறைய,

• உணவில் கஞ்சியை வடித்த சாதத்தையே சாப்பிட வேண்டும். குக்கரில் வைத்த சாதம் சாப்பிடக் கூடாது.

• வாரமொரு முறை கட்டாயம் எண்ணெய் ஸ்நானம் செய்ய வேண்டும்.

• ஆறு மாதத்திற்கொருமுறை பேதிக்கு சாப்பிட வேண்டும்.

பேட்டி, தொகுப்பு : **ராஜ்யஸ்ரீ சந்திரசேகர்**



மிக்ஸியில் பொடிகள் அரைக்கும்போது மூடியில் வந்து சேர்ந்து அரைக்கும் நேரத்தை அதிகமாக்கும். தவிர் கடையும் விப்பர் பட்டனில் 2, 3 முறை சுற்றினால் நன்கு பொடியாவதோடு ஒன்றிரண்டாக இல்லாமல் ஒரே மாதிரியாக பொடியாகும்.

-வகுலமாலா எஸ்.ராஜன்.

சமூகத்துக்கு எதிராக போராட்டமா? ஏச்!

நமது நாடு சுதந்திரம் அடைந்து ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு ஐ.டியில், பொருளாதாரத்தில் முன்னணி நாடு என்று பறைசாற்றிக் கொள்கிறது. வருடா வருடம் மார்ச் 8 பெண்கள் தினமாக அமர்க்களமாகக் கொண்டாடப்பட்டும் வருகிறது. ஆனால் இங்கு பெண்களுக்கு அவர்கள் பெண்கள் என்பதற்காகவே இழைக்கப்படும் அநீதிகள் மட்டும் மாறவேயில்லை. சமூகத்துக்காகப் போராடும் பல பெண்கள் சந்திக்கும் துன்பங்கள் எண்ணிலடங்காது. இதில் ஒரு சில வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டு பெண்கள் இயக்கத்தால் போராட்டங்கள்

• பாவந்தர் படத்தில் - பிரதமரிடம் விருது பெறும் சன்வாரி



நடத்தப்பட்டு நீதிகிடைக்க வழிசெய்யப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு பெண்ணின் வாழ்க்கையில் நடந்த சோகக் கதைதான் இது. இதுபோல் இன்னும் வெளிச்சத்திற்கு வராத கதைகள் எத்தனையோ...?

ராஜஸ்தானில் வறுமை கோட்டிலிருக்கும் ஒரு குக்கிராமம். அங்கு அறுபது வயதைத் தாண்டிய மூதாட்டி. சமூக சேவைக்காக, தனது வீரச் செயலுக்காக பல விருதுகளையும், பட்டங்களையும் பெற்றவர். முன்னாள் பிரதமர் நரசிம்மராவிடமிருந்து ரூபாய் பத்தாயிரம் பண முடிப்பைப் பெற்றவர். அவர் தான் பன்வாரி தேவி.

ராஜஸ்தானில் இவர் பெயர் ஒலிக்காத இடமேயில்லை. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்



• சன்வாரியாக நந்திதா தாஸ்

இவருக்கு இழைக்கப்பட்ட கொடுமையைக் கேட்டால் கல் நெஞ்சும் கரைந்து போகும். இன்றைக்குப் பெண்களுக்கு வேலை செய்யும் இடங்களில் நடத்தப்படும் பாலியல் கொடுமைகளுக்கு எதிராக சட்டத்தில் பாது காப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் இவர்தான். ஆனால் இவர் இன்று தனது சமூகத்தினரால், ஊர் மக்களால் ஒதுக்கி வைக்கப்பட்டு தான் செய்யாத குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டு வருகிறார்.

1985-ல் தனது குடும்ப சுமையை கணவனுடன் சேர்ந்து தோள் சுமக்க தினக் கூலி தொழிலாளியாக வேலைக்குச் சேர்ந்தார். அப்பொழுது சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர் என்கிற காரணத்தால் தனக்குக் கூலியாக சொற்ப



• ஜக்மோகன் முந்த்ராவுடன் பன்வாரி தேவி, அவர் கணவர் மற்றும் மகன்

பணம் தருவதை எதிர்த்துப் போராடினார். அதே போல் தனது கிராமத்தில் நடக்கும் பால்ய விவாஹங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக போலீஸில் புகார் செய்து தடுத்து வந்தார்.

இதனால் கோபமுற்ற மேல் மட்டத்து மனிதர்களில் வெறி பிடித்த ஐந்துபேர் 1992-ல் செப்டெம்பர் 22-ம் தேதி வேலைக்குச் சென்று திரும்பி வந்து கொண்டிருந்த பன்வாரியை கூட்டமாக பாலியல் பலாத்காரம் செய்தனர்.



இதைவிட கொடுமை குற்றவாளியான அந்த ஐந்து பேர் மீதும் தவறு எதுவுமில்லை என்று தீர்ப்பு தரப்பட்டு 1995ல் அவர்கள் வெளிவந்துவிட்டதுதான்.

இந்தத் தீர்ப்புக்கு முக்கிய காரணம் அங்கிருந்த செல்வாக்குப் படைத்த அரசியல்வாதிகளே. வழக்கு நடைபெற்ற இடைப்பட்ட காலத்தில் ஐந்து நீதிபதிகள் மாற்றப்பட்டுள்ளனர். ஆறாவதாக வந்த நீதிபதி குற்றம் சுமத்தப்பட்டவர்கள் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பு கூறி வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளார்.

இந்த வழக்கு நடைபெற்றபோது குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தரப்பில் பன்வாரியிடம் வழக்கை வாபஸ்பெற ஈட்டுத் தொகை தர பேரம் பேசப்பட்டது. ஆனால் இதை மறுத்து



• படத்தில் கோர்ட் காட்சி

விட்ட பன்வாரி ஊர்மக்கள் முன் இவர்கள் தன்னை மானபங்கப் படுத்தியதை ஒத்துக்கொள்ள வேண்டும், தான் குற்றமற்றவள் என்று நிரூபிக்க வேண்டும் என்று கூறிவிட்டார்.

தில்லியைச் சேர்ந்த பல பெண்கள் இயக்கங்கள் பன்வாரிக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று போராட்டம் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்திற்குப் பிறகே பெண்களுக்குப் பணியிடங்களில் நடத்தப்படும் பாலியல் பலாத்காரங்களுக்கு எதிராக சட்டத்தில் பாதுகாப்பு அளிக்க சட்டம் இயற்றப்பட்டது. அப்போதைய நமது பாரத பிரதமர் நரசிம்மராவ் பன்வாரிக்கு பத்தாயிரம் ரூபாய் பண முடிப்பைத் தந்தார்.

இன்று வயிற்றுப் பிழைப்புக்காக பானை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பன்வாரியை ஊர்மக்கள் ஒதுக்கி வைத்துள்ளனர், இந்தச் சம்பவத்திற்குப் பிறகு.

சுலபமான தளிவடாம்

தேவையான பொருட்கள்:

பச்சரிசி – ½ கிலோ
ஜவ்வரிசி – 50 கிராம்
ப.மிளகாய் விழுது – 2 ஸ்பூன்
பெருங்காயத்தூள், உப்பு – தேவைக்கேற்ப
சீரகம் – 1 டீஸ்பூன்
வா.இலை, மந்தார இலை,
பாதாம் இலை – ஏதேனும் 10

செய்முறை: பச்சரியை ஊறவைத்துக் களைந்து வடிய விடவும். சற்று ஈரமாக இருக்கும்போது மிஷினில் நைசாக அரைத்து கடைசியில் ஜவ்வரிசியையும் சேர்த்து அரைக்கவும். சலித்து (இல்லாவிட்டால் வடாம் எழுதும்போது நெருடும் நொய்/ஈரத்தினால் அரைபடுவதினால் வரும் சேமியா) உப்பு சேர்த்துக் கெட்டியாகக் கரைத்து 3 நாட்கள் (அப்போது தான் இயற்கையான புளிப்பு ஏற்படும்) வைத்து மூன்றாம் நாள் காலையில் பெருங்காயம், சீரகம், பமிளகாய் விழுது சேர்த்து



நன்கு கலக்கிக் கொள்ளவும்.

இட்லி பாத்திரம் / குக்கரில் கண் தட்டு வைத்து நீர்விட்டு கொதிக்க விடவும். இலையைத் துடைத்து ஒரு டேபிள் ஸ்பூன் மாவு எடுத்து வடாம் ரவுண்டாக எழுதவும். ஆவியில் இட்டு 2 நிமிடம் வேகவிடவும். இது வெந்து விடுவதற்குள் இன்னொரு வடாம் எழுதி ரெடியாக வைக்கவும். வேகவிட்ட வடாத்தை நீர் தெளிக்காது விரல் நுனியை நீரால் நனைத்து வடாத்தை உரித்துக் காய வைத்து எடுக்கவும்.

இந்த அளவிற்கு சுமார் 50 / 60 வடாம் செய்யலாம்.

பரபரவென்று ஏனோ, தானோ என்று செய்யும் வேலையல்ல. முக்கிய தேவை பொறுமை.

ஜவ்வரிசியை மாவோடு சேர்த்து அரைப்பதினால் எழுதும்போது ஈஸியாக எழுத வருவதோடு நன்றாக சீறிப் பொரியும்.

— லக்ஷ்மி சீனிவாசன்

ஏனெனில் அவர் புனிதமற்றவராம்! அவரும், அவர் கணவரும் செய்து வரும் பானைகளை யாரும் வாங்குவதில்லை. தண்ணீர் பிடிக்க அவர் கிணற்றைத் தொட விடுவதில்லை. அவர் விற்கும் பாலை வாங்க யாரும் இல்லை. ஆனால் இத்தனை கொடுமைகளிலும் அவர் கணவர் அவருக்கு உறுதுணையாக இருப்பது ஒன்றுதான் அவருக்கு ஒரே ஆறுதல்.

பன்வாரியின் குடும்பத்தில் உள்ள மற்ற உறுப்பினர்கள் அவர் அப்பொழுது காசு வாங்கிக் கொண்டு இந்தப் பிரச்னையை பெரிது படுத்தாமல் இருந்திருக்கலாம் என்று கூறுகின்றனர்.

தற்பொழுது பன்வாரியின் வாழ்க்கை கதை மற்றும் அவருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் ஜக்மோகன் முந்த்ரா என்பவரால் படமாக்கப்பட்டுள்ளது. 'பாவந்தர்' என்று ஹிந்தியிலும் 'sand storm' என்று ஆங்கிலத்திலும் பெயரிடப்பட்டு எடுக்கப்பட்டுள்ள இந்தப் படத்தில் பன்வாரியின் கதாப்பாத்திரத்தை ஏற்று நடித்திருக்கிறார் நந்திதா தாஸ். இதில் பன்வாரியின் பெயர் 'சன்வாரி' என்று மாற்றப்பட்டு எடுக்கப்பட்டுள்ளது.


இந்தப் படத்தை திரையிடப்படுவது மூலம் வரும் பணத்தை பன்வாரி தேவியின் எதிர்கால வாழ்க்கைக்காக வங்கியில் போட இருக்கிறார், இன்டர் நேஷனல் விருது வாங்கியிருக்கும் ஜக்மோஹன் முந்த்ரா. பன்வாரிக்காக சொந்தமாக ஒரு இடமும் வாங்கி, அவர் பெயரில் வங்கியில் முன்னூறு டாலர் செலுத்தியுள்ளார். அவர் மகனையும் படிக்க வைக்க உதவி புரிந்து வருகிறார்.

ஆனால் பன்வாரி இன்னும் தனக்கு நீதி கிடைக்கும் என்று விடாமல் போராடி வருகிறார்.

இன்றைக்குப் பெண்களுக்குக் குரல் கொடுக்கிறோம் என்று-அரசியல் ஆதாயம் தேடி-பல கட்சிகள் போட்டா போட்டி, நாடாளுமன்றத்தில் பெண்களுக்குத் தனி இட ஒதுக்கீடு கேட்டுப் பேச்சு, போராட்டங்கள் எல்லாமும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் பன்வாரியைப் போல் சமூகத்தில் நடக்கும் அவலங்களை தட்டிக் கேட்கும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

(நன்றி: ஹிந்து)

— கற்பகம்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. Tel : 237 6129.
E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com

தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

150 ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• பிஸ்கட், மற்றும் பால் வழங்குதல்	ரூ.	750/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ.	3,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	9,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-



-: விவேகானந்தர் தேசீய இயக்கம் :-

ஸ்ரீ சாரதா சக்தி பீடத்தின் சார்பில் "விவேகானந்தர் தேசீய இயக்கம்" என்ற அமைப்பு கிராமபுறத்தில் உள்ள ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி, மத நல்லிணக்கம், மனித நேயம், சமய சமரசம் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் 350 கிராமங்களில் சுமார் 12,250 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு மாலை நேரத்தில் இலவச சிறப்புக் கல்வியும், (டியுஷன்) ஆன்மீக பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த மேலான தொண்டுகள் சிறப்பாக நடைபெற தங்களின் அன்பையும், உதவியையும் நாடுகிறோம்.

ஒரு மையத்தின் (கிராமத்தின்) ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு (பௌர்ணமி அன்று சிறப்பு விருந்து உட்பட)	ரூ.	1,500/–
ஒரு மையத்தின் ஓராண்டிற்கு பராமரிப்புத் தொகை (12 மாதம் பௌர்ணமி சிறப்பு விருந்து உட்பட)	ரூ.	18,000/–

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்



கண்ணே கருவேப்பிலைச் செடியே!

கனடாவில் - 'கருவேப்பிலை ஆன்ட்டி' என்று அன்புடன் அழைக்கப்படுபவர் ரஜினி யாதவ். கனடாவின் கடுங்குளிரிலும், பனியிலும், கொடுங் காற்றிலும் கருவேப்பிலைச் செடியா? சாதாரணச் சூழ்நிலையிலேயே கருவேப்பிலைச் செடி வளர்வது கடினமாயிற்றே!

ஆம். இந்தக் கஷ்டமான காரியத்தை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு வீட்டின் உள்ளே ஒரு தொட்டியில் வைத்து கருவேப்பிலைச் செடியை வளர்த்து வருகிறார் இவர். செடியில் ஏராளமான பசுமையான இலைகள்.

அவரும் அவர் கணவரும் இரண்டு குழந்தைகளும் சுத்த சைவம்தான். கருவேப்பிலை மணக்க வேண்டிய இடத்தில் எல்லாம் அவ்வப்போது செடியில் இருந்து பறித்துச் சமையலில் உபயோகப்படுத்துகிறார்.

அவர் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள இந்தியக் குடும்பங்களுக்கும், மற்றும் விரும்பிக் கேட்பவர்களுக்கும் செடியில் இருந்து பறித்துத் தருகிறார்.

அவர் வசிப்பது கனடாவில் நார்த்வே என்கிற இடத்தில். அவர் கடையில் இருந்து கருவேப்பிலை வாங்க வேண்டுமென்றால் சுமார் 350 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள டோராண்டாவிற்குச் செல்ல வேண்டும். மாம்பலம் ரங்கநாதன் தெருவில் 50 பைசாவிற்குக் கிடைக்கும் கருவேப்பிலையின் விலை ஒன்றரை கனேடியன் டாலர் (ரூ. 45).

அடிக்கடி டோரோண்டோ போவதும் சாத்தியமில்லை. அதே சமயத்தில் கருவேப்பிலையும் சமையலுக்கு வேணும். ஆகவே கருவேப்பிலைச் செடியை வீட்டிலேயே வளர்க்க ஆரம்பித்து விட்டார்.

அவரிடம் இருக்கும் சில பழக்கங்கள் -

நார்த்பேக்கு எந்த இந்திய, ஆசியக் குடும்பம் புதியதாக வந்தாலும் தானாகவே அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களைக் கூப்பிட்டு விருந்து கொடுப்பார். அவர்களுக்குத் தேவையான உதவிகளை தானாகவே கேட்டுச் செய்வார்.

அவர் - பிறந்து வளர்ந்தது எல்லாம் இந்தியாவில் மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூரில். தந்தை ஜே.ஆர். நாரங். பெரிய பிசினஸ்மேன். செய்யும் தொழில் வர்த்தகமாக இருந்தாலும், ஆசாரங்கள், அனுஷ்டானங்கள் அனுசரிப்பதில் கடுமையான பண்டிதர்.

தினசரி காலையில் அக்னிகுண்டத்தில் 'அக்னி' வளர்த்து இறைவனை வணங்கி விட்டுத்தான் காலை ஆகாரம். காலை ஐந்து மணிக்குத் தொடங்

கும் இந்த பூஜையில் அவர், மனைவி, அவருடைய மகன்கள் மகள்கள் எட்டு பேர் எல்லோரும் பங்கு பெறுவர். ஸ்லோகங்கள் சொல்லுவார்கள்.

"காலை ஐந்து மணிக்கு எழுந்து பூஜை செய்து ஸ்லோகங்களைச் சொல்வது அந்த வயதில் எங்களுக்குப் பிடிக்காது. வெறுப்பாக இருக்கும். எரிச்சல் வரும். அப்பாவின் மேல் கோபமும் வரும். ஆனால் இன்று அவர் அப்படிப்பட்ட நல்ல பழக்கங்களை எங்களுக்கு ஏற்படுத்தியதற்காக – எங்களை எங்களது மதத்தில் நம்பிக்கை உள்ளவர்களாக வளர்த்ததற்காக – நாங்கள் எட்டு பேரும் அவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

வீட்டில் ஒருவேளை கூட யாராவது ஒன்றிரண்டு பேர் விருந்தினர்களாக இருந்து சாப்பிடாத நாளே கிடையாது. வீட்டிற்கு வருபவர்களுக்கு அன்னம் இட்டு அவர்கள் வயிறார மகிழ்ச்சியுடன் சாப்பிடுவதைப் பார்த்து அவர் மகிழ்வார்.

எனக்கும் அந்தக் குணம் ஏற்பட என் தந்தைதான் காரணம். நாங்கள் சகோதர சகோதரிகள் எல்லாம் மிகவும் ஒற்றுமையானவர்கள். அதிலும் நாங்கள் – மூன்று சகோதரிகள் – ரொம்ப ரொம்ப நெருக்கம். எங்களுடைய சந்தோஷம், துக்கம், உணர்வுகள் எல்லாவற்றையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வோம். ஏதாவது தூரத்தில் பிரிந்திருந்தாலும் ஃபோனின் மூலம், ஈமெயில் மூலம் அடிக்கடி பரிமாறிக் கொள்வோம். இரண்டு வருடத்திற்கு ஒருமுறை நான் இந்தியா போகும் போது அந்த உணர்வுகள் இன்னும் நெருக்கமாகிறது.

இந்த நெருக்கமான உறவின் அனுபவமே, மற்றவர்களாக - தெரிந்தவர்களாக -சுக துக்கங்களைப் பொறுமையாக காது கொடுத்துக் கேட்டு அவர்களுக்கு ஆறுதல் சொல்வது, தேவைப்பட்டால் ஆலோசனை சொல்வது, உதவி செய்வது என்கிற சுபாவங்களை என்னிடம் ஏற்படுத்தியது" என்கிறார் இவர்.

மகள் கீதாவும், மகன் மனீஷும் டோரோண்டாவில் முறையே பிஎஸ்ஸி, பிஎஸ்ஸி, (ஹானர்ஸ்) படித்து வருகிறார்கள்.

"கருவேப்பிலைச் செடி எங்கிருந்து வந்தது? எத்தனை வருடம் ஆகிறது? வளர்வதில் என்ன பிரச்னைகள்?"

"சுமார் எட்டு வருடத்திற்கு முன்பு ஒருமுறை இந்தியாவில் போபாலுக்குச் சென்ற போது அங்கிருந்த நர்சரியில் இருந்து சிறிய கன்று ஒன்று வாங்கி வந்தோம். ஆறு அங்குலம் உள்ள அந்தச் செடியை ஹாண்ட்பேக்கில் வைத்துக் கொண்டு வந்தேன். அதற்காக ஒரு பிளாஸ்டிக் சட்டி வாங்கி, சூப்பர் மார்க்கெட்டில் ஆம், செடிக்கான மண் எல்லாம் சூப்பர் மார்க்கெட்டில்தான் வாங்க வேண்டும் – சட்டியில் இடுவதற்கான மண் வாங்கி கன்றை நட்டேன்.

செடியை வெளியில் வைக்க முடியாது. வருடத்தின் பெரும்பகுதி கடும் குளிர். செடி வளராது. அதனாலேயே வீட்டின் உள்ளேயே வைத்து வளர்க்க ஆரம்பித்தேன். வீட்டின் உள்ளே எந்த நேரமும் 'ஹீட்டிங்' உண்டு என்பதால் வெளியே உள்ள கடுங்குளிர் செடியைப் பாதிக்காது. செடிச் சட்டியை மாற்றி மாற்றி வெயில் படும் இடத்தில் வைப்பேன். அளவான தண்ணீர், சிறிய அளவு செடிக்கான 'போஷாக்குகள்' எல்லாம் கவனமாக செய்து வந்தேன். செடி வளர வளர பார்க்க சந்தோஷமாக இருந்தது. அதிக உயரம் வளர்ந்த போது வெட்டியும் விட்டேன்.

ஒரு சமயம் –

செடிக்கு ஏதோ வியாதி வந்து இலைகள் எல்லாம் உதிர்ந்து விட்டன. செடியின் தண்டை எடுத்து சுத்தமாகச் சோப்புப் போட்டு தண்ணீரில் கழுவி, புதியதாக 'செடிச் சட்டி' ஒன்று வாங்கி புதிய தாக மண் வாங்கி மறுபடியும் நட்டேன். பல நாட்கள் செடியில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. செடி செத்துப் போய் விட்டது என்று நினைத்தேன். வருத்தமாக இருந்தது. இருந்தாலும் நம்பிக்கை விடாமல் தினசரி தண்ணீர் ஊற்றி வெயில் படும்படி வைத்திருந்தேன்.

வெகுநாட்களுக்குப் பிறகு செடியில் ஏதோ புள்ளிகள் உருவாவது போலத் தோன்றின. நிஜமான புள்ளிகளா... அல்லது எனது பிரமையா என்று தோன்றவே, அந்தப் புள்ளிகளை பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தேன். அந்தப் புள்ளிகள் பெரிதாகத் தெரிந்தன. அவற்றில் இருந்து முளை வருவது தெரிந்தது. மனத்தில் இருந்த பாரம் நீங்கியது. செடி பிழைத்துக் கொண்டது! தினசரி காலையில் செடியின் வளர்ச்சியைப் பார்த்து விட்டுத்தான் காப்பி குடிப்பேன். முளைகள் பெரியதாக வளர வளர மகிழ்ச்சியும் வளர ஆரம்பித்தது..."

ஏதோ வியாதியில் இருந்த செல்லக் குழந்தை பிழைத்து எழுந்ததைப் போல விவரிக்கிறார். கருவேப்பிலைச் செடிக்கு அவர் காட்டும் பரிவு, அதன் மேல் அவர் வைத்திருக்கும் பாசம் நம்மை வியக்க வைக்கிறது.

— கமலநாதன்

பேல்பூரியில் சிறிது கார்ன்ஃப்ளேக்ஸை பூரித் துண்டுகளுக்குப் பதில் கலக்கவும். ருசிக்கு ருசி! ஆரோக்கியத்திற்கு ஆரோக்கியம்.

– உஷா



முகவிலையினும் மேலான ஓர் அன்பளிப்பை அவளுக்கு வழங்குங்கள்



UTI
MAHILA UNIT
SCHEME

பாரதப் பெண்மணிகளின் ஆதாயத்திற்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட யூடிஐ மஹிளா யூனிட் ஸ்கீமை வழங்குவதில் யூடிஐ ஆனந்தமடைகிறது. **18 வயது ஆன எந்த ஒரு பெண்ணும் அவளது சொந்த சேமிப்புகளை இதில் முதலீடு செய்ய முடியும். அல்லது பிறந்தநாள் / திருமணம் / ஆண்டு நிறைவு நாள் போன்றவற்றின் போதோ அல்லது எந்த ஒரு பண்டிகை–வைபவங்களின் போதோ அவளது உறவினர்கள் அல்லது நண்பர்கள் போன்றோரிடம் இருந்து இந்த திட்டத்தின் யூனிட்களை அன்பளிப்பாக பெறலாம்.**

அம்சங்கள் :

- 18 வயதான இந்தியாவில் வசிக்கும் பெண்மணி அல்லது என்.ஆர்.ஐ பெண்மணி தனது பெயரில் முதலீடு செய்ய முடியும். அல்லது இந்தியாவில் வசிப்பவர் அல்லது வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர் அல்லது ஒரு டிரஸ்ட் / நிறுவனம் / ஒசிபி போன்றவற்றில் இருந்து அவளது பெயரில் வாங்கப்படும் எந்த ஒரு தொகைக்குமான குறைந்தபட்சம் ரூ.5000/-த்திற்கான யூனிட்களை அன்பளிப்பாக பெற முடியும்.

  மேலும் அன்பளிப்பு யூனிட்கள் முன்னரே நிர்ணயித்த விலைமதிப்பில் ரூ.1100/- அல்லது ரூ.2100/- அல்லது ரூ.5100/- அல்லது அவற்றின் மடங்குகளிலும் / கலவையிலும் கிடைக்கின்றன.
- குறைந்தபட்சம் கடன் பத்திரங்களில் 70% மற்றும் அதிகபட்சம் ஈக்விட்டிகளில் 30% முதலீடு செய்யும் காலவரம்பற்ற கடன் திட்டம்.
- துவக்க அளிப்பு காலத்தில் விற்பனை ரூ.10/- முகவிலையில்.
- பண்டிகைக்கால ரொக்க தேர்வு : தேர்ந்தெடுத்த பண்டிகை நெருங்கிவரும் காலகட்டத்தில் என்.ஏ.வியின் 99% மதிப்பில் வருடத்திற்கு ஒரு முறை யூனிட்கள் மதிப்புயர்வு இருப்பின் அதனளவுக்கு மறுகொள்முதல் செய்து பணம் வழங்கப்படும்.
- வளர்ச்சி தேர்வு : இதன் கீழ், விருப்பத்துக்கு தகுந்தபடி என்.ஏ.வி அடிப்படையிலான விலைகளில் மறுகொள்முதல் செய்து கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவம் / வழங்கு பத்திரம் போன்றவற்றுக்கு தயவு செய்து உங்களுக்கு அருகிலுள்ள யூடிஐ கிளை அலுவலகம் / யூஎஃப்சி அல்லது முக்கிய பிரதிநிதியை / முகவரை அணுகவும்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

இந்தியாவின் மிகப் பெரிய மியூச்சுவல் ஃபண்ட்

13, சர் வித்தல்தாஸ் தாக்கர்சி மார்க், நியூ மெரைன் லைன்ஸ், மும்பை 400 020.
தொலைபேசி : 203 1876. இணையதளம்: www.unittrustofindia.com

துவக்க அளிப்பு சர்வதேச பெண்கள் தினமான 8-3-2001 முதல்

அமைப்பு: யூடிஐ நிறுவனம் 1963 யூடிஐ சட்டவிதிகளின்படி செயல்படுகிறது. **அபாய நிலைமைகள்:** மியூச்சுவல் ஃபண்ட்கள் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யப்படும் அனைத்து முதலீடுகளும் மார்க்கெட் அபாயநிலைகளுக்கு உட்பட்டவை. செக்யூரிட்டிகள் மார்க்கெட்டை பாதிக்கும் காரணங்களை பொறுத்து திட்டத்தின் என்ஏவி ஏறவோ, இறங்கவோ செய்யலாம். கடந்தகால செயல்திறன் எதிர்கால ஆதாயங்களுக்கு உத்தரவாதம் ஆகாது. யூடிஐ–ன் மஹிளா யூனிட் ஸ்கீம் என்பது திட்டத்தின் பெயரே அன்றி எந்தவிதத்திலும் திட்டத்தின் தரத்தையோ, வருங்கால ஆதாயங்களையோ, அல்லது வருமானத்தையோ குறிப்பிடுவதாகாது. திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது. முதலீடு செய்யும் முன்பு தயவுசெய்து வழங்குபத்திரத்தைப் படிக்கவும்.

தென் மண்டல அலுவலகம் : சென்னை தொ.பேசி: (044) 5210347. **கிளை அலுவலகங்கள்**: சென்னை தொ.பேசி: 5210356, 5230985. • கோயம்புத்தூர் தொ.பேசி: 214973. • மதுரை தொ.பேசி: 738186. • திருச்சி தொ.பேசி: 760060. **ஃபிரான்சைஸ் அலுவலகம்**: சேலம் தொ.பேசி: 416414. **சிஆர் கலெக்‌ஷன் மையங்கள்**: குன்னூர் தொ.பேசி: 31037. • கடலூர் தொ.பேசி: 21712. • தர்மபுரி தொ.பேசி: 61012. • திண்டுக்கல் தொ.பேசி: 432244. • ஈரோடு தொ.பேசி: 252494. • காஞ்சிபுரம் தொ.பேசி: 20076. • காரைக்குடி தொ.பேசி: 22277. • மயிலாடுதுறை தொ.பேசி: 26739. • நாகர்கோவில் தொ.பேசி: 40274. • பாண்டிச்சேரி தொ.பேசி: 339080. • ராஜபாளையம் தொ.பேசி: 21360. • தஞ்சாவூர் தொ.பேசி: 31374. • திருநெல்வேலி தொ.பேசி: 339567. • தூத்துக்குடி தொ.பேசி: 325621 **யூடிஐ பாங்க்**: அடையார் தொ.பேசி: 4464442/43/44. • அண்ணாநகர் தொ.பேசி: 6289045. • டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை தொ.பேசி: 8231085. • ஏமாபுரம் தொ.பேசி: 2492184/85/86 • திநகர் தொ.பேசி: 8239134–35.

எய்ட்ஸை தடுப்பீர் – அனைவரையும் நேசிப்பீர்.

0503-2001 C TAM B

ANTIQUE WORKMANSHIP with POLKI STONES

ஃபாத்திமா பிளாசாவில் உள்ள எங்கள் கடையின்

இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

புதிய டிசைனில் ஏராளமான நகைகளை அறிமுகப்படுத்துகிறோம்.



முத்து, பவளம், குந்தன், ஜெய்பூர் மாலைகள், பிறந்த நாள் ராசி கற்கள், அமெரிக்கன் டைமண்ட் நகைகள், Coral Flower Sets, Oxidised Jewellery, Gold Wax Jewellery, Imported Beads in all Colours, Hyderabad Gold Foil Beads, Jade, Ruby, Emerald & Blue Sapphire Necklace, sets, இவை அனைத்தும் எங்களிடம் கிடைக்கும்.

all major Credit Cards accepted

2 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

10% முதல் **20%**

சிறப்பு தள்ளுபடி

NARAYANA pearls & gems

MAIN SHOWROOM
Basement, KASI ARCADE,
(Boag Road Junction),
Next to G.R.T Hotel,
116, Sir Thyagaraya Road,
T.Nagar, Chennai - 17.
Ph: 825 8714 / 8213457.

PONDY BAZAAR
FATHIMA PLAZA, (Singapore Plaza)
78, Pondy Bazaar
(Between Hotel Hameedia &
Blue Star Opticals),
Chennai - 17. Ph: 821 6394.

PURASAWALKAM
Basement, WAIKIKI COMPLEX,
Doveton Signal,
Purasawalkam,
Chennai - 7.
Ph: 532 8011.

SUNDAYS OPEN 11 A.M TO 8 P.M

கோமேதகம் புஷ்பராகம்



சூரியன் சுக்கிரன்		குரு சனி	ராகு
புதன்	2.4.2001/மீன- புதன் 10.4.2001 தனுசு - செவ்வாய் 13.4.2001 மேஷ - சூரியன்		
கேது	செவ்		



மேஷ ராசி :

அஸ்வினி, பரணி, கிருத்திகை 1 - ஆம் பாதம்

இராசிநாதன் செவ்வாய் மாத ஆரம்பத்தில் எட்டாம் இடத்தில் இருந்தாலும் 10.4.2001க்குப் பின் பாக்கியஸ்தானத்துக்குச் செல்ல இருப்பதால் அநேகமாக நற்பலன்களே நடைபெறும். உடல் நலத்தில் மட்டும் சற்றே கவனம் தேவை.


உத்தியோகஸ்தர்கள் உயர் அதிகாரிகளிடம் உங்களுக்கு உள்ள ஆதரவு பலம் காரணமாக இடமாற்றம், பதவி உயர்வு போன்ற நன்மைகளைப் பெறுவீர்கள். தொழிற்பிரிவினர் தொழில் வளர்ச்சியிலும் வருமானத்திலும் திருப்தி காணக்கூடும். எனினும் சக தொழிலாளர்கள் இதற்கு ஏதேனும் தடங்கலை ஏற்படுத்தவும் கூடும். கலைஞர்கள் பெரும் முயற்சிகளைத் தொடர்ச்சியாகச் செய்து வந்தால் சில புதிய வாய்ப்புகள் கிடைக்கக் கூடும். மாணவர்கள் படிப்பில் அளவு கடந்த ஈடுபாடு காட்டுவதற்குரிய நேரம் இதுதான் என்பதால் தவற விட மாட்டார்கள். முழு அக்கறையுடன் படித்துத் தேர்வில் வெற்றி பெற முயலுவீர்கள்.

வியாபாரம் வியாபாரிகளுக்கு முழுத் திருப்தி தரக்கூடியதாக இல்லாவிடினும் ஓரளவு சுமாரான முறையில் நடந்து வரும். எனினும் மிக மோசமாக இராது என்பதால் வியாபாரிகள் கவலைப்பட வேண்டாம். குடும்ப நிலை சுமுகமாக இருந்து வருவதும், சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நேருவதும் பெண்களின் மகிழ்ச்சியைக் கூடுதலாக்கும்.

குடும்ப நிலையில் கணவன் மனைவியிடையே இணக்கமான போக்கே நிலவி வரும். உங்களுடைய நிம்மதியைக் குலைக்க மூன்றாவது நபர் ஒருவர் முயலக்கூடும் என்பதால் மற்றவர்களிடம் அளவோடு பழகி வருவது நல்லது. நண்பர்களின் உதவி உண்டு. எதிர்பாராத முறையில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும்.

நீங்கள் தினமும் காலையில் ஆதித்ய ஹ்ருதயம் ஸ்தோத்திரத்தைச் சொல்லி சூரியனை வணங்கி வாருங்கள். உங்கள் துன்பங்கள் யாவும் நீங்கி, நற்பலன்கள் தொடரும்.

ரிஷப ராசி :



கிருத்திகை 2, 3, 4 -ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 - ஆம் பாதங்கள்.

ஏழாம் இடத்திலுள்ள செவ்வாய் எட்டாம் இடத்திற்குச் செல்வதும், புதன் நீசத்தை நோக்கிச் செல்வதும் தொல்லைகளைத் தரக்கூடிய அமைப்புதான் என்றாலும் சுக்கிரன் உச்சம் பெறுவதால் சில நன்மைகள் உண்டாகும்.


உத்தியோகஸ்தர்கள் விரும்பிய இடமாற்றம், பதவி உயர்வு போன்ற நற்பலன்களை, சக பணியாளர்களின் தடங்கலின் காரணமாக, தாமதமாகப் பெறக்கூடும். தொழிற்பிரிவினர் ஓரளவுக்கு முன்னேற்றத்தைக் காண முடியும். அரசு வழியில் சில உதவிகளும் அமையும். மாணவர்களின் படிப்பார்வம் பெற்றோரைப் பரவசப் படுத்தக் கூடிய வகையில் சிறப்பாக அமைந்திருக்கும்.

ஏப்ரல் 2001

கலைஞர்கள் புதிய நிறுவனங்களில் சில வாய்ப்புகளைப் பெறுவீர்கள். சிறிது காலம் பொறுமையாய் இருங்கள். பிரகாசமான எதிர் காலத்தை அடைந்து மகிழ்வீர்கள். வியாபாரிகள் திருப்தியடையும் வகையில் வியாபாரம் சிறப்பாகவே நடைபெறும். குடும்பத்தில் அனைவரின் ஒத்துழைப்பும் கிடைக்கப் பெறுவதால் பெண்கள் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே சிறு மனக்கசப்புகள் ஏற்பட்டாலும் உடனே அவை மறைந்து இனிமையான சூழ்நிலை ஏற்பட்டு விடும். அரசியல்வாதிகளின் குழப்ப நிலை தெளிவடைந்து வெற்றிகாணும் சூழ்நிலை தென்படும். எழுத்து, பத்திரிகைத் துறையினர் செழிப்பான நிலையைக் காண முடியும். சிறு விபத்து ஏற்படக்கூடும். எச்சரிக்கை அவசியம்.

நீங்கள் காயத்ரி மந்திரத்தைத் தினமும் சொல்லி வருவதன் மூலம் உங்கள் சங்கடங்கள் குறைந்து சுபிட்சமான சூழ்நிலையை அடைவீர்கள்.



மிதுன ராசி

மிருகசீரிஷம் 3, 4 - ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர் பூசம் 1,2,3 -ஆம் பாதங்கள்.

இராசிக்குப் பத்தாம் இடத்தில் சுக்கிரன், சூரியன் சஞ்சரிப்பது நன்மைகளை தரக்கூடும் என்றாலும் ஏழாம் இடத் தில் சஞ்சரிக்கும் செவ்வாய் மனைவியின் உடல்நலத்தில் பாதிப்பையும் வியாபாரத்தில் சரிவையும் தரக்கூடும்.

உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றைப் பெறுவதில் சக



பெங்களூர் கத்தரிக்காயுடன் இரண்டு ஸ்பூன் இஞ்சித் துருவல் சேர்த்து வாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி (சிம்மில்) வதக்கவும். பச்சை வாசம் போனதும் பெருங்காயத்தூள் கலந்து பச்சை மிளகாய், தேங்காய்த் துருவல், உப்பு, தயிர் சேர்த்து அருமையான பச்சடி செய்யலாம். கடுகு தாளிக்கவும்.

- சி. மஞ்சுளா

பணியாளர்கள் தடங்கல் ஏற்படுத்துவதன் காரணமாகத் தள்ளிப் போகக்கூடும். தொழிற் பிரிவினர் நாளுக்கு நாள் வளர்ச்சியைக் காண்பீர்கள். வருமானமும் கூடுதலாகும். அரசு வழி நன்மைகளும் உண்டாகும். மாணவர்கள் எதிர் வரும் தேர்வுகளில் பிரகாசமான வெற்றி வாய்ப்பைப் பெறக்கூடிய வகையில் கடுமையாக உழைத்து படிப்பில் கவனம் செலுத்துவீர்கள். நேரடி முயற்சிகளால் கலைஞர்கள் சில புதிய வாய்ப்புகளைப் பெறக்கூடும். வியாபாரம் சுமாராக நடைபெற்று வியாபாரிகளை ஓரளவே உற்சாகப்படுத்தும். குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லாருமே ஒத்துழைப்பைத் தருவதால் பெண்களுக்குப் பெருமையும் நிம்மதியும் உண்டாகும்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே சிறு சிறு மனக்கசப்புகள் அவ்வப்போது தோன்றினாலும் உடனுக்குடன் அவை மறைந்து விடும். பெரும் பாதிப்பு ஏதும் இருக்காது. மனைவிக்கு உடல்நலத்தில் கோளாறு ஏற்பட்டு உடன் சரியாகும். சிலர் காதல் திருமணம் புரிந்து கொள்ள இடமுண்டு. உறவினர் ஒருவர் பற்றிய துக்கச் செய்தி கிடைப்பதுடன், அதனால் செலவும் உண்டாகும்.

நீங்கள் தினமும் உங்கள் கையால் காக்கைக்குச் சாதம் வைத்து வருவதுடன், சனிக்கிழமைகளில் ஆஞ்சனேயருக்கு துளசி மாலை அணிவித்து வணங்கி வருவதும் உங்கள் தீயபலன்களைக் குறைத்து நற்பலன்களை மேலோங்கச் செய்யும்.

கடக ராசி :



புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

இம்மாதம் ஒன்பதாம் இடத்தில் சஞ்சரிக்கப் போகும் சூரியன், புதன், சுக்கிரனால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். சீட்டு செலுத்திய தொகை கைக்கு வந்து சேருவதில் சிக்கல் போன்றவை இருப்பினும், சில நன்மைகளும் அவ்வப்போது எதிர்பாராமல் ஏற்பட வழியுண்டு.

உத்தியோகஸ்தர்கள் அலுவலகம் தொடர்பான எல்லாப் பிரச்னைகளிலும் நல்லவிதமான பலன்களே நடைபெறக் காணலாம். ஆயினும் உயர் அதிகாரிகளுக்கு உங்கள் பேரில் நன்மதிப்பு இன்னும் ஏற்படச் செய்ய நீங்கள் முயற்சி செய்வது அவசியம். தொழிற்பிரிவினர் தொழில்ரீதியான போட்டிகளைச் சந்திக்க நேர்ந்தாலும் அதையும் கடந்து முன்னேற்றத்தைக் காணக்கூடும். நேரடியாக முயற்சிகள் செய்வதன் மூலம் கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற்று மகிழ்வீர்கள். பெற்றோரைப் பரவசப்படுத்தும் வகையில் மாணவர்கள்

படிப்பில் தீவிர அக்கறை செலுத்துவீர்கள். குடும்பத்தில் அமைதிக்குக் குறைவிராது என்பதால் பெண்கள் களிப்படையத் தடையில்லை.

குடும்ப நிலையில் இனிமையான போக்கு நிலவி வரும். பக்கத்து வீட்டுக்காரர்களிடம் அளவாகப் பேசிப் பழகுவது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். அரசியலில் விருப்பமுள்ளவர்கள் துணிந்து ஈடுபட ஏற்ற நேரம் இதுவாகும். எழுத்துத் துறையிலுள்ளவர்களில் சிலர் பரிசு, பாராட்டு பெற வாய்ப்புண்டு.

நீங்கள் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் ராகு காலத்தில் துர்காதேவிக்கு தீபமேற்றி வைத்து வழிபட்டு வாருங்கள். உங்கள் சிரமங்கள் கதிரவனைக் கண்ட பனி போல விலகி, செழிப்பான நிலை ஏற்படும்.



சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1-ஆம் பாதம்


லக்னாதிபதி சூரியன் லக்னத்துக்கு எட்டாம் இடத்தில் மாத ஆரம்பத்தில் சஞ்சரிப்பதும் சுக்கிரன், கூடியிருப்பதும், ஆரோக்கியக் குறைவு, பணவரவு செலவில் சிக்கல், பிறமொழி பேசுவோரால் தொல்லை போன்றவை உண்டாகலாம். எதிலும் அதிக கவனம் தேவை.

உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் கிடைக்காததை எண்ணிக் கவலைப்படாதீர்கள். உங்களை எதிர்த்து வந்தவர்கள் இடம் மாற்றம் பெற்றுச் சென்றதே உங்களுக்குப் பெரும் நன்மையாகும். உங்கள் வசதிகள் பெருகும். கலைஞர்களுக்கு முன்னணி நிறுவனங்களிடமிருந்து சில புதிய வாய்ப்புகள் தேடி வர வாய்ப்புண்டு. எனினும் உங்கள் நேரடி முயற்சிகள் இதற்கு நிறையத் தேவைப்படும். மாணவர்கள் தேர்வுகளுக்காகப் பெரும் சிரமப்பட்டு அக்கறையுடன் படித்து வருவீர்கள். உங்கள் முயற்சிகள் வீணாகாது. வியாபாரிகள் நிம்மதியடையக்கூடிய வகையில் வியாபாரம் நன்றாக நடைபெறுமாயினும் வாடிக்கையாளர்களிடம் தொகை அதிகம் நிலுவை நிற்பது வியாபாரிகளுக்குத் தொல்லைதான். பெண்கள், பொன் நகைகள், ஆடை அணிமணிகளை வாங்கி அணிந்து மகிழ முடியும்.

குடும்ப நிலையில் குதூகலத்துக்குக் குறைவேதும் ஏற்பட்டு விடாது. சுபநிகழ்ச்சி ஒன்று குடும்பத்தில் நிகழ இடமுண்டு. பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். புதியவர் ஒருவர் நண்பர் ஆவார். அரசியல் ஆர்வமுள்ளவர்களுக்குத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும்.

நீங்க சௌந்தர்யலஹரி ஸ்தோத்திரத்தைத் தினமும் சொல்லி வருவதுடன் அம்பாளின் படத்திற்கு முன் தீபமேற்றி வணங்கி வருவதால் உங்கள் துன்பங்கள் தீரும். நல்ல வாழ்க்கை உண்டாகும்.

கன்னி ராசி :



உத்திரம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்.

லக்னாதிபதி புதன் ஆறாம் இடத்தில் இருந்தாலும் பாக்கியத்தில் குரு, சனி இருப்பது நன்மையும், தீமையும் கலந்த பலன் நடைபெறக்கூடும். பூமியை விற்றுக் கடன் தீர்க்க நேரும். திருமணத் தடை உள்ளவர்களுக்கு வரன்கள் வரும். வண்டி வாகனங்களில் சிக்கல் நேரும்.

உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்திருந்த படியே இடமாற்றம், பதவி உயர்வு போன்ற நற்பலன்களை அடைவீர்கள். தொழிற்பிரிவினர் தொழில் முன்னேற்றத்தைக் காணக் கூடும். எனினும் அரசு வழியில் ஏதேனும்

அப்பம்/ஆப்பம் ஸ்பான்ஞ் போன்று மெத்தென்று வர 1 ஆழாக்கு ப. அரிசிக்கு 2 டீஸ்பூன் உளுந்தும், 25 கிராம் வெள்ளை (மிஷின்) அவலும் தனியே ஊறவைத்து அரைத்துச் சுட அப்பம்/ஆப்பம் இரண்டும் உங்களுக்குப் பாராட்டு பெற்றுத் தரும். ஆப்பம் மாவை வாணலியில் ஊற்றிய பிறகு அதன் நடுவில் குழிவான பகுதியில் ஒன்றிரண்டு பேரீச்சம் பழத் துண்டுகள்/ ஏதாவது பழத் துண்டுகள் அல்லது காரட் தே. துருவல் அரை டீஸ்பூன் தூவி செய்யப்படும் ஆப்பம் 'தூள்' கிளப்பும்.

- லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.





சிக்கல்கள் ஏற்படக்கூடும். கலைஞர்கள் சுமாரான முன்னேற்றத்தை மட்டுமே காண் பீர்கள். மாணவர்கள் ஓரளவு சோர்வுடன் காணப்பட்டாலும் படிப்பில் மிகுந்த கவனம் செலுத்தி வருவீர்கள். தேர்வில் முன்னிலை பெறுவதில் குறியாய் இருப்பீர்கள். வியாபாரி கள் ஓரளவு திருப்தியடையக்கூடிய வகையில் சுமாரான வியாபாரம் நடைபெறக்கூடும். சுப நிகழ்ச்சியின் தொடர்பாக வெளியூருக்குச் சென்று திரும்புவது, விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்வது போன்ற நிகழ்ச்சிகளால் பெண்களுக்கு உற்சாகம் பொங்கும்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவி யிடையே பரிவும் பாசமும் இருந்து வரும். நண்பர்களின் உதவி உண்டு. தாயாரின் உடல் நலத்தில் அக்கறை செலுத்த நேரும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடி வரும். சிறு விபத்து ஏற்படக்கூடுமென்பதால் எச்சரிக்கை தேவை.

நீங்கள் தினமும் 108 முறை ஸ்ரீராமஜெயம் எழுதி வருவதுடன் இராமர் பட்டாபிஷேகப் படத்தை பூஜையறையில் வைத்து வழிபட்டு வருவதும் உங்கள் சிரமங்களைப் போக்கி, செழிப்பைத் தரும்.

துலாம் ராசி :

சித்திரை 3, 4 -ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 -ஆம் பாதங்கள்.

இராசியாதிபதி சுக்கிரன் ஆறாம் இடத்தில் சூரியனுடன் சேர்ந்திருப்பதால் செய்தொழிலில் கவனம் தேவை. முடிவானதைப் போல் தெரியும் விஷயம் முடியாமல் நழுவிப் போகும். வயிற்

றின் இடப்பக்கத்தில் அல்லது இடக்காலில் சிறு தொல்லை ஏற்பட வழியுண்டு.

உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றைப் பெற இப்போது அவசரப்பட வேண்டாம். சிறிது காலம் பொறுமையாய் இருங்கள். தொழிற்பிரிவினர் சுயமுயற்சியாலேயே பெரும் முன்னேற்றத்தைக் காணலாம். கலைஞர்கள் மிகப் பெரும் புகழ்தரக் கூடிய வகையில் பிரபல நிறுவனங்களிலிருந்து சில வாய்ப்புகளைப் பெறக்கூடும். மாணவர்கள் தேர்வுகளில் முன்னிலை பெறக்கூடிய அளவுக்கு ஆர்வத்துடன் படிப்பில் ஈடுபடுவீர்கள். முயற்சிகளுக்கு வெற்றி கிட்டும். வியாபாரம் மாத முற்பகுதியில் சுமாராகவும், பிற்பகுதியில் நல்ல முறையிலும் நடைபெறக்கூடும் என்பதால் வியாபாரிகள் ஓரளவே திருப்தியடைய முடியும்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே இணக்கமான போக்கே தென்படும் என்றாலும் மூன்றாவது நபர் ஒருவர் தலையிட்டு குழப்பம் ஏற்படுத்தும் நிலை உள்ளதால் யாரிடமும் எச்சரிக்கையாய்ப் பழகுவது நல்லது. நண்பர்களின் மூலமும் அரசு வழியிலும் அனுகூலம் ஏற்பட இடமுண்டு. அரசியல் ஈடுபாடுள்ள சிலர் தேர்தலில் போட்டியிடக்கூடிய வாய்ப்பைப் பெறலாம்.

நீங்கள் சனிக்கிழமைகளில் சனீஸ்வர பகவானுக்கு எள்ளன்னம் நைவேத்தியம் செய்து ஏழை, எளியவர்களுக்கு விநியோகம் செய்து வாருங்கள். உங்களுக்கு சுபிட்சம் ஏற்படும்.

விருச்சிக ராசி :



விசாகம் 4 -ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

மாத ஆரம்பத்தில் இரண்டாம் இடத்தில் சஞ்சரிக்கப் போகும் இராசிநாதன் செவ்வாய் சிறிதளவு எதிர்பாராத தனவரவைத் தரக் கூடும் என்றாலும் குழந்தைகளைப் பற்றிய கவலை தோன்றும். மனைவியின் உறவினர் வகையில் மனஸ்தாபம் உண்டாகலாம். எனினும் ஐந்தாம் இடத்தில் சுக்கிரன் உச்சம் பெற்றுச் சஞ்சரிப்பதால் தொல்லைகளை நிவர்த்தி செய்வார்.

உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்ற நன்மைகளை எளிதில் பெற்று மகிழ்வீர்கள். தொழிற்பிரிவினர் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். மாணவர்கள் தேர்வுகளில் வெற்றி பெறுவதையே குறியாய்க் கொண்டு தீவிர அக்கறை செலுத்திப் படித்து வருவீர்கள். வியாபாரம் நல்ல முறையிலேயே மாதம் முழுவதும் நடைபெறும் என்பதால் வியாபாரிகள் மகிழ்ச்சியடைவீர்கள். குடும்பத்

எல்ஐசியின்

ஜீவன் ● ஸ்னேஹா



இன்றைய நங்கைக்கான

விசேஷ பாலிஸி.

'ஜீவன் ஸ்னேஹா' பெண்களுக்காக விசேஷமாக எல்ஐசியால் திட்டமிட்ட பாலிஸியாகும்.
இத்திட்டம் ஆயுள் காப்பீட்டின் பாதுகாப்புடன் லாபத் தொகைகளைத் உங்கள் விருப்பப்படி வழங்குகிறது.

சிறப்பு அம்சங்கள் :

- விருப்பப்பட்ட சமயத்தில் ரொக்கமாக்கி கொள்ளும் சலுகையுடன். பாலிஸி முதிர்வடையும்போது உயிருடன் இருந்தால் முதிர்வு தொகையுடன் உறுதியான கூடுதல் தொகை உண்டு. மேலும் விசுவாசத் தொகை எனப்படும் கூடுதல் லாபத் தொகைக்கான வாய்ப்பும் உண்டு.
- **'ஜீவன் ஸ்னேஹா'** கர்ப்பம், மகப்பேறு மற்றும் விபத்து பாதுகாப்பு எவ்வித கூடுதல் பிரீமியம் இல்லாமல் வழங்குகிறது.
- சில விதிமுறைகளின் கீழ் ப்ரீமியம் செலுத்தாது போனாலும் ஆயுள் காப்பீடு தொடரும்.
- ப்ரீமியம் செலுத்துவதில் சலுகை - உரிய தேதிக்கு முன்பே ப்ரீமியத்தை செலுத்தி தள்ளுபடி பெறலாம்.
- முதிர்வடையும்போது ஓய்வூதியம் (ஆன்யுட்டி) பெறும் விருப்பத்தேர்வையும் அளிக்கிறது.
- இலக்கின் 20% தொகை 5, 10 மற்றும் 15 வருட முடிவில் அளிக்கப்படும்.
- இலக்கின் 40% தொகை உறுதியான கூடுதல் தொகையுடன், விசுவாசத் தொகை இருந்தால் அதனுடன் 20 ஆண்டு முடிவில் அளிக்கப்படும்.
- திட்டகால இடையில் மரணம் சம்பவித்தால் ஏற்கனவே அளிக்கப்பட்ட தொகைகள் தவிர கூடுதலாக பூரண இலக்குத் தொகையும் அளிக்கப்படும்.
- இலக்குத் தொகையின் ஒவ்வொரு ஆயிரத்திற்கும் ரூ.70/- என்ற கணக்கில் ஒவ்வொரு ஆண்டும் உறுதியான லாபத் தொகை கண்டு.

மேற்கொண்டு விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள எல்ஐசி கிளை அல்லது முகவரை அணுகவும்.

லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா

SADILIC No.34/01/Tam


Visit us at : www.licindia.com

Insurance is the subject matter of the solicitation

தில் நடைபெறக்கூடிய சம்பவங்கள் யாவும் சுமுகமாக நடைபெறுவதன் காரணமாக பெண்களுக்கு மகிழ்ச்சி கூடுதலாகும்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே பரஸ்பர அன்பு நிலவி வரும். நல்ல தகவலைத் தாங்கிய கடிதம் ஒன்று கிடைக்கக்கூடும். அரசியலில் ஆர்வம் உள்ளவர்கள் துணிந்து ஈடுபடலாம். பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரலாம். சிலருக்கு காதல் திருமணம் கைகூடும். யாரிடமும் எச்சரிக்கையாய்ப் பழகுவது நல்லது.

நீங்கள் தினமும் லலிதா சகஸ்ரநாமம் ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்து வருவதன் மூலம் உங்கள் பிரச்னைகள் விலகி, சுபிட்சம் உண்டாகும்.



தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 - ஆம் பாதம்.


இராசிக்கு மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கப் போகும் புதனாலும், மற்றும் சூரியன், சுக்கிரனாலும் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். பிரச்னைகள் பெரிதாகத் தோன்றினாலும் தொட்டு விட்டு விலகிச் சென்று விடும். கவலை வேண்டாம்.

உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றைப் பெறுவதில் தடங்கல்கள் ஏற்பட்டு பின்னரே வெற்றி கிட்டக்கூடும். முயற்சிகளை விட்டு விடாதீர்கள். தொழிற்பிரிவினர் நன்மைகளைப் பெற முடியுமாயினும் கூட்டாளிகளால் பிரச்னைகள் ஏற்பட்டு கவலையைத் தரக்கூடும். நிதானமாகச் சமாளித்தால் நலம். கலைஞர்களின் தொடர்ந்த முயற்சிகளால் புதிய வாய்ப்புகள் சில அமையக்கூடும். வியாபாரிகளுக்கு மாத முற்பகுதியில் மந்த நிலை காணப்பட்டாலும் மாதப் பிற்பகுதியில் திருப்திகரமான நிலைக்குத் திரும்பி விட முடியும். மாணவர்கள் பெரிதும் ஆர்வத்துடன் படிப்பில் அக்கறை காட்டுவீர்கள்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே சுமுகமான போக்கு இருந்து வரும். ஓரிரு சலசலப்பும் ஏற்பட இடமுண்டென்பதால் நிதானமாக நடந்து கொண்டு சமாளிப்பது நல்லது. பழைய நண்பர்களைத் திடீரென்று சந்திக்க நேரும். அதன் மூலம் அனுகூலமும் உண்டு. புதிதாக நல்லவர் ஒருவர் அறிமுகமாவார். குடும்பத்துடன் பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள்.

நீங்கள் சனிக்கிழமைகளில் ஆஞ்சனேய பகவானுக்கு துளசி மாலை அணிவித்து வணங்கி வாருங்கள். உங்கள் சிரமங்கள் குறையும். சௌபாக்யம் பெருகும்.

மகர ராசி :



உத்திராடம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 - ஆம் பாதங்கள்.

ஒன்பதாம் இடத்துக்குரிய புதன் நீசம் பெற்று சஞ்சரிக்கப் போவதாலும், அஷ்டமாதிபதி சூரியன் சுக்கிரனுடன் சேருவதும் மனக்கவலைகளை ஏற்படுத்துமாயினும் சுக்கிரனால் சில நன்மைகளும் ஏற்பட வாய்ப்புண்டு.

உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு ஆகியவற்றைப் பெறக்கூடுமென்றாலும் சிறு தடங்கல் ஏற்பட்ட பின்னரே வெற்றி கிட்டக்கூடும். தொழிற்பிரிவினர் முன்னேற்றத்திற்கான அறிகுறிகளைக் காண்பீர்கள். கலைஞர்கள் பெரிதாக நன்மை எதையும் அடைய முடியாத அளவில் சிறு வாய்ப்புகள் சிலவற்றைப் பெற முடியும். மாணவர்கள் படிப்பில் முன்னணி நிலையை எட்ட அரும்பாடுபடுவீர்கள். அது மட்டுமின்றி போட்டி பந்தயங்களிலும் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். வியாபாரம் மாதம் முழுவதும் சீராக நடைபெறுவதில் வியாபாரிகள் உற்சாகமடைய இடமுண்டு.

குடும்ப நிலையில் கணவன் - மனைவி

குடை மிளகாயைப் பொடியாக நறுக்கவும். ஒவ்வொரு ¼ கிலோ குடைமிளகாய்க்கும் ஒரு டீஸ்பூன் (ஒரே ஒரு டீஸ்பூன்) எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு தாளிக்கவும். அரிந்து வைத்த மிளகாயைப் போடவும். உப்பு தேவையான அளவு போட்டு மூடி வைக்கவும். இரண்டே நிமிடங்களில் வெந்து விடும். பிறகு தேங்காய்த் துருவல், கேரட் துருவல் தூவி இறக்கவும். இரண்டு நிமிட நூடுல்ஸ் மாதிரியே இரண்டே நிமிடங்களில் சுவையான குடைமிளகாய்ப் பொரியல் தயார்.

– ஆர். மீனாக்ஷி





பொடி அடைத்துச் செய்யும் ஸ்டப்டு கறி கத்தரிக்காயில் மட்டும்தான் செய்ய வேண்டுமா? கோவைக்காயை லேசாகப் பிளந்து சிறிது பொடியை அடைத்துக் கறி செய்யுங்களேன். வித்தியாசமான சுவையாக இருக்கும்.

– லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.

யிடையே இணக்கமான போக்கு நிலவி வரும். நீங்கள் தேடிக் கொண்டிருந்த நண்பர் தாமே உங்கள் முன் நேரில் வரக்கூடும். மனத்தில் சங்கடங்கள் ஏற்பட்டாலும் உடன் சரியாகி விடும்.

நீங்கள் சங்கடஹர சதுர்த்தி நாளில் விநாயகப் பெருமானைத் தரிசனம் செய்வதுடன், அபிஷேகத் திரவியங்களை வாங்கித் தருவதும் உங்கள் கவலையைப் போக்கி, களிப்பை ஏற்படுத்தும்.



கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 –ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 – ஆம் பாதங்கள்

குரு சனி நான்காம் இடத்தில் சஞ்சரிக்கும் போதும் மாத மத்தியில் லாபஸ்தானத்துக்கு செவ்வாய் வரும் போதும் பூமி வழியிலான லாபம் ஏற்படுவதும், சகோதர வழியில் பகைமை தீருவதும் போன்ற நல்ல பலன்களை ஏற்படுத்துவார்.

உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு போன்ற நன்மைகளைப் பெறுவீர்கள். தொழிற்பிரிவினர் தொழிலில் வளர்ச்சி காண்பதுடன் வருமானப் பெருக்கத்தையும் காண முடியும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகள் குறைவான அளவிலேயே கிடைக்கப் பெற்றாலும் வழக்கமான வாழ்க்கை வசதிகளில் குறைவெதுவும் ஏற்பட்டு விடாது. மாதத் தொடக்கத்தில் ஓரளவு சோர்ந்து காணப்படும் மாணவர்கள் மாதப் பிற்பகுதியில் உற்சாகமாகச் செயல்படத் தொடங்கி விடுவீர்கள். வியாபாரத்தில் பெரும் சரிவுகள் எதுவுமின்றி

நல்லபடியாகவே நடந்து வரும் என்பதால் வியாபாரிகளுக்குப் பிரச்னைகள் எதுவும் எழ வாய்ப்பில்லை.

குடும்ப நிலையில் களிப்பும் நிம்மதியும் காணப்படும். எழுத்துத் துறையினருக்குப் பயணம் ஒன்றை மேற்கொள்ள வாய்ப்பு நேரும். அரசியல்வாதிகளுக்குப் பிரகாசமான எதிர் காலம் அமையக்கூடிய அறிகுறிகள் தோன்றும். துணிந்து ஈடுபடலாம்.

நீங்கள் சனிக்கிழமைகளில் பார்த்தசாரதிப் பெருமாளுக்குத் துளசி மாலை அணிவித்து வணங்கி வாருங்கள். உங்கள் சிரமங்கள் நீங்கி செல்வச் செழிப்பு ஏற்படும்.

மீன ராசி :



பூரட்டாதி 4 - ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.


அஷ்டமாதிபதி சுக்கிரன் ஜென்ம ராசியில் சஞ்சரிப்பதால் எதிலும் அதிக கவனம் தேவை. பத்தாம் இடத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால் எதிர்பாராத தொழில் முன்னேற்றம் ஏற்படுத்துவார்.

உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் என்ற பெயரால் கூடுதலாகச் சில பணிகளை ஏற்க வேண்டியிருக்குமாயினும் வேறு நன்மைகள் ஏதும் இல்லை. உயர் அதிகாரிகளிடம் நன்மதிப்பை மட்டும் பெற முடியும் என்பதே ஆறுதலான விஷயம். தொழிற்பிரிவினருக்கு பணிகள் கூடுமே தவிர அந்த அளவுக்கு வருவாய் கூடுதலாகக் கிடைக்காது. சிறிது காலம் பொறுத்திருங்கள். மாணவர்கள் படிப்பார்வம் கொண்டு சுறுசுறுப்பாக இயங்குவதைக் கண்டு பெற்றோர் பரவசமடைவார்கள். கலைஞர்கள் சில புதிய வாய்ப்புகளைப் பெறக்கூடும். வியாபாரம் மாதம் முழுவதும் ஒரே சீராக இல்லாமல் ஏற்ற இறக்கமாக இருந்தாலும் பெரும் சரிவொன்றும் இல்லை என்பதால் வியாபாரிகள் பெரிதாகக் கவலைப்படத் தேவையில்லை.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே இனிமையான போக்கு நிலவி வரும். இரண்டொரு சிறு சங்கடங்களும் ஏற்பட்டுப் பின் சரியாகி விடும். பயணங்களின் போது உடைமைப் பொருள்களின் மீது கவனம் அவசியம்.

நீங்கள் சனிக்கிழமைகளில் ஆஞ்சநேய பகவானுக்கு வெண்ணெய் சாத்தி, துளசி மாலை அணிவித்து வணங்கி வருவதன் மூலம் உங்கள் கவலைகள் யாவும் விலகும். சகல சௌபாக்யங்களும் உண்டாகும்.

— ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா



• வசந்தா

பொருள் : கோடைக்கு ஏற்ற மாதிரி...

இம்மாத வெற்றித்தாரசி

முதல் பரிசு ரூ. 500/-

ஸ்டீம்டு டோங்ரா

தேவையான பொருட்கள் :
வெந்தயக்கீரை கட்டு - 1,
முழு பயத்தம் பயிறு - ¼ கிலோ,
கசகசா - 50 கிராம்,
மிளகு - 3 ஸ்பூன்,
வற்றல் மிளகாய் - 4 பெரிதாக,
பூண்டு பற்கள் - 10,
தேங்காய்ப் பால் (அரைத்து சாறு எடுத்தது) - 1 கப்,
வெங்காயம் - ¼ கிலோ,
தேவையான அளவு - உப்பு
எண்ணெய் - 1 கரண்டி,
தாளிப்பு சாமான்கள் சிறிது.

தொட்டுக் கொள்ள நெல்லி ராய்தா :
புளிப்பு இல்லாத கெட்டித் தயிர் - ½ லிட்டர்,
பச்சை நெல்லிக்காய் விழுது - 4 டீஸ்பூன்,
பச்சை மிளகாய் விழுது - 1 டீஸ்பூன்,
தேவையான அளவு - உப்பு,
மெல்லியதாக சீவிய காரட் - 2 ஸ்பூன்,
பச்சை கொத்துமல்லி பொடியாக சிறிது.

செய்முறை :
(வெந்தயக் கீரையை வீட்டிலேயும் பயிர் செய்யலாம். உடைந்த பிளாஸ்டிக் பக்கெட் அல்லது உடைந்த பானையில் ஈர மண்ணைப் போட்டு "வெந்தயத்தை"த் தூவி தண்ணீர் தெளித்தால் ஒரு வாரத்தில் குளுமையான வெந்தயக் கீரை ரெடி.)

முழு பயத்தம் பயிறை முதல் நாள் காலையிலேயே ஊற வைத்து மாலையில் மெல்லிய துணியில் கொட்டி முடிச்சுக் கட்டினால் காலையில் முளைவிட்ட பயிறு மினுமினுக்கும்.

வெந்தயக் கீரையை சுத்தம் செய்து பொடியாய் நறுக்கி அத்துடன் முளைகட்டிய பயிறு, கசகசா, உரித்த பூண்டு, நறுக்கிய வெங்காயம்,



• வி. பட்டம்மாள்

மிளகு, மிளகாய், உப்பு சேர்த்து தேங்காய்ப் பால் விட்டு நைஸாக அரைக்கவும். ரொம்பவும் கெட்டியாக அரைக்க முடியாமல் இருந்தால் சிறிது தண்ணீர் தெளித்து சற்று லூஸாக அரைத்து எடுக்கவும்.

கெட்டியான வாணலியில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம் சேர்த்து வாசனை வந்ததும் அரைத்த மாவைக் கொட்டி கைவிடாமல் கிளறவும். தேவையானால் சிறிது தண்ணீர் தெளித்துக் கிளறி அரைவேக்காடு வெந்தால் போதும். கருவேப்பிலைத் தூவி வெந்த மாவை இறக்கவும். மாவு கொளகொள என்று இருக்காமல் சற்று கெட்டியாக இருக்க வேண்டும்.

மாவு நன்கு ஆறியதும் சிறு சிறு உருண்டைகளாக உருட்டி ஹோட்டல் சின்ன இட்லி சைஸுக்கு சிறு சிறு உருண்டை போல் தட்டி நடுவே கட்டை விரலால் சிறிய ஓட்டைப் போட்டு,

நோன்பு கொழுக்கட்டையை ஆவியில் வேகவிடுவது போல இட்லி தட்டில் வாழை இலையை பரப்பி அதன் மேல் உருண்டைகளை வைத்து ஆவியில் வேகவிடவும். (குக்கர் தட்டிலும் வேகவிடலாம்)

உருண்டைகளைக் கையால் தொட்டால் ஒட்டக் கூடாது. நன்கு வெந்ததும் சற்று ஆறிய பிறகு தாம்பாளத்தில் கொட்டினால் இந்த ஸ்டீம்டு டோங்ரா அபார சுவையாய் இருக்கும்.



நெல்லிராய்தா : புளிப்பில்லாத கெட்டித் தயிரில் பச்சையாக அரைத்த நெல்லிக்காய் விழுது (நெல்லிமுள்ளியையும் ஊறவைத்து விழுதாக்கலாம்) பச்சை மிளகாய் விழுது, உப்பு, பெருங்காயம், காரட் துருவல், கொத்துமல்லி தூவி, செய்து வைத்த "ஸ்டீம்டு டோங்கரா"வைப் போட்டு இரண்டு நிமிடம் ஊறவைத்துச் சுவைத்தால் அபூர்வ ருசிதான்.

ஸ்வீட் ராய்தா : பால், தேன் (குல்கந்து), பேரீச்சை விழுது, பனங்கற்கண்டு கலந்து (பனங்கற்கண்டு கரைவது சற்று லேட்டாகும் நன்கு பொடி செய்து போடவும்) ரோஜா இதழ் அல்லது ரோஸ் எஸென்ஸ் விட்டு கீர் போல் செய்து ஸ்டீம்டு டோங்ராவை ஊறவைத்துச் சுவைக்கலாம்.

குல்கந்துக்குப் பதிலாக நெல்லிக்காயை தேனில் ஊறவைத்த பாகைக் கலந்து சுவைத்தாலும் சூப்பர் ருசி.

"ஸ்டீம்டு ராய்தாவை" வெறுமனே ருசித்தாலும் நன்கு இருக்கும்.

- அனுராதா ஸ்ரீதர்,
சென்னை - 88.

இரண்டாம் பரிசு ரூ. 300/-

தர்பூஷணி இட்லி

தேவையான பொருட்கள் :

நன்கு பழுக்காத தர்பூஷணி - ½ கீற்று,
அரிசி நைஸ் ரவை - 6 கப்,
கடலை பருப்பு - ½ கப்,
பாசிப் பருப்பு - ½ கப்,
தயிர் - 2 கப்,
பட்டணம் ரவை - 1 ஸ்பூன்,
பச்சை மிளகாய் - 6,
கருவேட்பிலை, கொத்துமல்லி நறுக்கியது - ½ கப்,



செய்முறை :

தர்பூஷணியை விதை நீக்கி, துணியில் சுற்றி, ஒரு மணி நேரம் பிரிட்ஜில் வைக்கவும். பின் எடுத்து, தோல் சீவி கேரட் துருவியில் துருவிக் கொள்ளவும்.

அரிசியை ஐந்து நிமிடம் ஊறவைத்துக் களைந்து வடிய வைத்து, துணியில் உலர்த்தவும். நைஸ் ரவையாக மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். கடலை பருப்பு, பாசிப் பருப்பை ஊறவைத்து, களைந்து வடிய வைக்கவும். பிறகு மிக்ஸியில் அதையும் ஒன்றிரண்டாகப் பொடித்துக் கொள்ளவும். கருவேப்பிலை, கொத்துமல்லி, பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். தேவையானால் இஞ்சி சேர்க்கலாம்.

தர்பூஷணி துருவலில் அரிசி ரவையைப் பிசிறி வைக்கவும். வாணலியை அடுப்பில் வைத்துக் காய்ந்ததும் 2 ஸ்பூன் எண்ணெய் விட்டு கடுகை வெடிக்க விடவும் கருவேப்பிலை, பச்சை மிளகாயையும், கடலை பருப்பு, பாசிப் பருப்புக் குருணையையும் லேசாக வதக்கி மாவில் போடவும்.

தயிர், ரவை, கொத்துமல்லி இவைகளைச் சேர்த்து, இட்லி மாவு பதத்தில் கரைத்து இட்லி தட்டில் எண்ணெய் தடவி மாவை ஊற்றி, ஆவியில் வேகவிட்டு எடுத்துப் பரிமாறவும்.

- வி. பட்டம்மாள்,
சென்னை - 28.

30 நாட்களில் ஜோதிடம் கற்க அருமையான சந்தர்ப்பம்



8.4.2001 முதல் 7.5.2001 வரை

ஜோதிட திலகம்
பேராசிரியர்
டாக்டர் K. பார்த்தசாரதி

அஞ்சல் வழி மூலம் மூன்று மாத ஜோதிட பயிற்சி தமிழிலும், ஆங்கிலத்திலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் வந்து சேர கடைசி நாள் 17.4.2001

நேர்முக வகுப்புகளுக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர கடைசி நாள் 8.4.2001. ரூ.20/- M.O. மூலமோ அல்லது நேரிலோ செலுத்தி விண்ணப்பப் படிவம் (PROSPECTUS) பெற்றுக்கொள்ளலாம்.

விக்ஷு வருட விஷேச சலுகை ஐந்து கேள்விகளுக்கு ரூ.200/- மட்டுமே 1.4.2001 முதல் 20.4.2001 வரை

ஜாதகத்துடன் ஐந்து கேள்விகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் அனுப்பலாம். ஜாதகம் இல்லாதவர்கள் மேலும் ரூ.50/- அனுப்ப வேண்டும். ஐந்து கேள்விகளும் ஒரே ஜாதகத்திலிருந்து இருக்க வேண்டும். சென்னையில் உள்ளவர்கள் நேரடியாக கேள்விகளை கொண்டு வரலாம். காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. சுயவிலாசமிட்ட கவர்களை உரிய தபால் தலையை ஒட்டி ரூ.200/-க்கான டிராஃப்டையும் இணைத்து அனுப்பவும்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஐந்து கேள்விகளைக் கேட்க கட்டணம் ரூ.500/- மட்டுமே.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஐந்து கேள்விகளைக் கேட்க கட்டணம் ரூ.1000/- மட்டுமே.

அனைத்து விவரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஜோதிட திலகம்

பேராசிரியர் டாக்டர். K. பார்த்தசாரதி, M.A., Ph.D., D.Sc.

65, துளசிங்க பெருமாள் கோவில் தெரு, (டி.பி. கோவில் தெரு)

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

போன்: 8443332, 8441511

ஜோதிட ஆலோசனை கூறும் நேரம்

காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை (வகுப்பு நேரம் தவிர)

ஜோதிட ஆலோசனை பெற விரும்புபவர்கள்

8443332, 8441511 ஆகிய தொலைபேசி எண்கள் மூலம் நேரத்தை முன்பதிவு செய்து கொண்டு சந்திக்கலாம். தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆலோசனை வழங்கப்படும்.

மூன்றாம் பரிசு ரூ. 200/-

வெள்ளரிக்காய் புட்டிங்

தேவையான பொருட்கள் :
வெள்ளரிக்காய் - 2,
பச்சரிசி - 1 கப்,
வெல்லம் - 100 கிராம்,
தேங்காய்த் துருவல் - 1 கப்,
ஏலக்காய்ப் பொடி - ½ டீஸ்பூன்,
தேன் - 2 மேஜைக்கரண்டி,
உப்பு - 1 சிட்டிகை,
முந்திரி பருப்பு, கிஸ்மிஸ், அலங்கரிக்க
நெய் - 2 டீஸ்பூன்.

செய்முறை :

அரிசியை சுத்தம் செய்து சுமார் அரை மணிநேரம் ஊறவைக்கவும். வெள்ளரிக்காயைத் தோல் சீவி பொடியாக நறுக்கவும். அரிசியில் இருந்து தண்ணீரை வடிக்கவும். அரிசியுடன் வெள்ளரிக்காய், வெல்லம், தேங்காய், உப்பு இவைகளைச் சேர்த்து தண்ணீர் விடாமல் கரகரப்பாக அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

குக்கர் பாத்திரத்தில் லேசாக நெய் தடவவும். அரைத்த விழுதை பாத்திரத்தில் போட்டு குக்கரில் வைத்து பத்து நிமிடங்கள் வேகவிடவும்.

வெந்ததும் வெளியில் பாத்திரத்தை எடுத்து ஆறவிடவும். ஆறியபின் புட்டிங்கின் மேல் ஏலக்காய்ப் பவுடரைத் தூவவும். கிஸ்மிஸ் முந்திரிப் பருப்பு இவைகளை வைத்து மேலாக அலங்கரிக்கவும்.

தேவையான வடிவத்தில் கட் செய்யவும். பரிமாறுவதற்கு முன் புட்டிங்கின் மேல் தேன் விட்டு ஜில்லென பரிமாறவும்.

- மீரா ராம்னாத், மும்பை - 71.

ஆறுதல் பரிசு ரூ. 100/-

சம்மர் ஸ்பெஷல்

தேவையான பொருட்கள் :
இட்லி மாவு

4 கப் இட்லி புழுங்கலரிசிக்கு 1 கப் உளுந்து விதமாக ஊறவைத்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும். (முதல் நாளே).

தயிர் - 2 கப்,
பால் - 1 கப்,
தேங்காய்த் துருவல் - ½ கப்,
பச்சை மிளகாய் - தேவையான அளவு,
இஞ்சி - ½ இன்ச் அளவு,
உப்பு - தேவையான அளவு,
கொத்துமல்லித் தழை பொடியாக நறுக்கியது - ½ கப்,
கேரட் துருவியது - ½ கப்,
முளை கட்டிய பச்சைப் பயறு - ½ கப்,
தக்காளி பொடியாக நறுக்கியது - ½ கப்,
தாளிக்க : கடுகு கால் டீஸ்பூன், எண்ணெய் 2 டீஸ்பூன் வேண்டும் என்றால் 5 (அ) 7 முந்திரிப் பருப்பு.

செய்முறை :

குட்டி இட்லி சுமார் 30 செய்து வைத்துக் கொள்ள வேண்டும். குட்டி இட்லி தட்டு இல்லாதவர்கள் எப்போதும் செய்யும் இட்லி தட்டில் மாவு ஊற்றி இட்லி செய்து சதுரமாக கட் செய்து வைத்துக் கொள்ளவும்.

2. தேங்காய், இஞ்சி, பச்சை மிளகாய் இவற்றைக் கொஞ்சமாக நீர் சேர்த்து அரைக்கவும்.

3. ஒரு பேசின் மாதிரி வாயகன்ற பாத்திரத்தில் தயிர், பால் சேர்த்து நன்றாகக் கலக்கவும். தேங்காய் இஞ்சி அரைத்த விழுதைச்

பாகற்காய் ஊறுகாய்

பாகற்காயை மெல்லிய சிறு வில்லைகளாக நறுக்கி (விதைகளை நீக்கி விட்டு) உப்பு, கீறிய பச்சை மிளகாய், நறுக்கிய பூண்டு, எலுமிச்சைச் சாறு விட்டுக் கலந்து, ஒரு வாரம் வெயிலில் வைத்து எடுக்கவும். காய் மூழ்கும் வரை எலுமிச்சைச் சாறு விடவும். இந்த ஊறுகாயில் கசப்பும் குறைந்திருக்கும். சாதத்திற்குத் தொட்டுக் கொள்ள நன்றாக இருக்கும். சர்க்கரை வியாதிக்காரர்களுக்கு ஏற்றது.



- பிருந்தா இராமணி.

டூ இன் ஒன்

வடாம் சீஸன் துவங்கும்பொழுதே, மாங்காய் சீசனும் ஆரம்பிக்கிறது. வடாத்திற்கு அரைக்கும் கார விழுதை (பச்சை மிளகாய், உப்பு, பெருங்காயம் கலந்தது) மாங்காய் ஊறுகாய்க்கும் பயன்படுத்தலாம். மாங்காயைப் பொடியாக நறுக்கி, தேவையான கார விழுதை நன்கு பிசிற, சூப்பர் மாங்காய் ரெடி. என்ன, இந்த வருடம் கார விழுது கூட அரைக்கத் தீர்மானித்து விட்டீர் களா? — சியாமளா ராஜகோபால்.



சேர்க்கவும். தேவையான அளவு உப்பு, சர்க்கரை 1 டீஸ்பூன் சேர்த்து நன்றாகக் கலக்கவும்.

4. ஒரு வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு போட்டு வெடித்தவுடன் முந்திரிப் பருப்பு சேர்த்து சிவந்தவுடன் முந்திரியைத் தனியாக ஒரு சின்ன கிண்ணத்தில் எடுத்து வைத்து விட்டு கடுகை எண்ணெயுடன் தயிர்க் கலவையில் சேர்க்கவும்.

5. இந்தக் கலவையில் 2 டேபிள் ஸ்பூன் கேரட் துருவியது, 2 டேபிள் ஸ்பூன் முளை கட்டிய பச்சைப் பயறு, தக்காளி நறுக்கியது எல்லாவற்றையும் கலந்து ப்ரிட்ஜில் அரை மணியிலிருந்து ஒரு மணி நேரம் வரை வைக்கவும். பிரிட்ஜ் இல்லாதவர்கள் ஒரு வாயகன்ற பானையில் தண்ணீர் ஊற்றி அதில் இந்தக் கலவைப் பாத்திரத்தை வைக்கவும்.

6. சாப்பிடுவதற்கு முன்பு இந்தக் கலவையை ப்ரிட்ஜிலிருந்து எடுத்து அதில் இட்லியை போட்டுக் கலக்கவும். மீதும் இருக்கும் காரட் துருவல், தக்காளி, கொத்துமல்லி, முந்திரிப் பருப்பு இவைகளை அலங்கரிக்கவும். (இட்லி சேர்த்த கலவையின் மேல்) பார்ப்பதற்கு ரொம்ப அழகாகவும் குழந்தைகளையும், பெரியவர்களையும் ரொம்பவும் வசிகரிக்கவும் செய்யும். இட்லி வேண்டாம் என்று சொல்பவர்கள் கூட சிகப்பு பச்சை ஆரஞ்சு கலர்களைப் பார்த்து சாப்பிட விருப்பப்படுவார்கள்.

— வசந்தா வைத்தியநாதன்,
கோயமுத்தூர் - 42.

ஆறுதல் பரிசு ரூ. 100/-

மேங்கோ ஸ்ரீகண்ட்

தேவையான பொருட்கள் :

பால் - 1 லிட்டர்,

சர்க்கரை - 10 டீஸ்பூன் அல்லது ருசிக்கேற்ப,

நார் இல்லாத நிறைய சதைப்பற்று உடைய தித்திப்பான மாம்பழங்கள் - 2

செய்முறை :

முதலில் ஒரு லிட்டர் பாலை லேசாக சூடு ஆகும்படி காய்ச்சி பிறகு அதில் சிறிது தயிர் விட்டு உறைகுத்த வேண்டும். (முதல் நாள் இரவு) மறுநாள் கெட்டியாக உறைந்த தயிரை ஒரு நல்ல மெல்லிய வெள்ளைத் துணியில் கொட்டி துணியின் நான்கு மூலையும் கட்டித் தொங்கவிட வேண்டும். சுமார் 2 மணி நேரத்தில் தயிரில் உள்ள தண்ணீர் வடிந்து விடும். இதை அப்படியே எடுத்து ஒரு பாத்திரத்தில் போட வேண்டும்.

ஒரு மாம்பழத்தின் தோல் சீவி அதை சிறு துண்டுகளாக்கி மிக்ஸியில் போட்டு நன்றாக அடித்துக் கொள்ள வேண்டும். பிறகு அந்தத் தயிரில் இந்தக் கூழைச் சேர்த்து சர்க்கரையையும் போட்டு எல்லாமாக நன்கு சேரும் வரை நன்கு அடித்துக் கலக்க வேண்டும். ஸ்பூன் அல்லது கரண்டியால் செய்தால் போதும்.

இதை அப்படியே பிரிஜ்ஜில் வைத்துக் குளிர வைத்து, பரிமாறும் சமயம் மற்றொரு மாம்பழத்தின் தோலை சீவி சிறு சிறு துண்டுகளாக்கி, செய்து வைத்திருக்கும் ஸ்ரீகண்டை சிறு கிண்ணத்தில் போட்டு மேலாக மாம்பழத் துண்டுகளால் அலங்கரித்து ஸ்பூன் போட்டுக் கொடுக்கலாம். சுவையோ சுவை.

— சரஸ்வதி,
கோவா.





சில மனிதர்களைப் பார்த்திருப்பீர்கள். நாற்காலியை விட்டு அவர்களை அவ்வளவு எளிதில் பிரித்து விட முடியாது. ஏதோ நாற்காலியும் அவர்களும் ஒட்டிக் கொண்டு பிறந்து விட்ட மாதிரியாய் எப்போது பார்த்தாலும் நாற்காலியில் ஒட்டிக் கொண்டு இருப்பார்கள்.

படுக்கையிலிருந்து எழுந்து நியூஸ் பேப்பர் படிக்கிறேன் என்று காலை ஒரு மணி நேரம் வாசல் நாற்காலி. நியூஸ் பேப்பர் படித்த பிறகும் இரண்டாவது அரை கப் காபியைக் குடித்தபடியே முடிந்து போன கடந்த கால அல்லது வரப் போகிற எதிர் கால சிந்தனைகள்.

மொத்தத்தில் நிகழ்காலத்தில் நாற்காலியில் இரண்டு மணி நேரமாக அசையாமல் உட்கார்ந்து கிடந்து உடம்பு இரத்தம் கட்டிப் போகிறதே என்கிற சிந்தனையே கிடையாது.

சரி... காலை நேரத்தை விடுங்கள். பகல் பொழுது முழுவதும் ஆபீஸில் நாற்காலியை ஆக்ரமித்துக் கொள்ளுதல், மாலை "அப்பாடா" என்று அலுத்து சலித்தபடி டீ.வி. முன் 'பொத்' என்று நாற்காலியில் உட்கார்ந்தால் இரவு வரிசையாக வரும் மெகா மகா தொடர்களைப் பார்த்து முடிவது வரை நாற்காலியை விட்டு அசைவதில்லை என்று மனத்தில் ஒரு வைராக்யம்.

எந்த நேரமும் ஒருவர் நாற்காலியில் அடைந்து கிடந்தால், அவர்கள் குறிப்பாக இழப்பது உடல் ஆரோக்யத்தை. நம் மனம் பழக்கத்திற்கு அடிமையாகக் கூடியது. சும்மா அமர்ந்து கோழித் தூக்கம் போடப் பழகி விட்டால், அந்தப் பழக்கம் அவர்களை ஒட்டிக் கொண்டு லேசில் போகாது. இந்தப் பழக்கத்தால் உடல் ஆரோக்யம் மட்டுமின்றி, மன ஆரோக்யமும் கெட்டுப் போக வாய்ப்பு இருக்கிறது.

மனம் தேவையற்ற குழப்பங்களையும், கற்பனை பயங்களையும் நினைத்துக் கலவரமடைகிறது. உடல் நாற்காலியில் அசையாமல் உட்கார்ந்திருந்தாலும் மனமும் உறங்கிக் கொண்டு உட்கார்ந்திருப்பதில்லை. அப்போதுதான் அது வேகமாக எண்ணச் சிறகுகளை விரிக்க ஆரம்பிக்கிறது. தேவையற்ற மனக் குழப்பத்தால் உடல் மேலும் சோர்ந்து போக... எங்கே எழுவது? இயங்குவது? சுருண்டு கொண்டு படுக்க வேண்டியதுதான்.

இந்த நாற்காலி மனிதர்கள் உடல்ரீதியாக மனரீதியாக பாதிக்கப்படுவது எவ்விதம்?

- அதிக எடை
- தொந்தி விழுந்து சீரான உடல் அமைப்பை இழத்தல்.
- அதிக எடையால் இருதய பாதிப்புக்கு ஆளாதல்.
- இரத்த அழுத்த கோளாறுகளால் பாதிக்கப்படுதல்.
- போதிய உடற்பயிற்சி இன்மையால் சர்க்கரை நோய்க்கு ஆளாதல்.
- தேவையற்ற குழப்பம், கற்பனையால் மனதில் தெளிவின்மை.

• மணிக்கணக்காக உட்கார்ந்து இருந்ததில் தன்னை மீறிய ஒருவித சோம்பேறித்தனம்.

• தன் பழக்கத்திற்கு தானே எரிச்சல்பட்டு நன்றாக உழைக்கும் மற்றவர்களைப் பார்த்து தனக்குள் ஒருவித தாழ்வுமனப்பான்மை.

எனவே தேவையின்றி நாற்காலியில் அதிக நேரம் உட்கார்ந்து கிடப்பதை கூடுமானவரை தள்ளிப் போடுங்கள். காலை நேரமானால் ஒரு இருபது நிமிட வாக்கிங் செய்யலாம். காலாற நடந்து அருகிலுள்ள கோவிலுக்கோ, பக்கத்திலுள்ள மார்க்கெட்டிற்கோ சென்று



வரலாம். அல்லது வாக்கிங் என்கிற பெயரில் குறைந்தபட்சம் உங்கள் தெருவையாவது நான்கு முறை சுற்றி நடந்து வரலாம். காலை நேரத்தில் அரைமணி நேரம் நடப்பதால் நிச்சயம் உடல் ஆரோக்கியம் மேம்படும். அதிகாலை காற்றிலுள்ள ஓஸோன் உடலில் அற்புதமான மாறுதல்களைச் செய்யவல்லது.

அடுத்து குளித்து விட்டு வேலைக்குச் செல்வதற்கு முன் வீட்டை ஓரளவு ஒழுங்குபடுத்தலாம். ஆங்காங்கே இறைந்து கிடக்கும் நியூஸ் பேப்பர்கள், கலைத்துப் போடப்பட்ட துணிமணிகள், இடம்பெயர்ந்து கிடக்கும் வீட்டுப் பொருட்கள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தலாம். ஏதோ வீடும் ஒழுங்கான மாதிரி இருக்கும். சின்னச் சின்ன உடற்பயிற்சிகளைச் செய்த மாதிரியும் இருக்கும். பகல் பொழுதிலும் ஆபீஸில் சேரில் அமர்ந்து முழு நேர வேலை பார்ப்பது அவரவர் ஆபீஸ் பணியைப் பொறுத்தது. அதிலும் அவ்வப்போது உடம்பை ரிலாக்ஸ் செய்து கொள்ள எழுந்து நடக்கலாம்.

மாலை நேரத்தைப் பொறுத்தவரை நீங்கள் ஆபீஸிற்குக் காரில் சென்று வருபவரானால் வீட்டிற்கு வந்த பிறகு சிறிது நேரம் ரிலாக்ஸ் செய்து விட்டு வாக்கிங் செல்லலாம். ஆபீஸ் வாசலில் பஸ் ஏறி, வீட்டிற்கு மிக அருகில் இறங்கி வருபவரானால் ஆபீஸ் அடுத்த ஸ்டாப் வரை நடந்து வந்து பஸ் ஏறலாம். குறைந்தபட்சம் 10 நிமிஷம் அல்லது கால் மணி நேர வாக்கிங்காவது இருக்கும்.

லீவு நாட்களானால் நேரத்தை ஷாப்பிங் போன்றவற்றிற்கு ஒதுக்குங்கள். சின்னச் சின்ன பொருட்கள் ஷாப்பிங் செய்வதானால் கூட ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் குடும்பத்துடன் ஏறி இறங்கி என்னென்ன புதுப் பொருட்கள் வந்திருக்கிறது என ஒரு விண்டோ ஷாப்பிங் செய்தபடி ஷாப்பிங் செய்வது மனத்திற்கு ஒரு ரிலாக்ஸேஷனைத் தரலாம்.

சரி... எப்படியாவது புத்தகம் படிக்க, டீவி. பார்க்க, ரிலாக்ஸ் செய்ய 2 அல்லது 3 மணி நேரமாவது தொடர்ந்து நாற்காலியில் இருக்க வேண்டி இருக்கிறதா? அதிக உஷ்ணத்தைத் தரும் ரெக்ஸின் மற்றும் வெல்வெட் சோபாக்களைத் தவிர்த்து விடுங்கள். காற்றோட்டமான பிரம்பு நாற்காலி ஏற்றது. வசதிக்கேற்ப வட்ட அல்லது சதுர காட்டன் குஷன் தைத்துக் கொள்ளலாம். தரையில் அமர்ந்து டீவி பார்ப்பதும் நல்லது.

நாற்காலி என்பதை அவ்வப்போது அமரவும், சிறிது ரிலாக்ஸ் செய்யவும், அமர்ந்தபடியே வேலை பார்க்கவும் மட்டுமே பயன்படுத்துங்கள். வாழ்நாளில் பாதியை அதில் தூங்கி வழியப் பயன்படுத்தாதீர்கள்.

— கீதா தெய்வசிகாமணி

நாற்காலி மனிதர்கள்



நிறைவான திருமண வாழ்வு அமைய இறைவனை வேண்டி நின்று நோன்பு நோற்பதும், விரதமிருந்து பூஜை செய்வதும் இந்துக்களின் பாரம்பரிய கலாச்சாரங்களில் ஒன்று. அதிலும் குறிப்பாக இளம்பெண்கள் நல்ல கணவன் அமைய விரதமிருப்பதும், பெற்றோர்கள் தங்கள் பெண்ணுக்கு நல்ல கணவன் அமைய அவரவர்களது ஜாதகத்துக்கு ஏற்ற பரிகாரங்களைச் செய்வதும் நாம் அறிந்ததே.

சீன கலாச்சாரத்திலும் இதற்காக சில சாஸ்திர சம்பிரதாயங்களைக் கடைபிடித்து வருகின்றனர். இவற்றில் சுவாரசியமான இரண்டை உங்களுக்கும் சொல்கிறேன். நாமும்தான் கடைபிடித்துப் பார்ப்போமே!

திருமணத்திற்கான இவர்களது கடவுளின் பெயர் ஷெய் லின் (Chieh Lin). இவர் சந்திரனில் இருக்கும் வயதான மனிதர் என்பது நம்பிக்கை. பூலோகத்தில் யார் யார் தம்பதிகளாக வேண்டும் என்பதற்கு இவர்தான் பொறுப்பு. கண்ணுக்குத் தெரியாத சிவப்பு நிறக் கயிற்றால் (சிவப்பு நிறம் மிகவும் புனிதமானது விசேஷமானது. சந்தோஷத்தையும் அதிர்ஷ்டத்தையும் தர வல்லது) ஆண் பெண் இருவரின் கால்களைக் கட்டி விடுவது இவர்தானாம். அதனால்தான் இன்றும் சீனர்களின் திருமணங்களில் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது சிவப்பு நூலால் ஒன்றாக இணைக்கப்பட்ட இரண்டு கண்ணாடி தம்ளர்களில் உள்ள ஒயினை சுவைத்து சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார்கள்.

இந்தக் கடவுள் நிலாவில் இருப்பதாய்ச் சொல்லப்

படுவதால் பௌர்ணமி தினம் இவர்களுக்கு மிகவும் முக்கியமானதொன்றாகும்.

குறிப்பாக சீன வருஷப் பிறப்பின் ஆரம்பத்தில் வரும் பௌர்ணமி இளம்பெண்களுக்கு விசேஷமான ஒன்று.

முழு நிலவு முழுமையாக தனது ஒளியை வீசிக் கொண்டிருக்கும் வேளையில் இளம் பெண்கள் ஆறு, குளம், ஏரி, கடல் போன்ற நீர்நிலைகளுக்குச் சென்று, தண்ணீர் பரப்பின் மீது நிலவின் ஒளி பட்டு குளிர்ந்திருக்கும் வேளையில் நன்கு கனிந்து, சாறு நிரம்பி கனத்து இருக்கும் ஒரு ஆரஞ்சுப் பழத்தை அந்தத் தண்ணீரில் விட்டெறிந்து, நல்ல கணவன் அமையவும், திருமண வாழ்க்கை நன்றாக இருக்கவும் ''ஷேய்லின்''னின் ஆசியை வேண்டி நிற்பார்கள்.

காற்றும் தண்ணீரும் இவர்களது வேண்டுதலை கண்காணாத இடத்துக்கு எடுத்துச் சென்று இவர்களுக்கேற்ற மணாளனைக் கொண்டு வந்து சேர்க்கும் என்பது நம்பிக்கை.

இந்த இளம்பெண்கள் எறியும் ஆரஞ்சுப் பழத்தின் நிறம், குணம், சுவைக்கு ஏற்றபடி கணவன் அமைவான் என்றும் நம்புகிறார்கள். ஒரு இளம்பெண் ஒரு முறைதான் எறிவது வழக்கம்.

சீனர்கள் பல விஷயங்களை உருவகப் படுத்தியே வாழ்க்கையை வாழப் பழகியவர்கள். இவர்களுக்கு ஆரஞ்சு என்பது தங்கத்துக்குச் சமானம். ஆரஞ்சுப் பழத்தை "கும்" (Kum) என்று சொல்கிறார்கள். தங்கத்துக்கும் இதே



வார்த்தை என்பதால், தங்கத்தைப் போல மிகவும் போற்றத்தக்கதாகவும், சந்தோஷத்தைத் தரும் பொருளாகவும் மதிக்கப்படுகிறது.

திருமணப் பேச்சு வார்த்தைகளை துவங்குவதற்கும் இந்த முதல் பௌர்ணமி நல்ல நாளாய் கருதப்படுகிறது.

அந்த நாளில் இவர்கள் ஆசைப்படும் வரன் பெண் பார்க்க வரும்போதோ, அல்லது வீட்டில் ஒரு விருந்து ஏற்பாடு செய்து சந்தித்துக் கொள்ளும்போதோ, தென்மேற்கிலுள்ள சக்தியை (Chi) மேம்படுத்தி திருமண அதிர்ஷ்டத்தை வரவேற்பார்கள். காற்று வெளி, ஆகாயம்தான் இந்த சக்தி.

தென்மேற்கு திசைதான் அன்பு, உறவு, குடும்ப பந்தம், சமூகத் தொடர்பு - இவற்றிற்கான திசை.

அடுத்து அதிர்ஷ்டத்தை வரவேற்கும் முறையைப் பார்ப்போமா?

ஒரு குழிவான தாம்பாளத்தில் நீர் நிறைத்து அதில் மஞ்சள், சிவப்பு நிறத்தினால் ஆன அகல் போன்ற மெழுகுவர்த்திகளை ஏற்றி மிதக்க விடுங்கள். அந்தத் தண்ணீருக்குள் ஏழு வித அதிர்ஷ்டக் கற்களையும் ஒரு தங்க நாணயம் அல்லது தங்க நிற நாணயம், சிறிது புத்தம் புதிய மலர்கள் இவற்றைப் போட்டு நிலவொளி படும் இடத்தில் தென்மேற்கு திசையில் வைக்கவும். மெழுகுவர்த்தி எரிந்து முடிந்த பின்னர் தாம்பாளத்தை உள்ளே எடுத்து வைத்து விடலாம்.

இப்படிச் செய்வதை இந்த நாள் மட்டுமின்றி, எல்லா பௌர்மணி தினங்களிலும் செய்து வரலாம். பாஸிடிவ் ரிசல்ட் நிச்சயம் என்கிறது ஃபுங்ஸ்வே.

ஃபுங்ஸ்வேயில் இயற்கையின் ஐந்து பகுதிகளாகக் கருதும் நிலம் (கற்கள்) மரம் (பூக்கள்) உலோகம் (தங்கம்) நீர், நெருப்பு இவை அனைத்தும் இந்த சம்பிரதாயத்தில் இணைவதால், உலகின் முழுமையையும் சேர்மானத்தையும் உணர்த்துவதாய் உள்ளது. ஒரு பெண்ணின் திருமணம் என்பது பல உறவுகளை இணைக்கும் சங்கிலியல்லவா?

இதெல்லாம் செய்து பார்த்துவிட்டு ரொம்ப படபடப்போடு எதிர்பார்ப்பின் விளிம்பிலேயே நின்று கொண்டிருக்காதீர்கள். உங்களது எண்ணமும் எதிர்பார்ப்பும் பாஸிடிவ்வாக இருந்து நீங்களும் ரிலாக்ஸ்டாக இருந்தால் வெற்றி நிச்சயம்.

— ரத்தி மனோகர்

நெல்லிக்காய் ரய்தா :



ஒரு கிலோ பெரிய நெல்லிக்காய்களை வாங்கி ஆரஞ்சு சுளைகளை பிரிப்பது போன்று பல்லுப் பல்லாக நறுக்கி இரண்டு கைப்பிடி உப்பும், ஒரு டீஸ்பூன் மஞ்சள் தூளும், அந்தக் காய்கள் மூழ்கும் அளவு எலுமிச்சை ரசம் ஊற்றி நன்கு கிளறி விட்டால், சில நாட்களுக்குப் பிறகு காய்கள் பதமாக மாறி விடும். நாம் ரய்தாவாகவோ, ஊறுகாயாகவோ பயன்படுத்தலாம். விருப்பப்பட்டால் சிறிது நல்லெண்ணெயைச் சுட வைத்து பெருங்காயம் சிறிது பொறித்தெடுத்துக் கொண்டு அரை டீஸ்பூன் கடுகு, 1 டீஸ்பூன வெந்தயம் பொன்னிறமாக வறுத்துப் பொடி செய்து பச்சை மிளகாய்த்தூள், தேவையான அளவு காய்களுடன் சேர்த்துக் கிளறி கடுகை எண்ணெயில் தாளித்துக் கொட்டினால் சுவையான உடலுக்கு ஊறுவிளைவிக்காத ஊறுகாய் தயார்.

எலுமிச்சை ரசத்தில் ஊறவைப்பதினால் சுவை வித்தியாசமாக இருக்கும். நெல்லிக்காய்களை துருவி வெயிலில் அல்லது நிழலில் காயவைத்து எடுப்பதினாலும் வெள்ளை வெளேரென்று எவ்வளவு வருடங்களானாலும் நன்றாக இருக்கும். உலர வைத்தாலும் விட்டமின் சியின் முழுப் பயனை நாம் பெறலாம்.

— எம். பிரேமா சுரேந்தர்நாத்.

குஜராத் நிலநடுக்கம் என்னை குடுகுடுப்பைக் காரனாக நிற்க வைத்திருந்தது. பழைய கிழிந்த புடவை, வேட்டி, ஷர்ட், பேண்ட், உள்ளாடைகள் இத்யாதிகள் சலவையாய் என் மேல் அபிஷேகமாகியிருக்க, அருள் புரியும் ஆண்டவனாய் இருள்பொழியும் பரண் மேல் நின்று கொண்டிருந்தேன்.

"அதுக்குள்ளே கீழே இறங்கறேன்னு சொன்னா எப்படி? இன்னும் உங்க தாத்தாவோட கோட்டு ஒண்ணு இருக்கு. நம்ப கிச்சா பொறந்த போது ஒசூர்லே வாங்கினோமே ஒரு கம்பிளி அது இருக்கு. அடியிலே இருக்கு பாருங்க அந்த மரப்பெட்டி அதுலேதான் அப்போ இருந்தது. சிரமத்தைப் பார்க்காம எல்லா சாமானையும் கீழே இறக்கி வைச்சுட்டு தேடுங்க. பாவம் அந்த

ஆனா,




ஜனங்கள் வீடு வாசலில்லாம குளிர்லே நடுங்கிட்டிருக்காளாம்..."

பூகம்பமாய் கருணை வெடித்துச் சிதற, என் மனைவி புவனா என்னைக் கீழே நின்றபடி இயக்கிக் கொண்டிருந்தாள். அவள் மிகவும் தாராளமாக தானம் செய்ய முடிவெடுத்துள்ள மேற்படி தாத்தாவின் கோட்டும், தற்போது பாஸ்டனில் கொள்ளையாய் டாலர்களை குவிக்கும் என் மகன் கிச்சா பிறந்தபோது வாங்கின கம்பளியும், இன்னபிற துணிமணிகளும் ஏற்கெனவே பல வருட காலமாக எவர்சில்வர், பிளாஸ்டிக் சாமான்காரர்களால் ஏற்கப்படாத குப்பைகளென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் இவைகளின் துர்நாற்றம் தாங்காத நிலையில், பரண் வாழ் எலிகளின் கோபத்திற்கு ஆட்பட்டு இவை பல குதறல்களுக்கு உட்பட்டு சிதைந்திருந்தன.

கோட்டின் ஓட்டை வழியே புவனாவை பார்த்துக் கேட்டேன்.

"உனக்கே இது நல்லா இருக்கா சொல்லு. ஏற்கெனவே நோந்து போயிருக்கிற ஜனங்களை இப்படிக் கந்தலையும், கிழிசலையும் கொடுத்து நோகடிக்கணுமா... இதிலே எந்த துணி யூஸ் ஆகும்னு நீ நினைக்கிறே?"

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க... இவ்வளவு வருஷமா பிரயோஜனப்



தாராளம்



படாதுன்னு பரண் மேலே தூக்கிப் போட்ட இத்தனையும் இப்போ யூஸ் ஆகலையா சொல்லுங்க'' என்று என்னைச் சாமார்த்தியமாக குழப்பினான். நான் செய்வதறியாமல் அந்தக் குவியலைக் கீழே போட்டுவிட்டு இறங்கினேன்.

கொடூரமான குஜராத் சம்பவம் எல்லோரையும் உலுக்கி விட்டிருந்தது. எல்லோரும் தங்கள் தகுதிக்கேற்ப உதவிக்கரம் நீட்டிக் கொண்டிருக்க எங்கள் குடியிருப்பு சங்கமும் இயன்ற ஒத்தாசை செய்ய முற்பட்டது. 'N' பிளாக் நளினி கிருஷ்ணமூர்த்தி வீட்டில் அவரவர் விருப்பத்திற்கேற்ப பணமாகவோ, காசோலையாகவோ, மருந்து மாத்திரையாகவோ துணிமணி போர்வைகளாகவோ கொண்டு சேர்ப்பித்து விட்டால், குறிப்பிட்ட தொண்டு நிறுவனத்தின் மூலமாக குஜராத் மக்களைச் சென்றடைய ஏற்பாடு செய்வதாய் சங்கத்தில் அறிவித்தார்கள்.

அறிவிக்கப்பட்ட அடுத்த நாளே நளினி கிருஷ்ணமூர்த்தியின் ஃபிளாட் திக்குமுக்காடியது. ஆளாளுக்கு உதவுகிறேன் பேர் வழி என்று தங்கள் வீட்டில் போகி பண்டிகைக்கு எரிக்காத கந்தல்களை தூசு தும்போடு மூட்டை மூட்டையாய் கட்டிக் கொண்டு வந்து திணித்துக் கொண்டிருந்தார்கள்.

சங்கத்தின் கூட்டத்தில் காசு பண உதவி பற்றிப் பேசும் போதே அதை அங்கத்தினர்கள் ஒப்புக் கொள்வது லேசுபட்ட பாடாய் தெரியவில்லை.

"எங்க ஆபீஸிலேயே 'ஒன் டே ஸாலரி' பிடுச்சுட்டாங்க" என்றார் லோகநாதன் மிகுந்த விசனத்தோடு.

''பணமா கொடுக்கறது ஒழுங்கா போய்ச் சேருமோ என்னவோ பொருளாய் கொடுக்கறது பெட்டர்'' என்றார் புண்ணியகோடி. அப்படி என்ன பொருளாய் அள்ளிக் கொடுத்தாரென்றால் அதே அழுக்கு துணிமணிகள்!

''அதான் நிவாரண நிதி கோடிக்கணக்கா குவியறதாமே'' என்று மிஸஸ் பார்வதி ராமநாதன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த மேரி வின்சென்ட் மனதையும் தெறிக்கும் உபகாரம் செய்தாள். இப்படி எல்லோரும்

அகிலா கார்த்திகேயன்

'ஐயோ பாவம்', 'அச்சச்சோ', 'சே இப்படியா ஆண்டவன் சோதிப்பான்' என்று வாய் வார்த்தையால் பரிதாப அலை எழுப்பினார்களே யன்றி, பணம் என்று வந்தபோது அவர்களின் அரிதாரம் அகன்ற முகம் வெளிப்பட்டது.

புவனாவும் இதே ஜாதியில் சேர்ந்தவளாகத் தான் இருந்தாள்.

"இதோ பாரு புவனா... ஆண்டவன் நமக்கு நல்ல சந்தர்ப்பம் கொடுத்திருக்கான்... மேக்ஸிமம் உதவி பண்ணனும்னு நினைக்கிறேன். கிச்சா ஈமெய்ல்லே உங்களுக்கு எத்தனை இஷ்டமோ அத்தனை பண்ணுங்கன்னு சொல்லிட்டான்" என்று முதலில் அவளிடம் அடி போட்டேன்.

டீ.வி.யைப் பார்த்து அத்தனை 'உச்சு' கொட்டியவள் உடனே என் விருப்பத்திற்கு பச்சைக் கொடி காட்டுவாளென்று நினைத்தது பிசகாய் விட்டது.

"எனக்கும் பண்ணக் கூடாதுன்னு இல்லே... பார்வதி சொன்ன மாதிரி எல்லா நாட்டுக் காரங்களும் கொண்டு வந்து கொட்டறாளாம். நாம அனுப்பறது கடல்ல கரைச்ச உப்பாட்டமா போகப் போகுது. வேணும்னா நூறோ, ஐம்பதோ உங்க இஷ்டப்பட்டதை கொடுங்க. வேண்டாங்கலே. நீங்களோ ரிடையர் ஆயாச்சு. பாவம் குழந்தை ஃபாரின்லே ராப்பகலா உழைச்சு அனுப்பற காசை கன்னாபின்னான்னு தூக்கிக் கொடுக்கறது நல்லா இல்லே. ஏதோ நம்மால முடிஞ்சதை பணமா கொடுத்துட்டு, திருப்தியா துணிமணிகளை அள்ளிக் கொடுங்களேன் யார் வேணாம்னுது?" என்று மிகவும் சாதுர்யமாக என்னைச் சமாளித்தாள். கூடவே, ஏதோ எல்லா சொத்துக்களையும் நிவாரண நிதிக்கு எழுதி வைப்பவள் போல ஏகதடபுடலோடு என்னை பரண் மேல் ஏற்றி பழம் புடவைகளையும், கிழங்களின் துணி மணிகளையும் சேகரித்துக் கொண்டிருந்தாள்.

"நல்லவேளை போன மாசமே எவர்சில்வர் காரன்கிட்டே போடலாம்னு இருந்தேன்... இப்படி ஒரு நல்ல காரியத்துக்கு பிரயோஜனப் படணும்னு இருக்கு" என்று வேறு தன் மேன்மையான தர்மத்திற்கு தத்துவம் பொழிந்தாள். எனக்கு எரிந்தது.

அடுத்த நாள் காலை நான் குளித்துக் கொண்டிருந்தபோது குரல் கொடுத்தாள்.

"என்னங்க! வாட்ச்மேன் துணி மூட்டையை தூக்கிட்டுப் போக வந்திருக்கான். பணம் எத்தனை கொடுக்கறது?" என்றவளிடம்,

"பீரோவிலிருந்து நூறு ரூபாய் கொடு" என்றேன்.

"பீரோல ஒரே ஒரு நூறு ரூபாய் நோட்டு தான் இருக்கு. இன்னிக்கு பேங்க் போய் மாசச் செலவுக்கு எடுத்துண்டு வரணுமா என்ன?" என்று கேட்டாள்.

"செக்கெல்லாம் ரெடி பண்ணி வைச்சுட்டேன்... குளிச்சி பூசை பண்ணிட்டு பேங்க் போய் எடுத்துண்டு வரணும்... இப்போ நூறு கொடு பேங்க்லேர்ந்து பணம் 'டிரா' பண்ணிண்டு வந்து இன்னும் கொஞ்சம் கொடுக்கணும் அதுதான் நியாயம்... தர்மம்" என்று புலம்பிக் கொண்டிருந்தது அவள் காதில் விழுந்ததோ என்னவோ தெரியவில்லை.

குளித்துவிட்டு வந்தேன். பூஜையை முடித்துக் கொண்டு பேங்க் புறப்படுவதற்காக ஹேங்கரில் என் ஜிப்பாவைத் தேடினேன். காணவில்லை.

"உங்க அண்ணா பையன் வாங்கிக் கொடுத்தான்னு இத்தனை நாளா அதை நீங்க போட்டுண்டு வெளியே போனீங்களேயொழிய, அதை போட்டுண்டா உங்களைப் பார்க்க சகிக்கலே... நல்லா உசரமா இருக்கறவங்களுக்கு தான் ஜிப்பா... கட்டை குட்டையா உங்களாட்டம் இருக்கறவங்க போட்டா சோளக் கொல்லை பொம்மையாட்டம் இருக்கு... அதனாலதான் நிவாரணத்துக்காவது போகட்டும்னு அதையும் சேர்த்து மூட்டைகட்டி அனுப்பிச்சுட்டேன்" என்று புவனா பெருமையாக சொன்னபோது எனக்கு சந்தோஷமாக இருந்தது.

"அப்படியேவா போட்டே... ஜிப்பா 'பாக்கெட்'டை பார்க்கலையா" என்று நான் கேட்டதும் அவள் முகம் வெளிறியது.

"ஏன்... பாக்கெட்லே என்ன வைச்சு தொலைச்சிருந்தீங்க?" என்று புவனா பதற, போன் கதறியது. அவளே போய் எடுத்தாள். பேசிவிட்டு 'தொப்'பென்று ரிசீவரை வைத்தாள்.

"நளினி கிருஷ்ணமூர்த்திதான் போன் பண்ணினா 'உங்களுக்கு ரொம்ப தாராள மனசு மேடம்... 'மூவாயிரம் ரூபாய் செக்'சை பூகம்ப நிதிக்கு கொடுத்துட்டு, நீங்க செய்யற தர்மம் யாருக்கும் தெரியக்கூடாதுன்னு அதை ஜிப்பா பாக்கெட்லே வைச்சு மறைவா அனுப்பியிருக்கீங்க. உங்களை மாதிரி நல்ல மனம் எல்லாருக்கும் இருந்துட்டா எந்தத் துயரம் வந்தாலும் நாடு தாங்கிடும்'னு சொல்றா..." என்று சோக மயமான முகத்தோடு வருந்தினாள்.

"இதோ பார் புவனா... சொல்ல முடியாத சோகம் நடந்திருக்கு. நம்ப ஜனங்க மனதளவில் வருத்தப்பட்டாலும் செயல்னு வரும்போது உன்னை மாதிரி கொஞ்சம் தயங்கறாங்க. நம்ப குடும்பத்தைப் பொறுத்தவரை நமக்கு மூவாயிரம் ரூபாய்க்கு மேலேயே செய்யலாம்தான். அதனால ஆண்டவனா பார்த்துத்தான் இப்படி நம்ப பங்கை தானாகவே போய் சேரும்படி செஞ்சிருக்கான்... அதுக்கு சந்தோஷப்படு" என்றேன்.

புவனா புரிந்து கொண்டு தலையாட்டியது எனக்குத் திருப்தியாக இருந்தது.

வெற்றிக்கு வழி

ஆம்! அதிர்ஷ்டமான பெயர் அமைத்தால் நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம். பணம், பதவி, யாவும் கிட்டும். வெற்றி மேல் வெற்றிகளைக் குவிப்பீர்கள். இவ்வுலகில் அனுபவிக்கத் தக்க அனைத்து சுகபோகங்களையும் அனுபவிக்கலாம் என்று ஆணித்தரமாக அடித்துக் கூறுகிறார் கோவை மாவட்டம் அன்னூர் பு.புளியம்பட்டி அருகில் உள்ள கணுவக்கரையில் வசிக்கும் ஜோதிட விஞ்ஞானி கே.ஆர். பிரபாகர்ராஜ் அவர்கள். இவரது கருத்துக்கள் பின்வருமாறு:-

ஒரு மனிதனின் வெற்றிக்கும் தோல்விக்கும் மூலகாரணமாக இருப்பது பெயரும், கையெழுத்துமே ஆகும். ஒருவருடைய பெயரை முழுவதுமாக மாற்றத் தேவை இல்லை. சிறு திருத்தம் மட்டும் செய்தால் போதும். அதிர்ஷ்டப் பெயரால் மனித வாழ்வில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மிக நல்ல முறையில் தீர்வுகாண முடியும்.

அதிர்ஷ்டப் பெயர் அமைக்க நியூமராலஜி, நேமாலஜி, சைன், தொழில் வசியம், சிக்னேச்சராலஜி பெயர் வசியம், ஆர்க்கோலஜி, கிராபாலஜி, ப்யூசராலஜி போன்ற 9 வகையான காரணிகளையும் 12 வகையான இயக்கங்களையும் ஆதாரமாக வைத்து பெயர் சூட்டினால் பிரபலம் உண்டாகும். இது பூரணமாக விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட சாஸ்திரமாகும். அதிர்ஷ்டப் பெயர் எண் சாஸ்திரப்படி முறையாகப் பெயரை மாற்றினால் உடனே அதிர்ஷ்டம் உண்டாகும்.

அதிர்ஷ்டப் பெயரை அமைத்துக் கொண்டால் அன்பான மனைவி (நல்ல மனைவி) அறிவுள்ள குழந்தைகள் வசதிமிக்க வீடு, வளமான தொழில், குறைவில்லாச் செல்வம் ஆரோக்கியமான உடல் இன்பகரமான வாழ்வு போன்ற அனைத்து அதிர்ஷ்டங்களையும் அள்ளித் தரும். தொழில் முடக்கம் வியாபார மந்தம் உத்தியோகத்தில் இடையூறு, கணவன் மனைவியர்க்கிடையே ஒற்றுமை இல்லாமை, செக்ஸ் கோளாறு, மனக்குழப்பம், போதைப் பொருளுக்கு அடிமை ஆகுதல், செய்வினை மாந்திரீக பாதிப்பு, தீய சக்தியால் பாதிப்பு திருமணத்தடை, குழந்தைபாக்கியம் இல்லாமை, முன்னேற்ற தடை, புகழ் இல்லாமை மனநோய் போன்ற எண்ணற்ற வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் இக்கலையின் மூலம் நிரந்தரத் தீர்வு காண முடியும்.

பெயர் மாற்றத்தால் பெருஞ்செல்வர் ஆகலாம். பெயரை எந்த வயதிலும் அதிர்ஷ்டமாக மாற்றி வெற்றிகளைப் பெறலாம். முறையாகப் பெயர் அமைத்தால் முன்னேற்றம் உண்டாகும். தாங்களே பெயர் மாற்றி குழம்பி வாழ்வில் பெருந் துன்பத்தை அடைந்தவர்கள் ஏராளம்.

உலகில் மனிதன் தோன்றிய நாள் முதற்கொண்டே எண், எழுத்துக்குள் பின்னப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறான். முறையாக அதிர்ஷ்ட பெயர் அமைத்தால் இவ்வுலகில் பெற வேண்டிய அனைத்து செல்வ சுகங்களையும் பெற்று இன்புற்று வாழலாம்.

பெயரில் வசியம் இருக்க வேண்டும். யாருக்கு எந்தப் பெயர் பொருந்தும் என்று நன்கு ஆய்வு செய்து பெயர் அமைத்தால் அதிர்ஷ்டம் உண்டாகும். செய்கின்ற தொழில் எதுவாக இருந்தாலும் அத்தொழிலில் வசியம் இருக்க வேண்டும். அப்படி தொழில் வசியம் இருந்தால்தான் தொழிலில் பெரும் பணம் சம்பாதிக்க முடியும்.


ஒரு மனிதனுக்கு விடாமுயற்சி, அயராத உழைப்பு, தர்ம குணம், தன்னம்பிக்கை போன்ற குணங்கள் இருந்தும் வாழ்வில் வெற்றி பெற முடியவில்லையெனில் அதிர்ஷ்டம் இல்லை என்பது நன்கு தெரிகிறது. இல்லாத அதிர்ஷ்டத்தை பெற இக்கலை வழிகாட்டும்.

வெற்றிபெற துடிப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த வழிகாட்டியாகும். இதை பயன்படுத்துபவர்கள் அனைவரும் வெற்றியுடன் வாழலாம். என்னால் சவால்விட்டு நிரூபிக்க முடியும். இக்கலையின் மூலம் எம்மிடம் அதிர்ஷ்டப் பெயர் அமைத்தவர்கள் அனைவரும் இன்று வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். உடலின் காந்த சக்தி உயிர்ப்பு சக்திக்கு தக்கவாறு பெயரையும் கையெழுத்தையும் அமைத்தால் அபரிமிதமான அதிர்ஷ்டங்கள் கிட்டும்.

உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்

ஜோதிட மாமேதை கே.ஆர். பிரபாகர்ராஜ்

நியூமராலஜி-நேமாலஜி-சைன்-தொழில் வசியம்



இன்றைக்கு பிரபலமாக உள்ள அரசியல் தலைவர்கள், சினிமா நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள், தொழில் அதிபர்கள் மேலும் பல துறைகளைச் சார்ந்தவர்களும் பெயர் மாற்றத்துக்குப் பின்பு பிரபலமானவர்களே ஆகும். பெயரில் வசியம் கோபுராம்சம் இருக்க வேண்டும்.

அரசியலில் வெற்றி, சினிமாவில் புகழ், விளையாட்டில் சாதனை, தொழிலில் மேன்மை கிட்டும். அந்த கால இராஜராஜ சோழன், அக்பர், புத்தர், மகாவீரர், அசோகர், பொற்கை பாண்டியன், நெப்போலியன், பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன், இந்திராகாந்தி, வீரமா முனிவர், செங்குட்டுவன், சேரன், ஆதிசங்கரர், காஞ்சி பெரியவர் போன்றோரும் பெயர் மாற்றத்திற்குப் பின்பு பிரபலமானவர்களே ஆகும்.

அதிர்ஷ்டப் பெயர் சாதாரண மனிதனையும் பெரிய சாதனையாளராக ஆக்கக் கூடியது. கையெழுத்தால் தலை எழுத்தை வெல்லலாம்.

ஆண்-பெண் எந்த தேதியில் பிறந்தவராக இருந்தாலும் அவர்கள் திருமணம் செய்த நாளின் கூட்டு எண், திருமணத் தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் எண் 2,4,5,7,8 வரும் நாளில் கண்டிப்பாக திருமணம் செய்யக் கூடாது. அப்படி செய்தால் சோதனைகளும், போராட்டங்களும் நடக்கும். இதிலிருந்து விடுபட மறு மாங்கல்ய பூஜை அதிர்ஷ்ட நாளில் செய்து கொண்டால் குடும்ப வாழ்க்கை சந்தோஷமுடனும், வெற்றியுடனும் இருக்கும்.

அதிர்ஷ்டப் பெயர், எண் சாஸ்திரம் எக்காலத்திலும் மாறாத சக்தி கொண்டது. பெயரையும் இடும் கையெழுத்தையும் வளமாக்கிக் கொண்டால் என்றென்றும் வெற்றிகள்தான். இக்கலையின் மூலம் நான் சவால்விட்டு நிரூபித்துக் காட்டிய அறிவியல் விஞ்ஞான சாஸ்திரமாகும்.

இவர் எழுதிய (உலகின் No:1 நியூமராலஜி நூல்)

"அதிர்ஷ்ட பெயர் எண் சாஸ்திரம்"

என்னும் புத்தகத்தை வாங்கிப் படியுங்கள். எல்லா ஊர் புத்தக கடைகளிலும் கிடைக்கும். (தபால் மூலம் பெற ரூ. 300/- M.O. செய்யுங்கள். வெளிநாட்டினர் ரூ.1000/- அனுப்புங்கள்.)

அதிர்ஷ்ட விஞ்ஞான ஜோதிடர்

கே.ஆர். பிரபாகர்ராஜ் எம்.ஏ.,

நல்லாந்தோட்டம், கணுவக்கரை (அஞ்சல்),

புஞ்சைபுளியம்பட்டி (வழி) - 638 459.

கோவை மாவட்டம். போன்: (04254) 87258.

www.jothidaulagham.com

E-mail:ajetraj@md5.vsnl.net.in

வார விடுமுறை: புதன், வியாழன்

நீங்களும் அதிர்ஷ்டம், புகழ், வெற்றி பெறலாம்.



தேங்காய்ப் பால் குழம்பு!

தேவையான பொருட்கள் :

சிறுபருப்பு - 150 கிராம்,
தேங்காய் - 2,
காரட் - 100 கிராம்,
பீன்ஸ் - 100 கிராம்,
முருங்கைக்காய் - 2,
காலிபிளவர் - 1 (பெரியது),
பச்சை பட்டாணி - 100 கிராம்,
பல்லாரி - 3 (பெரியது),
சிறிய வெங்காயம் - 20,
பூண்டு (பல்) - 50 கி,
தக்காளி - 100 கிராம்,
எலுமிச்சை பழம் - 2,
பச்சை மிளகாய் - தேவையான அளவு,
பொரிகடலை - 50 கிராம்,
கருவேப்பிலை, கொத்துமல்லி தழை,
கடுகு - சிறிதளவு,
சமையல் எண்ணெய் - தாளிப்பதற்கு ஏற்ப,
உருளைக்கிழங்கு - ¼ கிலோ

செய்முறை:

முதலில் சிறு பருப்பை வேகவைத்து எடுத்து வைக்கவும். பின் காய்கறிகளை நறுக்கவும். காரட்டை வட்டமாகவும், பீன்ஸையும், முருங்கைக்காயையும் 3 அங்குல நீளத்திற்கு நறுக்கவும். உருளையை வேகவைத்து ஒன்றை நான்காக வெட்டி வைத்துக் கொள்ளவும். காலிபிளவரை சிறிது சிறிதாகப் பிரித்து நன்கு கொதிக்க வைத்த நீரில் போடவும். இப்படிக் கொதிக்கும் நீரில் போட்டு கழுவுதல் மூலம் அதிலுள்ள சிறு புழுக்கள் இறந்து மிதந்து விடும். பின் வேறு நீரில் போட்டுக் கழுவி எடுத்துக் கொள்ளவும். பச்சைப் பட்டாணியை முதல் நாள் இரவே நீரில் போட்டு ஊற வைத்துக் கொள்ளவும். தேவையான அளவு காரத்திற்கு ஏற்ப பச்சை மிளகாயையும் பொரிகடலையையும் தனித்தனியாக அரைத்து வைத்துக் கொள்ளவும்.

இனி தேங்காயைத் துருவி







மிக்ஸியில் போட்டு 1 கப் நீர் விட்டு நன்கு அரைக்கவும். பின் வடிகட்டியை வைத்து வடிகட்டி பால் எடுத்துக் கொள்ளவும். இது முதல் பால். இது நன்றாக கொழகொழப்பாக இருக்கும். இதுபோன்று வடிகட்டிய தேங்காய்த் துருவல் சக்கையை மீண்டும் மிக்ஸியில் போட்டுச் சிறிதளவு நீர் விட்டு அரைத்து வடிகட்டி 2 வது பால் எடுக்க வேண்டும். மீண்டும் அதே சக்கையை போட்டு நீர் விட்டு அரைத்து வடிகட்டி 3வது பால் எடுக்கவும். இப்படி 3 முறை பால் எடுத்து தனித்தனியாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது பல்லாரி, பச்சை மிளகாய், சிறிய வெங்காயம், பூண்டு இவற்றை உரித்து வெட்டி வைத்துக் கொள்ளவும். 2வது எடுத்த பாலில் அரைத்து வைத்திருக்கும் பச்சை மிளகாய், பொரி கடலையையும் தேவையான அளவு உப்புப் போட்டு குழம்பை கூட்டி வைக்கவும். 3வது எடுத்த பாலில் நறுக்கி வைத்த காய்கறிகளையும், பச்சைப் பட்டாணி, வெங்காயம், பூண்டு ஆகியவற்றை வதக்கி வேக வைக்கவும்.

காய்கறிகள் வெந்தவுடன் 2வது பாலுடன் கூட்டி வைத்த குழம்பையும் ஊற்றி தக்காளியையும் வெட்டி போட்டு வேகவைத்த சிறு பருப்பையும் போட்டு நன்கு கொதிக்க வைக்கவும். நன்கு கொதித்தவுடன் அடுப்பிலிருந்து குழம்பு பாத்திரத்தை கீழே இறக்கி வைத்து முதலில் எடுத்த பாலை (தேங்காய்ப் பால்) ஊற்றி எலுமிச்சை பழச்சாறு பிழிந்து விட வேண்டும்.

பின் வாணலியை அடுப்பில் வைத்துத் தேவையான அளவு எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு, 2 மிளகாய் வற்றல் கிள்ளி போட்டு கருவேப்பிலை போட்டு தாளித்து குழம்பில் விடவும். சிறிது கொத்துமல்லி தழையையும் போடவும். இப்பொழுது தேங்காய்ப் பால் குழம்பு ரெடி. இது மிகவும் சுவையாகவும், வித்தியாசமாகவும் (குழம்பை இறக்கியவுடன் சிறிது இஞ்சி தட்டிப் போடவும்). இருக்கும்.

காம்பினேஷன் (இஞ்சி பச்சடி)

தேவையான பொருட்கள் :

இஞ்சி - 100 கிராம்,
மண்டை வெல்லம் - 150 கிராம்,
மிளகாய் வற்றல் - 5,
புளி - தேவையான அளவு,
உப்பு - தேவையான அளவு

செய்முறை :

இஞ்சியை நன்கு கழுவி தோலை உரித்து

சிறு சிறு துண்டாக வெட்டி எண்ணெய் விட்டு நன்கு சிவக்க வதக்கவும். வதக்கிய பின் இஞ்சியுடன் மிளகாய் வத்தலையும் (மி. வத்தலையும் வறுத்துக் கொள்ளவும்) தேவையான அளவு புளி, உப்பு போட்டு மிக்ஸியில் நன்றாக அரைக்கவும். அரைத்த விழுதையும் மண்டை வெல்லத்தையும் போட்டு வாணலியில் போட்டு அடுப்பில் வைத்து நன்கு கிளறவும். மண்டை வெல்லம் இளகி இஞ்சியுடன் சேர்ந்து நன்கு கொதித்தவுடன் (பச்சடி பதத்தில்) இறக்கவும்.

இந்த இஞ்சி பச்சடி மிகவும் நன்றாகவும் சுவையாகவும் இருப்பதுடன் உடலுக்கும் மிகவும் நல்லது. தேங்காய்ப் பால் குழம்பு சாதத்துடன் சேர்த்து சாப்பிடும் பொழுது எளிதில் ஜீரணமாகி விடுவதுடன் தேங்காய்ப் பால் குழம்பிற்கு ஏற்ற சிறந்த காம்பினேஷன்.

உளுத்தம் பருப்பு சாதம்

தேவையான பொருட்கள் :

உளுத்தம் பருப்பு - 100 கிராம்
(தொலிப்பருப்பு (அ) தொலி இல்லாதது)
புழுங்கல் அரிசி - ¼ கிலோ,
தேங்காய் - 1 (சிறியது),
பூண்டு - 2 கூடு,
உப்பு - தேவையான அளவு

செய்முறை :

உளுத்தம் பருப்பை (தொலிப் பருப்பை) இலேசாக வறுக்கவும். பின் பருப்பை அரிசியுடன் களைந்து குக்கரில் போட்டு 1 கப் அரிசிக்கு 3 கப் நீர் விட்டு தேங்காயைத் துருவிப் போட்டு, பூண்டை உரித்து வதக்காமல் பச்சையாகவே போட்டு உப்பு தேவையான அளவு போட்டு நன்கு கலக்கி வேகவைக்கவும். 3 விசில் வந்தவுடன் குக்கரை கீழே இறக்கி வைத்து ஆவி அடங்கியவுடன் திறந்து சாதத்தை வெளியே எடுக்கவும். இந்த உளுத்தம் பருப்பு சாதத்திற்கு தொலிப் பருப்பாக இருந்தால் உடலுக்கு மிகவும் நல்லது.

இந்த சாதத்திற்கு 100 கிராம் எள்ளை வறுத்துத் தேவையான அளவு மிளகாய் வத்தலையும் வறுத்து சிறிதளவு தேங்காய், புளி, உப்பு போட்டு மிக்ஸியில் அரைத்துத் துவையலாக செய்து சாதத்தில் போட்டுச் சிறிதளவு நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து சாப்பிடலாம். மிகவும் ருசியாகவும் இருக்கும். உடலுக்கும் நல்லது. இதற்குத் தொட்டுக் கொள்ள அவியல் செய்து வைத்துக் கொள்ளலாம். அப்பளம் பொரித்துக் கொள்ளலாம்.

துவரம் பருப்பு சாதம்

தேவையான பொருட்கள் :

துவரம் பருப்பு - 100 கிராம்,
புழுங்கல் அரிசி - ¼ கிலோ,
மிளகாய் வத்தல்
பொடி - 8 டேபிள் ஸ்பூன்,
சின்ன வெங்காயம் - 8,
பூண்டு - 8 (பல்),
புளி - 50 கிராம்,
மஞ்சள் தூள், சீரகம், கடுகு,
எண்ணெய் - சிறிதளவு,
தேங்காய் - ½ மூடி,
உப்பு - தேவையான அளவு
கருவேப்பிலை.

செய்முறை :

1 கப் அரிசிக்கு 3 கப் நீர் என்ற விகிதத்தில் நீரை அளந்து எடுத்துக் கொண்டு அதில் பாதியை மட்டும் குக்கரில் ஊற்றி துவரம் பருப்பு, அரிசி இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துக் களைந்து குக்கரில் போட்டு வெயிட் போடாமல் மூடி வைத்து சிறிது நேரம் வேகவிடவும். மீதி பாதி நீரில் புளியை கரைத்து மஞ்சள் தூள், மிளகாய் வத்தல் பொடி, உப்பு போட்டுக் கரைத்து குக்கரை திறந்து விடவும். பின் தேங்காயைத் துருவி அதனுடன் நாலைந்து சிறிய வெங்காயம் மற்றும் பூண்டைப் போட்டு சிறிதளவு சீரகத்தையும் போட்டு மிக்ஸியில் பரபரவென்று அரைத்து வெந்து கொண்டிருக்கும் சாதத்தில் போட்டு வெயிட்டையும் போட்டு குக்கரை மூடி விடவும். 3 விசில் வந்ததும் குக்கரை கீழே இறக்கி வைத்து ஆவி அடங்கியவுடன் வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, இரண்டு மிளகாய் வத்தல், கருவேப்பிலை ஆகியவற்றைப் போட்டு தாளித்து சாதத்தில் கொட்டவும். சிறிய வெங்காயத்தை பொடிப் பொடியாக நறுக்கி நன்கு வதக்கி சாதத்தில் போட்டால் நல்ல வாசமாக இருக்கும். அல்லது வடகம் வறுத்து பிரித்துப் போடலாம்.

– இ. கஸ்தூரி, பாளையங்கோட்டை.

பூக்களை ஈரத்துணியில் வைக்காமல் உப்புத் தண்ணீரில் நனைத்த துணியில் சுற்றி வைத்தால் புத்தம் புதிதாக பூக்கள் அழகாக இருக்கும்.

– சி. விஜயலக்ஷ்மி.



மும்பைக்கு அருகே ஒரு சொர்க்கம்!

மணி நேரத்தில் அடையும் தூரத்தில் நேரல் என்ற ஸ்டேஷன் உள்ளது. நேரலிலிருந்து 21 கி.மீ. தூரத்தில் மலையின் மேல் அமைந்துள்ளதுதான் மாத்தரான். சுமார் ஒன்றரை மணி நேரத்தில் நம்மூர் ஊட்டிக்குச் செல்லும் ரயில் போன்று அங்கு செல்கின்ற narrow gauge ரயிலில் சென்று விடலாம். இன்னொரு



நாம் அனைவரும் அறிந்தபடி, மும்பை ஒரு மாநகரமாக, ஒரு மாநிலத்தின் தலைநகராக திகழ்கிறது. மும்பையை சுற்றிப் பார்க்க சுற்றுலா செல்பவர்கள் மும்பையிலுள்ள இடங்களை மட்டும் பார்த்தவர்களாய் திரும்பி விடுகிறார்கள், மும்பைக்கு அருகிலேயே ஒரு குளிர்ப்பிரதேசம் (கோடை வாசஸ்தலம்) இருப்பதை அறியாமலேயே.

ஆம்! சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். அந்த இடத்திற்குப் பெயர் மாத்தரான். ஆங்கிலேயர்கள் நம் நாட்டை ஆண்டபோது கோடையின் வெப்பத்தைத் தணித்துக் கொள்வதற்காக மும்பைக்குத் தெற்கிலுள்ள மலையில் அந்த சிற்றூரை உருவாக்கினர்.


மும்பை-புனே ரயில் மார்க்கத்தில் மும்பையிலிருந்து மின்சார ரயிலில் 1

ஆச்சரியம் - மாத்தரானை அடைவதற்கு பஸ், லாரி போன்ற வசதிகள் கிடையாது. காலையிலிருந்து மாலை 5.30க்குள் 5 ரயில்கள் நேரலிலிருந்து மாத்தரான் செல்கின்றன. நேரலுக்கும் மாத்தரானுக்கும் 'இடையில் இரண்டு சிறிய ஸ்டேஷன்கள் உள்ளன.

நேரலிலிருந்து மாத்தரானுக்கு ரயிலில் செல்லும் போது மலையின் இயற்கைக் காட்சிகளை மட்டுமின்றி, மும்பை-புனே மார்க்கத்தில் நீண்ட ரயில்கள் பாம்பு போன்று சென்று கொண்டிருக்கும் அரிய காட்சிகளையும் கண்டு ரசிக்கலாம். சாலைப் போக்குவரத்து மிகவும் குறைவு என்பதால் ரயில்கள் மிக சாதாரணமாக தார்ச் சாலையைக் கடந்து செல்கின்றன - ஆளில்லாமல்,

லெவல் கிராஸிங் இல்லாமல்.

ரயில் போக்குவரத்துதான் பிரதானம் என்பதால் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களும் பெரும்பாலும் ரயிலிலேயே கொண்டு வரப்படுகின்றன. ரயிலில் சென்று இறங்கியதும் ஆட்கள் மொய்த்து விடுகின்றனர் - தங்கள் வீடுகளில் அமைக்கப்பட்டுள்ள ரூம்களில் தங்க வைப்பதற்காக. ஆம். லாட்ஜ்கள் என்று இருந்தாலும் அவைகளில் வாடகை அதிகமாக வசூலிக்கப்படுவதால், இப்படிப்பட்ட வீடுகளில் தங்க அமைக்கப் பட்டுள்ள அறைகளுக்கு வாடகை குறைவாக (ரூ.150, ரூ. 200 - ஒரு நாளைக்கு) வசூலிக்கப்படுகிறது. நமக்குத் தேவையான சாப்பாடு மற்றும் வெந்நீர் போன்றவையும் குறைந்த விலையிலேயே செய்து தருகின்றனர்.



மாத்தரனில் சுற்றிப் பார்ப்பதற்கு அதிக இடங்கள் இல்லை யென்றாலும், அவைகளைச் சென்று ரசிக்கக் கூடிய முறை வித்தியாசமானது. டாக்ஸி, பஸ், ஜீப் போன்றவை கிடையாது. குதிரைகளில் தான் சென்று ரசிக்க முடியும். பெரியவர்களுக்கு ரூ. 100/-ம், சிறியவர்களுக்கு ரூ.50-ம், அரை நாளுக்குக் கொடுத்து சுமார் 6 முக்கிய இடங்களைப் பார்க்கலாம். குதிரை ஓட்டுபவர் குதிரையைப் பிடித்து நடந்து வர நாம் மேலே அமர்ந்து பயமின்றி வருவது இப்படிப்பட்ட ஒரு மலைப் பிரதேசத்தில் முற்றிலும் மாறுபட்ட அனுபவம். தவிர, வயதானவர்களுக்கு டோலி என்ற வாகனம் பயன்படுத்தப்படுகிறது. அதில் பிரயாணி ஒருவர் அமர்ந்து கொள்ள அதனை இருவர் அல்லது நால்வர் தூக்கி வருவார்கள் குதிரையை விட இதற்குக் கட்டணம் அதிகம். இடங்களைச் சுற்றிப் பார்த்த பிறகு கடைத் தெருவிற்குச் சென்று பலதரப்பட்ட கடைகளைப் பார்த்து வேண்டிய பொருட்களை வாங்கலாம்.

நேரல் திரும்புவதற்கு முன்கூட்டியே முன்பதிவு செய்யலாம். அல்லது பிரயாண நேரத்திற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்பு சென்று பிரயாணச் சீட்டு பெறலாம். ரயிலில் உள்ள நான்கு பெட்டிகளில் ஒரு பெட்டிதான் முன்பதிவுக்கு உள்ளது. மற்ற பெட்டிகளில் இருக்கையின் எண்ணிக்கையின் அடிப்படையில் பயணச் சீட்டு கொடுக்கப்படுகின்றது. மலைப்பாதை பயணம் என்பதால் இருக்கையின் எண்ணிக்கையை விட கூடுதலாக பிரயாணிகள் ஏற்றப்பட மாட்டார்கள். நேரல் திரும்பியவுடன் அங்கிருந்து மும்பைக்கு மின்சார ரயிலில் வித்தியாசமான அனுபவத்தைச் சுமந்தபடி வந்து விடலாம்.

— அருணா மில்டன்

இமயமலைச் சாரலிலே ஓர் இனிய வைத்யர்



வெகுதூரத்தில் வெண்பனியினால் போர்த்தப்பட்ட மலைச் சிகரங்கள் நம் கண்களைக் கவருகின்றன. அவைகள் இமயமலையின் ஒரு பகுதியான 'தௌலாதார்' மலைத் தொடர்கள். அம்மலைத் தொடர்களை ஒட்டினாற் போல் அமைந்துள்ளது, பரந்து, விரிந்து பசேலெனத் தோற்றமளிக்கும் தேயிலைத் தோட்டம். இத் தேயிலைத் தோட்டத்தின் சரிவுகளுக்குக் கீழே பசுமை சிறிதும் குன்றாத 'பாஸ்மதி' நெல் வயல்கள் மரகதக் கம்பளமாக விரிந்து கிடக்கிறது. இத் தகைய இயற்கை வளம் கொழிக்கும் பூமியில் எழுந்தருளியிருக்கிறார் வட இந்தியாவில் வைத்தீஸ்வரராகப் போற்றி வணங்கப்படும், லிங்க ஸ்வரூபியான 'பைஜ்நாத்'

'வ' என்ற எழுத்தை 'ப' என்றும், 'த' என்ற எழுத்தை 'ஜ' என்றும் திரித்து உச்சரிப்பது மலை ஜாதி மக்களாகிய இமயமலைவாசிகளின் வழக்கம். அதன்படி இவர்கள் 'வைத்-நாத்' என்ற சொல்லை 'பைஜ-நாத்' என்று உச்சரிக்கின்றார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்று வைத்தீஸ்வரன் கோவில். மனிதர்களின் பிணிகளைத் தீர்க்க வல்ல வைத்யநாதனாக ஈஸ்வரனே இத் திருத் தலத்தில் லிங்க வடிவத்தில் எழுந்தருளியிருக்கிறார். இதைப் போலவே வட இந்தியாவில் 'வைத்தீஸ்வரன்' கோவிலாகக் கருதப்படுவது 'பைஜ்நாத் பப்ரோலா' என்ற இந்த ஆலயம். பைஜ்நாத்தை, வைத்யர்களுக்கெல்லாம் தலைவர் இவர் எனப் போற்றி வணங்கி வருகிறார்கள்.

சுயம்பு லிங்கமான பைஜ்-நாத்தை இராவணன் சாகாவரம் வேண்டி, இமயமலைச் சாரலில் தவமிருந்து துதித்ததாகச் சொல்லப்படுகிறது. பைஜ்-நாத்திற்கு முதன் முதலில் கோவில் எழுப்பி வழிபட்டு வந்தவர்கள் பாண்டவர்கள். பின்பு சிதிலமடைந்து போன இக் கோவிலை புதுப்பித்துக் கட்டியவர்கள் இமாசல பிரதேசத்தை ஆண்ட அரசர்கள். அதாவது சுமார் கி.பி. 804யில் பழுதுபார்க்கப்பட்டு கட்டிய பழம் பெரும் கோவில் பைஜ்-நாத் கோவில்.

இக் கோவில் பட்டான்கோட்டிலிருந்து 132 கி.மீ. தூரத்தில் காங்ரா மாநிலத்தில் உள்ளது. பட்டான்கோட்டிலிருந்து பஸ் மூலமாகவோ, அல்லது 'நாரோகேஜ்' ரயில் மூலமாகவோ சென்றடையலாம்.

மிக அமைதியான சூழலில் அமைந்துள்ள இக் கோவிலை நெருங்கும் முன், நம் கண்ணைக் கவர்வது இக் கோவிலின் எதிரே அமைக்கப்பட்டுள்ள அழகிய ரோஜா தோட்டம். சிவப்பு, இளம் சிவப்பு, மஞ்சள், வெள்ளை என பல வண்ணத்து ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. இத் தோட்ட

மும், பைஜ்-நாத் மந்திரும் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரின் பாதுகாப்பில் உள்ளன.

இக் கோவிலின் கருவறையை நோக்கியவாறு, முதலில், நிற்கும் நிலையில் ஒரு பெரிய நந்தியையும், பின்பு, உட்கார்ந்த நிலையில் உள்ள மற்றொரு நந்தியையும் காணலாம்.

மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிது என்பதற்கேற்ப கருவறையில் எழுந்தருளியிருக்கும் சிறிய சிவலிங்கம் இராவணனால் பூஜிக்கப்பட்டவர். இது 'பஸால்ட்' என்ற ஒரு வகைக் கல்லினால் உருவாகியுள்ள சுயம்புலிங்கம். மேலே லிங்கத்திற்குக் குடைபிடித்து நிற்கும் நிலையில் நாகப் பாம்பு. உயரத்தில் வைக்கப்பட்டுள்ள பாத்திரத்திலிருந்து லிங்கத்தின் மேல் தண்ணீர் சொட்டியபடி உள்ளது. ரோஜா மலர்களினால் லிங்கம் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் தங்கள் கையினாலேயே லிங்கத்திற்கு பால், நீர் முதலியவைகளினால் அபிஷேகம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். சுத்தமான



நெய்யினால் செய்த இனிப்புப் பண்டங்கள் லிங்கத்திற்கு நைவேத்தியம் செய்யப்படுகிறது.

கோவிலின் முகப்பில் விநாயகர், ஹனுமன், சுற்றிலும் உள்ள சிறு சிறு சன்னதிகளில் முறையே மஹாவிஷ்ணு, லக்ஷ்மி, மயில் வாஹனத்தில் ஆறுமுகப் பெருமான், மஹிஷாசுரமர்த்தினி, சாமுண்டி, துர்கா முதலிய திரு உருவங்களை சேவிக்கலாம்.

கோவிலின் பின்புறம் மலைச்சரிவுகளுக்கிடையே 'பில்வ குண்டம்' என்ற பெயரில் ஒரு சிறிய நதி ஓடுகிறது.

சிவராத்ரி போன்ற விசேஷ தினங்களில் இவ்விடத்தில் பெரிய அளவில் உற்சவ சந்தை கூடுகிறது. அந்த நாட்களில் வெகு தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்தெல்லாம் மக்கள் திரளாக வந்து பைஜ்நாத்தை தரிசித்துச் செல்கிறார்கள்.

கோவிலிலிருந்து சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் அமைந்துள்ளது 'ஷங்கர் வ்யூ' என்ற நவீன வசதிகள் கொண்ட விருந்தினர் விடுதி. பிரயாணிகளின் பட்ஜெட்டிற்கு ஏற்ப, இங்கு தங்குவதற்கு அறைகளும், வடஇந்திய சுவை உணவுகளும் கிடைக்கிறது.

கேதார்நாத் போன்ற கடும் பனி சூழ்ந்த சிவஸ்தலத்திற்குப் போய் வர முடியாதவர்கள், இயற்கை எழில் கொஞ்சும் சக்தி வாய்ந்த சிவஸ்தலமாகிய பைஜ்-நாத்திற்குக் கோடை நாட்களில் விஜயம் செய்து மனத்திற்கு அமைதியையும், ஆனந்தத்தையும் தேடிக் கொள்ளலாம். பைஜ்நாத் ஒரு சிவஸ்தலம் மட்டுமல்ல, ஒரு கோடைவாசஸ்தலமும் ஆகும்.

— எஸ். சரஸ்வதி

(Courtesy : Himachal Pradesh Tourism Corporation, Pathankot)



ராணி சாரீஸ்-வருடாந்திர தள்ளுபடி

ராணி சாரீஸ் & சுந்தர் சாரீஸ்




தள்ளுபடி விற்பனை
25.3.2001 முதல்
4.4.2001 வரை

"ராணி சாரீஸ்"
"RANEE SAREES"
MADURAI
SPECIAL QUALITY :
COLOURS ARE GUARANTEED FOR DHOBI WASH
FOUNDER OF "RANEE SAREES"
COPY RIGHT REGD : A 5284/85

RANEE SAREES
R.S.S.
MADURAI.20

Sundhar
SAREES & DHOTIES



SASI/MDU/01

வாடிக்கையாளர்களின் நம்பிக்கையான நிறுவனம்

RaneeSarees SHOW ROOM
HO:
பத்மாவதி டெக்ஸ்டைல்ஸ்
76, தெற்கு மாசி வீதி,
(அருள்மிகு காமாட்சி ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் எதிர்புறம்)
மதுரை-1. போன்: 744888,745100
visit us at: www.raneesarees.com

RaneeSarees SHOW ROOM
பத்மாவதி டெக்ஸ்டைல்ஸ்
சரஸ்வதி அபார்ட்மெண்ட்ஸ்
No:1, 6 வது அவென்யூ, அண்ணாநகர்கிழக்கு
அண்ணாநகர் (K4 காவல்நிலையம் அருகில்)
B.P.L -Tower vision அடுத்தக்கடை
சென்னை-600040

ராணி சாரீஸ் - நிறம் மாறாத சுங்குடி பூக்கள்

அழகுக்கு அழகு செய்ய...

என் வயது 27. நான் மிகவும் குண்டாக இருக்கிறேன். எப்படிச் சாப்பிட்டாலும் இளைக்கவே மாட்டேன் என்கிறது. நீங்கள் உங்களைச் சந்தித்த போது அப்போதே தோட்ட வேலை செய்யச் சொன்னீர்கள். என்னுடைய எடை 89 கிலோ. பொடுகுத் தொல்லை தீர்த்தது போல் தாங்கள் ஆலோசனை கூறவும்! உணவுப் பட்டியல் தரவும்.

சாந்தா, கல்பாக்கம்.

நம் வயதும் பருமனும் நம்மைத் தாக்கும் அளவுக்குக் கொண்டு போகக் கூடாது. உடல் பருமன் வந்து விட்டாலே சோம்பேறித்தனம் வந்து விடும். மனச்சோர்வும் சேர்ந்து கொள்ளும். மேனிஎழிலுடன் கூடிய உடல் பருமனைக் குறைக்க சிறந்த வழி - நாம் நன்றாய் இளைத்து விடுவோம் என்ற நம்பிக்கை. பட்டினி வேண்டவே வேண்டாம். தர்ப்பூஸ் பழம், இது ஒரு கோடைக்கனி. கோடை வெப்பத் தகிப்பில் ஏற்படும் நாவறட்சியையும் தாகத்தையும் தணிக்க இயற்கை அளிக்கும் நீர்க்கனி இது. நிறைய சாப்பிடவும்.







எண்ணெய் சிறிதும் இல்லாத சப்பாத்தி, காய்கறி வகைகள் (எண்ணெய் துளிக்கூட இல்லாமல்) சூப் இவற்றை நிறையச் சாப்பிடவும். சிறிது தோட்ட வேலை. இளநீர், மோர் (நீர் மோர்) கட்டாயம் 3 மாதத்தில் இளைத்து விடும். நீங்கள் நேரில் வந்தால் எண்ணெய் இல்லாமல் எப்படிச் சுவையுடன் சாப்பிடுவது என்று செய்து காண்பிக்கிறேன். அட்டவணை எப்படிச் சௌகரியமோ அப்படிப் போட்டுக் கொள்ளவும். தன்னம்பிக்கை, வாய்விட்டு சிரித்தல், இனிமை அடிப்படையாகத் தேவை.

நீங்கள் சொல்லும் உணவு இயற்கையே அடிப்படையாக உள்ளது. மேலும் நிறைய பழங்களுக்கு முக்கியத்துவம் தருகிறீர்கள்! என்ன காரணம்? என் தலையில் நிறைய பொடுகும் அதனால் முகத்தில் வேர்க்குரு மாதிரி உள்ளது. என்ன செய்யலாம்? குறைத்துச் சாப்பிட்டாலும் என் உடல் இளைக்கவே



பதில்கள் : ஹேமா லக்ஷ்மண்
(அழகு மற்றும் உணவுக் கலை நிபுணர்)

இல்லை.

ரமாகோபால், ஈரோடு.

இயற்கை உணவுகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்தாது. மேலும் பழங்கள் இயற்கையிலேயே மிகுந்த சத்துள்ளவை. கனி மருத்துவம் என்று பெயர். உண்ணாவிரதம் இருந்து விரதத்தை முடிப்பவருக்கு முதலில் தருவது ஆரஞ்சு ரசமே. உண்ணாவிரதத்தால் ஏற்பட்ட உடல் தளர்ச்சியைப் போக்கி, உடல் தெம்பையும் சத்துப் பொருட்களின் நிறைவையும் கொடுப்பதில் இதைவிடச் சிறந்த பானம் கிடையாது.

கனிகளின் பயன்கள் பலப்பல. யோகிகள், சித்தர்கள் கனிகளை மட்டும் உண்பது வழக்கம். பல சிறந்த பயன்களை என் வாடிக்கையாளர்கள் பெற்றுள்ளனர். (டாக்டரின் ஆலோசனைப்படி) பொடுகுக்கு என்று சிறந்த ஆயில் உள்ளது. உபயோகித்துப் பயன்பெறவும்.

பணம் நிறைய இருந்தால்தான் ஆப்பிள் வாங்க முடியும். சத்து பெற முடியும் என்று நினைத்தால் மலிவான கொய்யாப்பழத்தின் மூலம் அதைப் பெற்று விட முடியும். 'பெண்டிர்க்கழகு உண்டி சுருக்குதல்' என்ற பழமொழியே சான்று. பெண்டிர்க்கு அழகு உண்டி சுருக்குதலே தவிர உண்டியில் உள்ள சத்து குறைதல் என்று அர்த்தமில்லை.

உடலைக் காப்பதற்கான சத்துக்கள் முழுமையாக அமையப் பெற்றதாக நம் உணவு இருத்தல் அவசியம். நாக்கு ருசிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் உடல் வலிமைக்கும் செழுமைக்கும் ஆக்கம் தரும் உணவு வகைகள் சற்று ருசி குறைந்ததாக இருப்பினும் உண்ணும் பழக்கத்தை மேற்கொண்டால் நிச்சயம் பலன் தெரியும்.

நான் பிரபல மல்டி நேஷனல் கம்பெனியில் வேலை செய்கிறேன். என்னால் நீங்கள் சொல்லும் இயற்கை உணவுகளை நேரப்படி சாப்பிட முடிவதில்லை. பொறுப்பான பதவி, நேரமின்மை இப்போது அடிக்கடி கோபம், முடி வேறு கொட்டுகிறது.

மங்கையர் மலர் வாசகி.

நீங்கள் சொல்வது போல் அழகு சிகிச்சையுடன் இயற்கை உணவு தயாரிக்க ஆசை. சிறிய முறையில் செய்து வருகிறேன். பழங்கள் சாப்பிட நேரமின்மை காரணமாகாது. முடி கொட்டுவது உடல் உஷ்ணம்தான். பயறு (பச்சைப் பயறு 1 கிலோ வெந்தயம் 200 கிராம் காய வைத்து அரைத்து வைத்துக் கொள்ளவும். எண்ணெய் மசாஜ் செய்து பிறகு அரைத்த பயறு 'பேக்' மாதிரி தலைக்குப் போட்டால் முடி கொட்டாது. உங்களுக்கு முடிக்கு மூலிகை எண்ணெய் தடவினால் முடி கொட்டுவது நிற்கும்.

முகப் பருவால் உண்டாகும் கரும்புள்ளி போக என்ன செய்வது?

கமலா, மைசூர்.

கரும்புள்ளிகள் மறைய சந்தனத்தை (சந்தனக் கல்லில் அரைத்தது) அரைத்துப் பூசுவதே சிறந்தது. பரு வந்ததும் அதை கிள்ளக் கூடாது.

எனக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது. காலில் வெடிப்பு, உடல் உஷ்ணம் அதிகமாக உள்ளது. வீட்டிலேயே செய்து கொள்ளும் யோசனை கூறவும்.

ராணி, சேலம்.

கால் வெடிப்பு நீங்க : வாயகன்ற பாத்திரத்தில் கடுநீரில் கால் அமிழும்படி 10 நிமிடம் வைக்கவும். 10 நிமிடத்திற்குப் பின் காலை எடுத்து லிக்விட் சோப்புப் போட்டு நன்கு தேய்க்கவும். பியூமிங் ஸ்டோன் என்னும் கல் கடைகளில் கிடைக்கும். சொரசொரப்பாக இருக்கும். இந்தக் கல்லினால் பாதங்களை நன்கு அழுத்தித் தேய்க்க வேண்டும். பின்பு கால்களை சுத்தமான தண்ணீரினால் கழுவி துடைத்து பாடி லோஷனை கொஞ்சம் போல பூசி லேசாக அழுத்தி மசாஜ் செய்ய வேண்டும். இது போல தொடர்ந்து செய்து வர வெடிப்புகள் மறையும்.

என் முகம் மிகவும் கறுத்து இருக்கிறது. மாதம் ஒருமுறை ஃபேஷியல் செய்து கொள்கிறேன். இன்னும் சிறந்த முறையில் எப்படிச் சிகிச்சை எடுப்பது?

விந்தியா ராணி, குரோம்பேட்டை.

முகம் மட்டும்தான் கறுப்பாக உள்ளது என்றால் சூரிய ஒளி படும் இடத்திலா, இல்லையென்றால் மிகவும் வியர்வை அதிகமாக உள்ளதா? உடல் உஷ்ணம் காரணமாகவும் முகம் கறுத்துப் போகலாம். உயர்தர மூலிகைகளைக் கொண்டு ஹெர்பெல் பிளீச் நல்ல பயன் கொடுக்கும், செய்து கொள்ளலாம்

என் முடி மிகவும் அதிகமாகக் கொட்டுகிறது! நிறைய எண்ணெய் மாற்றி மாற்றி தடவியாகி விட்டது. ஹென்னா போடுவதற்குக் கூட முடி கிடையாது. என்ன செய்வது கவலையே என்னை மிகவும் பாதிக்கிறது. கூடிய விரைவில் வழுக்கை விழுந்து விடும் போல் உள்ளது. ஆலோசனை கூறவும்!

குமாரி, திண்டுக்கல்.

முடி கொட்டுவதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. இரத்தசோகை, தொடர்ந்த மன இறுக்கம், மன அதிர்ச்சி, டாக்டரிடம் முதலில் ஆலோசனை பெறவும். எந்த எண்ணெய் தடவினாலும் ஒன்றும் பலன் இருக்காது. ஆயில் மசாஜ் செய்வதால் இரத்த ஓட்டம் நன்கு தூண்டப்பட்டு நன்கு முடி வரும். சத்துள்ள உணவு முக்கியமானது. செடி வளருவதற்கு தண்ணீர் அவசியம், சீக்கிரம் வளர நிறைய ஊற்றினாலும் செடி அழுகி விடும். அதே போல் பொறுமையுடன் ஒரே தரமான எண்ணெய் உபயோகிக்கவும். ஹென்னா நிச்சயமாய் பலன் தரும். கிவ லைப்படாதீர்கள். நன்கு முடி வளரும்.



சமையலறைச் சந்தேகங்கள்!

லக்ஷ்மி, ஸ்ரீரங்கம்.

சூரியகாந்தி எண்ணெய் எல்லாமே ஒன்று தானா? ஒருசில கம்பெனி எண்ணெய் விலை உயர்ந்ததாக உள்ளது. அதே சூரியகாந்தி எண்ணெய் வேறுசில கம்பெனிகளுடையது மிக மிக விலை குறைவாக உள்ளது. எதை உபயோகப் படுத்தினாலும் பரவாயில்லையா?

பதில் : மிகச் சிறந்த கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். பலரும் அவசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம். எந்த ஒரு விற்பனைப் பொருளானாலும் முதலில் அதனுடைய தரத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தரமான பொருள் ஓரளவு விலை உயர்ந்ததாகவே இருக்கும். ஒன்று அல்லது இரண்டு ரூபாய் வித்தியாசப்பட்டால் அது அவர்கள் லாபத்தில் குறைத்துக் கொண்டு தருகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதே பொருள் பாதிக்குப் பாதி விலை குறைவாகத் தருகிறார்கள் என்றால் யோசிக்க வேண்டிய விஷயம்...

எண்ணெய் விஷயத்தில் ஒரு சிறிய பரிசோதனை மூலம் நீங்களே கண்டுகொள்ளலாம். ஒரே ஒரு தடவை நீங்கள் ஒவ்வொரு விலையிலும் உள்ள எண்ணெயில் ஒரு பாக்கெட் வாங்குங்கள். முதலில் அதனுடைய நிறத்தைக் கவனியுங்கள். அடுத்தது அதன் பிசுபிசுப்பு.

உபயோகப்படுத்திய பிறகு பாத்திரத்தைத் தேய்க்கும் போது உங்களுக்குப் புரியுமே. அதிகப் பிசுபிசுப்பு இருந்தால், அதிக அடர்த்தி இருந்தால் அதில் அதிகக் கொழுப்பு உள்ள எண்ணெயைக் கலந்திருக்கக்கூடும். நீங்கள் சூரியகாந்தி எண்ணெய் என்று நினைத்து வாங்கிக் கொண்டே இருப்பீர்கள். ஆனால் அதில் 30 லிருந்து 40% விலை, தரம் குறைவான கலப்பட எண்ணெய் கலந்து அவர்கள் விற்பனை செய்யலாம். கடைசியில் மூட்டு வலி வந்து அவஸ்தைப்படுவது நீங்கள்தானே? அதனால் எப்போதும் நமது ஆரோக்கியத்தையும், குடும்பத்தினர் ஆரோக்கியத்தையும் மனதில் கொண்டு தரமான பொருளை வாங்குவீர்.

குழிப்பணியாரம் செய்ய பணியாரத் தட்டு இல்லாததால் சிறிய வாணலியில் எண்ணெய் விட்டு சிறியதாக செய்தால் அதே டேஸ்ட் கிடைக்குமா?

பதில் : வாணலியில் எண்





பதில்கள் : எஸ். மல்லிகா பத்ரிநாத்

ணெய் விட்டுச் செய்தால் உங்களுக்கு அப்பம் மாதிரிதான் வரும். பணியாரம் போல வராது. குண்டாகவும் வராது. அதே டேஸ்டும் கிடைக்காது. எதை எதை எப்படிச் செய்ய வேண்டுமோ அதே போல் செய்தால்தான் ருசியாக இருக்கும்.

லலிதா கல்யாணசுந்தரம், சங்கராபுரம்.

நான் தீவிரமான சைவம். முட்டையை உபயோகிக்காமல் கேக் செய்ய இயலாதா? எல்லாப் பொருட்களுக்கும் மாற்று இருப்பது போல் முட்டைக்கு மாற்று எது?

கேக் செய்ய முட்டைக்கு மாற்றாக எதையும் நாம் குறிப்பிட இயலாது. முட்டையை அடிக்கும் போது அதுவும் வெள்ளைக் கருவானது அதிக அளவு காற்றை அதனுள்ளே அடைத்துக் கொள்ளும் தன்மை கொள்கிறது. அதை மாவோடு கலந்து 'பேக்' செய்வதால் கேக் மிருதுவாக, ஸ்பான்ஜ் போல வருகிறது. முட்டைக்கு மாற்று ஏதும் இல்லையென்பதால் முட்டையில்லாமல் கேக்கே செய்ய முடியாது என்று கூறவில்லை. நிறைய முட்டை இல்லாத கேக் வகைகள் உண்டு. அதை நாம் கலக்கும் விதம் சிறிது வித்தியாசப்படும். உங்களுக்காக முட்டையில்லாத வெனிலா கேக் செய்முறை இதோ :

வெனிலா கேக் :

தேவையான பொருட்கள் :

மைதா - 120 கிராம்,

(தலைதட்டி 1 ஆழாக்கு),

பேகிங் பவுடர் - 1 டீஸ்பூன் (தலை தட்டி)

சமையல் சோடா - ¼ டீஸ்பூன்,

உப்பு - 1 சிட்டிகை,

வெண்ணெய் - 60 கிராம்,

(2 டேபிள் ஸ்பூன் அளவிற்கு),

பொடித்த சர்க்கரை - ¾ ஆழாக்கு (90 கிராம்),

இளம்சூடான பால் - 150 மில்லி (¾ தம்ளர்)

வெனிலா எஸென்ஸ் - ½ டீஸ்பூன்

செய்முறை :

மைதா மாவுடன் பேகிங் பவுடர், சோடா, உப்பு சேர்த்து இருமுறை சலித்துக் கொள்ளவும்.

வெண்ணெயோடு பொடித்த சர்க்கரை சேர்த்து ஒரு மத்தின் உதவியால் நன்றாக லேசாக வரும் வரை அடித்துக் கொள்ளவும். (ஈரமில்லாத பாத்திரத்தில்)

அதோடு எஸென்ஸ் சேர்க்கவும்.

பிறகு அதில் இளம்சூடான பால் மற்றும் சலித்த மைதாவை மாற்றி மாற்றி கலந்து கொண்டே விரைவாக சுழற்றினாற்போல ஓரே பக்கமாகக் கலக்கவும்.

நன்கு கலந்தாற்போல் வந்தால் போதும். அதிகமாக அடிக்க வேண்டாம். இதை முன்பே வெண்ணெய் தடவி வைத்துள்ள பேகிங் பாத்திரத்தில் மாற்றி சூடான ஓவனில் வைத்து பேக் செய்யவும். (220°C)

மேலே பொன்னிறமாக வெந்ததும் ஒரு குச்சியின் உதவியால் குத்திப் பார்த்து உள்ளே ஒட்டாமல், நன்றாக வெந்திருக்கிறதா என்று பார்த்து எடுக்கவும்.

குறிப்பு : இதைக் குக்கரில் வைப்பதானால் குக்கரின் உள்ளே சலித்த ஆற்று மணல் போட்டு சூடானதும் ஒரு ஸ்டாண்டை வைத்து அதனுள்ளே இறக்கி பேக் செய்யவும்.

மைக்ரோவேவ் ஓவன் செய்முறை:

இதையே மைக்ரோவேவ் ஓவனில் வைப்பதானால் மேலே பொன்னிறம் வராது. 800 வாட்ஸ் மைக்ரோவேவ் ஓவனில் மைக்ரோவேவ் பாத்திரத்தின் உள்ளே ப்ரௌன் பேப்பரையாவது பட்டர் பேப்பரையாவது அதே வடிவில் உள்ளே 'கட்' செய்து போட்டு அதனுள்ளே ஊற்றி 'மீடியம்' அல்லது 'மீடியம்-ஹை'யில் 4லிருந்து 5 நிமிடங்கள் வைக்கவும்.

நீங்கள் வைக்கும் பாத்திரத்தின் சைஸ் மிகவும் முக்கியம். மைக்ரோவேவ் பாத்திரத்தில் பாதி அளவிற்கு மட்டுமே மாவு வர வேண்டும். மேலே நிறம் வர வேண்டுமானால் சிறிது காரமல் சர்க்கரை ஊற்றி வைக்கலாம். அல்லது ஒரு டீஸ்பூன் கோகோ பவுடர் அல்லது இன்ஸ்டன்ட் காப்பித் தூளை சிறிதளவே பாலில் கரைத்து மேலே ஊற்றி பிறகு வைக்கலாம்.

இன்னொரு விஷயத்தை இதில் நீங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். வெளியே



இஞ்சித் தோலை தூக்கி எறியப் போகிறீர்களா? கொஞ்சம் பொறுங்க. டீக்கு கொதிக்க வைக்கும் தண்ணீரில் சிறிது இஞ்சித் தோலைப் போட்டு, பிறகு அதில் டீ போட்டால், டீ சூப்பராக இருக்கும். இஞ்சி தோல் அதிகமாக இருந்தால், வெய்யிலில் காயவைத்து டீத்தூளு டன் போட்டு வைக்கவும்.

- போரூர் ஆர். சீதா

எடுத்த பிறகு கூட மைக்ரோ அலைகள் இன்னும் சிறிது நேரம் இருப்பதால் மத்தியில் சிறிது வேகாமல் இருப்பது போலத் தோன்றினால் கூட எடுத்து விடவும். வெளியே வைத்த பிறகு வெந்து விடும். அதிக நேரம் வைத்து விட்டீர்களானால் பொடியாகி விடும்.

சென்ற இதழ் மங்கையர் மலரில் குக்கரைப் பயன்படுத்தி கேக் செய்யும் முறை குறித்து விளக்கியுள்ளீர்கள். குக்கரின் உபயோக முறையில் குக்கரில் தண்ணீரில்லாமல் அடுப்பில் வைத்தால் வீணாகி விடும் என்று இருக்கிறதே இந்தக் குழப்பத்தைத் தீர்க்குமாறு வேண்டுகிறேன்.

பதில் : குக்கரில் எதுவுமே போடாமல் அப்படியே வைத்தால் நிச்சயமாக வீணாகி விடும். நான் ஆற்று மணலை சலித்துப் போடச் சொல்லியிருந்தேனே. மணல் இருக்கும் போது சூட்டை அது சரியாக பரவச் செய்வதால் எதுவும் ஆகாது. மேலும் நான் எதையாவது கூறினால் அதைப் பலமுறை நான் செய்து பார்த்த பிறகே மற்றவர்களுக்குக் கூறுவது வழக்கம்.

பல தடவை நான் செய்திருக்கிறேன். டீவி.யிலும் செய்து காட்டியிருக்கிறேன். எதுவும் ஆனது இல்லை. நான் சொல்லிய குறிப்புகளை அப்படியே கடைப்பிடிக்கலாம். அதாவது எந்த அளவிற்கு மணல் போட வேண்டும், எப்படிச் சூடாக்க வேண்டுமென்கிற எல்லா விஷயத்தையும்தான்.

திருமதி. கமலா மூர்த்தி, கள்ளிக் கோட்டை.

ஒருமுறை மைக்ரோவேவ் ஓவனில் மசாலா கடலை செய்யும் போது நான் உபயோகித்த கண்ணாடித் தட்டு தூளாக நொறுங்கி விட்டது. கீழ்க்கண்ட முறையைப் பின்பற்றினேன். ஒரு தட்டில் கடலை மாவு, மிளகாய்த் தூள், உப்பு எண்ணெய் - 1 டீஸ்பூன் கலந்து அதில் நிலக்கடலையைப் புரட்டி அதை ஐந்து நிமிடம் மைக்ரோஹையில் வைத்தேன். மற்றொரு முறை கண்ணாடிப் பாத்திரத்தில் முளைவிட்ட கொத்துக் கடலையை நீர் தெளித்து பாத்திரத்தில் கண்ணாடித் தட்டால் மூடி வைத்த பிறகு அதுவும் உடைந்து விட்டது.

பதில் : Imported Micro wave Proof dinner set என்று எழுதியுள்ளீர்கள். அதில் எந்த அளவு சூட்டைத் தாங்கும் என்று குறிப்பிட்டுள்ளதா என்று பார்க்கவும். வெறும் எண்ணெய் சேர்த்துச் செய்யும் செய்முறைக் குறிப்புகள் மைக்ரோவேவ் ஓவனில் எண்ணெயின் சூடாகும் தன்மைக்குக் கட்டுப்பாடு இல்லாததால் 300°C க்கும் மேல் சூடாகி விடும்.

மேலும் ஒரு சில பாத்திரங்கள் மைக்ரோவேவ் ஓவன் மற்றும் Connection Oven (OTG) இரண்டிலும் வைக்கலாம் என்று கூறியிருக்கும். (Example : Borosil) அதைப் போன்ற பாத்திரங்களை இதைப் போன்ற செய்முறைக் குறிப்புகளில் உபயோகப்படுத்தினால் உடையாது.

மேலும் மசாலா கடலைக்கு நீங்கள் எந்தப் புத்தகத்தில் பார்த்து அவ்வாறு செய்தீர்கள் என்பது எனக்குத் தெரியாது. நான் கூறும் குறிப்புகள் சிறிது வித்தியாசப்படும். மேலும் கலப்பதற்கு ஓவன் பாத்திரங்கள் உபயோகப்படுத்த வேண்டாம். வேறு ஒரு தட்டில் கலந்து பிசறி பிறகு மாற்றவும். மேலும் ஒருசில ஓவனில் 900 வாட்ஸ், அதற்கும் மேலும் உள்ள மாதிரி தயார் செய்கிறார்கள். அதை உபயோகப்படுத்தும் போது எண்ணெய் மிக மிக அதிக சூடு அடைகிறது. அதனால் மீடியம் ஹையில் வைக்கவும்.

நீங்கள் கூறியிருக்கும் ஓவன் பாத்திரங்களை தண்ணீர் சேர்த்துச் செய்யும் செய்முறைக் குறிப்புகளுக்கு மட்டும் உபயோகித்துப் பார்க்கவும். பொதுவாக எனக்குத் தெரிந்து டின்னர் செட்டில் கொடுக்கும் தட்டுகளை ஓவனில் சமைக்க வைப்பது கிடையாது. ஓவனில் வைக்கும் பாத்திரத்தின் மூடியை மட்டுமே உபயோகிக்கலாம். பிளேட் மைக்ரோவேவ் ப்ரூப் என்றிருந்தால் சூடாக்க மட்டுமே உபயோகப் படுத்தலாம்.

அதே போல கடலைக்கும் நீங்கள் கூறியுள்ளீர்கள். தட்டு மட்டுமே உடைந்துள்ளது என்று கூறியுள்ளீர்கள். ஓவனில் வைக்கும் பாத்திரம் உடையவில்லை. அப்படியென்றால் நீங்கள் பாத்திரத்தின் மூடியை உபயோகப்படுத்தாமல் டின்னர் செட்டின் தட்டை உபயோகப் படுத்தியுள்ளீர்கள். அது மிகவும் தவறு. இனிமேல் மைக்ரோவேவ் பாத்திரங்கள் வாங்கும் போது மூடியுடன் உள்ள பாத்திரங்கள் வாங்கவும். 'பேக்' செய்யும் பாத்திரங்களானால் மூடி இல்லாவிடினும் பரவாயில்லை.

வெங்காய பஜ்ஜி, உருளை பஜ்ஜி போல, பனீரையும் சரியாக வெட்டி பஜ்ஜி செய்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

— லக்ஷ்மி ரங்கநாதன்.





நெட்சாட்டும், நம்மூர் அரட்டையும்...

சூரியன் முழுவதுமாக தன் முகத்தைக் காட்டாத அந்த விடிகாலை நேரம். கணவனுக்கு டிபன்கேரியர் கையில் கொடுத்து விட்டு கடகட வென்று நர்ஸரியில் படிக்கும் பையனை தயார் செய்து, ஸ்வெட்டரும் கேப்புமாக அவனும், ஷாலும் மஃப்ளருமாக நானும், முதல் மாடியிலிருந்து கீழே இறங்கி, பரந்து விரிந்திருக்கும் க்ரவுண்டில் ஸ்கூல் பஸ்ஸுக்காக வெயிட் செய்யும் போது, கிரவுண்ட் ஃப்ளோர் தோழி சில நாட்களில் கதவைத் திறந்து கொண்டு வந்து என்னுடன் வெயிட் செய்வாள்.

மகனை ஸ்கூல் பஸ்ஸில் ஏற்றியவுடன் கிளம்ப யத்தனிக்கும் போது, "ஐந்து நிமிஷம் எங்க வீட்ல உட்கார்ந்துட்டு போங்களேன்" என்கிற டெம்டிங் அழைப்பு அவளிடமிருந்து வரும். காலை டிபனுக்கு அவள் வீட்டில் செய்த உப்புமாவோ, இட்லியோ மைக்ரோவேவில் ஹீட் செய்யப்பட்டு கையில் வரும். கடக்கட சாப்பிட்டுக் கொண்டே 15 நிமிடமோ அரை மணி நேரமோ அவளுடன் அரட்டை அடிக்கும் அந்த சுகம் 'நெட்சாட்'டில் கிட்டுமோ...?

காலனியில் வசிக்கும் நான் குழந்தைக்கு பால் வாங்க சூப்பர் மார்க்கெட்டுக்குப் போய் பால் வாங்கி விட்டு அப்படியே அருகிலுள்ள ஒரு தோழி வீட்டுக்குள் தலை காட்டி விட்டு போய் விடலாமே என்று நுழைய அவளோ சூரிதாருக்குக் கட் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு நாமும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஏற்படும் உந்துதல் 'நெட்'சாட்டில் வருமோ...'

ஒரு வருடம் கழித்து விடுமுறைக்கு இந்தியாவுக்குப் போய் தங்கும் போது, தற்செயலாக வெளியில் வரும் எதிர் வீட்டுக்காரர், "என்னம்மா, சௌக்கியமா?" என்று கேட்டுக் கொண்டே கேட்டருகில் நின்று கொண்டு, க்ஷேம லாபங்களை விசாரித்து பின் தெருவில் போவோர் வருவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டே ஒரு வருட விஷயங்களை அலசிக் கொண்டிருக்க, அந்த ஒரு மணி நேரம் கால் கடுக்க நின்றாலும் முகம் பார்த்துப் பேசி ஏற்படும் அந்த சந்தோஷமான தீங்கற்ற அரட்டை 'நெட்சாட்'டில் இயலுமோ...?

சிட்டியிலிருந்து 60 கி.மீ. தள்ளி வசிக்கும் நான் வாரம் ஒருமுறை பர்சேஸ் செய்ய சிட்டி போகும் போது சில சமயங்களில் துரிதமாக வேலை முடிந்து விட, "சரி, வா, கணேசனை பார்த்து விட்டுப் போகலாம்" என்று கணவர் சொல்ல, முன் அறிவிப்பு எதுவும் இல்லாமல் சிட்டியில் வசிக்கும் நண்பர் வீட்டுக் கதவைத் தட்ட, கொஞ்சமும் சலிக்காமல் முக மலர்ச்சியுடன் நண்பரும், நண்பரின் மனைவியும் வரவேற்று என்னுடன் பேசிக் கொண்டே சட்டென்று, 'ஹோம் மேட்' ரவா இட்லியும், தக்காளி சட்னியும், ரெடி செய்து, காலைச் சமையலையும் சேர்த்துப் பரிமாறி, பரிமாறிய கையுடன் அரட்டையைத் தொடர்ந்து கொண்டே 'கடகட'வென்று பாத்திரங்களைக் கழுவி கிச்சனையும் க்ளீன் செய்யும் அந்த சுறுசுறுப்பையும் விருந்தோம்பலையும் பார்த்துக் கற்றுக் கொள்ள உதவும் அந்தச் சந்தர்ப்பம் 'நெட்சாட்'டில் அமையுமோ...?

— சுபஸ்ரீ, மஸ்கட்



மார்ச் - ஏப்ரல் - மே - ஜூன் மாதங்கள் டீன் ஏஜ் குழந்தைகளுக்கு மிக மிக முக்கியமான மாதங்களாகி விட்டன. இவர்களின் எதிர்காலமே இந்த 3 - 4 மாத முயற்சிகளில் வெற்றிகளில் அடங்கி விடுகிறது.

நல்லபள்ளியில் பிளஸ் 1 சேர வேண்டுமானால் பத்தாம் வகுப்பில் 90க்கு மேல் மார்க் வேண்டுமே. 9வது வகுப்பு முடியும், இந்த வருட ஏப்ரல் மாதமே ஸ்பெஷல் கோச்சிங் ஆரம்பமாகி விடுகிறது. காலை 5 மணிக்கே குழந்தையை கோட்ச்சிங் கிளாசில் விட்டு விட்டு பிறகு திரும்பக் கூட்டிவந்து, உடனே 7வது மணிக்கு ரெகுலர் பள்ளிக்குத் தயார் செய்து, பிறகு தனது தொழில் / அலுவலக வேலையைக் கவனிக்கும் தாய், தந்தையர் தான் எத்தனை பேர்?

இரண்டு வருட கடின உழைப்புக்குப்பின் பிளஸ் 2 பரீட்சை முடிந்த மறுநாள் காலையிலேயே "என்ட்ரன்ஸ்" கோட்சிங் நோக்கிச் செல்லும் குழந்தைகள் எவ்வளவோ உள்ளனர். இடையில் எந்தவித ரிலாக்ஸ்சேஷன் எதுவும் இல்லாமல் அப்படியே தொடருகிறார்கள். பி.ஈ., பி.எஸ்ஸி., எம்.பி. பி.எஸ். முடித்



விடுமுறையிலும் படிக்க ஓடும் குழந்தைகள்

தவர் நிலையும் இதுவே. இவர்கள் எல்லோரும் வேண்டும், வரப்பிரசாதம் "ஞாபக சக்தி" (Memory). M.B.B.S.-ல் முதல் வருடம் படித்ததில் இருந்து P.G. Entranceக்குக் கேள்வியாக வரும்போது, ஞாபக சக்திதானே, தேவைப்படுகிறது!

ஞாபக சக்தியும், இன்டலிஜென்ஸ்ம் இருவேறு முக்கிய அம்சங்கள். இரண்டும் ஒருவரிடம் சேர்ந்து இல்லாமலும் இருக்கலாம். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், தாமஸ் ஆல்வா எடிசன் இவர்கள் இருவரும் பெரிய அறிவு ஜீவிகள். ஆனால் ஞாபக சக்தியில் ஜீரோக்கள். இரண்டும் ஒருவரிடம் இருந்து விட்டால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாதனவற்றை சாதிக்க முடியும்.

டாக்டர் ஜெயம் கண்ணன்

"மெமரி"க்கு முக்கிய அடிப்படை, ஒருவரின் தேவைகள்தான் (NEEDS). ஒருவருக்கு போன் செய்கிறோம். டைரக்டரியைப் பார்த்து. இந்த நம்பருக்கு மறுபடியும் போன் செய்ய வேண்டி யிருக்கும் என்ற தேவை ஏற்படும்போது அந்த நம்பரை மனதில் வாங்கி, பர்சனல் டைரியிலும் குறிக்கிறோம். ஒன்று, இரண்டு முறை திரும்பத் திரும்ப டைரியைப் பார்த்து அந்த நம்பரைச் சுழற்றும்போது மனதில் தானாகவே படிந்து விடுகிறது. மூளையில் படிந்த உணர்வினை, திரும்ப வரவழைத்துச் செயல்படும்போது தானாகவே, ஞாபகத்திற்கு வந்து விடுகிறது. அடிப்படையாக பார்க்கும்போது, மறுபடியும் போன் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை யென்றால், மூளையில் படிந்தவைகளை திரும் பப் பெறும் உணர்வு இல்லாமல் போய்விடும். ஞாபக சக்திக்குத் திரும்ப வராது. எனவே தேவைகளை அதிகமாக்கி, திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்த முயலும் போது ஞாபக சக்தி அதிகமாகிறது.

சூரியன் எவ்வளவு ஆற்றல் உள்ளதாக இருப்பினும், மேகத்தால் மறைக்க முடியுமே. நமக்கு எவ்வளவு அறிவாற்றல் இருந்தாலும் சோம்பேறித்தனமும், அலட்சியமும் அந்த ஆற் றலை இருட்டடிப்பு செய்து விடும். ஞாபக சக் திக்குத் தேவை - விழிப்பு நிலை. ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், பல்வேறு சிந்தனை இல்லாமல் திறந்த மனதுடன் தெளி வாகப் புரிந்து கொள்ள வேண்டும். வெறுமனே படிப்பது, பார்ப்பது மூலம் மனதினில் நிலை நிறுத்த முடியாது.

"மனத்து விளக்கினை மாண்பட ஏற்றின்...
மனத்து விளக்கது மாயா விளக்கு" என்று திருமூலர் எதனையும் மனதில் வாங்கிச் செயல் பட வேண்டும் என்று தான் குறிப்பிடுகிறார்.

ஏன் எப்படி என்று கேள்வி கேட்டு விளக் கம் பெற்றுப் படித்தால் மிக உன்னதமான, உயர்ந்த நிலையில் வகுப்பில் முதலாவதாகவே இருக்கலாம் என்பதனை **"ஓதுமின், கேள்மின், உணர்மின், உணர்ந்தபின் ஓதி உணர்ந்தவர் ஓங்கி நின்றாரே"** என்கிறார்.

Memory பற்றி மருத்துவ ரீதியாகப் பார்த் தால், ஞாபக சக்தி என்பது கடந்த நாட்களில் நடந்தவற்றை, படித்ததனை, பேசியதை மறுபடி நினைவுக்குக் கொண்டு வருதல். ஞாபக சக்தியும் படிப்பாற்றலும் (Memory and learning) ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. இந்த ஞாபகத் தன்மை இருவகைப்படும். 1. அனிச்சையான ஞாபகம் (Reflexive Memory). வழிவழியாக தொடர்ந்து செய்யும், செயல் பற்றிய ஞாபகம் (உ.ம்.) விளையாட்டு வீரர்களுடைய ஞாபகத் தன்மை, மருத்துவரின் சிகிச்சை முறை. டென் னிஸ் வீரர் முதலில் எப்படி மட்டை பிடிக்க வேண்டும் என்று கற்றதை ஞாபகத்தில் எ போதும் இருத்துகிறார். சிசேரியன் செய்யு டாக்டர்களும் அப்படித்தானே. நின்று நிதான மாய் யோசித்துக் கொண்டிருந்தால், பேஷண்ட என்ன ஆவது? கடகடவென்று 15 நிமிடத்தி சிசேரியன் முடிக்கும் வல்லுனர்களின் முக்கி தகுதி, சரியான அணுகுமுறை பற்றிய ஞாப சக்திதானே.

"முறை முறையாய் அறிந்து முயன்றிலர் என்றும் திருமூலரின் வாக்குக்கேற்ப கற்கு போது முறையாகத் தெளிவாகத் திரும்ப திரும்பக் கேட்டு, செய்து பார்த்து அறிந்தா அதனையும் யோசித்து நினைவுபடுத் வேண்டியதே இல்லை. இப்படி கற்றறிவதா இவை ஒருவரின் உள்ளுணர்வுடன் சேர்ந் INSTINCT ஆகிவிடுகிறது. கார் ஓட்டுதல், சில கேள்விக்கு பதில் சொல்லுதல் இவை ஒ HABIT ஆகவே மாறி விடுகிறது.

2. Declarative Memory :

கடந்தகால, நிகழ்கால நினைவுகள்- Remo and Recent event Memory.

இந்த வழி ஞாபக சக்தியில் அடங்கும், இந் நினைவுகள் ஒரு சில குறிப்புகளாலேயே தூ டப்பட்டு ஒருவரின் ஞாபகத்திற்கு வருகிற "ம்", பார்க்கலாம்" என்று சொன்னாலே பெருந்தலைவர் காமராஜ் ஞாபகம் பலருக் வருகிறது. "கௌசல்யா சுப்ரஜா" என்று ஒ பெண்குரலில் கேட்டவுடனேயே இ "எம்.எஸ்.அம்மா பாடியது அல்லவா?" என் பலரும் நினைக்கிறோம். எம்.எஸ். அம்மாவி உருவம், பாடும் பாங்கு எனப் பல்வேறு சி தனைகள் ஞாபகத்தில் வருகின்றன. இப்ப ஒரு சொல், செயல் மூலமே பல எண்ணங்க தொடர்ச்சியாக ஞாபகத்திற்கு வருவதற் காரணம், தகுந்தபடி மூளையில் பதிவாகியுள் ரேகைகள்தான், வழித் தடங்கள்தான்.

குறிப்பறிந்து நடப்பவரை வெகுவாக பாராட்டுகிறோம். இந்தக் "குறிப்பு" என்பது "கோடிட்டுக்காட்டினால்" கூட என்று சொ லுவதும், இந்த மூளைரேகைத் தடங்களில் மி சரியாகப் பதிவு செய்தவர்களால் மட்டு இப்படி நடக்க முடியும்.



சிறு குழந்தைகளுக்கு நர்ஸரி ரைம்ஸ் கற்றுக் கொடுப்பதோடு தினமும் ஒரு திருக்குறள், ஆத்திச்சூடி அல்லது கொன்றை வேந்தனில் ஒரு செய்யுள் கற்றுக் கொடுத்து நான்கு அல்லது 5 முறை சொல்ல வைக்க வேண்டும். அவைகளின் அர்த்தத்தையும் கதைபோல் சொல்ல வேண்டும். சிறு குழந்தைகளுக்கு எவ்வளவு கற்றுக் கொடுத்தாலும் கற்றுக் கொண்டு விடுவார்கள் அத்தனை திறனும் ஞாபக சக்தியும் அவர்களிடம் உள்ளது.

-ஆர். சுப்புலட்சுமி, சென்னை - 92.

திருமண மலர்

மணமகள் தேவை

■ IyengarVadagalai, Kowsika, Kettai 27/6.2" Diploma in Computer, As Marketing Executive & Service Engineer in Private concern in Chennai. Kalai no bar. If employed well. Apply with horoscope to Box No. 17420

■ Gounder, 37/5.7" Dip. Fine Arts self employed Rs. 8000/-p.m. innocent legal divorcee (issueless) seeks educated bride with english knowledge. No demands, Caste no bar. Apply with horoscope to Box No. 17421

■ Tamil Iyer, Bharadwajam, Vadamal, Kettai, B.Com., 36/180cm/Own Printing Press - Chennai/10,000/- clean habits seeks employed/unemployed girl. Subsect no bar. Reply with horoscope family details to Box No. 17422

■ சைவ பிள்ளை, 31/175 நல்ல சிவப்பு சவுதி ரியாத்தில் வங்கியில் பணி ரூ. 25,000/- இதே இனத்தைச் சார்ந்த பட்டம் பெற்ற அழகான வேலையிலுள்ள/இல்லாத நல்ல குடும்ப பின்னணியுள்ள மணமகள் தேவை. முழு விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 17423

■ Iyer, Brahacharanam, Garga, Pooradam, 29, 5.8" B.Sc., HSM(NIIT) (MBA) MNC, Boy seeks suitable employed girl. (Ph) : 621 8409 Box No. 17424

■ Vadamal, Kausigam, Revathi, 34/180 DEE/Asst. Engineer/All India Radio Poona boy seeks suitable alliance same sect. Contact : (020) 581 9624 Box No. 17425

■ வாணிய செட்டியார், 33/170, திருவாதிரை, மாநிறம், எம்எஸ்ஸி, எம்ஃபில், பிஎட்., பிஎச்டி படித்து சிவகாசியில் அரசு உதவி பெறும் கல்லூரியில் விரிவுரையாளர் ஆகப் பணிபுரிகிறார். மாத வருமானம் ரூ. 15,000/- இதே வகுப்பைச் சேர்ந்த குடும்பப்பாங்கான படித்த வேலையிலுள்ள அல்லது வேலையில் இல்லாத மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி எண் : (04576) - 23540. பெட்டி எண் : 17426

■ Mother Iyer, Father Nair, Kasyapa Punarpoosam, 1971, (B.Com.,) 170cms, Branch Manager Progressive Private Sector Company Good prospects seeks employed unemployed girl good family Brahmin or Similar background horoscope optional 0422-476573 Box No. 17427

■ ஐயர், வடமாள், ஸ்ரீவத்சம், புனர்பூசம் 1966, எஸ்எஸ்எல்சி, 5.4", தனியார் நிறுவனம் 3500 வருமானமுள்ள வரனுக்கு நல்ல குணம் குடும்பப் பின்னணி அமைந்த வேலைக்குச் செல்லும் அல்லது செல்லக்கூடிய மணமகள் தேவை. உட்பிரிவுகள் தடையில்லை. 044-2470314 பெட்டி எண் : 17428

■ Saiva Pillai, 26/180 MBBS Private Practice Negligible Neurosis alliance from respectable any vegetarian sect send horoscope details to Box No 17429

■ வடகலை, கௌண்டின்யம், பூரட்டாதி, 34, ரூ. 6000 சொந்தமாக தொழில் செய்யும் தஞ்சையைச் சேர்ந்த சொந்த வீடு/நிலம்/விவசாயம்/வசதியான படித்த பையனுக்கு வேலைக்குச் செல்லாத படித்த குடும்பப்பாங்கான பெண் தேவை. பெட்டி எண் : 17430

■ Thenkalai, Srivatsa, Ashwini, fair, handsome, hearing impaired boy, B.Com., ICWA, 30/179/20,000 MNC, clean habits, seeks graduate, English Speaking smart, good-looking bride. No monetary, consideration. Ph : 044-4615334. Box No. 17431

■ ஐயர், பிரஹசரணம், கௌண்டின்யம், திருவாதிரை, 31/155/5000, பிசிஏ., கம்ப்யூட்டர்/டிப்ளமா, சென்னையில் கம்பெனியில் கம்ப்யூட்டர் ப்ரோகிராமர் வேலை, இடதுகால் முழங்கால் வரை செயற்கைக் காலுடன் நடக்கும் வசதியுள்ள பையனுக்கு நல்ல குடும்பப் பெண் எந்த பிராமணர் இனமும் மற்றும் வசதி இல்லாத குடும்பமானாலும் சம்மதம். தொடர்பு கொள்ள ஃபோன் : (044)655 5140. பெட்டி எண் : 17432

■ Tamil, Brahmin Vadama, Vadoolam, Uthiram, Simha Rasi, 28/172 MBA Bank employee Bangalore seeks alliance from well educated professionals/ employee transferable to Bangalore Brahmin girls. Box No. 17433

■ சோழிய வெள்ளாளர், எம்எஸ்ஸி, வயது 38, 5 அடி 10 அங்குலம், மாநிறம், தனியார்த் துறை அதிகாரி, கிரேடு III 5000, குழந்தையுடன் மனைவியை இரண்டு வருட வாழ்வுடன் கோர்ட்டில் விவாகரத்தானவர், கல்லூரிப் பேராசிரியரின் ஒரே பையன், நல்ல வசதி, படித்த நல்ல குடும்பப் பெண் தேவை. ஏழ்மை தடையில்லை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 17434

■ ஐயர், வடமாள், பாரத்வாஜம், உத்திரம், சிம்ம ராசி, 31/180செ.மீ., சொந்தத் தொழில் மோட்டார் சைக்கிள் டீலர் வருட வருமானம் சுமார் 2 லட்சம் உள்ள வரனுக்கு லட்சணமான வேலைக்குப் போக விருப்பமில்லாத பட்டதாரிப் பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். கும்பகோணம் போன் (0435) 42 33 23. பெட்டி எண் : 17435

■ பள்ளர், பிஈ., 28, 172, 20,000 சாஃப்ட்வேர் என்ஜினியர் என்ற வரனுக்கு பிஈ. படித்த (கம்ப்யூட்டர் சயின்ஸ் எனில் நலம்) அழகிய சிவந்த நிறமுடைய பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 17436

■ Keralite, Iyer Boy, Vadamal, Pooradam, Naidrupa, Kasyspam, 32/180, fair, B.Sc., CA (Inter) well employed in Riyadh, Saudi Arabia, with a Blue Chip

அறிவிப்பு: திருமணமலர் பகுதிக்கு வருகின்ற விளம்பரங்களில் மங்கையர் மலரின் கோட்பாடுகளுக்கு இசைவில்லாத வார்த்தைகள் இடம் பெறுமானால் அதனை மாற்றவோ நீக்கவோ, ஆசிரியருக்கு உரிமையுண்டு.

Company, seeks alliance from graduate Iyer girls, upto 30 years. Reply with horoscope to Box No. 17437 or sundaresanar@yahoo.com.in.

■ Well educated girl wanted for decently employed Boy 31/165 B.E.(Ag). Area Manager, Multi National Company Palakkadu Vadamal, Lohitha Gothram, Mirugaseersham Subsect acceptable. Reply with horoscope to Box No. 17438

■ ஐயர், அஷ்டசகஸ்ரம், 33, +2, 10,000/- சுயதொழில் உட்பிரிவு சம்மதம், தீயபழக்கம் ஏதும் இல்லாதவர், அழகான குடும்பப்பாங்கான பெண் தேவை. விரைவில் திருமணம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 17439

■ ஐயர், வடமாள், ஸ்ரீவத்சம், 29/03/1961, பி.காம்., சென்னை Omega Forwarders Accountant, Rs. 7000/-p.m. ஒழுக்கமான பையனுக்குச் சென்னையில்/சென்னைக்கு மாற்றத்தக்க அரசு/தனியார் நிரந்தரப் பணியிலுள்ள குடும்பப்பாங்கான பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகம், பிறந்த ஊர், தேதி, நேரம், தொலைபேசி எண்ணுடன் எழுதவும். பெட்டி எண் : 17440

■ Iyer, Vathima, Srivatsa, Swathi, 29, 5'.10", B.Com., LLB, handsome, teetotaller, employed in apex co-operative Bank, Rs. 7500/-p.m. Pondicherry based seeks bride preferably PG with computer knowledge. Only son and daughter, own house, No dowry/terms as principle. Employed/unemployed, Subsect, Iyengar acceptable. Phone (0413) 244699. Send horoscope, family details to Box No. 17441

■ Iyer, Brahacharanam, Athreya, Kettai B.A. (Eco) 33/170/monthly income around Rs. 6000/- includes return on investments working with Shipping Agents girls employed in and around Chennai preferred. Subsect acceptable with Bio-data, horoscope to Box No. 17442

■ Tirunelveli Saiva Pillai, Moolam 29/5'.11"/MCA handsome working in the Nederlands visiting May seeks smart professional bride from same community. Phone 044-4928737 Box No. 17443

■ ஐயர், வடமாள், ஸ்ரீவத்சம், மகம், தனியார்த் துறை, மாதச் சம்பளம் 6000/- வயது 39, பையனுக்கு குடும்பப் பாங்கான பெண் தேவை. பெட்டி எண் : 17444

■ Wanted Iyer bride fair/very good looking, smart, graduate, below 24/165 from respectable family for handsome, talented Software Engineer Pooradam/Koundinya in USA visiting India September 2001. Reply with horoscope and family details to Box No. 17445

■ ஐயர், பிரஹசரணம், பாரத்வாஜம், திருவாதிரை, 35/182, எம்.காம்., வங்கி மானேஜர், பம்பாய், செவ்வாய் தோஷமுள்ள பையனுக்கு, குடும்பப்பாங்கான, நல்ல பழக்கங்களுள்ள, கிராஜுவேஷனுக்கு மேல் அதிகம் படிக்காத, வேலைக்குச் செல்லாத, தமிழ்நாட்டிற்குள் உள்ள மணமகள் தேவை. ஜாதகம் விவரத்துடன் அனுப்பவும். பெட்டி எண் : 17446

■ Iyer, Ashtasagasram, Kashyapa Anusham, B.Sc., MLM/28/197cm, 15,000/- Reputed Company in Chennai seeks bride educated employed/willing for employment. Subsects acceptable. Phone : 4725460. Send horoscope to Box No. 17447

■ Iyer, Brahacharanam, Athreya, Bharani, 32/5.7"/B.B.A., Medical Representative 9000/-p.m. seeks suitable employed girls. Phone : 2315645 (Contact after 4.00 p.m. only) Box No. 17448

■ Iyer, Brahacharanam, Athreya, Kettai, 27/177cm/B.Com., M.F.M. Accounts Manager, Vijayawada/Rs. 24,000 seeks qualified Bride, respectable family. Subsect no bar. Sai devotees preferable. Phone (04322) 29322 Reply with horoscope to Box No. 17449

■ ஐயர், வடமாள், சாண்டில்ய கோத்திரம், அனுஷம், வயது 37, B.Com., PG in IR & PM, Manager ABT Parcel Service, 10,000/- வரனுக்கு டிகிரி படித்த குடும்பப் பாங்கான பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 17450

■ Vadhula Iyer, Uthirattadhi, 165/27, Musician/Computers Mumbai. Handicapped Spastic, elbow crutches for walking healthy, well-built teetotaler. Normal unemployed domestically trained bride above 25. Patient, affectionate, understanding nature main consideration. No dowry. Send horoscope for full details. Box No. 17451

■ பாம்பே அருகே கல்யாணில் சொந்த இருப்பிடம் சீனியர் மானேஜர் வேலை, நல்ல சம்பளம், 31 வயது ஐயர், ஸ்ரீவத்ஸ கேட்டை பையனுக்கு மத்தியதர குடும்பத்தைச் சேர்ந்த படித்து வேலையிலிருக்கும் அல்லது வேலை பார்க்க விருப்பமுள்ள மணமகள் தேவை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களை அனுப்பவும். பெட்டி எண் : 17452


■ Kerala Based, Vadama Boy, 31 years, undergraduate Bharadwaja, Pooradam, employed in Software Co., drawing 1,00,000/- p.a. looking for equally qualified domestically trained fair looking girl. Phone (044) 828 2957 Box No. 17453

■ Iyer, Vadamal, Viswamitra Gothram, Moolam 3rd padam, clean horoscope, 30/170cm, B.Com., ICWA CA, employed in EMIRATES Airlines Dubai, seeks professionally qualified girl 24 - 27. Send horoscope details. Phone : 495 7696. Box No. 17454

■ ஆத்ரேயா, பூரம் ஸ்மார்த்த தேசிஸ்தா, மராத்தி 32 172/8500/பி.காம்., எம்.ஏ/ஸ்டெனோ, ஜெனரல் இன்ஷுரன்ஸ், தனித்து இயங்கும் பார்வைக்குறைவுள்ள பையனுக்கு பிராமின்/சைவம் பட்டதாரி பெண் தேவை. பெட்டி எண் : 17455 ஃபோன் : 0422-827 459

■ Alliance invited including from handicapped/widow for Mumbai settled Iyer Vadamal, Bharadwajam Revathi, 34/156/5500p.m. HSC. Contact Box No. 1745

■ Iyer, Vadamal, Bharadwajam, Anusham 4 padam



''உஜாலாவின் உன்னத வெண்மை விஞ்ஞான ரீதியிலான சாதனை.''

INSTA-WHITENING SYSTEM

ஜோதி லேபின் ஆய்வுக் கூடத்தில் தொடர்ந்து நன்கு சோதிக்கப்பட்டு வெற்றிகரமாக நிருபிக்கப்பட்ட உஜாலாவின் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் (I.W.S.)™ இது தண்ணீரில் உடனடியாகக் கரைவதோடு, துணிகளின் நுட்பமான நூலிழைகளிலுள் ஆழ்ந்து ஊடுருவிவெண்மையின் வெளிச்சத்தை துணிகளில் உடனடியாய் வெளிக்கொணர்கிறது. துணிகள் மீண்டும் துவைக்கும்போது, அழுக்குடன் முழுவதும் வெளியே தள்ளப்பட்டு விடுகிறது. நாட்கள் பல ஆனாலும் துணிகளின் இயல்பான வண்ணம் மாறாமல் புதிது போலவே பாதுகாக்கிறது. ஸ்கின் இரிட்டேஷன்-ஓரல் டாக்சிசிடி சோதனைகளில் பாதுகாப்பானது என ஆதாரபூர்வமாக கண்டறியப்பட்ட தயாரிப்பு உஜாலா ஒன்றே.

1983 முதல் அனேக கோடி உள்நாடு-வெளிநாடு வாடிக்கையாளர்களுக்கு முழுதிருப்தியை உஜாலா வழங்கிக் கொண்டிருக்கிறது. பாரத நாடெங்கும் பல மாநிலங்களில் உள்ள ஜோதி லேபின் விஞ்ஞான தொழில் நுட்ப மேன்மை மூலம் கடும் தரக்கட்டுப்பாடு முறைகளால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு உஜாலாவும் உங்களை அடைகிறது.

விஞ்ஞான ஆதாரமற்ற முறையில், இரசாயன திரவங்கள் தயாரிக்கும், நூலிழைகளை பலவீனப்படுத்தும், வண்ணம் குறைக்கும் மூலப்பொருட்கள் ஏதும் இதில் இல்லை. தரங்குறைந்த, கலப்பட இரசாயனக் கலவைகள் உங்களின் துணிகளுக்கு சேதம் ஏற்படுத்த இடம் அளிக்காதீர்கள்.

உஜாலா என கேட்டு வாங்கும் போது விஞ்ஞானபூர்வமற்ற ஏதேனும் ஒரு போலி தயாரிப்பை நீங்கள் பெறவில்லை என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்."



வெண்மையின் புதிய நிறம்

A product of Jyothy Laboratories Ltd.

திருமணமலர் – விளம்பரக் கட்டண அறிவிப்பு

திருமண மலர் விளம்பரக் கட்டணம் முதல் 30 வார்த்தைகளுக்கு ரூ. 300/- அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ. 10/-

இந்த இதழில் பிரசுரமாகும் பெட்டி எண் விளம்பரதாரருக்கு பதில்கள் அனுப்ப கடைசி தேதி 10/5/2001. பதில்கள் அனுப்ப வேண்டிய முகவரி: பெட்டி எண்: .... C/o. மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

28/178/DECE/6000- Private Company Chennai seeks fair, good-looking Chennai based employed preferably graduate bride. Subsect acceptable. Box No. 17457

■ Iyer, Ashtasahasram, Kowsikam, Uthiram, age 30/5.5/10,000 (DEE) Manager Pvt. Firm Chennai, seeks preferably graduate girl. Subsect acceptable. Reply with horoscope. Phone : 044-6359473 Box No. 17458

■ வடகலை, ஐயங்கார், தடமர்ஷணம், விசாகம், 1960/5'.10"/எம்.காம்., டி.சி.ஏ./பிஸினஸ்/ரூ.10,000/- அழகான வசதியான பையனுக்கு குடும்பப்பாங்கான பெண் தேவை. தென்கலை சம்மதம். எளிய திருமணம். தொலைபேசி : 4893558. பெட்டி எண் : 17459

■ Iyer, Ashtasahasram, Bharatwajam, Sadayam 167/31/D.Pharm/B.A. Med., Rep 6000/- Own House seeks educated working girl. Box No. 17460

■ Iyer, Ashtasahasram, Kanva, Poosam, June '74, 173 cm, Slim, Handsome, B.E., Software Engineer, well settled in US, seeks well qualified girl with sound programming knowledge and communication skills. BE/MCA preferred. Send horoscope to Box No. 17462

■ ஐயர், பிரஹசரணம், சங்கிருதி அசுவினி முதல் பாதம், வயது 40, உயரம் 5'4", பி.காம்., சென்னையில் வேலை பார்க்கும் ரூ.3000/- சொந்த வீடு உள்ள மணமகனுக்கு வேலை பார்க்கும் தகுதி உள்ள/வேலை உள்ள மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 17463

■ Iyer, Vadamal, Nythrupa Kasyapam Gothram, Uttiram 4th padam 28/5.11"/7000 graduate, Computer Literate C++ Java Boy employed in T.I. Group seeks employed/employable graduate girl. Reply to Box No. 17464

■ வடகலை, ஐயங்கார், கௌண்டின்யம், உத்திராடம், 30/6.2"பி.ஏ.,/7000/ஐ.சி.ஐ.சி.ஐ வேலையில் உள்ள பையனுக்கு பட்டப் படிப்பு படித்த பெண் தேவை. போன் : 655 5317 பெட்டி எண் : 17465

■ அகமுடையார், உத்திரம் 1-ம் பாதம், 28/180, மாத வருமானம் ரூ.7000/- படிப்பு B.Sc., D.D.T. அரசு உத்தியோகத்தில் இருக்கும் பையனுக்கு டிகிரி படித்த வேலைக்குச் செல்லும் மணமகள் தேவை. பெட்டி எண் : 17466. ஃபோன் : 8420 588. (5 P.M. to 9 A.M.)

■ ஐயர், வடமாள், கௌசிகம், பூரட்டாதி, 7.6.69, 163 செ.மீ., B.Com., PGDMM டெரிட்டரி மார்க்கெட்டிங் எக்ஸிக்யூட்டிவ் ஹென்கல் ஸ்பிக் சென்னை ரூ. 13,000/- ஜாதகத்தில் 7/8ல் தோஷமில்லாத தகுந்த வரன் தேவை. உட்பிரிவு சம்மதம். வேலை அவசியமில்லை. போன் : 657 3829. பெட்டி எண் : 17467

■ Vadagalai Iyengar, Kausika, Ashwini, 31/171cm
Rs. 7000/- DCE, MA (M.Com.,) (Pvt. Conc
Chennai) seeks employed graduate girl Send ho
scope any Brahmin can apply. Box No. 17468

■ Kongu Vellala Gounder, Kodai Kootam, 29/5ft.
177cm) Australian trained LLB + B.Com., working
Senior legal officer, Kuala Lumpur Stock exchan
Malaysian Citizen, Wealthy family, seeks Pretty, f
and slim girl 23 - 25, Computer Engine
Accountant Engineer (IIT) or Doctors. Se
Biodata. Box No. 17469

■ தெலுங்கு பிராமணாள், பொருகுத்சம், கோனசி
அனுஷம், 29, 5.8", 9000, தனியார் கம்பெனி
இன்டர்நெட் அட்மினிஸ்ட்ரேடர், எம்.எஸ்ஸி., (
பையனுக்கு 25 வயதுக்குட்பட்ட பி.ஈ., எம்.எஸ்ஸி., பி
எம்.காம்., படித்து உத்தியோகத்தில் உள்ள பெண் தே
ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண் : `7470

■ ஐயர், அஷ்டசஹஸ்ரம், தஞ்சாவூர், வாதூல, பா
29, பி.ஈ., 5.6", சுத்த ஜாதகம், பெங்களூரில் எலக்ட்ரா
இன்ஜினியராக வேலை செய்பவரும், டிஎஸ்.ஏ.வில் பி
கம்பெனியில் உயர்ந்த பதவியில் சேர இருப்பவரும், மிக
சாஸ்த்ரோக்தமான குடும்பத்தில் பிறந்து, சிறந்த ப
வழக்கங்கள் நிறைந்த மணமகனுக்கு, நல்ல குடும்பத்
சேர்ந்த, குடும்பப்பாங்கான, கடவுள் மீதும், நம் ப
வழக்கங்கள் மீதும் நம்பிக்கை உள்ள, வேலைக்
போகாத/வெளிநாடு செல்வதால் வேலையை வி
தயாராக இருக்கும், 26 வயதிற்குட்பட்ட மணமகள் தே
வரதட்சிணை தேவையில்லை. உட்பிரிவுகள் சம்மதம்.
விவரங்களுடன் ஜாதகம் அனுப்பவும். போன் : 483
55. பெட்டி எண் : 17471

■ Brahacharanam, Haritham, Avittam, 40 ye
B.Sc., in R.M.S. karur Rs. 7000/- per month wido
without encumberance belongs to Trichy. Se
S.S.L.C. or Higher Secondary girl wellversed in
mestic work. Job is not essential to Box No. 17
Phone : 2449534

■ Tamil Iyer, Vadamal, NithrubakasyabaThiruvad
B.Com., Delhi based boy Junior Officer, Bank, 31 ye
165 cms, seeks alliance from employed, goodloo
girl of respectable family. Reply with horoscop
Box No. 17473 (phone : 74 11 520)

■ Iyer, Brahacharanam, Bharadwaja, Thiruvadi
padam, July 1970 168cm, BE (Hons) BITS Pr
Manager earning Rs. 3.50 L/Annum in Delhi M
seeks bride professionally qualified (BE/MCA/
ICWA/graduate -post graduate with Computer Q
fication) employed or willing to take employm
Subsect no bar. Apply to Box No. 17474

■ Tamil Iyer, Vadamal, Kousika Chadayam, 38, Bank employed at Coimbatore seeks suitable alliance fair, employed home loving girl. Reply with horoscope to Box No. 17475

■ தென்கலை ஐயங்கார், கௌசிகம், மகம், வயது 30, படிப்பு 10வது, சொந்தமாகத் தொழில் புரிபவருக்கு ஏற்ற குடும்பப்பாங்கான வேலையிலுள்ள மணமகள் வரன் தேவை. பெட்டி எண் : 17476. ஃபோன் : 489 1827 / 485 1286. என். ராஜம்

■ Iyer, Vadama, Thiruvonam-4, Vadhoolam 33 years, 180cms, 4000/- (B.Sc.,) employed in Share Broking firm more than 50 years old seeks suitable employed girl. Reply with horoscope to Box No. 17477

■ Vathima, Bharadwajam, Sadhayam, B.E.,/32/5.9" 21,000, fair, well-built employed (Chennai) seeks graduate, preferably unemployed, homely, fair bride from decent family. Subsects acceptable. Horoscope Bio-data to Box No. 17478

■ வடமாள், ஸ்ரீவத்ஸம், கிருத்திகை-1, 1.12.1971, 168 செ.மீ., நல்ல பழக்கம், சொந்த பிஸினஸ் ரூ.9000 மாத வருமானம் குடும்பப்பாங்குடைய பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 17479

■ Suitably qualified, very fair, good-looking bride about 25/160 for fair, handsome boy Thenkalai, Koundinyam, Avittam(4), 30/165, Ph.D., (UK), Research Scientist in leading tech. University in USA, Contact with Box No. 17480

■ தமிழ் ஐயர், மூலம் 2ம் பாதம், பிரஹசரணம், ஹரித கோத்திரம், படிப்பு +2, வயது 40, கேட்டரிங்கில் நல்ல திறமையும் அனுபவமும் உள்ள வரனுக்கு ஏற்ற பெண் தேவை. சொந்தமாகத் தொழில் செய்ய உத்தேசம். எளிய, உடனடி திருமணம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 17481

■ Iyer, Kaushikam, Aswathi, 15.10.1970, 5'.9", Born and Brought up in Canada, with clean habits, B.Sc., (Hons)., Chemist, Pfizer (Toronto), seeks Brahmin bride 25 - 28 years, graduate, Computer Literate, tall, slim, fair, beautiful, willing to settle down in Canada. No demands. Contact : 0422-422231. Box No. 17482

■ பிராமின் அஷ்டசகஸ்ரம், பாரத்வாஜ கோத்திரம், பூசம் 4ம் பாதம், டிசம்பர், 30, 5.6"/தனியார் கம்பெனியில் நல்ல வேலை, மாதச் சம்பளம் ரூ. 10,000 சென்னையில் சொந்த வீடுள்ள வரனுக்கு படித்த வேலையில் உள்ள/இல்லாத மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். தொலைபேசி : 044/2472110. பெட்டி எண் : 17483

■ Tamil Iyer, Brahacharanam, Kousigam, Moolam 34/170/M.C.A. HIB Visa in Sansfransisco, visiting India April. Contact Phone : 044-4812953; 4482545; 4335377 461 7912 Box No. 17484

■ Iyer, Brahacharanam, Koundinyam, Pooratathi, 26/5.11", M.Sc., (Comp. Science), Senior Software Engineer, USA, Sevvai in 7th place, seeks PG, Computer Qualified, homely, Broadminded girl from respectable middle class family. Email:ganesamanian@yahoo.com. Reply with horoscope, Bio-data Box No. 17486

■ Iyer, Vadamal, Kowsika, Uthiradam, Chevvai Dosham 7th House 36/5.7"/5500 M.Com., Accountant in a Limited Company seeks alliance from same sect. Graduate employed girl. Box No. 17487

■ Iyengar, Thenkalai, Koundinya, Avittam, 38, Business boy seeks fair, domestically well trained good looking girl. Box No. 17488

